திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு மீண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வரவிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர், பாலமேடு, வாடிப்பட்டி, சோழவந்தான் ஆகிய 4 பேரூராட்சிகளில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, தேவையிருப்பின் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 104-வது வட்டம், திடீர் நகர் திட்டப் பகுதியில் கடந்த இரண்டு வருட காலமாக கணக்கெடுப்பு மற்றும் ஆய்வுகள் நடத்தப்பட்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டது. ஆனால், அங்கு கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு, நிலுவையாக அப்பணி நின்றுவிட்டது. எனவே, தற்பொழுதாவது புதிய குடியிருப்புகள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கணக்கெடுப்பு, எதில் நிலுவை என்று விவரமாகச் சொன்னால் நான் தக்க பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக வீடுகள் ஒதுக்கப்பட்டு, 25, 30 ஆண்டுக் காலமாக பெயர் மாற்றம் செய்யாமல் நிலுவையில் உள்ளது. பலர் அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஓராண்டுக் காலத்திற்குள் பெயர் மாற்றம் செய்து தரப்படும் என்று

2016 ஜனவரி 21]

இதே அவையில் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் துறையினுடைய உயர் அதிகாரிகளுக்கு அதுசம்பந்தமான உத்தரவுகள் இன்றுவரை போகாததால் அது அப்படியே நிலுவையில் உள்ளது. இந்த ஆண்டிலாவது பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படுமா?

அதேபோல், சமீபத்தில் தருமபுரியில் புதியதாக இரண்டாவது Phase-ல் வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் சிறப்பான முறையிலே கட்டப்பட்டு, நேற்றையதினம்கூட குலுக்கல் நடைபெற்றிருக்கிறது. எனது அரூர் தொகுதி பின்தங்கிய தொகுதி. அரூர் தொகுதியிலே 16 ஏக்கர் பரப்பளவிற்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய நிலம் இருக்கிறது. வீடுகள் கட்டுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆக, இந்த ஆண்டாவது அரூரிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியது போல், நிலம் பெயர் மாற்றம் செய்வதற்கு வருவாய்த் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 'இப்பொழுது அரூர் தொகுதியில் நிலம் இருக்கிறது, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுமா' என்று கேட்கிறார். உறுப்பினர் கேட்பது பொது மக்களுக்கான வீடுகளா அல்லது அரசு ஊழியர்களுக்கான வாடகை வீடுகளா என்று தெரியவில்லை. இப்பொழுதுள்ள சூழ்நிலையில், அரசு ஊழியர்களுக்கான வாடகை வீடுகள், கிட்டத்தட்ட 3,000 வீடுகளுக்கு மேல் காலியாக இருக்கின்றன. சென்னை, கோவையைத் தவிர்த்து, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் இருக்கின்ற வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் காலியாக இருக்கின்றன. காரணம் 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி வீட்டு வாடகைப் படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதால், தனி வீடுகளில் இருக்க அரசு ஊழியர்கள் விரும்புகிறார்கள். அடுத்தது, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ரூ.15 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சம் வரையிலும்

[2016 ஜனவரி 21

அவர்களுக்கு வீடு கட்டும் கடன் கொடுக்க அனுமதித்ததால், சொந்த வீடு கட்டியிருக்கிறார்கள். அதனால் இப்பொழுது அரசு ஊழியர்களுக்கு, சென்னை, கோவையைத் தவிர மற்ற இடங்களில் எந்தவிதமான தேவையும் இல்லை. பொது மக்களுக்கு வேண்டுமென்று சொன்னால், கேட்பு இருப்பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

3—

மேம்பாலம்

***49923 திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, கெடார் ஊராட்சி, செல்லங்குப்பம் காங்கேயனூர் சாலையில் பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியத்தில் உள்ள காங்கேயனூர் வழியாக செல்லங்குப்பம், கெடார் செல்லும் சாலையில், பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட காணை ஒன்றியம், கெடார் பஞ்சாயத்திற்குட்பட்ட செல்லங்குப்பம் முதல் காங்கேயனூர் வரையுள்ள சாலையின் குறுக்கே ஓடுகிற பம்பையாற்றில் ஒரு தரைப்பாலம்கூட இல்லை என்பது மட்டுமல்ல; பொது மக்கள் செல்வதற்கு வழியோ அல்லது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை எடுத்துச் செல்லும் வாகனத்திற்கான ஒரு பாதையோகூட அங்கு இல்லை. ஒரு நடைபாதைதான் அங்கே இருக்கிறது. எனவே, வெள்ளப்பெருக்கு காலத்தில் போக்குவரத்து முற்றிலும் தடை செய்யப்படுகிற ஒரு மோசமான நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மேம்பாலம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். நினைவூட்டலாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இதே சட்டமன்றப் பேரவையில், அதே காணை ஒன்றியத்திற்குட்பட்ட மல்லிகைப்பட்டு கிராமத்தில் ஒரு மேம்பாலம் கேட்டிருந்தேன். அந்த மேம்பாலம் உத்தரவாகி, பணிகள் துவங்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். இந்தச் சட்டமன்றத்தின் ஆயுள் காலம் எந்தக் குறையுமின்றி நிறைவு பெறுகிற இந்தச் சூழ்நிலையில்கூட, அந்த மேம்பாலத்திற்கான பணி துவங்கப்படாத சூழ்நிலை இருக்கிறதென்பதை நான் தங்கள் சுவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, ஏற்கெனவே உத்தரவளிக்கப்பட்ட பாலம் வருமா, புதிய பாலம் எழுமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட காணை ஒன்றியத்தில், காங்கேயனூர் வழியாக செல்லங்குப்பம் கெடார் செல்லும் சாலையில் பம்பையாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டக்கூடியது பற்றியது இக்கேள்வி. இச்சாலையானது விழுப்புரம், மாம்பலப்பட்டு திருக்கோயில் சாலையில் விரிந்து

[2016 ஜனவரி 21

பொன்னங்குப்பம், பள்ளியந்தூர், காங்கேயனூர் வழியாக மல்லிகைப்பட்டு சாலையில் இணையும் மாவட்ட இதரச் சாலையாகும். இந்தச் சாலையில் 4.8 கி.மீ.–ல் பம்பை ஆறு குறுக்கிடுகிறது. தற்போது இவ்விடத்தில் 15 வரிசை கொண்ட குழாய்ப் பாலம் அமைக்கப்பட்டு, போக்குவரத்துக்கான பயன்பாட்டில் உள்ளது. வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப, உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஒன்றியம், பாத்துக்கொட்டா வரையில் தென்பெண்ணையாறு ஓடுகிறது. மழைக் காலங்களில் வெள்ளம் அதிகமாக வரும்போது, வெள்ளத்தால் மக்கள் அடித்துச் செல்லப்பட்டு, உயிர்ச் சேதம் ஏற்படுவது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஊர் மக்கள் ஆற்றில் வெள்ளம் வரும் காலங்களில் சுமார் 30 அல்லது 40 கி.மீ. தூரம் சுற்றி உத்தனப்பள்ளி வந்து, அங்கிருந்து பாத்துக்கொட்டா செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் விதி 110–ன்கீழ் பாத்துக்கொட்டாவில் ஓர் உயர்மட்டப் பாலம் விரைவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அறிவித்து இரண்டாண்டு காலம் ஆகிறது. அந்தப் பாத்துக்கொட்டா பாலம் வருமா, வராதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2011–2012–லிருந்து 2015–2016 நடப்பாண்டு வரை, சுமார்

2016 ஜனவரி 21]

474 பாலங்கள் அறிவிக்கப்பட்டன. இவற்றில் 281 கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 109 பாலப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. திருத்திய மதிப்பீட்டின் ஒப்பந்த நிலையில் 9 பணிகள் இருக்கின்றன. நிருவாக ஒப்பந்த நிலையில் 69 பணிகள் இருக்கின்றன. நீக்கம் 6. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பால நிலையை ஆய்வு செய்து, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

முற்பகல் 10–30

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆறுகளும் கடந்த பருவ மழையின்போது பெருக்கெடுத்தன. ஊத்துக்கோட்டையிலிருந்து பூண்டி வழியாக திருவள்ளூர் செல்லும் பிரதான சாலை ஆரணி ஆற்றுக்குக் குறுக்கே அமைந்துள்ளது. ஆரணி ஆற்றுக்குக் குறுக்கே தரைமட்டப் பாலம் மட்டுமே தற்போது உள்ளது. கடந்த மழையில், வெள்ளப் பெருக்கு காரணமாக, ஊத்துக்கோட்டை இதர பகுதிகளிலிருந்து 30 நாட்களுக்கும் மேலாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. இவ்வளவு காலம் அந்த இடத்தில் மேல் மட்டப் பாலம் கட்டாமல் இருப்பது கடும் பாதிப்புகளை உண்டாக்கி வருகிறது. ஆந்திர மாநிலம், பிச்சாட்டூர் அணையிலிருந்து நீர் திறந்துவிடப்பட்டால், ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும். எனவே, ஊத்துக்கோட்டை–திருவள்ளூர் சாலையில் ஆரணி ஆற்றுக்கு குறுக்கே மேல்மட்டப் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலம், பிச்சாட்டூர் அணை திறக்கும்போது, ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு,

[2016 ஜனவரி 21

ஊத்துக்கோட்டை–திருவள்ளூர் சாலையிலுள்ள தரைப்பாலம் தண்ணீரில் மூழ்குகிறது. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதற்கு உடனடி நடவடிக்கை எடுத்து, மாற்றுப்பாதை அமைத்து, போக்குவரத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் இன்று போக்குவரத்து வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றன. அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால், அங்கே போக்குவரத்து தடைபடுகின்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, இப்பாலத்தை 30 கோடி ரூபாய் செலவிலே உயர்மட்டப் பாலமாகக் கட்டுவதற்கு கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதியில் நான்கு இரயில்வே மேம்பாலங்கள் அறிவிக்கப்பட்டன. இதுவரையில் அந்தப் பணிகள் எதுவும் தொடங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும், எந்தெந்தப் பாலங்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குண்டான பதில் தரப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் நான்கு பாலங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த நான்கு பாலங்களும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தால், அந்தப் பாலப் பணிகளைத் துவங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

4—

சொந்தக் கட்டடம்

***53010—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாணியம்பாடியில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், இரண்டு மருத்துவர் வகை (Two Doctor Type) மருந்தகமாகச் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு நிலம் வாங்குதல் மற்றும் கட்டடங்கள் கட்டுதல், புது டெல்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தினுடைய பணியாகும். எனவே, மூன்று மருத்துவர் வகை (Three Doctor Type) அல்லது அதற்கு மேலான மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமாகக் கட்டுவதற்கு, புது டெல்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் முயற்சிகள் எடுக்க வேண்டும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதற்குண்டான பரிந்துரையைச் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

[2016 ஜனவரி 21

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக, தமிழன் தன்மானத்தோடு வாழ வேண்டும் என்பதற்காக, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி), தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்கின்ற இலட்சியக் கனவோடு, போற்றுவோர் போற்றட்டும்; புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்று உழைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

"போற்றுபவர் போற்றட்டும்! புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்! தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை எனதுள்ள மென்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும், நில்லேன்!
அஞ்சேன்! கெஞ்சேன்!"

என்கின்ற இலட்சியத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திவரும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவி, மாற்றம் தந்த தமிழக மக்களுக்கு நாளும் ஒரு திட்டத்தைத் தந்து தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகின்ற, ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் தமிழகத்தின் தலைமகள், அலைகடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழர் நெஞ்சத்திலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் திராவிட இயக்கத்தின் ஒப்பாரும் மிக்காருமில்லா (மேசையைத் தட்டும் ஒலி) உலகப் பெரும் தலைவர்களின் ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு வருகின்றது. வாணியம்பாடி தொகுதியில் மட்டும் 150–க்கும் மேற்பட்ட தோல் தொழிற்சாலைகள், காலணி தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஜவுளித் தொழிற்சாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

2016 ஜனவரி 21]

இந்த மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் 2,500-க்கும் மேல் உள்ளன. நோயாளிகளின் வருகை நாளொன்றுக்கு 600 முதல் 900 வரை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, வாணியம்பாடியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகக் கட்டடம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய்த் தங்கள் வாயிலாக அன்புடன் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு திட்டமாகும். தொழிலாளர்களின் சம்பளத்தில் 1.75 சதவிகிதமும், வேலை அளிப்போரிடமிருந்து 4.75 சதவிகிதமும் சேர்த்து வசூலிக்கப்படும் நிதியின்மூலம் தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவில், 7/8 பங்கு தொழிலாளர் காப்புறுதிக் கழகத்தாலும், 1/8 பங்கு மாநில அரசாலும் ஏற்கப்படுகிறது. அந்த வகையிலே, வேலூர் மாவட்டத்தில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்துத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கும் நிலம் தேர்வு செய்து அனுப்பும்படி வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்தவகையில், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், வாணியம்பாடியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் அமைப்பதற்கான நிலத்தினை அடையாளம் காட்டுவார்களேயானால், புது டெல்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிந்துரை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

[2016 ஜனவரி 21

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் குறு, சிறு தொழிற்சாலைகள் மற்றும் பஞ்சாலைகள் நிறைய இருக்கின்றன; நிறைய தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அங்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் இருக்கிறது. ஆனால், மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்தும்கூட, அந்த மருந்தகத்தை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதற்கு மாநில அரசு, இந்தத் துறை, பரிந்துரை செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். தொழிலாளர்கள் மருத்துவ சிகிச்சைக்காக திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து மதுரை மாவட்டத்திற்குத்தான் செல்கிறார்கள். ஆகவே, அங்கே ஒரு மருத்துவமனையை அமைப்பதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தொழிலாளர் நலத் துறையின் சார்பாக கடந்த நான்கரை ஆண்டுகளிலே மாத்திரம் 33 புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலமாக 1,81,680 தொழிலாளர் குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகிறேன். அதேபோன்று, கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 40 புதிய பகுதிகள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலமாக 47,057 தொழிலாளர் குடும்பங்கள் பயன்பெற்றிருக்கின்றன. திண்டுக்கல் பகுதியிலே அரசு மருத்துவமனை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்குண்டான பரிசீலனையை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்யும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

5—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***38299—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சி, 18-வது வார்டு, பெரியகாவனம் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சி, 18-வது வார்டு, பெரியகாவனம் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சர்வே எண் 23/1A6-ல் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புதிய கட்டடம் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஜனவரி 21

முற்பகல் 10—40

6—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***51211—திரு. சி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.

திரு. சி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இப்போது பரிசீலனையில் இல்லையென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மீண்டும் பரிசீலிக்க வேண்டும். எங்களுடைய பகுதியிலே மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் அந்தப் பகுதியிலே அதிக அளவில் படிப்பதால், பள்ளிப் படிப்பை முடித்தவுடனே மாணவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் சேருவதற்கு வசதியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, எங்களுடைய ஓமலூர் தொகுதியில் இந்தக் கல்லூரியை அமைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். நன்றி.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஓமலூர் பகுதியில் புதிதாக அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்றும், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார். அவருடைய கருத்தினை ஏற்று, அவருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை ஊராட்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அது கிராமப் பகுதியாக இருந்தால், ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதோடுமட்டுமல்லாமல், தொடரும் செலவு என்று எடுத்துக் கொண்டால், சுமார் 14 கோடியே 74 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தொடரும் செலவு என்பது ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான சம்பளம் வழங்குவதாகும். தொடராச் செலவினம் என்று எடுத்துக் கொண்டால், அதற்கு

[2016 ஜனவரி 21

37 கோடியே 2 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தொடராச் செலவினம் என்பது இயந்திரங்கள் 8 இலட்சம் ரூபாய் அளவிற்கு வாங்க வேண்டும்; கணினிகள் வாங்க வேண்டும்; அறைகலன்கள் வாங்க வேண்டும்; நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்கவேண்டும்; கட்டடங்கள் கட்டிட வேண்டும். ஆக, ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், அரசுக்குச் செலவினமாக 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. கிராமப்புறமாக இருந்தால், கூடுதலாக ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இதுவரையில் இல்லாத அளவிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. அந்தவகையில், நீங்கள் இருக்கிற உங்களுடைய பகுதியில், இந்தத் தேவைகளெல்லாம் நிறைவேறுகிற காலகட்டத்தில், அரசு அதைப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

நியாய விலைக் கடை கட்டடம்

***57887—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், இனாம்ரெட்டியபட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 ஜனவரி 21]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், இனாம்ரெட்டியபட்டி தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்படும் இனாம்ரெட்டியபட்டி நியாய விலைக் கடை, 620 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாய விலைக் கடையாக 2001 ஆம் ஆண்டு முதல் கொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 210 கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் 106 அம்மா மருந்தகங்கள் மூலமாக உயிர் காக்கும் மருந்துகளைத் தரமான விலையில் விற்பனை செய்து வருவதோடு மட்டுமல்லாமல், 100 கோடி ரூபாய் விலை நிலைப்படுத்தும் நிதியத்தை உருவாக்கி 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலமாக காய்கறிகளையும், சந்தைக் குறுக்கீட்டுத் திட்டத்தின்மூலம்–Marketing intervention மூலமாக பருப்பு, நல்லெண்ணெய், மிளகாய், புளி ஆகியவற்றின் விலையினையும் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கட்டுக்குள் வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'Public Distribution System–பொது விநியோகத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்று' மத்திய அரசின் உயர் அமைச்சர் பாராட்டியுள்ளார். அதைவிட 'திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்பதற்கிணங்க, சென்ற வாரம் தமிழகத்திற்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் – UNESCO–வின் தலைசிறந்த, உலகத்திலேயே தலைசிறந்த நிபுணர் Bob Reed அவர்கள், Water, Sanitation and Hygiene என்ற வார்த்தைக்கே WASH என்று பெயர் வைத்த அந்த நிபுணர், வெள்ளம் வந்தபோது, பண்ணைப் பசுமைக் கடைகளை உபயோகித்து எப்படி தமிழக அரசு விலையைக்

[2016 ஜனவரி 21

கட்டுப்படுத்தியிருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

கத்ரினா புயல் வந்தபோது, 9 மாதங்களுக்கு அமெரிக்க நாட்டினரால் recover ஆக முடியவில்லை. ஆனால், தமிழ்நாடு ஒன்பதே நாட்களில் வெள்ளத்தின் தாக்கத்திலிருந்து இயல்பு நிலைக்குத் திரும்பியிருக்கிறது என்று Bob Reed அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பண்ணைப் பசுமைக் கடைகளையும், மற்றுமுள்ள அனைத்து வலிமைகளையும் பயன்படுத்தி அரசு பொது விநியோகக் கட்டமைப்பு, இந்த சாதனை சாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இனாம்ரெட்டியபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் நியாய விலைக் கடையில் 894 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்த நியாய விலைக் கடைக்கான கட்டடம் கட்டப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலானதால், கட்டடம் சிதிலமடைந்துள்ளது. அதை இடித்துவிட்டு, புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது M.L.A. தொகுதி வளர்ச்சி நிதியின் மூலமாக 11 இடங்களில் 60 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயில் நியாய விலைக் கடை கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருந்தாலும்கூட, எனது தொகுதியில் இன்னும் 12 இடங்களில், குறிப்பாக செங்குன்றாபுரம், செங்கோட்டை, குந்தலப்பட்டி, கருப்பசாமி நகர், முண்டலாபுரம், எம்.புதுப்பட்டி, கவுண்டம்பட்டி, சித்தமநாயக்கன்பட்டி, கோபாலன்பட்டி, ரெங்கபாளையம், மத்திய சேனை, லட்சுமிநாராயணபுரம் ஆகிய இடங்களில் புதிய கட்டடங்கள் தேவைப்படுகின்றன. அந்தப் பகுதி மக்கள் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி ஏழை, எளிய மக்களுக்குப் பொற்கால ஆட்சி என்றால், கூட்டுறவுத் துறைக்கும் இது ஒரு பொற்கால ஆட்சிதான். வரலாற்றில், இதுவரை இல்லாத அளவிற்கு இந்த 4½ ஆண்டுக் காலத்தில் கூட்டுறவுத் துறை அளப்பரிய சாதனைகளைப் புரிந்திருக்கிறது. கூட்டுறவு வங்கிகளுக்கெல்லாம் தேசிய, தனியார் வங்கிகளுக்கு நிகராக புதிய புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை இந்திய வரலாற்றில் வேறு எந்தவொரு மாநிலத்திலும் கட்டிக் கொடுக்கப்படாத வகையில், குறுகிய காலத்தில் 3,879 கிடங்குகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 1,394 நியாய விலைக் கடைகளும், 859 அலுவலகக் கட்டடங்களும் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 47 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. 122 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக, 6,326 புதிய கட்டடங்களை ஏறத்தாழ 588 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். குறு, சிறு விவசாயிகளும் இன்றைக்குப் பயனடைந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், கூட்டுறவுத் துறை மூலமாக மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைகளை உயர் அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய பகுதிகளிலெல்லாம் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிதிலமடைந்த கட்டடங்களை மாற்றியமைப்பதற்கு வாய்ப்பு இருந்தால் மாற்றி அமைக்கப்படும். இல்லையென்றால், இந்தச் சங்கங்களுக்கு மராமத்து செய்வதற்கென ஓராண்டுக்கு ரூ.50,000 நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்; அதன் மூலமாக செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

[2016 ஜனவரி 21

திரு. க. பாண்டியராஜன்: Positive ஆக பதில் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எனது தொகுதியில் தவசிலிங்காபுரம், சூலக்கரைமேடு, கே.செவல்பட்டி, பெத்துலுபட்டி, கட்டனார்பட்டி, பவளக்குறிச்சி மற்றும் விருதுநகர் 24-வது வார்டு ஆகிய 7 இடங்களில் நியாய விலைக் கடைகளைப் பிரித்துத் தர வேண்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன். இதைச் செய்து கொடுத்தால் நன்றியுடன் இருப்பேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் அரசு சட்ட, திட்டங்களுக்குட்பட்டும், கூட்டுறவு விதிகளுக்குட்பட்டும் வரும்பட்சத்தில், உறுதியாக அந்தக் குடும்ப அட்டைகள் பிரித்துக் கொடுக்கப்படும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் எண்ணம். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், தனது ஆட்சியில் எந்த மக்களுக்கும் நியாய விலைக் கடைகள்மூலம் பொருள்களைப் பெறுவதில் எந்தவிதமான சிரமமோ, இடையூறோ இருக்கக்கூடாது: தங்குதடை இருக்கக்கூடாது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நினைக்கிறார்கள். எனவே, அதிகமாக கடைகள் இன்றைக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தூறைதியாகப் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட இனியூர் ஊராட்சியில் விளாங்குளம், வாழவந்தான்கோட்டை–பெரியார் நகர், பத்தாளைப்பேட்டை ஊராட்சியில் கோட்டப்பட்டி, பழங்கனாங்குடி ஊராட்சியில் பூலாங்குடி ஆகிய இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

2016 ஜனவரி 21]

2012–2013 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நியாய விலைக் கடைகள் 4 ஆண்டுகள் கடந்தும் இதுவரையிலும் திறக்கப்படாமல் உள்ளன. இதுகுறித்து கடந்த கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவந்திருக்கின்றேன். எனவே, திறக்கப்படாமல் இருக்கின்ற நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் திறக்கப்பட்டிருக்கும் எந்தக் கடையையும், எதற்காகவும் தாமதப்படுத்துவது இல்லை. ஏதேனும் வழக்கு இருக்கும்பட்சத்தில், அந்தமாதிரி இருக்குமேயொழிய, வேறு ஒன்றும் இல்லை. உறுப்பினர் கோரிக்கையை எழுதிக் கொடுப்பாரேயானால், எப்பொழுது கட்டி முடிக்கப்பட்டது என்பது குறித்து உடனடியாகப் பதில் கேட்டு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

திருமண மண்டபம்

***53876 திருமதி. க. அழகுவேலு:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2016 ஜனவரி 21

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி நகராட்சியில் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள பகுதியில் தனியார் திருமண மண்டபங்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளன. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் குறைவாகவே இருக்கிறது. திருமண மண்டபம் கட்டுமளவிற்கு திருக்கோயிலுக்குச் சொந்தமாக காலியிடமும் இல்லை. அதுமட்டுமல்லாமல், இத்திருக்கோயிலைச் சுற்றி அதிக அளவில் குடியிருப்புகள் இருப்பதாலும், போக்குவரத்து நெரிசல் ஆகிய காரணங்களினாலும் இங்கு திருமண மண்டபம் கட்டுவதற்குரிய சாத்தியக் கூறுகள் மிக குறைவாகவே இருக்கின்றன. இருந்தபோதிலும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை வருங்காலத்தில் பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் குறைகளைத் தீர்க்க "அம்மா அழைப்பு மையம்" தந்து, தமிழினம் வாழவே தன் நலம் துறந்திட்ட தாயுருவப் போராளியே! எங்கள் அன்னையே! ஆலயங்கள்தோறும் அன்னதானம் தந்து, கோயில்கள்தோறும் ஒரு கால பூஜை நடக்க செய்து, அந்தப் பூஜைக்குத் தேவையான பூஜை சாமான்கள் அனைத்தையும் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

2016 ஜனவரி 21]

எனது கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலில் 50 x 80 அடி, அதாவது 4,000 சதுர அடியில் ஓர் அரிசி அரைவை மில், ஒரு கலன், இரண்டும் சேர்ந்து கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ளது. ஒரு நபர் அந்த அரைவை மில்லை குத்தகைக்கு எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த நபர் அந்த இடத்தை கோயிலுக்கே ஒப்படைப்பதாகக் கூறியிருக்கிறார். அந்தக் கோயிலில் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில், மூகூர்த்த தினங்களில் குறைந்தபட்சம் 10 திருமணங்களாவது நடைபெறுகின்றன. இந்தச் சூழ்நிலையில், சுபமுகூர்த்த தினங்களில் இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதில் இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே, கோயிலுக்குச் சொந்தமாக ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தந்தால், ஏழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கோயிலுக்குச் சொந்தமாக ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லாத மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தமிழகத்தில் இதுவரையிலே இல்லாத அளவில் வரலாற்றில் மிகப் பெரிய எண்ணிக்கையாக 8,499 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்குத் திருப்பணிகளைச் செய்து, குடமுழுக்கு செய்த தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் பரிசீலிக்கப்படும் என்று ஏற்கெனவே நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் வைத்திருக்கிற ஓர் இடத்தை விட்டுக்கொடுக்க அவர் தயாராக இருக்கிறார். அது திருக்கோயிலின் இடம். அந்தத் திருக்கோயிலினுடைய இடத்தை விட்டுக்கொடுத்தால், அதைக் கட்டுவதற்கு அறநிலையத் துறை தயாராக இருக்குமா, பரிசீலிக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு தனியார் வைத்திருக்கின்ற

[2016 ஜனவரி 21

அந்த இடத்தை, திருக்கோயிலுக்கு விட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடமாகும். ஆகவே, அங்கே திருமண மண்டபம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி புரிந்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தேனி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலை அருகில் இருக்கின்ற கூத்தநாச்சி ஆற்றின் அருகில் இருக்கின்ற கூத்தநாச்சியம்மன் கோயிலை எடுத்து, சிறப்பாகப் புனரமைத்து, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குச் சிறப்பு சேர்க்க வேண்டுமென்று கோருகிறேன். அந்தக் கோயிலுக்கு ஏற்கெனவே பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆகவே, அந்த நிலத்தை அரசு எடுத்து, அந்தக் கோயிலைக் கட்டித் தருமாறு தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் கூத்தநாச்சியம்மன் திருக்கோயிலைப் புதிதாக

2016 ஜனவரி 21]

புனரமைப்பதற்கு நிலம் இருக்கிறது. ஆகவே, அந்தத் நிலத்தை எடுத்து, அந்தத் திருக்கோயிலைப் புனரமைக்க வேண்டுமென்ற ஒரு கேள்வியை கேட்டிருந்தார். அதனைப் பரிசீலித்து, உரிய நடவடிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், குடிசைகளில் வாழ்ந்து வருகின்றவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படால் இருக்கின்றது. மின் இணைப்பு வாங்க வேண்டுமென்று சொன்னால், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடமிருந்து அனுமதி பெற வேண்டுமென்ற விதி இருக்கின்றது. அதனைத் தளர்த்தி, ஆங்காங்கு உள்ள அலுவலகத்தில் அனுமதியைப் பெற்று, மின் இணைப்பைப் பெறுவதற்கான ஆணையை வழங்குவதற்கு அரசு முன்வருமா? அதோடு, 21 ஆம் நூற்றாண்டிலும் இருட்டிலேயே வாழ்ந்து வருகின்ற அந்த மக்களை, அரசு கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த விதியைத் தளர்த்த முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருட்டிலே இருந்த தமிழக மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், எந்தப் பகுதியானாலும், சாதாரண மக்கள் கேட்கின்ற கோரிக்கையை எல்லாம் உடனடியாக நிறைவேற்றித் தருவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களின் தொகுதியில் உள்ள திருக்கோயில் நிலங்களில்

[2016 ஜனவரி 21

குடியிருப்பவர்களுக்கு, தடையின்மைச் சான்று பெறப்பட்ட பின்னர்தான் மின் இணைப்பு கொடுக்கப்படுகின்றது என்றும், அந்தச் சான்றிதழ் வாங்குவதற்குக் காலதாமதம் ஆகின்றது என்றும் சொன்னார்கள். அதாவது, 30 ஆண்டுகளுக்கு மேல் கோயில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களை வரன்முறை செய்ய வேண்டும் என்பது விதி. அதன் அடிப்படையில், அறநிலையத் துறைக்குச் சொந்தமான திருக்கோயில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களை வரன்முறை செய்து, அவர்களுக்கு உடனடியாக உரிய சான்றிதழ் வழங்கப்படுகின்றது. அதோடுமட்டுமல்லாமல், மின் இணைப்பு என்று வரும்போது, அந்தந்தப் பகுதிகளில் உள்ள அறநிலையத் துறை அதிகாரிகள், தங்கள் திருக்கோயிலின் கட்டுப்பாட்டிலுள்ள குடியிருப்புகளுக்கு, உடனடியாக NOC கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்குவற்குரிய நடவடிக்கையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

சிற்றுந்து

***48067—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புறநகர் மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

2016 ஜனவரி 21]

இப்போது புறநகர்ப் பகுதிகளிலும், கிராமப்புறப் பகுதிகளிலும் சிற்றுந்துகள் இயக்குகின்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, தற்போது சென்னையில் சிற்றுந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொதுவாக, கிராமப்புறப் பகுதிகளில் சிற்றுந்தின் தேவைகள் அதிகரித்திருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கிராமங்களிலே உழைக்கும் மக்கள், தொழிலாளர்கள் கிராமத்தின் உள்பகுதிகளில்தான் வசித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஒரு பேருந்தைப் பிடிக்க வேண்டுமென்று சொன்னால், 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பிரதான சாலைக்கு வந்துதான் பேருந்துகளைப் பிடிக்க வேண்டியிருக்கின்றது. எனவே, அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் உதவக்கூடிய வகையிலே, ஏழையெளிய மக்களுக்கு உதவக்கூடிய வகையிலே, தமிழகம் முழுவதும் குக்கிராமங்களை இணைக்கக்கூடிய வகையிலே, சிற்றுந்து வசதிகளை அவசியம் அரசு ஏற்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசுடன் ஒப்பிடுகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த நான்கே முக்கால் ஆண்டுகளில் கிட்டத்தட்ட 1,629 புதிய வழித்தடங்களை இயக்கியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே இருந்த 2,124 வழித்தடங்களை நீட்டிப்பு செய்து, 6,262 வழித்தடங்களாக நடைகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. 1,000 பேர் உள்ள கிராமங்களில் எங்கெங்கு பஸ் வசதி இல்லையோ, அங்கெல்லாம்

[2016 ஜனவரி 21

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பேருந்து வசதியை செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் என்று எங்கேயும் பஸ் வசதி இல்லாமல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைக் கிராமங்கள், குக்கிராமங்களான பீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான்கொல்லை போன்ற பகுதிகளில் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் பல்வேறு கிராமங்களுக்கும் மிகச் சிறப்பான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தவகையில், அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் பயன்பெறும்வகையில் மலைக் கிராமங்களுக்கு, குருமலை போன்ற பகுதிகளுக்கு சிற்றுந்து வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற மலைப்பிரதேசங்களுக்கென்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 533 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில் உள்ள வழித்தடங்களில் ஏதாவது ரோடு வசதி சரியில்லாமல் இருக்குமென்று நினைக்கின்றேன். அப்படியிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், மாண்புமிகு அம்மா

2016 ஜனவரி 21]

அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

டாக்டர் ச. துரையப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல், கொடை வள்ளல், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, பொன்னியின் தலைவி மக்கள் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி தாலுகா, பந்தப்புளி என்ற கிராமத்திற்குப் பேருந்து வசதி இல்லை. ஆகையால், பள்ளி செல்லும் மாணவ-மாணவியர்கள், வயதானவர்கள், மருத்துவமனைக்குச் செல்பவர்கள், குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எங்கெல்லாம் பேருந்து வசதிகள் தேவையோ, அங்கெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், பள்ளி நேரத்திலே பேருந்துகள் இல்லையென்ற கோரிக்கையைச் சொல்லியிருக்கின்றார். பள்ளி நேரத்திலேதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதிக பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையைக் குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாகப் பரிசீலிக்கப்படும்

[2016 ஜனவரி 21

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

***47473—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையிலிருக்கும் பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு எதுவும் பெறப்படவில்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

2016 ஜனவரி 21]

முற்பகல் 11–05

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் பண்டைய திருவிதாங்கூர் கொச்சின் மாநிலத்தின் தலைநகரமாக இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். மன்னர் ஆட்சியின்போது அமைக்கப்பட்ட அரண்மனை தற்போது பத்மநாபபுரத்தில் எழில்மிகு தோற்றத்துடன் காணப்படுகிறது. தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் நவீன வசதியுடன்கூடிய புதிய கட்டடங்கள் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டது. குமரி மாவட்டத்தில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் நாகர்கோவிலில் இன்னும் இருந்து வருவதால், பொது மக்களின் வசதியைக் கருத்தில்கொண்டு, மாவட்டத்தின் மையப் பகுதியான தக்கலையிலுள்ள கட்டட வசதியுடன்கூடிய பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 170 புதிய நீதிமன்றங்கள் 134 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், 46 புதிய நீதிமன்றங்களை 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 119 நீதிமன்றங்கள் மட்டுமே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 216 நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2016 ஜனவரி 21

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் புதிய கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து எவ்வித செயற்குறிப்பும் இதுவரை பெறப்படவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பத்மநாபபுரத்தில் வாழும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, புதிய குற்றவியல் நீதிமன்றத்தை 67 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்க கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் விதி எண் 110-ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். இந்த நீதிமன்றம் அமைக்க அரசாணை எண் 953, உள் துறை, நாள் 23-12-2015-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குடும்ப நல நீதிமன்றம் இல்லாததால், தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் குடும்ப நல நீதிமன்றம் (Family Court) அமைக்க வேண்டும். தக்கலையில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றுதான் இருந்து வருகிறது; 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் இன்றைக்கு நிலுவையில் இருந்து வருகின்றன என்பதைக் கருத்தில்கொண்டு, ஒரு துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை அங்கே அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விரைவில் நீதி கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும்

2016 ஜனவரி 21]

உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் இதுவரை 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்கள். பத்மநாபபுரம் மற்றும் தக்கலையில் புதிய துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் குடும்ப நல நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து எந்த செயற்குறிப்பும் இதுவரை பெறப்படவில்லை. புதிய கூடுதல் அமர்வு நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம், துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திடமிருந்து செயற்குறிப்பு பெறப்படும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

11—

கால்நடைக் கிளை நிலையம்

***51654—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே செயல்பட்டு வந்த ஊரகக் கால்நடை மருந்தகம், 1-4-2013 முதல் கால்நடை மருந்தகமாகத் தரம்

[2016 ஜனவரி 21

உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த மருந்தகத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ரூபாய் 21 இலட்சம் செலவிலே கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவட்லா மலை மீது 4 கிராமங்கள் உள்ளன. அந்த 4 கிராமங்களில் சுமார் 2 ஆயிரம் மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். விவசாயமும், கால்நடை வளர்ப்பும்தான் இவர்களுடைய பிரதானத் தொழில். இது ஆந்திராவும், தமிழகமும் இணையும் பகுதி; பரந்து விரிந்த காடுகள் நிறைந்த பகுதி. எனவே, இங்கு வாழ்கின்ற மக்களுக்குக் கால்நடை வளர்ப்புதான் முக்கியத் தொழில். அந்தக் கால்நடைகளுக்கு நோய்த் தாக்குதல் ஏற்பட்டால், கீழே பேரணாம்பட்டுக்குக் கொண்டுவந்துதான் சிகிச்சை அளிக்கும் நிலை இருக்கின்றது. எனவே, அங்கிருக்கின்ற கிளை நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறையின் வாயிலாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஜனவரி 21]

12—

ஆவின் பாலகம்

***53871—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, உதயம் நகரிலுள்ள மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

பால் வளத் துறைக்கு முன் எப்போதும் இல்லாத சரித்திர சாதனையாக ரூ.593 கோடி வழங்கி இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திய வாழும் வள்ளல்; தமிழகத்தின் வளமைக்காகவும், எதிர்கால சந்ததியினருக்காகவும் சிந்தித்து, (மேசையைத் தட்டும் ஒலி) உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி வெற்றி கண்ட பார் புகழும் பாரதத் தாய், தாயுருவப் போராளி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, உதயம் நகர் மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் மாணவர்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சுடு பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனை செய்வதற்கு உரிய இடம் மாநகராட்சியால் ஒதுக்கீடு செய்யப்படும்பட்சத்தில், பால் பொருட்களின் விற்பனை நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

[2016 ஜனவரி 21

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, தங்கள் பெயரை தாங்கள் மறக்கின்ற அளவிற்கு மக்கள் கூப்பிடும் "அம்மா" என்ற ஒற்றை சொல்லுக்குக் கட்டுப்பட்டு, தாங்கள் செய்கின்ற எண்ணிலடங்கா திட்டங்கள்மூலம் பெற்ற தாயை மிஞ்சும் அளவிற்கு மக்களைக் காக்கும் மாதரசி அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க படகு அளித்து, பசியாற உணவு அளித்து, பாதுகாப்பான இடம் அளித்து, நோய் தொற்றாமல் இருக்க மருந்து அளித்து, வங்கிக் கணக்கில் பணம் அளித்து, பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்பு உள்ளத்தால் பாராட்டப்படுகின்ற வரலாற்று நாயகி அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நமக்கு நாமே' என்று சுயநலத்துடன் சுற்றித் திரியும் சில சுயநலவாதிகள் மத்தியில், 'மக்களுக்காக நான்' என்று மக்களுக்காக ஆணித்தரமாக அர்ப்பணித்து வாழும் எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) 'தமிழகம்தான் என் இல்லம்; தமிழக மக்கள்தான் என் குழந்தைகள்' என்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற வாழும் தெய்வம் அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) மழை வெள்ளத்தால் அதிக பாதிப்புக்குள்ளான வேளச்சேரி தொகுதியை தங்கள் கருணை உள்ளத்தால் மூன்றே நாட்களில் மீட்டெடுத்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வேளச்சேரி தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி, உதயம் நகரில் மாநகராட்சி இடத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தால், பால் பொருட்களின் விற்பனை நிலையம் அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்ததற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஜனவரி 21]

13—

விளையாட்டரங்கம்

***29795—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டரங்கம், ஓடுதளம் மற்றும் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் செயல்பட்டு வரும் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு உள் விளையாட்டரங்கம், ஓடுதளம் மற்றும் விளையாட்டரங்கம் அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு மைதானம் கிட்டத்தட்ட 12 ஏக்கரில் இருந்து வருகிறது. அது பழமையான பள்ளி. அந்தப் பள்ளிக்கு உள் விளையாட்டு அரங்கம் மற்றும் ஓடுதளம் கட்டித்தர வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அதை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு உள் விளையாட்டரங்கம், ஓடுதளம் மற்றும் விளையாட்டரங்கம் அமைக்கக் கோருவதால், நிதிநிலைமைக்கேற்ப அவரது கோரிக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி துறையின் சார்பிலே, ஒன்றியத்திலுள்ள பள்ளிகளுக்கு விளையாட்டரங்கம் கட்டுவதற்காக அரசு நிதி ஒதுக்கியது. அந்த நிதியின்மூலம், உசிலம்பட்டி ஒன்றியத்தில் சரியாக விளையாட்டரங்கம் கட்டித்தரவும் இல்லை. அதற்கான நிதி ஒதுக்கப்பட்டும், செலவுகள் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, உசிலம்பட்டி நகருக்கு அதை மாற்றிக் கொடுத்தால்கூட மிகவும் வசதியாக இருக்கும். மேலும், எழுமலை ஆண்கள் பள்ளி, சாப்டூர் பள்ளி, சேடப்பட்டி பள்ளி, எம். கல்லுப்பட்டி பள்ளியில் விளையாட்டரங்கங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு காம்பவுண்ட் சுவர்கள் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த வட்டார விளையாட்டு அரங்கத்தினை இன்னும் நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்ற காரணத்தினால், அதனை உசிலம்பட்டிக்கே மாற்றியமைப்பதற்கு கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். என்ன காரணத்திற்காக அங்கே அந்தப் பணி இன்னும்

2016 ஜனவரி 21]

தொடங்கவில்லை என்பதை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் அந்த இடத்திலே விளையாட்டு மைதானத்தைத் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்றால், அதை மாற்றிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு கோரிக்கைகளை நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அவை குறித்தும் நீங்கள் எழுதிக் கொடுத்தால், அவற்றைப் பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

14—

அரிய வகை மரங்களைப் பாதுகாத்தல்

***15287—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலைப் பகுதியிலுள்ள அரிய வகை மரங்களைப் பாதுகாத்து, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் சட்டமன்றத் தொகுதி, அழகர்கோவில் பகுதியில் உள்ள காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும். மேலும், அப்பகுதிகளில் அரிய வகை மரங்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் ஆகியவை நல்ல முறையில் வனத் துறையால் பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய கேள்வியைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் அமைந்துள்ள 'ஸ்ரீகள்ளழகர்' என்று சொல்லக்கூடிய அழகர்கோவில் மலை, மதுரை மாவட்டமும், திண்டுக்கல் மாவட்டமும் இணைந்தது. இரண்டு மலைகளும் ஏறத்தாழ 500 ஏக்கருக்கும் மேற்பட்ட மலைப் பகுதியாக இருந்து வருகிறது. மலை உச்சியின் நடுப் பகுதியிலே 6 கிலோ மீட்டர் தொலைவிற்கு ரோடு செல்கிறது. மேலே ராக்காயிஅம்மன் தீர்த்தம் ஆடக்கூடிய ஒரு தீர்த்தநிலை ஏற்கெனவே இருக்கின்றது. அதில், ஒரு புறம் திண்டுக்கல் மாவட்டத்திலும், மற்றொருபுறம் மேலூர், மதுரை மாவட்டத்திலும் அமைந்திருக்கிறது. பாரம்பரியமிக்க அந்த மலையின் நடுவில், 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்கள் நடந்தும், கார்களிலும் செல்கின்றனர். அந்தப் பாதையில், 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு உருவாகியுள்ள பல அரிய வகை மரங்கள், பெரிய பெரிய மரங்களாக ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் செல்கின்றபோது, ஒவ்வொரு மரத்தையும் நின்று, நின்று பார்த்து, 'இவ்வளவு அழகாக இருக்கிறதே! ஒவ்வொரு மரமும் வித்தியாசமாக இருக்கிறதே' நின்று அவற்றைப் பார்த்துச் செல்கின்றார்கள். ஆகையால், நான் அன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அங்கே ஆயிரக்கணக்கான அரிய வகை மரங்கள் இருக்கின்றன; பலவகை உயிர்களை, மனித உயிர்களைக் காக்கக்கூடிய மருந்துகளாகவே அந்த மரங்களெல்லாம் பயன்பட்டு வருகின்றன. ஆனால், அவை என்னென்ன அரிய வகை மரங்கள் என்று அங்கே செல்கின்ற பக்தர்களுக்கும், பொது மக்களுக்கும் சரியாகத் தெரிவதில்லை; ஆகையினால், அவை என்னென்ன மரம் என்பதை அறியும் வகையில், வனத் துறை மூலமாக ஒவ்வொரு மரத்திலும், அது என்ன வகை மரம் என்பதைக்

2016 ஜனவரி 21]

குறிப்பிட்டு பெயர்ப் பலகைகளை வைக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களைக் காத்துக்கொண்டிருக்கின்றவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யானைகளுக்குகூட முகாம்கள் நடத்தி, விலங்குகளைக் காத்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில், மக்கள் தெரிந்துகொள்வதற்கு, வனத் துறை மூலமாக அந்த மரங்களினுடைய பெயர்களைப் பதிவேற்றச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகர்கோவில் பகுதியிலுள்ள வனங்களின் மொத்தப் பரப்பு 6,811 ஹெக்டேர் ஆகும். இவ்வனப் பகுதி 1883 ஆம் ஆண்டில் காப்புக் காடாக அறிவிக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அழகர்கோவில் வனப் பகுதியில் அயனி பலா, மகாகனி, வேங்கை, கோதட்டி, கடுக்காய் போன்ற அரிய வகை மரங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், நெல்லி, சித்தரத்தை, பிரண்டை, குன்றிமணி, ஆடாதொடா போன்ற மருத்துவ தாவரங்கள் 250 ஹெக்டேர் பரப்பில் அப்பகுதியிலே பயிர் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11–20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மரங்களில் வனத் துறை மூலமாக என்னென்ன அரிய வகை மரங்கள் அவை என்று பெயர் பலகை இட்டு பராமரிப்பதற்குரிய நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவானப் பார்வைக்கு எடுத்துச் சென்று எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஜனவரி 21

15—

மாசினைத் தடுத்தல்

***56935—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி பகுதியிலுள்ள நவீன அரிசி ஆலைகள் மூலமாக ஏற்படும் மாசினைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பகுதியில் இயங்கிவரக்கூடிய சுமார் 200 நவீன அரிசி ஆலைகளில் 130 ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தலின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பினை நிறுவி இயக்கி வருகின்றன. மீதமுள்ள அரிசி ஆலைகள் இந்த அமைப்பினை நிறுவுவதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்த ஆலைகள் காற்று மாசினைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் புகைபோக்கியில் நீர்வடிப்பான் அமைத்து இயக்கி வருகின்றன. இந்த ஆலைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறந்திருக்கக்கூடிய 2016 ஆம் ஆண்டு தமிழக மக்களுக்கும், தமிழகத்திற்கும் மாற்றமும் ஏற்றமும் தரக்கூடிய ஒரு நல்ல ஆண்டாக அனைவருக்கும் அமைய வேண்டுமென்ற என்னுடைய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியில் இருக்கக்கூடிய 327 அரிசி ஆலைகளில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, ஏறத்தாழ 90 விழுக்காடுகளுக்கு மேற்பட்ட அரிசி ஆலைகளிலே, கழிவுநீர் சுத்திகரிக்கக்கூடிய வசதிகளைச் செய்திருக்கின்றார்கள். தமிழகத்திலே தஞ்சைத் தரணிக்கு அடுத்தபடியாக, ஆரணி பகுதியிலே பெரும்பான்மையான அரிசி ஆலைகள் இருக்கின்றன. ஆரணி பகுதியிலே தயாராகக்கூடிய அரிசி, உலக நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே, மிகப் பெரிய அளவிற்கு, வருவாயை ஈட்டித் தரக்கூடிய அளவிலே தமிழக அரசுக்கு தனது பங்கைச் செலுத்திக்கொண்டிருக்கிறது.

எனவே, அந்த அரிசி ஆலைகளில் இருக்கக்கூடிய புகை போக்கிகள் நல்ல முறையிலே பயன் அளித்துக் கொண்டிருக்கின்றன. நல்ல முறையிலே அவற்றைப் பராமரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே, ஒரு சில ஆலைகளில் இருந்து வரக்கூடிய புகையைக் கட்டுப்படுத்த வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், சுற்றுப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களுடைய நலனைப் பேணுகின்றவகையிலே, இந்தச் செயல் திட்டங்களை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்திலே மாற்றமும், ஏற்றமும் வேண்டுமென்று சொன்னார்கள். அடுத்த முறை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகளே இல்லாத ஒரு சட்டப் பேரவை அமையும் என்கின்ற மாற்றத்தை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் ஆர்வத்தோடு இன்றைக்கே செயல்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பகுதியில் இயங்கி வருகின்ற 200 நவீன அரிசி ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உரிய இசைவாணையைப் பெற்றுள்ளன.

[2016 ஜனவரி 21

இந்த அரிசி ஆலைகளின் செயல்முறையான நெல் வேகவைத்தலின்போது வெளிவருகின்ற கழிவுநீரை, சுத்திகரிப்புச் செய்யத் தேவையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய அமைப்புகளை நிறுவ அறிவுறுத்தப்பட்டு, சுமார் 130 நவீன அரிசி ஆலைகள் கழிவுநீரினை சுத்திகரிக்கத் தேவையான அமைப்புகளை நிறுவி இயக்கி வருகின்றன. அரிசி ஆலைகளில் கொதிகலனுக்குப் பயன்படுத்துகின்ற எரிபொருள்கள் மூலமாக ஏற்படுகின்ற புகை, துகள், மாசுக்கள் ஈர வடிப்பான்மூலம் கட்டுப்படுத்தப்பட்டு உயர்ந்த புகைபோக்கிமூலம் வெளியேற்றப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதியுள்ள அரிசி ஆலைகளில் தற்போது இயக்கத்திலுள்ள 26 தொழிற்சாலைகளுக்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அந்த மாவட்டத்தினுடைய சுற்றுச்சூழல் துறை பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மீதியுள்ள 44 அரிசி ஆலைகள் நலிவடைந்த நிலையிலே உள்ள காரணத்தாலே அந்த ஆலைகள் இயங்கவில்லை என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் எங்கெங்கேயோ போய்க்கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. அவ்வளவுதான். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருப்பதனால், இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீக்கப்படுகிறது. வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 11–வது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. அ. பாப்பா சுந்தரம்
2. திரு. ஓ.கே. சின்னராஜ்
3. திரு. கே.பி. அன்பழகன்
4. திரு. ஆர். கின்னசாமி
5. திரு. பி.ஜி. நாராயணன்
6. முனைவர் செ.கு. தமிழரசன். (குறுக்கீடுகள்)

5. தகவல் கோரல்

(அ) ஜல்லிக்கட்டை மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.க. ஸ்டாலின், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே உங்கள் கட்சி உறுப்பினருக்குப் பேச வாய்ப்பு இருக்கின்றது அல்லவா? (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லுங்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய பண்பாட்டு விளையாட்டாக இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டு குறித்து சட்டமன்றத்தில் ஒரு சிறப்புத் தீர்மானம் . . .

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசலாம். திரு. ஸ்டாலினுக்குத் தெரியாதது இல்லை. கவர்னர் உரைமீதான விவாதத்தில் இதையெல்லாம் நீங்கள் பேசலாம். உங்கள் கட்சி உறுப்பினர் இன்று பேசுகின்றார், அவர் பேசலாம். (குறுக்கீடு) இல்லை, இதை நீங்கள் zero hour–ல் raise பண்ண வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இந்த மாதிரி allow பண்ணுகின்ற பழக்கம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, கவர்னர் உரையில் நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். நீங்கள் வேறு ஏதாவது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றைப் பேசுவீர்கள் என்றுதான் அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது பேசலாம். (குறுக்கீடுகள்) இல்லை, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) இப்போது வாய்ப்பு இல்லை, அப்போது நீங்கள் பேசலாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது உங்கள் கட்சி உறுப்பினர் பேசவிருக்கிறார். அப்போது என்ன பேச வேண்டுமோ, அதைப் பேசச் சொல்லுங்கள். அனுமதியில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு என்கிற நம்முடைய பாரம்பரிய விளையாட்டு விஷயத்தில் முன்பு இருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு, திராவிட முன்னேற்றக் கழகம் உடனிருந்த அந்த அரசு ஜல்லிக்கட்டு நடைபெறாமல் இருப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்தது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு பெரிய உரை நிகழ்த்துவதுபோல பேச வேண்டாம். இரண்டொரு வார்த்தையில் பேசி முடியுங்கள்.

2016 ஜனவரி 21]

திரு. அ. சவுந்தரராசன்: ஆகவே, ஜல்லிக்கட்டை நாம் மீண்டும் நடத்துவதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அவையில் நிறைவேற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், அவையில் நீங்கள்தான் விவாதத்தில் பேசப் போகின்றீர்களே? (குறுக்கீடு) நீங்கள்தானே பேசப் போகின்றீர்கள்? (குறுக்கீடு) அப்போது பேசலாம் அல்லவா?

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு ஆகியவை தமிழ்நாட்டினுடைய பாரம்பரியமான பண்பாட்டுக் குறியீட்டு விளையாட்டுகள். எனவே, மத்திய அரசு, வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து காளையை நீக்கி, அதை நடத்துவதற்கு வலியுறுத்தி உரிய ஒரு சிறப்புத் தீர்மானத்தை சட்டமன்றப் பேரவை இயற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்?

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலங்குகளைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரிலே தமிழக மக்களுடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு ஏற்பட்டு உள்ள தடையை நீக்கக்கூடிய வகையில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்?

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், மயிலாடுதுறை அருகே திருநாள்கொண்டசேரி என்ற கிராமத்தில் 70 வயது நிரம்பிய ஒரு முதியவர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வாய்ப்பு இல்லை. அதையெல்லாம் நீங்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு)

[2016 ஜனவரி 21

(அ) ஜல்லிக்கட்டை மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்—தோடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயதரணி, நீங்கள் என்ன ஜல்லிக்கட்டைப்பற்றிக் கேட்கப் போகிறீர்களா?

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு நடத்த தமிழக அரசு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க விரும்புகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.

முற்பகல் 11–30

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு குறித்து மத்திய அமைச்சர் அவர்கள், தமிழக அரசு அவசரச் சட்டம் நிறைவேற்றலாம் என்ற ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அதுகுறித்த தெளிவுரை தேவை. அந்த ஜல்லிக்கட்டை மிக விரைவில் இந்த ஆண்டே நடத்துவதற்கான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜல்லிக்கட்டைப்பற்றிப் பேசுவதற்கு காங்கிரசுக்கோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ எந்தவித அருகதையும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) திருமதி விஜயதரணி எழுந்து, ஆளோடு ஆளாக அவரும் ஜல்லிக்கட்டைப் பற்றி இங்கே பேசுகிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருக்கும்போதுதான், காளைகளை காட்சிப் பட்டியலிலே சேர்த்தது என்பதனை மாண்புமிகு விஜயதரணி அவர்கள் வசதியாக மறந்திருந்தாலும், நான் அதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஜல்லிக்கட்டைப்பற்றிப் பேசுவதற்கு எவ்வித தார்மீக உரிமையும் அவருக்கு இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவுதான். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை,

2016 ஜனவரி 21] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், திருமதி விஜயதரணிக்கு தான் சொல்லியிருக்கிறார். உங்களைச் சொல்லவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ஒரே பதில். ஜல்லிக்கட்டை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு முயன்று வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டபூர்வ நடவடிக்கை என்னென்ன எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நீங்களெல்லாம் மிகவும் நன்றாகவே அறிவீர்கள். ஆகவே, தொடர்ந்து சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதி கொண்டிருக்கின்றார்கள் என்பதனை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள். (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்பன், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தற்போது உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. இதுகுறித்து மீண்டும் நாம் விவாதத்திற்குள்ளே போனால், பல விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி, அந்தப் பிரச்சினை பூதாகரமாக வெடிப்பதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டபூர்வமாக அணுகுவார்கள் என்பதனை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். அதுபற்றி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தினால், அதுகுறித்து மேலும் விவாதம் வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதுசம்பந்தமாக தேவையில்லை, விட்டுவிடுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்பன் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை வழிமொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

@ 267 முதல் 304 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சபையை நடத்த வேண்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.

திரு. கே. குப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிவு, பேராற்றல், பேராண்மை, பெருந்துணிவு இவற்றின் மொத்த உருவமே அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மண் ஆளப் பிறந்தவராம், மதிநுட்பம் நிறைந்தவராம், எந்நாளும் மக்கள் இதயத்தில் நிறைந்தவராம் எங்கள் அம்மா, அம்மா.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

'உண்மை, உழைப்பு, உயர்வு, முயற்சி இதுவே வாழ்வின் வெற்றி' என்று எங்களுக்கு நாளும், நாளும் வேதவாசகம் சொல்லும் தாயே! எண்ணிச் சொல்ல முடியாத எத்தனையோ துயரங்களை நித்தம் தாங்கி, இந்தியாவில் தமிழகம் முதன்மை பெற கண் துஞ்சாது கடமையாற்றும் தன்னலம் கருதா தலைவியே! தனிப்பெரும் கருணையே! நானிலம் வாழ்த்தும் குணமே! மக்கள் எதிர்பார்க்கும் பாரதமே! நரியும், புலியும் நடுங்கி வணங்கும் சிம்மமே! நாளையும் நாடு வரும் உங்கள் வசமே! ஓய்வறியா உழைப்பின் உயர்ந்த உத்தமரே! அன்பு, அறிவு, துணிவு என பன்முகப் பண்புகளை ஒருங்கே கொண்ட இயக்கத்தின் ஆதாரமே; அரசியல் சிகரமே; அன்பின் அகரமே! தர்மத்தின் தாயகமாய், தாய்மையின் ஓவியமாய், அண்ணமிடும் அட்சயமாய் விளங்கும் 9—வது வள்ளலே! கார் உள்ளவரை, கடல் உள்ளவரை, நிலம் உள்ளவரை, நீர் உள்ளவரை, இந்த மண் உள்ளவரை நின் புகழ்பாடும்.

முற்பகல் 11–35

பாடல் பெற்ற நில உலகில் திருப்பாற்கடல் வேந்தன் பள்ளி கொள்ளும் திருத்தலங்கள், திவ்யதேசங்கள் 108. ஜகத்தை ஆளும்

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

மகத்துவம் கொண்ட அன்னையே, நீங்கள் இருக்கும் வேதா நிலையமே நாங்கள் வணங்கும் திவ்ய தேசம். அரசியல் வானில் நீங்கள் நிரந்தர ஒளி விளக்கு, அச்சம் உதிர்த்து அரசியல் எதிரிகளின் உச்சந்தலையில் ஆணி அடித்தவர் நீங்கள் ஒருவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) புண்ணியத்தின் பிறப்பே, புரட்சியின் புறப்பாடே, கருணையின் வெளிப்பாடே, துணிவின் தோற்றமே, மனிதம் போற்றும் புனிதமே, மனித சக்தி கடந்த மகா சக்தியே, இந்தச் சின்னவன் நான் சிரம் தாழ்ந்து வணங்குகிறேன்.

நம் தமிழ் கூறும் நல் உலகம் ஆளும் நற்றமிழ்த் தாயின் உழைப்பின் மேன்மையை, ஆற்றும் கடமையை இப்படியெல்லாம் நயம் நிறைந்த சொல்லால் போற்றி வணங்கத் தோன்றுகிறது. மணிமேகலை அட்சய பாத்திரத்தின் மறுவடிவமே, தெரசாவின் கருணையை மிஞ்சும் செயல் வடிவமே, புத்தனின் சாந்தம் நிறைந்த புனிதத்துவமே, புறநானூற்றின் வீரம் செரிந்த புகழின் உரமே, பசிப் பிணி துடைக்க வந்த தாய்மையின் கரமே, பாதகத்தை உடைத்தெரியும் துணிவின் திறமே, வரலாற்றை வழிநடத்தும் வான்மழை அறமே, வஞ்சகத்தை தகர்த்தெரியும் தெய்வ சன்னிதானமே, சூழ்ச்சிகளை அறுத்தெரிந்த சுடர்மிகு கதிரே, சூதுமதி நிறைந்தவரின் ஆணிவேரைப் பொசுக்கிய நெருப்பு மலரே, மானுடம் விடியல்பெற வந்த மணிவிளக்கே, உலகத் தமிழரை இரட்சிக்கப் பிறந்த ஒளிவிளக்கே, கர்ணனின் குணத்தை கரங்களாய்க் கொண்ட கண்ணியத்தின் உறைவிடமே, கரிகால் சோழனின் வீரத்தை செயலில் வகுக்கும் புனிதத்தின் புகழிடமே, பொய்யர்களை தவிடுபொடி செய்த போர்வாளே, புறவார்களை புறமுதுகிட்டு ஓடச் செய்த அறிவுடைமையின் கூர்வாளே, எட்டாம் வள்ளலாய் எண் திசையும் போற்றும் மக்கள் திலகம் அவர்கள் கட்டி எழுப்பிய கழகக் கோயிலை கண் துஞ்சாது, கடமை மாறாது, ஓய்வறியாது, உளம் சோராது வானளாவிய உயரத்திற்குக் கொண்டு சேர்த்து, இன்று வையகமே வியந்து நோக்கும் கழகமாய் வார்த்தெடுத்து, வழிநடத்தும் தாயின் பெருமையை நினைக்கிறபோது என் நெஞ்சம் இரும்புது எய்துகிறது.

எத்தனை இடர்கள், எத்தனை இன்னல்கள்? இடர்களை இதிகாசமாக்கியவரும், இன்னல்களை தரைமட்டமாக்கியவரும் நம் தங்க குணமுடைய தன்னிகரில்லா தாய்தான். விடுதலைக் கவிஞன் பாரதியின் சுடர் மிகுந்த சொற்றொடர்போல் 'வேடிக்கை மனிதரைப் போல் நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ',

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

என நெருப்பைத் தின்று செரித்த ஃபீனிக்ஸ் பறவையாய் நீதி செங்கோலை நிலைநாட்டி இன்று ஆட்சிப் பரிபாலனம் செய்யும் அருந்தவத்தை அகிலமே கண்டு அகம் மகிழ்கிறது; ஆரவாரிக்கிறது. முகத்திரை கிழிக்கப்பட்ட மூடர் கூட்டம் இன்று முக்காடிட்டு முடங்கிக் கிடக்கிறது மூலையில்.

அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கிய அன்பின் பெருங்கடலே, ஏழை மாணவச் செல்வங்கள் இமயம் போல் கல்வியறிவில் திகழ விலையில்லா மடிக்கணினி வழங்கிய மாதர்குல மாணிக்கமே, வறுமையின் பிடியில் வாழும் மாணவச் செல்வங்கள் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொள்ள வட்டியில்லாக் கல்விக் கடன் வழங்கிய வள்ளலின் வள்ளலே, பசுமை இல்லம் வழங்கிய பாரத ஒளியே, பாமர விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வட்டியில்லா பயிர்க் கடன் அளித்த பாசத்தின் மழையே, உழைக்கும் மக்கள் பசியாற அம்மா உணவகம், நோய் நொடியிலிருந்து 21 ஆம் நூற்றாண்டைப் பாதுகாக்க அம்மா மருந்தகம், (மேசையைத் தட்டும் ஒலி) தேசம் போற்றும் திட்டமாம் அம்மா சிமென்ட், திசைகள் போற்றும் அறிவிப்பாம் அம்மா உப்பு, பாங்கு நிறைந்த பசுமைப் பண்ணைகள், வியத்தகு வேளாண் சந்தைகள், ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு தாலிக்குத் தங்கம், ஏழைக் குடிகள் ஏற்றம் பெறுவதற்கு ஆடு, மாடு வழங்கும் திட்டம், இந்தியத் திருநாட்டின் முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழக் கொண்டுவந்த வெளிநாட்டு மூதலீட்டு முகமை, தூயக் கொள்கை வழி நிறைவேறியிருக்கும் தொழில் புரட்சி, புதுயுகத்தைத் தோற்றுவிக்கும் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி, மேன்மைபெற்று மேதினியில் வாழ்வதற்கு மீனவ சமுதாய மக்களுக்கான நாடு போற்றும் நற்பணித் திட்டங்கள், இன்னும் இன்னும், எதை மொழிவது, எதை விடுப்பது?

கழகம் எங்களுக்குக் கோயில் என்றால், அதில் வீற்றிருக்கும் தெய்வம்தான் அம்மா நீங்கள். கழகத்தைக் கட்டிக் காப்பதற்கும், கழகக் கண்மணிகள் இரண்டு கோடி தொண்டர்களின் துயர் துடைப்பதற்கும், 8 கோடி தமிழ்ச் சொந்தங்களின் இன்னலைக் காப்பதற்கும், தாயே தாங்கள் புரிந்து வரும் பணி, அன்புக் கொடையாய் வழங்கி ஆற்றும் ஆட்சிப் பணி, காலத்தின் கல்வெட்டுகளில் பொறித்து வைக்கும் புனிதமுடையது. நயவஞ்சக நரிகளும், முற்றும் நாட்டைச் சுரண்டி விழுங்கிய முதலைகளும் இன்று இடுப்பொடிந்த முருங்கையாய் இற்றுக் கிடக்கின்றன.

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

ஆலகால நஞ்சின் குணம் கொண்ட அநியாயக்காரர்களெல்லாம் அம்மா உங்கள் அறிவார்ந்த வீச்சால் வீழ்ந்து கிடக்கிறார்கள். வீழ்ந்தது வீழ்ந்ததுதான். இனி நிமிர்ந்து எழவே முடியாத நெடும் பள்ளத்தில் தடுக்கர்கள் தடுமாறிக் கிடக்கிறார்கள். பெரியாரின் பேருள்ளமும், பேரறிஞரின் அறிவெழுச்சியும், பொன்மனச் செம்மலின் புனித மாட்சியும் ஒருங்கே பெற்ற உன்னதத் தாய் உங்களையன்றி உலகில் வேறு ஒருவர் உளரோ?

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழையின் சீற்றத்தால், மழையாடிய தாண்டவத்தால், ஒரு மாதத்திற்கு முன்பு சென்னையும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் இன்னலுக்கு உள்ளானதை எல்லோரும் அறிவர். ஊழிப் பெருவெள்ளம் தலைநகரை உலுக்கிய காட்சியை ஒவ்வொருவரும் அறிவர். அந்தப் பெருவெள்ளத்தின்பால் ஏற்பட்ட பேரழிவுப் பகுதிகளை இராணுவத்தைவிடவும் வேகமாகச் செப்பனிட்டு, சென்னையை ஒரு வார காலத்திற்குள்ளே மீட்டெடுத்த அரச வல்லமை, அம்மா தங்களுக்கு மட்டும்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வார காலத்திற்கு 36 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணமும், இழப்பீடும் வழங்க முடிகிற வரலாற்றுத் திறனுள்ள ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் திகழ்கிற ஆட்சிதான். இந்தத் தியாகப் பண்பிற்கு, நீங்கள் கடைப்பிடித்துவரும் தொண்டுள்ள அன்பிற்கு, தமிழக மக்கள் தங்களுக்குத் தரப் போகிற ஒரே ஒரு பரிசு, தங்கத் தாயே, தங்களை 6 ஆம் முறையும் ஆட்சியில் அமர்த்துவதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

அது காலத்தின் முடிவு. தங்களை எதிர்க்கும் பகைவர்கள் எல்லோரும் மண்ணைக் கவ்வி மன உளைச்சலில் இருப்பார்கள். தெய்வத் தாயே, தங்களின் தேர்தல் வெற்றியைக் கண்டு சிரம் தொங்கிக் கிடப்பார்கள். நீதி மறுபடியும் வெல்லும் என்பது நியதி, தர்மம் மீண்டும் தலையெடுக்கும் என்பது தத்துவம். ஈழ மக்களைக் கூண்டோடு அழிக்க ஏவல்புரிந்த எதிரிகள் எங்கே? ஈழம் வெல்ல எழுச்சிமிக்க தீர்மானம் கொண்டுவந்த இமயத் தாய் நீங்கள் எங்கே? உங்கள் உன்னதத் தொண்டின் உயரத்தை வெற்றுப் புழுக்கள் விஞ்ச முடியுமா? சாதி, மத, பேதமற்ற சமத்துவத்தை எங்கும் விதைக்கின்ற ஏந்தலே! ஏழை, எளியவர், பஞ்சமர், பாமரர்கள் தலை நிமிரவும், நிலை உயரவும் உழைக்கின்ற உன்னதமே!

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

இல்லாமையை நீக்கவும், கல்லாமையைப் போக்கவும் சட்டம் பல கொண்டுவந்து சரித்திர மேன்மைபுரியும் தன்னலமற்ற தாயே! மக்கள் வேறு, தான் வேறு என நினைப்பறியா மாசறு பொன்னே! கழகமே உயிராய்க் கருதும் காசறு விதையே; நாளிலம் வேந்து பார்க்கும் நறுந்தேனே! நாளைய பாரத பூமியின் நம்பிக்கையே! சிறுபான்மை சமூகத்தின் திங்களே, திக்கற்றவர்களை கடைதேற்றும் திருமகளே; கண்கொண்டு பார்த்து குறை தீர்க்கும் காவியமே! கண்ணியம் நல்கிவரும் கற்பகமே! சமூக நல்லிணக்க மணம் வீசும் சந்தனமே! சரித்திரங்களை சுமந்தபடி ஏழும் சக்கரமே! அக்கிரமத்தை வீழ்த்தும் ஆயுதமே, அறிவே! பாசத்தாலும், பரிவாலும் மக்களின் குறை போக்கும் பாயிரமே, பைந்தமிழ் மண்ணில் செங்கோல் பிடித்தாளும் பராபரமே, அன்னையே, அற்புதமே, ஆதி சக்தியே! உங்கள் பாதமே என் சந்நிதம்; உங்கள் கட்டளையே எங்கள் சேவகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண தொண்டனான என்னை இரண்டு முறை மாவட்ட கழகச் செயலாளராக்கி, 25 ஆண்டுக் காலம் தொடர்ந்து நகர கழகச் செயலாளராக்கி, இரண்டாவது முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, இங்கே என்னைப் பேச வைத்த மகராசியைத் தந்த மகம்; மக்கள் நாளும் வணங்கும் முகம்; மலருமே நாளும் ஜெயம்; தொண்டுக்கே பிறந்த தவம்; (மேசையைத் தட்டும் ஒலி) அள்ளித் தரும் வள்ளல் மனம்; அன்பாலே நிறைந்த குணம்; துன்பத்துக்குக் கலங்கா மனம்; துணிவிலே விளைந்த மனம்; தொட்டதெல்லாம் வெல்லும் தினம்; தெள்ளு தமிழ் பூமிக்கு தெய்வத் தாயாகி வந்த வரம்; தேமதுர தமிழ்ரின் தீரா குறை தீர்க்கும் திறம்; ஆற்றல்களால் தொடுத்த சரம்; அன்னைத் தமிழ் பூமிக்கு அள்ளக் குறையா அறிவு உரம்; கடலாக விரிந்த அறம்; மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை முன்மொழிந்து உரையாற்றும் பெரும் வாய்ப்பினை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, மீண்டும் வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை அழகுத் தமிழில் 48 பக்கங்களிலும், ஆங்கிலத்தில்

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

50 பக்கங்களிலுமாக 41 பத்திகளில் நறுக்காய், தமிழகத்தின் நலன் காக்கும் ஊற்றுப் பெருக்காய் இருக்கிறதென்று சொன்னால், அது மிகையாகாது.

கல்வித் துறை, காவல் துறை, பொதுத் துறை, நீதித் துறை, விவசாயம், மின்சாரம், சுகாதாரம், நீர்ப்பாசனம், மீன் வளத் துறை, கிராமப்புற மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம், பெண்கள் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு என அத்தனை திசைகளிலும் வெளிச்சம் பாய்ச்சுகின்ற அழகான உரை நம் ஆளுநர் உரை.

அரசின் திட்டங்களை, மாண்புமிகு அம்மாவின் எண்ணங்களை, அப்படியே பிரதிபலிக்கும் ஆழமான உரை, அப்பழுக்கில்லாத உரை இந்த ஆளுநர் உரை. அத்தனை பக்கங்களிலும், நிகழ்கால சரித்திரத்தை, எதிர்கால சாதனையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் இக்காலம்தான் தமிழகத்தின் பொற்காலம் என்பதை கல்வெட்டு வார்த்தைகளால் (மேசையைத் தட்டும் ஒலி) நிலைத்து நின்று நிரூபிக்கிறது மேதகு ஆளுநர் உரை.

ஆளுநர் உரையைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கனியிடை ஏறிய சுளையாய், முற்றல் கழையிடை ஏறிய சாறாய், பனிமலர் ஏறிய தேனாய், காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையாய், நனிபசு பொழியும் பாலாய், தென்னை நல்கிய குளிரில் நீராய், நம் அன்னையின் சிந்தனை வேராய், விழுதாய், விதையாய், கனியாய், மலராய், மலர்ந்து வாடாத நல்வாசனையாய், வசந்தமாய், இன்றைக்குத் தமிழகத்தில் மணம் பரப்புகிறது என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலில் 88 சதவிகித வாக்குகளைப் பெற்று, 1 இலட்சத்து 51 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட அனைவரும் டெபாசிட் தொகையை இழந்தார்கள். இதுவரையில் தமிழகத்தில் எந்தத் தலைவர்களும் பெறாத வெற்றியைப் பெற்றிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11—45

இந்த வெற்றி அறிவுக் கூர்மையும் மதிநுட்பமும் வாய்ந்த அம்மா அவர்களின் தலைமையின்மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டியுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

வெள்ளச் சேதத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரே நாளில் மட்டும் 49 செ.மீ. மழை பெய்து, சென்னையையே உலுக்கிய நிகழ்ச்சிக்குப் பிறகு, ஐந்தே நாளில் நகரை மீட்டெடுத்த ஒரே தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). மாத சராசரி அளவே 19.3 செ.மீ. மழைதான். ஆனால் ஒரே நாளில் 24 மணி நேரத்தில் 49 செ.மீ. மழை 100 ஆண்டுகளில் இல்லாதது. 1901 ஆம் வருடம்தான் இப்படிப்பட்ட மழை பெய்ததாகச் சொல்கிறார்கள்.

114 ஆண்டுகளுக்குப் பிறகு பெய்த இந்த மழையின் பாதிப்பை ஐந்தே நாளில் சரி செய்து மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வரக்கூடிய ஆற்றலைப் பெற்ற ஒரே முதலமைச்சர் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). நாங்கள் அதைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அதிகாரிகளையும் அனுப்பி மக்களிடத்திலே சென்று, மக்களுக்குண்டான பிரச்சினைகளைத் தீர்த்து, அவர்களைக் காப்பாற்றி, அவர்களுக்குத் தங்குமிடம் ஏற்பாடு செய்து, உணவு கொடுத்து, உடை கொடுத்து அவர்களைப் பாதுகாத்து, வீட்டுக் அனுப்பி வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லப்போனால், இதை எதிர்க்கட்சிகள் அரசியல்ரீதியாகப் பார்த்து, அவர்களுக்குப் பேச வாய்ப்பில்லை என்பதால், இந்த ஏரியில் தண்ணீர் திறந்து விட்டார்கள், அந்த ஏரியில் தண்ணீர் திறந்து விட்டார்களென்று சொன்னார்களே தவிர, அரசைக் குறைசொல்லக்கூடிய சக்தியோ, செயலோ அவர்களிடத்தில் இல்லையென்பதுதான் உண்மை. மாண்புமிகு

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை, போர்க்கால அடிப்படையில் இந்தப் பணிகளைச் செய்தார்கள்.

எங்கள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சரையும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரையும், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சரையும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அனுப்பி வைத்தார்கள். நாங்கள் மழை தண்ணீர் வந்தபோது, படகிலே சென்று மக்களைப் பார்த்தோம். மறுநாளே நாங்கள் சென்று அந்த மக்களுக்குத் தேவையான ஆக்கபூர்வமான பணிகளை — காலையில் அவர்களுக்குண்டான உணவு வகையறாக்களை, பொருட்களைக் கொடுத்தோம். எல்லா இடங்களிலும், தங்க வைக்கப்பட்ட மக்களுக்குண்டான சாப்பிடக்கூடிய அத்தனை பொருட்களையும் கொடுத்தோம். மறுநாளும் மக்களை நேரில் சென்று சந்தித்தோம்.

7,000 பால் பாக்கெட், பிரெட் ஆகிய உணவுப் பொருட்களை எடுத்துக்கொண்டு மக்களிடத்தில் சென்றோம். மக்களெல்லாம் மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டு சென்ற காட்சியைப் பார்த்தோம். 3 மணி நேரம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் நின்றுகொண்டு கொடுத்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அளவுக்கு மக்கள் கூட்டம். ஆயிரக்கணக்கான மக்கள் என்னைச் சந்தித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின்மீதும், அங்கேயிருந்து மக்களுக்காக நாங்கள் ஆற்றிய பணிகளையும் தமிழக மக்கள் வரவேற்றார்கள். இது ஒரு நாள், இரண்டு நாள் அல்ல. 12 நாட்கள் மக்களைச் சென்று சந்தித்தோம். இரண்டாவது நாளே மக்கள் வந்து அந்தப் பொருட்களை வாங்கும்போது, எல்லா இடத்திலேயும் 'மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்; அம்மாவுக்கு நன்றி சொல்லுங்கள்! அம்மாவுக்கு நன்றி சொல்லுங்கள்!' என்று சொன்னார்களே தவிர, நமக்கு வேண்டாதவர்கள்தான். எதிர்க்கட்சிகள்தான் தவறான ஊடகங்களை வைத்துக்கொண்டு, தவறான செய்திகளைப் பரப்பிக்கொண்டிருந்தன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புயல் வேகத்தில் இந்தப் பணியைச் செய்து முடித்தவர் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

குஜராத்திலே பூகம்பம் வந்தது. பூகம்பத்திலே இறந்ததைவிட, தொற்று நோயால் இறந்தவர்கள் அதிகம். ஒடிசாவிலே வெள்ளம் வந்தது. வெள்ளத்திலே இறந்தவர்களைவிட தொற்று நோயால் இறந்தவர்கள் அதிகம். ஆனால் தமிழகத்திலே வெள்ளம் வந்தபோது, தொற்றுநோய் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் 70,041 மருத்துவ முகாம்களை உருவாக்கினார். 70,041 மருத்துவ முகாம்களை உருவாக்கி, எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் மக்களைப் பாதுகாத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். 'மக்களைத் தேடி அரசு' என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நிலைக்கேற்ப, மக்களின் இல்லத்திற்கே சென்று, அவர்களது பகுதிக்கே சென்று, இருப்பிடத்திற்கே சென்று மருத்துவ முகாம்கள் மூலம் மருத்துவம் பார்க்கப்பட்டது. இதனால் தமிழகத்தில் அவர்களுக்கு எந்தவித நோய் தொற்றுப் பிரச்சினையும் இல்லை. மழை வெள்ளம், பெரு வெள்ளம் வந்துகூட எந்தவித நோய்ப் பிரச்சினையும் இல்லாமல் மக்களைக் காத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் இந்த நேரத்திலே மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–50

7,240 நிவாரண முகாம்கள்; 23,51,000 நபர்களுக்கு தங்கும் இடம்; 1,36,00,000 உணவுப் பொட்டலங்கள்; 1,54,00,000 நபர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம்; சிறப்பு முகாம்கள் நடத்தி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேதமான பட்டாக்கள், கல்விச் சான்றிதழ்கள், குடும்ப அட்டைகள், எரிவாயு இணைப்பு அட்டைகள், ஆதார் அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், வங்கிக் கணக்குப் புத்தகங்கள், விற்பனைப் பத்திரம் என அனைத்தையும் உடனடியாகக் கொடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை, ஏழை, எளிய மக்களுக்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கினார். நிவாரணம் என்று சொன்னால், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.10,000, வீடுகளிலே தண்ணீர் வந்திருந்தால் ரூ.5,000 என உடனடியாக, ஒரு மாத காலத்திற்குள்ளாக, மத்திய அரசு கொடுக்கிறதோ இல்லையோ, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியிருக்கிறது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

5 இலட்சம் குடும்பங்களுக்கு 273 கோடியே 10 இலட்சம் ரூபாயும், வீடுகளிலே வெள்ளம் புகுந்த 25 இலட்சம் குடும்பங்களுக்கு 1,274 கோடி ரூபாயும் வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியினையும், பாராட்டினையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 4,81,975 விவசாயிகளுக்கு 3.82 இலட்சம் எக்டேர் பரப்புக்கு 451 கோடியே 15 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கி, மொத்தமாக இதுவரை 2,640 கோடி ரூபாய் நிதியை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிவயிறு பற்றிவிட்டால் அடுத்து நடப்பதென்ன? கொடிய பசி வந்துவிட்டால் குமுறும் எரிமலைதான்! "பசியால் திருட்டு வரும்; பகை வளரும்; பொய் விளையும்; பசியால் உறவினிலும் படுகொலைகள் நித்தம் வரும்; பசியால் புரட்சி வரும்; பாமரர்கள் சேர்ந்தெழுந்தால் அசையாத மாளிகையும் ஆடிப்பொடிபடுமாம்" என்று கண்ணதாசன் அவர்கள் பாடல் இயற்றியுள்ளார்கள். பசியால் என்ன வரும்? பசியால் திருட்டு வரும்; கொலை நடக்கும்; பகை வரும்; பசியால் உறவினிலேகூட கொலை வரும். ஆம்! சோறு போட்டால் கொலை, திருட்டு, கொள்ளை, பகை ஆகிய அனைத்தையும் நீக்கிவிடலாம், கோயில்களிலே அன்னதானத் திட்டம் தந்து; வீடெங்கும் விலையில்லா அரிசி தந்து; அம்மா உணவகத்தின்மூலம் ஒரு ரூபாய்க்கு இட்லி, 3 ரூபாய்க்கு தயிர் சாதம், 5 ரூபாய்க்கு சாம்பார் சாதம், (மேசையைத் தட்டும் ஒலி) 3 ரூபாய்க்கு சப்பாத்தி என்று ஐந்தே ரூபாய்க்குள் அகோரப் பசியையும் அடியோடு தீர்த்து வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு 298 அம்மா உணவகங்களைத் திறந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகப் பெரிய புரட்சியை உருவாக்கியிருக்கிறார்கள்.

ஓர் ஊரில் பண்ணன் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் எல்லோருக்கும் உணவு படைத்துக் கொண்டிருந்தார். உணவு படைத்து, விருந்து படைத்து, வாழ்நாள் முழுவதும் தினமும் அன்னதானம் வழங்கிக் கொண்டிருந்த அந்தப் பண்ணையாரைப்

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

பார்த்து, "நான் செய்யாத ஒரு காரியத்தை நீ செய்திருக்கிறாய்" என்று சொல்லி அந்த நாட்டிலிருந்த மன்னன் வாழ்த்தியதாக இலக்கியத்தில் ஒரு செய்தி இருக்கிறது. "யாம் வாழ்நாளும் பண்ணன் வாழி!" என்னுடைய வாழ்நாளையும் நீ வாழ்ந்து, நாட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று மன்னன் சொன்னதாகச் செய்தி இருக்கிறது. ஆனால், இங்கே மன்னனே உணவு படைக்கிற வள்ளலாகவும் திகழ்கிறார்; தமிழகத்தின் முதலமைச்சராகவும் இருக்கிறார். என்னுடைய வாழ்நாளில் மீதி நாள் இருக்குமானால், அருள் உள்ளத்தில் அன்னை தெரசாவாய்; அள்ளிக் கொடுப்பதில் பாரி வள்ளலாய்; (மேசையைத் தட்டும் ஒலி) அன்பு செலுத்துவதில் இயேசுபிரானாய்; சமதர்மக் கொள்கையில் நபிகள் நாயகமாய் விளங்கும் எங்கள் அன்னை அவர்கள் என்னுடைய எஞ்சிய வாழ்நாட்களையும் சேர்த்து வாழ்ந்து, இந்தத் தமிழகத்தைச் சிறப்புடையதாக மாற்ற வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மனிதன் என்பவன் தெய்வமாகலாம்; வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்; வாழைபோல தன்னைத் தந்து தியாகியாகலாம்; உருகியோடும் மெழுகைப்போல ஒளியை வீசலாம்; ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்; உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்; யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்; மனம் மனம் அது கோயிலாகலாம்; மனம் இருந்தால் பறவைக் கூட்டில் மான்கள் வாழலாம்; வழி இருந்தால் கடுகுக்குள்ளே மலையைக் காணலாம்; துணிந்துவிட்டால் தலையில் எந்த சுமையும் தாங்கலாம்; குணம், குணம் அது கோயிலாகலாம்" என்று கவியரசர் கண்ணதாசன் அவர்கள் ஒரு திரைப்படத்திலே பாடல் வரிகளை அமைத்திருப்பார். கவியரசர் கண்ணதாசன் என்ன சொல்ல வருகிறார் என்று சொன்னால், மெழுகைப்போல தன்னை உருக்கிக் கொண்டு பிறருக்கு வெளிச்சம் தரக்கூடிய தலைவர்கள் தெய்வமாகலாம் என்று சொன்னால், "தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) 7 கோடி தமிழக மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மனித உருவிலே உள்ள தெய்வம்தான்" என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

முற்பகல் 11—55

ஏழையெளிய மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, பல்வேறு திட்டங்களை இன்றைக்கு மக்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா அவர்கள் தெய்வமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் 35 இலட்சம் பேர்களுக்கு--ஏழையெளிய முதியோர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் என்று 35 இலட்சம் பேர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் தொகை கொடுக்கக்கூடிய ஒரே முதலமைச்சர் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா திட்டங்கள் மட்டுமல்ல; அம்மா திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், அம்மா மருந்தகம், அம்மா தொலைபேசி சேவை மையம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தனி அறை அமைப்பு, அம்மா பண்ணை பசுமை காய்கறிக் கடைகள், விலையில்லா 20 கிலோ கிராம் அரிசி, தொட்டில் குழந்தைத் திட்டம், விலையில்லா மடிக்கணினி, தாலிக்குத் தங்கம், இரு பெண் குழந்தைகள் திட்டம், 39 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள், மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், நான்கு தொகுப்பு சீருடைகள், காலணிகள், புத்தகப் பைகள், பேருந்துப் பயண அட்டைகள், மிதிவண்டிகள், திருக்கோயில் அன்னதானத் திட்டம், இருளில் இருந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக்கியது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக 10,000 குடியிருப்புகள் வழங்கியது, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி 2.42 இலட்சம் கோடி ரூபாய் அந்நிய முதலீட்டை தமிழகத்திற்குப் பெற்றுத் தந்தது, (மேசையைத் தட்டும் ஒலி) 1.91 கோடி அரிசி பெறும் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, கரும்பு மற்றும் 100 ரூபாய் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு, 2,497 கோடி ரூபாய் செலவில் 5.79 இலட்சம் படித்த ஏழைப்

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

பெண்களுக்கு தாலிக்குத் தங்கத்துடன் திருமண நிதியுதவி, 6,870 கோடி ரூபாய் செலவில் 1,11,57,125 குடும்பங்களுக்கு விலையில்லா மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் என பல நலத் திட்டங்களை வழங்கிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கை தன் கட்டுக்குள் வைத்திருக்கக்கூடிய ஒரே முதலமைச்சர், நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மேசையைத் தட்டும் ஒலி) நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், ஆயுதத் தளவாடங்கள், கூடுதல் பணியிடங்கள், காவல் நிலையங்களுக்கென சொந்தக் கட்டடங்கள், காவலர்களுக்கான வீட்டு வசதி போன்ற கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மாநில காவல் துறைக்கு வழங்கி, மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கை முழுமையாக நிலைநாட்டி, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த அமைதிப் பூங்காவாக தமிழகம் மாற நடவடிக்கை மேற்கொண்டு, குற்றச் செயல் செய்பவர்களை கடுமையாகக் கையாள காவல் துறைக்கு முழு சுதந்திரம் அளித்து, காவல் துறை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர வழிவகை செய்து, மாநில காவல் துறையின் தொடர் கண்காணிப்பிற்கு உறுதியான வழிவகை, ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றின் காரணமாக, சமூக விரோத சக்திகள் ஒடுக்கப்பட்டு, அனைத்து வகையிலான தீவிரவாதங்களும் தடுக்கப்பட நடவடிக்கை மேற்கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மன உறுதி மற்றும் திடமான செயல்பாட்டினால், நமது மாநில காவல் துறை தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு, மக்கள் மனதில் நம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் உருவாக்கியுள்ளது.

இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதோடு, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் இதுகுறித்து குறிப்பிட்டுள்ளது மிகுந்த போற்றுதலுக்குரியது. அதற்காக என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவியப் புகழ் பாடும் கன்னித் தமிழ்நாட்டில், காவல் தெய்வமாய் வீற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த பொதுச் சேவையைப் பட்டியலிட்டால், ஏடு கொள்ளாது. ஏற்றம்

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

நிறைந்த தொண்டுள்ளத்தின் தியாகத்தை வரிசைப்படுத்தினால், எண் திசை வானம் கொள்ளாது.

ஐந்து முறை தமிழக அரசின் ஆட்சிப் பீடத்தை அலங்கரித்த பாசத்தின் இலக்கணமாம், பைந்தமிழின் அடைக்கலமாம், பாரதத்தின் எதிர்காலமாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறாம் முறையாகவும் அரியணை ஏறும் காலம் கனிந்துவிட்டது. நீதி தேவதையின் வெற்றிச் சங்கொலி கேட்கும் தருணம் நெருங்கிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

எழுச்சி மின்னலாய், ஏய்ப்பவரை சாய்க்கும் புயலாய், அறிவுலக அக்கினியாய், அனைவருக்கும் நற்றிணையாய் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்வதை, எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது. கொள்கை நெறிக் கடலை, குங்குமச் சிமிழ்கள் குடிக்க முடியாது.

நாடு நலம் பெற வேண்டுமென்றால், வீடு வளம் பெற வேண்டும். வீடு வளம் பெற வேண்டுமென்றால், வியத்தகு கல்வி அளித்தல் அவசியம் வேண்டும். வீடும், நாடும் உய்ர மாண்புமிகு அம்மா அவர்கள் வடித்த சட்டங்கள் ஒன்றா, இரண்டா, பத்தா, நூறா. இதையெல்லாம் தாண்டி ஆயிரமாயிரம் திட்டங்கள், சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

பாக் நீரிணைப்புப் பகுதியில் பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களைத் தொடர்ந்து கைது செய்து, அவர்களின் படகுகளை சிறைப்பிடிக்கும் இலங்கை கடற்படையினரின் செயல்களுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்ததோடு, மீனவர்கள் விடுதலையான பிறகும், சிறைப்பிடிக்கப்பட்ட படகுகளை விட மறுக்கும் இலங்கையின் போக்கு பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு முடிவில்லா துயரத்தை ஏற்படுத்தி வருவதை மனதில் கொண்டு, கச்சத் தீவை மீட்டு, நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீண்டும் நிலைநாட்டிட போராடி வரும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நான் என்னுடைய நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

கச்சத் தீவு பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், 1974 ஆம் ஆண்டு, கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதுதான், கச்சத் தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு கச்சத் தீவு தாரைவார்க்கப்பட்ட காரணத்தினாலே, இன்றைக்கு 600 மீனவர்கள் இறந்திருக்கிறார்கள்; ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உடல் ஊனமுற்றிருக்கிறார்கள். இன்றைக்கும் கச்சத் தீவுப் பகுதியில் மீன்பிடித் தொழிலை செய்ய முடியாத மிகப் பெரும் அவலநிலை உண்டு என்றால், அதற்குக் காரணம் அன்றைக்கு தி.மு.க. செய்த தவறுதான், கருணாநிதி செய்த தவறுதான்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மீன்பிடித் தொழிலே அற்றுப் போயிருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதனால்தான், 2008 ஆம் ஆண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் என்ற முறையில், மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். கச்சத் தீவை மீட்டுக் கொடுப்பதுதான், மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரே வழி என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் அன்றைக்கு வழக்கைத் தொடுத்து, இன்றைக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு, அந்த வழக்கில் வருவாய்த் துறையையும் இணைத்து, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழையெளிய மீனவர்களைக் காப்பாற்றுவதில் முதல் தெய்வமாக இருக்கக்கூடியவர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலைக்குக் காரணமானவர்களைப் பொறுப்பாக்காமல் நல்லிணக்கம் குறித்த சர்வதேச தீர்மானங்களையும், உணர்வுகளையும் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வரும் இலங்கை அரசின் போக்கினைக் கண்டு உலகெங்கிலும் உள்ள தமிழினம் வெகுண்டு எழுந்துள்ளது. இதைத் தணிக்கும் விதமாக, அன்றைய இலங்கை அரசு புரிந்த போர்க் குற்றங்கள், ஜெனிவா ஒப்பந்த விதிமீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தில் தீர்மானத்தை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி இந்த மாமன்றத்தில்

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்மானம் நிறைவேற்றி, தமிழர்களுக்கு அவர்களின் நிலங்களைத் திரும்ப அளித்து அவர்கள் சம வாழ்வுரிமையுடன் கண்ணியமாகவும், அமைதியாகவும் வாழ ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்தித் தர மத்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டுமென மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோரி வருகிறார்கள்.

இதுகுறித்து நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 2009 ஆம் ஆண்டு, ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள், உண்ணாவிரதப் போராட்டம் என்ற ஒரு நாடகத்தை நடத்தி, அன்றைய முதலமைச்சர் அவர்களே உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி, போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லி எழுந்தவுடன், இலங்கையிலிருந்த தமிழர்கள் ஒன்றரை இலட்சம் பேரை ஒரே நாளில் கொன்று குவித்தது இலங்கை இராணுவம். அதற்குக் காரணம் சாட்சாத் கருணாநிதியும், கருணாநிதி அரசும்தான் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். காரணம், அவர் உண்ணாவிரதம் இருந்து, போர் நின்றுவிட்டது என்று சொல்லியவுடன், அங்கே பதுங்கியிருந்த மக்கள் எல்லோரும் வெளியே வந்தார்கள்; அவர்களை குண்டு போட்டு சாகடித்தது இலங்கை இராணுவம். இன்றைக்கு இலங்கையில் தமிழினமே அழிந்திருக்கிறது என்றால், அதற்கு தி.மு.க.-தான் காரணம், தி.மு.க. தலைமைதான் காரணம் என்ற குற்றச்சாட்டினை நான் இந்த நேரத்தில் ஆணித்தரமாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழக மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஒரே முதலமைச்சர் நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருவர், 'முடியட்டும், விடியட்டும்,' 'நமக்கு நாமே' என்று ஊர் ஊராய்ச் சுற்றிக் கொண்டிருக்கின்றார். இவர் செல்வதைப் பார்க்கின்றபோது, பரமார்த்த குரு கதை ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது. அழகாபுரி என்ற ஊரில் அன்றைக்கு மாட்டுப் பொங்கல், குருவே, குருவே என்று கத்திக்கொண்டே ஓடி வந்த மண்டு என்கின்ற சீடன், "இன்றைக்கு மாலையில் ஊர் எல்லையில் ஒரு

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

போட்டி நடக்கும்; காளை மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் அடிக்க வேண்டும்; காளையை அடக்க வேண்டும்; வென்றால் நிறைய கிராமங்களை நமக்கு அரசர் பரிசளிப்பார்" என்றார். (குறுக்கீடு) இதைக் கேட்டதும் பரமார்த்தரின் மூளை தீவிரமாக வேலை செய்தது. (குறுக்கீடு) இந்தக் காளையை அடக்கிவிட்டால் நமக்கு பதவி கிடைக்கும் என்று. (குறுக்கீடு)

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.ஆர்.பி. ராஜா, உட்காருங்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காளையை அடக்கிவிட்டால் நமக்குப் பதவி கிடைக்கும் என்றும், நம்முடைய தலைமைக்குப் பதவி கிடைத்துவிட்டால், மகிழ்ச்சியாக இருக்கலாம், ஜம்மென்று ஊர்வலம் வரலாம், என்ன செய்தாலும் யாரும் கேட்க மாட்டார்கள் என்றும் கனவு கண்டான் சீடன், மூடன். அது மட்டுமா? தெருவிலே எல்லோரும் நம்மைப் பார்த்து பயப்படுவார்களே என்றான் மட்டி. எனக்கும்கூட நிறைய சுருட்டுகள், சர்காரியா, 2ஜி, மாதிரி நிறைய சுருட்டுகள் கிடைக்கும் என்றார் பரமார்த்தர். இனிமேல் புதிதாகக் குதிரைகள் போடும் முட்டைகள் எல்லாம் மன்னருக்கே சொந்தம் என்று சொல்லிவிட்டால், எல்லா குதிரைகளும் நமக்கே கிடைத்துவிடும் என்றான் மடையன். அற்புதமான யோசனை, அருமையான எதிர்காலம், நமக்கு நாமே என்று கூச்சலிட்டுப் போட்டி நடக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டார் பரமார்த்தரும் சீடர்களும்.

பசுவிற்கு ஒரு முதியவர் பொங்கல் கொடுக்கப் போக, அதனைச் சாப்பிடப் பிடிக்காமல் அவரின் கையை உதறிவிட்டு வந்த பசு மாட்டை, சீடர்கள் ஆக்ரோஷமாகப் பிடித்து, கொம்புகளுக்கு வர்ணம் பூசி, அதனை அடக்கியதாகச் சொல்லிப் பெருமைப்பட்டனர். அங்கேயிருந்த ஜனங்கள் பசுவிற்கும், காளைக்கும் வித்தியாசம் தெரியாமல் இவர்கள் போட்டிக்கு வந்துள்ளனரே என தலையில் அடித்துக்கொண்டனர். இப்படித்தான் 'நமக்கு நாமே' தலைவரும் செல்கிறார், (மேசையைத் தட்டும் ஒலி) சைக்கிளில் செல்கிறார், ஆட்டோவில் செல்கிறார், காரில் செல்கிறார், என்ன செய்வதென்றே தெரியாமல் திரிகிறார். (குறுக்கீடுகள்)

எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு மணி நேரம் ஆர்.கே. நகரில் பேசியதற்கே 1½ இலட்சம் ஓட்டு

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

வித்தியாசம் ஆயிற்றே! அவர்கள் என்ன வித்தைகள் செய்தாலும், மக்களிடம் அவர்கள் நாடகம் பலிக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி.ஆர்.பி. ராஜா, உட்காருங்கள்.*

திரு. கே. குப்பன்: *ஒரு சில தள்ளாடும் தலைவர்கள் உடன் வருபவர்களை எம்.எல்.ஏ.—வாக இருந்தாலும் அடிப்பதையும், எதிர்நிற்கும் தொண்டனை ஆர்வத்துடன் (குறுக்கீடுகள்) கூப்பிட்டுக் கன்னத்தில் அறைவதையும், கேள்வி கேட்பதையும், பத்திரிகை நண்பர்களாக இருந்தாலும், பதில் சொல்ல முடியாத விரக்தியில் கழுத்தையும் தலையையும் உடம்பையும் வளைத்துச் சேட்டைகள் செய்வதையும், பல்லைக் கடிப்பதையும், நாக்கைத் துறுத்துவதையும் வாடிக்கையாக கொண்டிருக்கின்றார்கள். இப்படி இருக்கக்கூடிய தலைவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள்.*

'நானோ, எனது வாரிசுகளோ கட்சியின் தலைமைப் பதவிக்கும், அதிகாரப் பதவிகளுக்கும் எக்காலத்திற்கும் வர மாட்டோம், வந்தால் சாட்டையடி கொடுங்கள்' என்று கூடம் ஏற்றி பொது மக்கள் மத்தியில் சத்தியம் செய்தவர், எப்போதோ சொன்னோம், மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டு, தன் வாரிசை ஊர் ஊராக அலையவிட்டுப் பதவி கனவில் உள்ளார்கள். (குறுக்கீடுகள்) இப்படிப்பட்ட தலைவர்களுக்கு எல்லாம் நாங்கள் சொல்லிக்கொள்ளும் பதில், 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தன்னந்தனியாகப் போட்டியிட்டு தமிழக அரசியல் வரலாற்றில், இதுவரை எந்தக் கட்சியும் பெறாத மாபெரும் வெற்றியை மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1,79,83,168 வாக்குகளைப் பெற்று, 43 சதவீத வாக்குகளைப் பெற்று, 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 37 நாடாளுமன்றத் தொகுதிகளைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத் தொகுதிவாரியாக கணக்கிட்டோமானால், 217 சட்டமன்ற தொகுதிகளை வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய நாடே திரும்பிப் பார்க்கக்கூடியவகையில் வெற்றியைப் பெற்ற மாபெரும் தலைவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய அளவில் மூன்றாவது பெரிய கட்சியாக உருவாக்கிக் காட்டிய

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, இந்த வெற்றி என்பது 2016-ல் நடைபெறவுள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான முன்னோட்டம்தான் என்பதையும், இதைவிட மாபெரும் இமாலய வெற்றியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்கள் 2016-ல் மீண்டும் தமிழகத்தில் முதலமைச்சர் ஆவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இந்த நேரத்தில் உறுதியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது தமிழக மக்கள் மகிழ்வோடு பொங்கலைக் கொண்டாடினார்கள். பொங்கல் பண்டிகையை உவகையோடு கொண்டாடும் வகையில், 1.91 கோடி அரிசி பெறும் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஒரு கிலோ கிராம் பச்சரிசி, ஒரு கிலோ கிராம் சர்க்கரை, கரும்பு மற்றும் 100 ரூபாய் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவேரியினுடைய . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

பிற்பகல் 12-10

திரு. கே. குப்பன்: காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. கே. குப்பன்: உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாணையாக 19-2-2013 ஆம் நாளிட்ட அரசிதழில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. கே. குப்பன்: மத்திய அரசிதழில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பேச அழைக்கவில்லை, உட்காருங்கள்.

திரு. கே. குப்பன்: மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, மாநிலத்தில் சட்டபூர்வ உரிமையை நிலைநாட்டி, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

(மேசையைத் தட்டும் ஒலி) இறுதித் தீர்ப்பை திறம்பட செயல்படுத்தும் வகையில், காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் தாமதமின்றி அமைக்க வேண்டுமென மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பாராட்டையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலங்களுக்கிடையேயான பல்வேறு நதிநீர்ப் பிரச்சினைகளில், மாநிலத்தில் சட்டபூர்வ உரிமைகளை நிலைநாட்டி, குறிப்பாக, முல்லைப் பெரியாறு பிரச்சினையில், மிகப் பெரிய சட்டப் போராட்டம் நடத்தி, 2014 ஆம் ஆண்டு மே திங்களில் முல்லைப் பெரியாறு அணையில் முதற்கட்டமாக 142 அடி அளவில் நீரைத் தேக்கிக்கொள்ள உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எங்களுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சிறப்பாகத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டுவரும் முன்னோடித் திட்டங்களான விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலமாக குறு, சிறு விவசாயிகளின் வருவாயை உயர்த்தி, அவர்களது வளத்தையும் பெருக்கி, மிகப் பெரிய அளவில் கால்நடைப் பராமரிப்புத் துறையில் கட்டமைப்பை விரிவுபடுத்தி, வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் வளத் துறைக்கு அளித்த முக்கியத்துவத்தின் மூலமாக, மாநிலத்தில் பால் பதப்படுத்தும் கட்டமைப்பின் தரம் உயர்த்தப்பட்டு, ஆவின் நிறுவனத்தின்கீழ் இயங்கும் பல்வேறு பால் பண்ணைகளில் 593 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழைகளின் ஏந்தலாகவும், எல்லோருக்கும் சமத்துவத் தலைவியாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அன்னை தெரசாவை ஒருவர் பேட்டி கண்டபோது, கடவுள் என்பவர் ஆண்டவர் ஒருவரே; ஒரு இந்து நல்ல இந்துவாக இருக்கவே விருப்பம்; ஒரு கிறித்துவர்

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

நல்ல கிறித்துவராகவே இருக்க விருப்பம்; ஒரு இஸ்லாமியர் நல்ல இஸ்லாமியராகவே இருக்க விருப்பம்' என பதிலளித்து, மதசார்பின்மையின் மொத்த உருவமாக வாழ்ந்தார். நம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 'தன் சுயநலமின்றி, துறவு மனப்பான்மையுடன் அரசியலில் ஈடுபட்டு மக்களுக்குச் சேவை புரிய தூண்டுகோலாக இருந்தவர் சுவாமி விவேகானந்தர்' என இந்து மதத்தின் தூண்டுகோலையும், 'கிறித்துவக் கல்வி நிலையங்களில் தான் பெற்ற கல்வியும், அனுபவங்களும் தனது வளர்ச்சிக்கு இன்றளவும் உதவி வருகின்றன என்று சொல்வதில் பெருமையடைகிறேன்' என கிறித்துவ மதத்தின் அனுபவங்களையும், 'திருக்குரானில் கூறப்பட்டுள்ள போதனை நெறிகள் பலவற்றையும் படித்தறிந்ததன்மூலம் கடினமான சூழ்நிலையிலும் நீதிநெறி தவறாமல் நடப்பதற்கு உறுதுணையாக உள்ளது' எனக் கூறியதன்மூலமும் இஸ்லாமிய மதத்தின்மீது இவற்றைத் துணையாகக் கொண்டு மதசார்பின்மையின் மொத்த உருவமாகவும், அன்னை தெரசாவின் மறு உருவமாகவும் வாழ்ந்து வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கோடானுகோடி தமிழ் நெஞ்சங்களில் கொலு வீற்றிருக்கும் எங்கள் இதய தெய்வமே, ஆய்ந்தறியும் அறிஞர்களின் அறிவுப் பெட்டகமே, திருக்கோயில் நிருவாகத்தின் திருவாசகமே, அன்னதானத் திட்டத்தின் அகல் விளக்கு மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள் தரும் தெய்வங்கள் மண்ணில் ஆயிரம் இருக்கலாம்; ஆசிகள் வழங்கும் தெய்வங்கள் பூமியில் அனேகம் இருக்கலாம்; அருள் ஆசிகள் வழங்கி, அன்னைத் தமிழ் நிலம் பெற்ற 8 கோடி தமிழர்களும் ஏற்றம் பெறவும், வளம் சூழ்ந்து வாழ்க்கை மாற்றம் பெறவும், அல்லும் பகலும் பாராது, அயராது தொண்டாற்றும் அன்புநிறை தெய்வம் உலகில் உண்டென்றால், அது நம் மாண்புமிகு அம்மாதான் என்று அறிவுலகம் போற்றுகிறது; ஆன்றோர் உலகம் பறைசாற்றுகிறது.

வள்ளுவப் பெருந்தகையின் குறள் நெறியும், வள்ளலார் அடிகளின் அருள் நெறியும், தாயுமானவரின் தயாள மனமும், மாணிக்கவாசகரின் மழை குணமும் ஒருங்கே பெற்ற உன்னதத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி நம் அம்மா அவர்கள். 'மக்கள் தொண்டே, மகேசன் தொண்டு' என இலக்கணம் வகுத்த

[திரு. கே. குப்பன்] [2016 ஜனவரி 21

தென்னாட்டு பொன்னாட்ஷா அறிஞர் அண்ணாவின் ஆற்றலே வியக்கும் ஆளுமையும், 'அன்பே மதம், அறிவே தெய்வம்' என தத்துவம் விதைத்த தரணி போற்றும் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்களின் அன்புடைமையும் இரு கண்களாகக் கொண்ட, கருணை தெய்வம் எங்கள் தாய். பாரெல்லாம் வாழுகிற 10 கோடி தமிழர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் சேய்.

அறிவியல், மனிதவியல் மற்றும் மாணவர்கள் நலனில் உயர் பங்காற்றிய தமிழகத்தைச் சேர்ந்த சாதனையாளர்களின் பங்களிப்பை அங்கீகரித்து, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதை வழங்க ஏற்பாடு செய்து, அவரது பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளை 'இளைஞர் எழுச்சி நாள்' என அறிவித்து, இராமேஸ்வரத்தில் அவரது நினைவிடத்தை அமைப்பதற்காக 1.36 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக ஒன்றைச் சொல்லி என் உரையை முடிக்கிறேன். தடை போட முடியாத தென்றலாய், தன்னிகரில்லாத் தலைவியாய், எண்ணி, எண்ணிப் பூரிக்கும் ஏந்தலாய், அன்னைத் தமிழகம் ஆராதிக்கும் அருந்தவப் புதல்வியாய், அன்னிய மாய வலையை அறுத்தெறியும் போர்வாளாய், கூர்மதியாய், குணவதியாய், குன்றென உயர்ந்த கொற்றவையாய், நன்றென நினைப்பதை நாணிலம் போற்றும் நாயகியாய், என்றென்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் தாயே! வென்றெடுக்கும் வித்தையிலே விஞ்சுவார் இல்லை; தீமையை வேரெடுக்கும் வேள்வியிலே, யாருக்கும் அஞ்சுவதும் இல்லையென பண்ணெடுத்துப் பாடாதோர் இப்பாரினிலே இல்லை தாயே! தங்களைப் பண்ணெடுத்துப் பாடாதோர் இப்பாரினிலே இல்லை. பட்டினிக் கொடுமையைத் துடைத்தெறிந்த பாரதத்துப் பைந்தமிழே! திராவிடத்துக் கொள்கைகளை எட்டுத்திக்கும் கொட்டி முழங்கும் தீந்தமிழே! வறுமை, வன்கொடுமை, கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்

2016 ஜனவரி 21] [திரு. கே. குப்பன்]

பெருக்கு; இவை அனைத்தையும் விரட்டி, புரட்டி, புரட்டி இருந்த இடம் தெரியாமல் துடைத்தெறிந்திட்ட எங்களின் இதயத் துடிப்பே! இனிக்கும் எண்ணங்களால், மணக்கும் வார்த்தைகளால், மல்லிகைப் பூ உள்ளத்தோடு, மங்காத உறுதியோடு, மறைந்தாலும் மாறாத விசுவாசத்தோடு, மண்டியிட்டு வணங்குகிறேன் தாயே! தங்களை மனதாரத் தொழுகின்றேன் தாயே!

2016-ல் வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலில், மீண்டும் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதி. இது ஏகோபித்த தமிழக மக்களால் தீர்மானிக்கப்பட்ட ஒன்று. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதலமைச்சர்; இதை எந்த சக்தியாலும் தடுத்திட முடியாது. இதைத் தடுக்கக்கூடிய சக்தி தமிழகத்தில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உடல் மண்ணுக்கு, உயிர் தங்களுக்கு என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டும் விரல் திசையில், விழி அசைவில், தோண்டரோடு தொண்டராகச் செயல்பட்டு, 234 தொகுதிகளிலும் வெற்றி மலர்களைப் பறித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் காலடிகளில் சமர்ப்பிக்கும் வரை அயராது உழைப்போம்; மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செல்வோம் என்று கூறி, இந்த அடியேனுக்கு, சிறியேனுக்கு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை முன்மொழியக்கூடிய வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, சிரம் தாழ்த்தி வணங்கி, விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்களுக்கு நேரத்தை ஒதுக்கிக் கொடுத்ததைப்போல், எனக்கும் நேரத்தை ஒதுக்கித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் தீர்மானத்தை முன்மொழிந்தார். முன்மொழிந்தவருக்குக் கூடுதல் நேரம் பேசுவதற்கு அனுமதி உண்டு. உங்களுக்கு அதுபோன்று இல்லை. குறிப்பிட்ட நேரத்திற்குள் நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய தலைவரும், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், 'போற்றுவோர் போற்றட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும்; என் பணி மக்கள் பணி செய்வதே' எனக் கூறும் மக்கள் தலைவர் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி கூறி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

சென்னை மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 5,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஏழை, நடுத்தர மக்களே வெள்ளத்தில் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் fridge, washing machine, grinder, T.V., பீரோ, கட்டில், மிக்சி போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள், உடைகள், உணவுப் பொருட்கள் என அத்தியாவசியப் பொருட்கள் முழுமையாக சேதமடைந்தன. குறைந்தபட்சம் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்துள்ளன. ஆனால், அரசு கொடுக்கும் இந்த 5,000 ரூபாயைக் கொண்டு எந்தப் பொருளையும் வாங்க இயலாது. எனவே, குறைந்தபட்சம் அவர்களுக்கு, இழந்துள்ள பொருட்களை வாங்கும் அளவிற்குத் தேவையான நிவாரணத் தொகையை வழங்க வேண்டும். அதேபோல, நடைபாதை வியாபாரிகள், சிறு வியாபாரிகள், சாதாரண பெட்டிக் கடை முதல் சிறு, குறு நிறுவனங்கள் வரை அனைவருக்கும் இலட்சம் ரூபாய் முதல் கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, அவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்க இந்த அரசு முன்வர வேண்டும்.

கடலூர் மாவட்டம், சுனாமி, 'தானே' புயல், மழை, வெள்ளம் என ஒவ்வொரு முறையும் பேரழிவைச் சந்தித்து வருகிறது. பேரழிவு

2016 ஜனவரி 21] [திரு. ப. பார்த்தசாரதி]

ஏற்படும்போது, உரிய நடவடிக்கை எடுப்பது போன்ற பணியை இந்த அரசு செய்கிறது. ஆனால், அதற்கு நிரந்தரத் தீர்வு காண எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. ஒடிசா மாநிலம் இதுபோன்ற பேரழிவில் ஒரு முறை சிக்கியவுடனே, அதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு, தற்போது வரை பேரழிவு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. (குறுக்கீடு) ஆனால், அதுபோன்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு ஒரு பாதிப்பு என்று சொன்னால், உலகத்திலே துடிதுடிக்கிற இதயம் கொண்டிருக்கின்ற ஒரே தலைவர் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு காலகட்டங்களிலே, இயற்கைப் பேரிடர்களான வெள்ளம் என்றாலும் சரி, சுனாமி என்றாலும் சரி, நிலச்சரிவு என்றாலும் சரி, மக்களுக்குப் பேரிடர் ஏற்படுகின்றபோது, பிற மாநிலங்களுக்கு, ஏன், உலகத்திற்கேகூட வழிகாட்டுகின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரண நடவடிக்கைகளை, மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட தலைவிதான், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒடிசா மாநிலத்திடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார். அண்னைத் தமிழகத்திலே எடுக்கப்பட்டிருக்கின்ற மீட்பு நடவடிக்கைகளைப் பார்த்துதான், Bill Clinton போன்றவர்களெல்லாம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற மீட்புப் பணிகளை மேற்கோள்காட்டித்தான் உலக நாடுகளிலே இருப்பவர்களெல்லாம் பாடம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஜனவரி 21

இங்கே வெள்ள நிவாரணத்திற்கான நிதியுதவியை இன்னும் அதிகமாக வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏறத்தாழ 25 இலட்சம் பேர்களுக்கு குடிசைகள் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்களும், 5 இலட்சம் நிரந்தர பாதிப்பு ஏற்பட்டவர்களும் சேர்த்து 30 இலட்சம் பேர்களுக்கு ஏறத்தாழ 2,240 கோடி ரூபாயை ஐந்து அரசாணைகள்மூலம் ஒதுக்கீடு செய்துள்ள முதலமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிடமிருந்து நிதி வருகிறதோ, வரவில்லையோ, 2 Memoranda மூலமாக கோரிக்கை வைத்ததுடன், அதை எதிர்பாராமல் தமிழக மக்களைக் காத்தவர் தாய்க்குத் தாயாக விளங்குகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக, வடகிழக்குப் பருவ மழையின்போது, எப்பொழுதும் அக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையிலும், ஆண்டு சராசரி மழையளவாக சுமார் 48 சதவீதம் மழைப்பொழிவுதான் கிடைக்கப்பெறும். குறிப்பாக, தமிழகத்திற்கு வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் கிடைக்கப்பெறும் சராசரி மழையளவு 440.4 மி.மீ. ஆகும். ஆனால், 2015 ஆம் ஆண்டு 673 மி.மீ. மழைப் பொழிவு கிடைக்கப்பெற்றுள்ளது. இது வழக்கத்தைவிட 53 சதவீதம் கூடுதலான மழைப் பொழிவாகும். மேலும் கடந்த 100 ஆண்டு காலத்திலே பெய்திராத அளவிற்கு ஒரே நாளில் கொட்டித் தீர்த்தது கன மழை. குறுகிய காலகட்டத்திலே 4 முறை கன மழை பெய்தும்கூட, இவ்வளவு பாதிப்புகள் இருந்தும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுசார்ந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாகவும், மதிநுட்பம் சார்ந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வையோடு எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாகவும், மனித உயிரிழப்புகள் குறைக்கப்பட்டு, மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்றுள்ளன. லண்டன் போன்ற நகரங்களில் பார்த்தீர்களானால், மழை, வெள்ளம் ஏற்பட்டு ஒரு மாத காலத்திற்கும்கூட அந்தத் தண்ணீரை எடுக்க முடியாமல் இருந்தது. ஆனால் இங்கு ராட்சத மின் பம்புகள்மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தை, இன்னும் சொல்லப்போனால், தலைமைச் செயலகத்தை

2016 ஜனவரி 21] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் இரவு, பகல் பாராமல் 24 மணி நேரமும் இயங்கும் அவசரக் கட்டுப்பாட்டு மையமாக இயங்கச் செய்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை எடுத்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் காரணமாகத்தான், மிக விரைவிலேயே, உலக நாடுகள் அதிசயிக்கும் வகையில் இயல்பு வாழ்க்கை மக்களுக்கு மீட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து விவரங்களும் எங்களிடத்தில் இருக்கின்றன. ஆகவே, மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்களைக்கூட அரசியலாக்க வேண்டாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டதில் மழை, வெள்ளத்தால் இலட்சக்கணக்கான நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டதால் மகசூலும் பாதிக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள் சாலையோர வியாபாரிகளுக்கெல்லாம் கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தினசரி பத்திரிகைகளைப் பார்க்கின்றாரா என்று தெரியவில்லை. 2 இலட்சம் தெருவோர வியாபாரிகள், petty traders, சிறு வியாபாரிகள், பூ விற்பவர்கள் அனைவருக்கும் ரூ.5,000 வட்டியில்லாக் கடன் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்து, அந்தத் திட்டத்தை அறிவித்து தொடங்கி வைத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள

[திரு. செல்லூர் கா. ராஜு] [2016 ஜனவரி 21

வேண்டும். அவர் பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். மக்களுடைய பிரச்சினைகள் என்ன, அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைப் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ரூ.5,000/- கொடுப்பது பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அது போதாது. ஏனென்றால், பாதிக்கப்பட்ட கடையை clean செய்யவே அந்த 5,000 ரூபாய் போதாது. அதை முதலிலே கவனத்தில் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் சொல்கிறோம். நீங்கள் தவறாக நினைக்க வேண்டாம். அதேபோல, மழை, வெள்ளத்தால் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள், மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, குறுந்தொழில்கள், சிறுதொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, அவர்களுக்கு எல்லாம் நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்ற ஓர் ஆதங்கத்தை இங்கே சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதற்கான நல்முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறது. 5,000 குறுந்தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனக் கணக்கெடுக்கப்பட்டு, 25 விழுக்காடு மானியமாக, ரூ.25 கோடி நிதியுடன் குறுந்தொழில்களைப் புனரமைப்பதற்காக முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; மதிப்புக் கூட்டு வரியை நவம்பர், 2015 முதல் ஆறு மாதத்திற்குத் தள்ளி வைத்திருக்கின்றார்கள். செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகையை நான்கு மாதங்களுக்குத்

2016 ஜனவரி 21] [திரு. ப. மோகன்]

தள்ளி வைத்திருக்கின்றார்கள். மின்சார உபயோகத்திற்காக வசூலிக்கப்படும் வரியை ஆறு மாதத்திற்குத் தள்ளி வைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

அதேபோன்று, தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்மூலம் ஒதுக்கீடு பெற்ற தொழில் நிறுவனங்களுக்கான வரியைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே, இந்த அரசு பதவியேற்றது முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் சுமார் 181 அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள். எத்தனை அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது, எத்தனை திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன, எத்தனை திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளைப் புத்தகங்களாக வெளியிடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நான் கேட்கும் விவரங்களை வெள்ளை அறிக்கையாக, ஒரு புத்தகமாக வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கடலூர் மாவட்டத்தைப்பற்றி இங்கே சொன்னார்கள். கடலூர் மாவட்டத்தில் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளின் நிலங்களுக்குரிய இழப்பீட்டை விரைந்து வழங்க வேண்டுமென்ற கருத்தினை இங்கே பதிய வைத்திருக்கின்றார்.

கடலூர் மாவட்டத்தில் ஜனவரி 2015 முதல் டிசம்பர் 2015 வரை (1–1–2015 முதல் 31–12–2015 வரை) சராசரி மழையின் அளவு 1,291.7 மில்லி மீட்டராக இருப்பினும், 1,748.14 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. அக்டோபர் 2015 முதல் டிசம்பர் 2015 வரையில் சராசரி மழையின் அளவு 824.4 மில்லி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

மீட்டராகயிருப்பினும், 1–10–2015 முதல் 31–12–2015 வரையில் 1,164 மில்லி மீட்டர் மழை பெய்ததாக அளவிடப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவ மழையினால் 104 உயிரிழப்புகள் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டு, 87 நபர்களின் குடும்பத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடனடியாக தலா 4 இலட்சம் ரூபாய் வீதம் இழப்பீடுத் தொகையாக வழங்கியிருக்கிறார்கள். 17 குடும்பத்தினருக்குப் பரிசோதனை அறிக்கையை எதிர்நோக்கி இழப்பீட்டுத் தொகை நிலுவையில் உள்ளது. அது கிடைக்கப்பெற்றவுடன், அவர்களுக்கும் இழப்பீடுத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், 9–11–2015 மற்றும் 10–11–2015 ஆகிய தினங்களில் பெய்த மழையினால் நெல், கரும்பு, பருத்தி, சோளம், உளுந்து ஆகிய பயிர்கள் 41,240 ஹெக்டேர் பரப்பில் பாதிப்பு அடைந்துள்ளன. 1,12,586 பயனாளிகளுக்கு 41.72 கோடி ரூபாய் நிவாரண உதவித் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதுவும் வழங்கப்பட்டுவிட்டது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு, கால்நடை இழப்புகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு இழப்பீடுத் தொகை வழங்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கின்றார்கள். 4,022 கால்நடைகளும், 1,85,256 கோழிகளும் இறந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 4,022 கால்நடைகள் மற்றும் 76,204 கோழிகள் இறப்பிற்கு நிவாரணமாக 3.55 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக நிவாரணம், இழப்பீடுக்குரிய தொகையை வழங்கக் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவு வழங்கி, அதுவும் உடனடியாக வழங்கப்பட்டுவிட்டது என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

பிற்பகல் 12–30

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு மாநில அரசு கூடுதல் ஆதார விலையாக 550 ரூபாய் அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு அறிவித்த 350 ரூபாயைத் தர மாட்டேன் என தனியார் சர்க்கரை ஆலைகள் அடம்பிடிக்கின்றன. அதோடுமட்டுமல்ல; மாநில அரசுக்குக் கூடுதல் ஆதார விலையை அறிவிக்க அதிகாரமில்லை எனச் சொல்லி, தனியார் சர்க்கரை ஆலைகள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளன. அந்த வழக்கை சர்க்கரை ஆலைகள் திரும்பப் பெறுவதற்கு இந்த அரசு நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். வழக்கு காரணமாகத்தான் கடந்த ஆண்டு அறிவித்த தொகையைத் தராமல் விவசாயிகளுக்குப் பாக்கி வைத்துள்ளனர். கரும்பை வளர்க்கும் விவசாயிகள், அதை எந்த ஆலைக்கு அனுப்ப வேண்டுமென்பதை முடிவு செய்யும் அரசாங்கம், விவசாயிகளுக்கு வர வேண்டிய பாக்கித் தொகையை வசூல் செய்து கொடுப்பதில் மட்டும் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? விவசாயிகளையும் தனியார் சர்க்கரை ஆலைகளையும் இரு கண்களாகப் பார்க்க வேண்டிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லியிருக்கின்றார். ஏதோ விவசாயிகளுக்குத் தர வேண்டிய பாக்கியைக் கண்டும் காணாமலும் அரசு இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து சொல்கின்றாரா, தெரியாமல் சொல்கின்றாரா என்று தெரியவில்லை. 31–8–2015 வரை 1,389 கோடி ரூபாய் பாக்கி இருந்தது. இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக அந்தத் தொகை 629 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், SISMA என்று சொல்லக்கூடிய சர்க்கரை ஆலை சங்க அதிபர்கள் எல்லாம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றார்கள்.

[திரு. பி. தங்கமணி] [2016 ஜனவரி 21

நாங்களும் அவர்களைக் கூப்பிட்டு பல முறை பேசியிருக்கின்றோம். வழக்கு இருந்தாலும்கூட, மாநில அரசு அறிவித்த தொகையைத் தர வேண்டுமென்று சொன்னதன் காரணமாக, நிர்ப்பந்தித்ததன் காரணமாக 1,389 கோடி ரூபாய், இப்போது 629 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்போது டன்னுக்கு 2,850 ரூபாய் விலை அறிவித்திருக்கின்றது. தேர்தல் நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன வாக்குறுதி 2,500 ரூபாய். ஆனால், இன்றைய தினம் தேர்தல் வாக்குறுதியைத் தாண்டி, விவசாயிகளுடைய அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், இன்றையதினம் 2,850 ரூபாய் அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, விவசாயிகளுக்காக நீங்கள் பரிந்து பேசுகின்ற காரணத்தினால், ஏதோ விவசாயிகள் உங்கள் பக்கம் சாய்ந்துவிடுவார்கள் என்று தயவுசெய்து நினைத்து விடவேண்டாம். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத அரசு கடந்த கால அரசு. டன்னுக்கு 2,500 ரூபாய் என்று அவர்கள் தேர்தல் நேரத்திலே சொன்னார்கள். ஆனால், இதே அவையிலே கேட்கின்றபோது, ஐந்தாண்டு காலம் முழுமையாக இருக்கின்றது; நாங்கள் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால், ஐந்தாண்டுக் காலத்தில் கொடுக்காமல் சென்றது கடந்த கால அரசு. ஆனால், அறிவித்ததற்கும் மேலாகக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இந்தச் சட்டமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த இந்த அரசு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்க வேண்டும். இந்தக் கூட்டத் தொடரிலாவது ஜல்லிக்கட்டு விளையாட்டை நடத்துவதற்கு சட்டம் இயற்ற வேண்டும். ஜல்லிக்கட்டு நடத்தும் முழு முயற்சியை இந்த அரசு எடுத்திருந்தால், தமிழகத்தில் ஜல்லிக்கட்டு விளையாட்டினை நடத்தியிருக்கலாம். ஆனால், ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் திருவிழா வருகின்றபோது மட்டும் அதுகுறித்துப் பேசுவதும் அதன்பிறகு . . .

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜல்லிக்கட்டுப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதனால், அதுபற்றிய விவாதத்தை இங்கே நடத்துவது முறையாகாது என்ற கருத்தைத் தெரிவித்தும், இங்கே கருத்து தெரிவித்து, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றாக, ஒவ்வொன்றாக, ஒருவர்பின் ஒருவராக வெளிநடப்பு செய்யக்கூடிய ஒரு சட்டரீய சூழ்நிலையை அவர்களே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜல்லிக்கட்டு ஒரு பாரம்பரிய விளையாட்டு; பாரம்பரியமாக, காலங்காலமாக நம்முடைய தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டு வந்தது என்பதை நாமெல்லாம் நன்றாகவே அறிவோம். காளைகளை அடக்குவதற்கு இளைஞர்கள் தமிழ்நாட்டில் அதிகம் பேர் இருக்கின்றார்கள் என்பதனையும் நாம் நன்றாகவே அறிவோம். ஆனால், இந்தக் காளையை காட்சிப் பட்டியலில் சேர்த்துவிட்டு திருமதி விஜயதரணி அவர்களும் தி.மு.க. காரர்களும் இதுகுறித்து சொல்லி, எங்களுடைய பதிலை எதிர்பார்ப்பதும், சபையை விட்டு வெளியேறுவதுமான ஒரு சூழ்நிலையை இங்கே ஏற்படுத்தினார்கள். அந்தமாதிரி அவர்கள் நடந்துகொண்டது உள்ளபடியே அனைவருக்கும் ஏற்புடையதல்ல என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதாவது, ஜூலை 11, 2011 அன்று மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் வெளியிட்ட ஜிஎஸ்ஆர் 528 E என்ற அறிவிக்கையில், ஏற்கெனவே உள்ள கரடிகள், குரங்குகள், புலிகள், கருஞ்சிறுத்தைகள் மற்றும் சிங்கங்களைப் போன்று காளைகளும் காட்சிக்காகவோ அல்லது காட்சி விலங்குகளாகவோ பயிற்சியளிக்கப்படக் கூடாது என்று ஆணையிட்டது. ஜனவரி 2012–ல் பல்வேறு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்துபவர்கள், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் 11–7–2011 அன்று வெளியிட்ட அறிவிக்கை அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று பல்வேறு மனுக்களை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்தனர். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை கூடுதல் பாதுகாப்பு முறைகளை விதித்து ஜல்லிக்கட்டைத் தொடர்ந்து நடத்த அனுமதித்து, ஆணை பிறப்பித்தது. ஆனால், இந்தப் பிரச்சினையை சில தனியார்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

அமைப்புகள் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு இந்த வழக்கு நடைபெற்று, உச்ச நீதிமன்றம் தடையாணையை பிறப்பித்தது. ஆக, இந்தக் காளைகளை காட்சிப் பட்டியலில் சேர்த்தது, சட்டம் கொண்டு வந்தது யார்? அந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் உச்ச நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை வழங்கியது. அப்போது காங்கிரஸ், தி.மு.க. கூட்டணிதான் மத்தியிலே ஆட்சியில் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

பாட்டி ஒரு கதை சொல்வார். திருடன் வந்து திருடிவிட்டு ஆள்கள் ஓடுவதற்கு முன்னாலே, "திருடன், திருடன், பிடியுங்கள், பிடியுங்கள்" என்று சொல்லி ஓடுவானாம். அவனைப் பின் தொடர்ந்து எல்லோரும் போவார்களாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமாதிரி, அதாவது, இந்தப் பிரச்சினையில் பிள்ளையைக் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டக்கூடிய சூழலை, நீங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றீர்கள்; ஒவ்வொரு பிரச்சினையிலும் இப்படித்தான்; இது நல்லதல்ல; தமிழக அரசியலுக்கு ஏற்புடையது அல்ல என்பதை இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூரண மதுவிலக்கை தமிழகத்தில் அமல்படுத்தக் கோரி தே.மு.தி.க. உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் வலியுறுத்தியும், காந்தியவாதி சசிபெருமாள் இறந்தும், இந்த அரசு அதுகுறித்துக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழகத்தில் பெரும்பாலான மக்கள் மதுவை எதிர்க்கும் நிலையில் பல இலட்சம் தாய்மார்களும், சகோதரிகளும் கணவனை இழந்து விதவைகளாகும் நிலையிலும் இந்த அரசு பூரண மதுவிலக்கை அமல்படுத்தவில்லை. எதற்கும் கவலைப்படாத இந்த அரசு பொது மக்களின் நலன் கருதியாவது அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம் அல்லவா? மதுவிலக்கை அமல்படுத்த முன்மாதிரியான மாநில அரசாக ஏன் இந்த அரசு இருக்கக்கூடாது?

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார்தான் எந்தக் கோரிக்கையை வைப்பது என்று விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த மதுவிலக்குப் பிரச்சினை பலமுறை இந்த அவையில், எல்லா கட்சிகளின் சார்பிலும் எழுப்பப்பட்டு, பலமுறை அரசின் சார்பாக விளக்கமும் அளிக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையிலே, இன்றைக்கு மற்றவர்களைவிட மதுவின் தீமைகளை நன்றாக அறிந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆகவே, அமல்படுத்தாதது அவருக்கு ஏற்புடையது அல்ல. இருந்தாலும்கூட, இன்றைக்கு இருக்கும் நடைமுறைச் சூழ்நிலையில், மதுவிலக்கை இங்கே அமல்படுத்துவது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை. அந்த ஒரே காரணத்தினால்தான் வருத்தத்தோடு அதை இன்றைக்கு அமல்படுத்த முடியவில்லை. இதற்குப் பதிலினை நான் சொல்வதற்குப் பதிலாக, கடந்த காலத்திலே முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி அவர்கள் சொன்ன பதிலையே இந்த நேரத்திலே நான் உங்களுக்குச் சொன்னால், அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லவில்லை, அதாவது, அவருடைய கருத்தை நான் இரவல் வாங்கிக்கொண்டு, அந்தக் கருத்தை, அவர் என்ன சொன்னார் என்பதை மட்டும் நான் உங்களுக்குத் தகவலாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதைப் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) முதலில் மதுவை அறிமுகப்படுத்தியதே, நீண்ட நாள் இடைவெளிக்குப் பின்னாலே தி.மு.க. ஆட்சி. அது வேறு விஷயம். அதற்குப் பின்பாக அதை நியாயப்படுத்துகிற முயற்சியாக அவர் சொன்ன கருத்துகள்; "இன்றைக்குத் தமிழகத்திலே கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு வளையத்திற்கு மத்தியில், ஒரு கொளுத்தப்படாத கற்பூரமாக பாதுகாப்பாக இருக்க முடியாது" என்று சொன்னது யார்? உங்கள் தலைவர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

[2016 ஜனவரி 21

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அதைத்தான் நான் சொல்கிறேன். நான் சொல்லி முடித்துவிடுகிறேன், அவருக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் அவருக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் அவசரப்படக் கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள் பதில் சொல்ல ஆரம்பித்தால், நெடுநேரம் சொல்வார். நான் கேட்கிற ஒரே கேள்வி, இப்பொழுது மதுவிலக்கைக் கொண்டுவரப் போகிறீர்களா, இல்லையா? உண்டு, இல்லை என்று சொல்லிவிட்டு போங்கள். வள, வள, வள என்று அது, இது என்று பேசுவதை யார் கேட்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தெளிவாகச் சொல்லியாகிவிட்டது. அதாவது, மதுவை அவர்கள் கொண்டுவந்தார்கள். அப்பொழுது ஏன் மதுவிலக்கை அமல்படுத்த முடியவில்லை என்று பல பேர் கேட்டதற்கு, அவர்கள் சொன்ன பதிலை நான் அவருக்கு நினைவுபடுத்துகிறேன். அவ்வளவுதான். அவருக்கு நினைவுபடுத்துகிறேன். "கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு வளையத்திற்கிடையிலே, கற்பூரம் பாதுகாப்பாக இருக்க முடியாது" என்று சொல்லியிருக்கிறார் அவரது தலைவர். அதேபோலதான் சுற்றி இருக்கிற மாநிலங்களில் எல்லாம் மதுவிலக்கை அமல்படுத்தாதபோது, தமிழகத்திலே மட்டும் அதை அமல்படுத்தினால் கள்ளச் சாராயப் பேர்வழிகளுக்கும், சமுதாய விரோதிகளுக்கும், அரசு கஜானாவுக்கு வர வேண்டிய வருவாய்

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

சென்றுவிடும். கள்ளச் சாராய உயிரிழப்பு ஏற்படும் என்பதற்காகத்தான் அதை அமல்படுத்த முடியவில்லை என்பதைப் பலமுறை விளக்கிச் சொல்லியிருக்கிறோம். மற்றொன்றைச் சொல்கிறேன். மத்தியிலே இன்றுவரைக்கும் உங்களைக் கூட்டணிக் கட்சியாகச் சொல்லிக்கொண்டிருக்கிற மத்திய பி.ஜே.பி. அரசாக இருந்தாலும் அல்லது எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி; முன்பு இருந்த காங்கிரஸ் அரசாங்கமாக இருந்தாலும் சரி, யார் இருந்தாலும், எப்பொழுதும் நாங்கள் இந்த நிலையைத்தான் சொல்லியிருக்கிறோம். இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்தினால், வருவாய் இழப்பை மத்திய அரசு அந்தந்த மாநிலங்களுக்கு ஈடு செய்து கொடுத்தால், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலாக அதை ஆதரித்து மதுவிலக்கை அமல்படுத்துவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மதுவிலக்குக் கொள்கைக்கு எதிரானது அல்ல மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. மதுவிலக்குக் கொள்கைக்கு ஆதரவான அரசுதான். ஆனால், அதேசமயத்தில், இந்த வருவாய் இழப்பு—இந்தியா முழுவதும் அதை மத்திய அரசு அமல்படுத்தினால்தான், அது சாத்தியம் என்று பலமுறை சொல்லியிருக்கிறோம். மீண்டும் சொல்கிறேன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முதன்முதலாக அதை ஆதரித்து அமல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்ன சொல்லுங்கள்?

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வராமல் இருப்பதற்குக் காரணம் வருமான இழப்புதான் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் சொல்வதைக் கேளுங்கள். பல்வேறு காரணங்களில் அதுவும் ஒரு காரணம். நடைமுறை சாத்தியம் இல்லை. பக்கத்தில் உள்ள பாண்டிச்சேரியில் அமல்படுத்தியிருக்கிறார்களா? எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த வருவாய் அங்கே போய்விடும்.

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2016 ஜனவரி 21

அமல்படுத்த முடியாது. சுற்றியிருக்கிற மாநிலங்கள் எல்லாம் மதுவிலக்கை அமல்படுத்தாதபோது, தமிழகத்தில் மட்டும் அமல்படுத்தினால் தோல்வி அடைந்துவிடும். அது சாத்தியம் இல்லை என்பதால்தான், இதை அமல்படுத்தவில்லையே தவிர, வேறு ஒன்றுமில்லை. வருவாய் இழப்பு மட்டுமல்ல; இந்த வருவாய் இழப்புப்பற்றி முன்னாள் முதலமைச்சர் இங்கே இதே சட்டமன்றத்தில் சொன்னார். வருவாயைப்பற்றி சொன்னதற்காகச் சொல்கிறேன். "தமிழ்நாட்டில் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தினால், இங்கிருக்கின்ற வருவாய் எல்லாம் பக்கத்தில் உள்ள மற்ற மாநிலங்களுக்கெல்லாம் சென்றுவிடும். ஆகவே, தமிழ்நாட்டினுடைய வருவாய் அடுத்த மாநிலத்திற்குச் சென்றுவிடுவதை நான் அனுமதிக்க மாட்டேன்" என்று கூறினார். "என் வீட்டுக் கோழி அடுத்தவர் வீட்டில் முட்டையிடுவதை நான் அனுமதிக்க மாட்டேன்" என்று கூறினார். இப்போது மட்டும் நம் வீட்டுக் கோழி அடுத்தவர் வீட்டில் முட்டையிடுவதற்கு அனுமதிக்கலாமா? அன்றைக்கு ஒரு நிலை, இன்றைக்கு ஒரு நிலையா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி இல்லை, இந்த விவாதம் மிகவும் நீண்டுகொண்டு செல்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தை நீட்டிக்கக்கூடாது. சுருக்கமாகச் சொன்னால், அதிமுக அரசு மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வரவே வராது; கொண்டு வரவே மாட்டார்கள். எனவே, இந்தச் சாராயக் கடைதான், அதுதான் இலாபம். ஆகையினாலே இந்த அரசிடமிருந்து மதுவிலக்குக் கொள்கையை எதிர்பார்க்க முடியாது, அதுதான் முக்கியம். வேறு கதையைப்பற்றி பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையை மத்திய அரசு இந்தியா முழுவதும் கொண்டு வந்தால் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்கிறோம். நாங்கள் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவர மாட்டோம் என்று சொல்லவில்லை. மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தினால், மாண்புமிகு அம்மா

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அவர்களுடைய அரசுதான் முதல் அரசாக அதனை ஏற்றுக்கொள்ளும் என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லவில்லை. இந்தக் கொள்கைக்கு எதிராக இருக்கிறோம் என்று சொல்லவில்லை. மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறோம். அதை அமல்படுத்த வேண்டியது மத்திய அரசுதான் என்பதை நான் மீண்டும் ஒரு முறை வலியுறுத்திச் சொல்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்ததைத்தான் நாங்கள் அமல்படுத்துகிறோம் என்று சொல்கிறீர்கள். இதை எல்லாவற்றிலும் பயன்படுத்தினால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. அதற்காக என்னுடைய நன்றி. ஆனால், அதேநேரத்தில் நான் இந்த அரசையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவது, உடனடியாக முழு மதுவிலக்கைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னாலும், படிப்படியாகக் கொண்டுவருவதற்கான வாய்ப்பிருக்கிறது. பல மாநிலங்களில் அந்த முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வழிமுறையையாவது இந்த அரசு கையாளுமா என்ற அந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) என்ன? திரு. ஆறுமுகம், சொல்லுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில், கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய மதுக்கடைகளை படிப்படியாக அகற்றி குறைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நாளைக்குப் பேசப்போகிறீர்கள் நாளைக்குப் பேசும்போது பேசலாம் அல்லவா? மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: இப்போதும் பாதிக்கப்பட்ட இடங்களில் இருக்கின்ற மதுக்கடைகளை அப்புறப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். எந்தெந்த இடங்களில் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களோ, அந்த இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த இடங்களில் உள்ள கடைகள் எல்லாம் அப்புறப்படுத்தப்படுகின்றன. அதேபோல, மக்களுடைய கோரிக்கைகளையெல்லாம் இன்றைக்கும் இந்த அரசு கனிவுடன் பரிசீலித்து, எந்தெந்த இடங்களிலே மதுக்கடைகள் இடைஞ்சலாக இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி இல்லை. இன்றைக்கு இந்த விவாதம் போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை. இந்த விவாதம் போதும். மதுவிலக்குப்பற்றி நிறைய பேசியாகிவிட்டது. நீண்ட நேரம் இதைப்பற்றி பேசியாகிவிட்டது, போதும் (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைய விளக்கம் சொல்லிவிட்டார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன? திரு. சவுந்தரராசன், சொல்லுங்கள்.

பிற்பகல் 12–45

திரு. அ. சவுந்தரராசன்: சேலம்-அஸ்தம்பட்டி, காந்தி சாலையில் பள்ளிகள், மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே இருக்கக்கூடிய மதுபானக் கடையை அகற்ற வேண்டுமென்று மாவட்ட நிருவாகத்திடம் பேசி, மூன்று மாதத்தில் அந்தக் கடையை அகற்றுவோம் என்று மாவட்ட நிருவாகம் சொல்லியும், அகற்றாததால், அதை அகற்ற கோரியவர்கள்மீது தடியடியெல்லாம் நடந்திருக்கிறது. அந்தக் கடையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அப்படி ஏதாவது ஆட்சேபகரமான பகுதிகள் இருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஒன்றை மட்டும் நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தோழர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிகொண்டிருக்கும்போது எழுந்து நிற்கிறீர்கள். இதெல்லாம் சரியில்லை. அனுமதி கொடுக்காமல் நீங்களாவே எழுந்து நிற்கிறீர்கள். இது முறையல்ல. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை. இவ்வளவு சொல்கிற நீங்கள், மேற்கு வங்காளத்தில் ஆட்சியில் இருந்தீர்கள்; கேரளாவில் ஆட்சியில் இருந்தீர்கள்; திரிபுராவில் ஆட்சியில் இருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் மேற்கு வங்காளத்தில் ஆட்சியில் இருக்கும்போதெல்லாம் மதுவிலக்கு கொண்டுவரவில்லையே? அப்படியென்றால், அங்கே ஒரு கொள்கை, இங்கே ஒரு கொள்கையா? கேரளாவில் ஆட்சியில் இருக்கும்போது அமல்படுத்தவில்லையே? அப்படியென்றால், ஆட்சியில் இருந்தால், அந்தந்த மாநிலத்திற்குத் தகுந்தாற்போல் முடிவு எடுக்கிறீர்களா? தேசிய கட்சி என்று சொல்கிறீர்கள்; உலகளாவிய கட்சி என்று சொல்கிறீர்கள்; கொள்கையின் அடிப்படையிலான அரசியல் என்று சொல்கிறீர்கள். ஆனால், ஊருக்கு ஊர் கொள்கை மாறுபடுமா? (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே நிலை எடுக்க வேண்டும். (குறுக்கீடு) கேட்பதற்கு தார்மீக ரீதியாக உங்களுக்கு உரிமையில்லை என்பதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)*

திரு. அ. சவுந்தரராசன்: *இந்தியாவிலேயே தொடர்ந்து மதுக்கடைகளைப் புதிதாகத் திறந்து கொண்டிருக்கிற மாநிலம் இதுதான். இந்தியாவிலேயே அதிக கடைகள் இருக்கிற, அதிக மக்களைக் குடிக்க வைக்கின்ற மாநிலம் இதுதான். திரிபுராவிலோ, மேற்கு வங்கத்திலோ, கேரளத்திலோ . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. க. பாலகிருஷ்ணன், உங்கள் கட்சித் தலைவர்தானே பேசிக் கொண்டிருக்கிறார்? அப்படியிருந்தும் நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு)*

[பேரவைத் தலைவர்] [2016 ஜனவரி 21

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: திரு. சவுந்தரராசன் அவர்கள் சொல்வது தவறான செய்தி. தமிழகத்தில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மது விற்பனை குறைவாகத்தான் இருக்கிறது. அதற்குரிய புள்ளிவிவரங்களெல்லாம் இருக்கின்றன. அதில் வாக்குவாதம் நீளும் என்பதற்காகச் சொல்லவில்லை. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, இங்கே மது விற்பனை குறைவாகத்தான் இருக்கிறது; அதிகமாக இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன ஏன் இப்படி எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்?

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலம் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன், முதலில் அவர்களைக் கேள்வி கேட்க அனுமதித்தேன். நீங்களும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடு) உங்கள் கட்சித் தலைவர் திரு. சவுந்தரராசன் அவர்களை அனுமதித்தேன். நீங்களும் எழுந்து நின்றால் எப்படி?

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான கேரளாவில் 15 ஆயிரம் கோடி ரூபாய் ஆண்டுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, அங்கே மதுவிலக்கை அமல்படுத்துவதற்குண்டான நடவடிக்கை எடுக்கிறார்கள். அதுபோல, படிப்படியாக தமிழகத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை, டாக்டர் க. கிருஷ்ணசாமி, இந்த சப்ஜெக்ட்போதும். உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி, பேசுங்கள். வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். இதை விட்டுவிட்டு, வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியிலே மதுவிலக்கு அமல்படுத்தப்படுமா, அமல்படுத்தப்படாதா என்றுதான் ஒரு கேள்வியைக் கேட்டேன். அதற்கு முடியும், முடியாது என்று மாண்புமிகு அமைச்சர்

2016 ஜனவரி 21] [திரு. ப. பார்த்தசாரதி]

அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, 'இதை யார் கேட்பது? தகுதியில்லை' என்றெல்லாம் ஓர் உறுப்பினரைப் பார்த்துக் கேள்வியைக் கேட்கின்றார்கள். இந்த நேரத்திலே எனக்குக்கூட ஒரு பாடல் ஞாபகம்தான் வருகிறது. "நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்; உங்கள் ஆசை நெஞ்சைத் தொட்டுப் பார்த்து சொல்லுங்கள்" என்ற ஒரு பாடல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இந்த மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று, எல்லோருக்காகவும்தான் கேட்கிறோம். தனிப்பட்ட முறையில் எங்களுக்கு மட்டும் கேட்கவில்லை; உங்களுக்கு மட்டும் கேட்கவில்லை. நாட்டிலுள்ள பொது மக்கள் எல்லோருக்காகவும்தான் நாங்கள் கேட்கிறோம். அதற்குண்டான பதிலை, முடியும், முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். மயிலாடுதுறை, சீனிவாசபுரம் என்ற இடத்தில் உங்களுடைய அண்ணா திமுக. கட்சியின் ஊராட்சி மன்றத் தலைவர் ஷ்வாகோகுல் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அந்தக் கடையை அகற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; உத்தரவும் வாங்கியிருக்கிறார்கள். ஆனால், நீதிமன்ற உத்தரவு வாங்கியபிறகும், அந்தக் கடையை அகற்றாமல் இருக்கிறார்கள் என்றால், இந்த அரசினுடைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு கொடுங்கள்; உடனே இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. பார்த்தசாரதி, வேறு சப்ஜெக்டில் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. அ. கணேஷ்குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்குப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ப. பார்த்தசாரதி, வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பாயும் நதிகளை இணைப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என பல முறை இந்த அரசு கூறியுள்ளது. ஆனால், இதுவரையில் தமிழகத்தில் எந்த நதியையும் இணைப்பதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்ததாகத்

[திரு. ப. பார்த்தசாரதி] [2016 ஜனவரி 21

தெரியவில்லை. அதேசமயத்தில் ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, பதவியேற்ற ஒரு வருட காலத்தில் அங்கே இருக்கின்ற கிருஷ்ணா நதியையும், கோதாவரி நதியையும் சுமார் 174 கிலோ மீட்டர் தூரம் இணைத்துள்ளார். இந்தப் பணி 5 மாதங்கள் 15 நாட்களில் முடிக்கப்பட்டுள்ளது. சுமார் 17 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. ஆனால், இந்த அரசு பதவியேற்று ஐந்தாண்டுக் காலமாகியும், ஒரு நதிகூட இணைக்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையைவிட, அதிக விலை கொடுத்து தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை வாங்கி தமிழகத்தில் மின்வெட்டே இல்லாதது போன்றதொரு தோற்றத்தை செயற்கையாக உருவாக்கிவிட்டு, 5 ஆண்டுக் காலத்தில் எந்தவொரு மின் உற்பத்தித் திட்டத்தையும் புதிதாகத் தொடங்காமல், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக உருவெடுத்துள்ளது என்று இந்த அரசு கூறுகிறது.

பிற்பகல் 12–50

2012 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கடந்த மூன்றாண்டுகளில் 3,000 மெகா வாட் சூரியசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதேசமயத்தில், அதானி நிறுவனத்திடம் போடப்பட்ட ஒப்பந்தத்தால் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள், யாரோ ஒருவர் article-ல் எழுதியிருக்கிறார் என்பதை வைத்தெல்லாம் பேசக்கூடாது. சூரிய ஒளி மின்சக்தியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சூரிய ஒளி மின்சக்தி கொள்கை 2012-ல் மாண்புமிகு அம்மா அறிவித்தற்குப் பின்னால், வருடத்திற்கு ஆயிரம் மெகா வாட் என்று 3,000 ஆயிரம் மெகா வாட் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். இதுவரை

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

சூரிய ஒளி மின்சக்தி மூலமாக 409 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மார்ச் 31 ஆம் தேதிக்குள் மின் உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென்ற நிர்பந்தத்தோடு இன்றைக்கு 1,387 மெகா வாட் அளவிற்கு மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தம் (PPA) போடப்பட்டிருக்கிறது. 1,500 மெகா வாட்டுக்குமேல் கொள்முதல் செய்ய வேண்டாம் என்று மாநில அரசே விருப்பத்தின்பேரில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அதை உயர் நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே, 1,500 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, நிர்ணயித்த அந்தத் தொகையைப் பொறுத்தளவிலே, அதானி நிறுவனம் மட்டுமல்ல; சூரிய ஒளி மின்சாரம் கொள்முதல் ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாகவே, ஏறத்தாழ 428 மெகா வாட் அளவிற்கு ஒப்பந்தங்கள் ஏற்கெனவே போடப்பட்டுவிட்டன. ஏதோ அதானி நிறுவனம் வந்ததற்குப் பின்னால்தான் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்வதுபோன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டுவிட்டது. அந்நிறுவனம் நீண்ட நாளுக்குப் பின்பாகதான் வந்தது. அதற்கு முன்பே, 400 மெகா வாட் அளவிற்குமேல் PPA போட்டிருக்கிறோம். அப்போதெல்லாம் யாருமே இதைக் கேட்கவில்லை. இந்தக் கொள்முதல் விலைக்கும், மாநில அரசுக்கும் சம்பந்தமே இல்லை. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் இந்தக் கட்டணத்தை நிர்ணயிக்கிறது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 7 ரூபாய் 1 பைசா என்று நிர்ணயித்தபோது, மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அதன் விலையை 7 ரூபாய் 2 பைசா என்று நிர்ணயித்திருந்தது. அதிலேகூட ஒரு பைசா குறைவாகத்தான் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயம் செய்தது. ஆக, இதைப் பொறுத்தளவிலே நாளுக்குநாள், படிப்படியாக, சூரிய ஒளி மின்சக்தியின் விலை குறைவாகிக் கொண்டே வருகிறது. முதலில் பார்த்தால், குஜராத்தில் இதன் விலை 18 ரூபாய் என்று இருந்தது. 18 ரூபாயிலிருந்து 16 ரூபாய், 16 ரூபாயிலிருந்து 12 ரூபாய் என்றானது. இப்போதும் அந்த விலையிலும் வாங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதேபோல், ரூபாய் 9, 8, 7 என்று இருந்தது. அடுத்தமுறை வருகின்றபோது, தமிழ்நாட்டில் இன்னும் குறையும். கால நிலவரத்திற்கேற்ப, இந்தியா முழுவதும் 18 ரூபாயிலிருந்து தற்போது 7 ரூபாய்க்கு

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2016 ஜனவரி 21

வந்துள்ளது. ஆக, அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 7 ரூபாய் 1 பைசா என்று நிர்ணயிக்கும்போது, அதுதான் இந்தியாவிலேயே குறைந்த விலையாக இருந்தது. அதற்குப் பின்பாக மார்க்கெட் நிலவரம் குறைந்ததற்குப் பின்பு, இப்போது குறைவாகிக் கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் 3,000 மெகா வாட் அளவிற்குக் கொள்முதல் செய்வதுகூட இன்றைக்கு 1,500 மெகா வாட் அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அடுத்த முறை நிர்ணயிக்கின்றபோது, வெளிப்படையான ஏல முறையில்தான் விலை நிர்ணயிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை கட்டணம் நிர்ணயம் செய்ததற்கும், மாநில அரசுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சுய அதிகாரம் படைத்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் விலையை நிர்ணயிக்கிறது என்கிற அடிப்படை உண்மையைத் தெரிந்துகொண்டு பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தானே' புயல் ஏற்பட்டபோது கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரையிலும் அந்தப் பணிகள் முழுமையாக முடிவடையவில்லை. நான்காண்டுகளுக்கு மேலாகியும் இந்த அரசின் மெத்தனப்போக்கால் இதுபோன்ற பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன.

சென்னையைச் சுற்றியுள்ள ஆறுகள், ஏரிகள், குளங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நீர்நிலைகளிலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடங்களை இந்த அரசு மீட்க வேண்டும். மேலும், நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்டால் மட்டும்தான் அதிகளவில் நீரைத் தேக்க முடியும். தற்போது நீர்நிலைகளில் முழுக் கொள்ளளவு நீரைத் தேக்க முடியவில்லை. காரணம், சேரும் சகதியுமாக இருப்பதால் 50 முதல் 60 சதவிகிதம் மட்டுமே நீரைத் தேக்க முடிகிறது. மேலும், அனைத்து நீர்நிலைகளிலும் கரைகளை உயர்த்தி, பலப்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் செய்தால்தான் மீண்டும் இதுபோன்ற மழை,

2016 ஜனவரி 21] [திரு. ப. பார்த்தசாரதி]

வெள்ளம் ஏற்பட்டாலும், பாதிப்புகளையும், சேதங்களையும் தவிர்க்க முடியும். ஓர் அரசு என்பது வரும்முன் காக்கும் அரசாக இருக்க வேண்டும். வந்தபின் காக்கும் அரசாக செயல்பட்டால், இந்த அரசு நிச்சயமாக மக்களைப் பாதிக்கும் அரசாகத்தான் இருக்கும்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–55

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'தானே' புயலைப்பற்றி பேசினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'தானே' புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர், விழுப்புரம் மாவட்டத்திற்குத் தாயுள்ளத்துடன், 1 இலட்சம் புதிய வீடுகள் கட்ட அனுமதி அளித்து, ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினார்கள். அதில், விழுப்புரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 10 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, கடலூர் மாவட்டத்திலும், 80 ஆயிரம் வீடுகளில், 62,400 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள வீடுகள் அனைத்துமே ஆரம்பிக்கப்பட்டு, முன்னேற்றத்தில் இருக்கின்றன. 31–3–2016-க்குள் அனைத்து வீடுகளும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக முழுவதுமாகக் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஆக்கிரமிப்பைப்பற்றி சொல்லி, வரும்முன் காக்க வேண்டும் என்ற கருத்தை இங்கே சொன்னார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

இந்த ஆக்கிரமிப்பு என்பது காலம் காலமாக, பிரிட்ஷ்காரர்கள் காலத்திலிருந்து படிப்படியாக, படிப்படியாக நடந்து வந்திருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆக்கிரமிப்புகளை எந்த நிலைமையிலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்தத் தருணத்திலும் அவர்கள் அனுமதிக்கவே மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட எங்கெல்லாம் ஆக்கிரமிப்புகள் நடைபெற்றனவோ; ஏரிகளோ, குளங்களோ, வரத்து வாய்க்கால்களோ, பொது இடங்களிலோ ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கணக்கெடுப்புகள் முடிந்தவுடன், உடனடியாக அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுப்பார்கள், எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பார்த்தசாரதி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆற்று ஓரங்களில் இருந்தவர்களுக்கு 10 ஆயிரம் வீடுகளை ஒதுக்க வேண்டும் என்று ஆணையிட்டு, இப்போது வீடுகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அவர்களுடைய தலைவர், அங்கு குடியிருப்பவர்களை அப்புறப்படுத்தக் கூடாது; ஆக்கிரமிப்பு உள்ள இடத்திலேயே வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று பேசுகின்றார். உறுப்பினர் ஒன்று பேசுகின்றார்; அவர் தலைவர் ஒன்று பேசுகின்றார். இதற்கு அவர் பதில் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசும்போது அரசின் மெத்தனப்போக்கு என்று சொன்னார். அதை அவைக்

2016 ஜனவரி 21] [திரு. எஸ்.பி. வேலுமணி]

குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் பேரில் கடலூர் மாவட்டத்தை குடிசை இல்லாத பகுதியாக மாற்ற, வீடுகள் ஒதுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோல், சுனாமி வந்தபோது, சுனாமியைவிட வேகமாக, தானே புயல் வந்தபோது, 'தானே' புயலைவிட வேகமாக, சென்னையிலே மழை வந்த போது, புயலைவிட வேகமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவரே நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். எந்த முதலமைச்சரும் அந்த மாதிரி செய்தது கிடையாது. ஏதாவது ஒன்றைப் பேச வேண்டும் என்பதற்காகப் பேசக் கூடாது. ஆகவே, அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி, நீங்கள் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதிக்கு உட்பட்ட மணக்குப்பம் கிராமத்தில் 23–9–2014 அன்று தமிழக முதல்வர் அவர்களால் அரசுக் கல்லூரிக்கான கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்குரிய கல்வெட்டும் முதல்வர் அவர்கள் பெயரில் அங்கே உள்ளது. ஆனால், இதுவரையிலும் கட்டடம் கட்டுவதற்கான எந்தப் பணியும் நடைபெறவில்லை. வருவாய்த் துறையிடம் நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அந்த இடம் காலியாக, விளையாட்டு மைதானம்போல் காட்சியளிக்கின்றது. இத்தக் கட்டடம் கட்டப்படாததால், சுமார் 1,500 கல்லூரி மாணவர்கள் திருவெண்ணெய்நல்லூரில் உள்ள பழைய பள்ளிக் கட்டடத்தில் எந்தவித அடிப்படை வசதியும் இன்றி படித்து வருகின்றனர். உடனடியாக இந்த அரசு கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று தனியார் கல்லூரி நடத்துவதற்கு இந்த அரசு அனுமதி அளிக்குமா? அரசுக்கு ஒரு நியாயம்; தனியாருக்கு ஒரு நியாயமா என்று கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர் உரைமீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த கேப்டன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்த இடம் சர்ச்சைக்குரிய இடம். அந்த இடம் தற்போது பேசி முடிக்கப்பட்டு, நல்ல தீர்வு ஏற்பட்டு, கட்டடம் கட்டுகிற பணி நடைபெற்று வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே கருத்துகளை எடுத்து வைத்து பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய உலகெங்கும் பரவிக் கிடக்கின்ற தமிழர்களின் ஒரே தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய சட்டமன்றத் தலைவரும், கழகப் பொருளாளருமான அண்ணன் தளபதி அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த உரையின்மீது என்னுடைய கருத்துகளை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-00

கவர்னர் உரையிலே, பக்கம் 4-ல் சென்னை நகரிலே ஏற்பட்ட இந்த மழையைப் பற்றி நீங்களே சொல்கிறபோது, வரலாறு காணாத மழை என்றும், இதனால் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால், சாவகாசமாக ஒன்றை அதிலே குறிப்பிடாமல் விட்டுவிட்டீர்கள். மழை பெய்து பெரு வெள்ளம் வந்ததைவிட, செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்துவிட்டதனால் ஏற்பட்ட வெள்ளம் என்பதை இந்தக் குறிப்பிலே நீங்கள் குறிப்பிடவில்லை. முறையாக அந்த ஏரியை நீங்கள் திறந்திருந்தால் வெள்ளம் வந்திருக்காது என்று உலகம் முழுவதும் பேசுகிறார்கள். அதுமாத்திரமல்ல; தினசரி அந்த மழையின் அளவினைப் பொறுத்து தண்ணீரைத் திறந்திருக்க வேண்டுமென்றும், அதிகமான அளவு தண்ணீரை ஒரே இரவிலே திறந்த காரணத்தினால், சென்னை நகரின் பல பகுதிகளில் அந்த வெள்ளம் புகுந்து, தாங்கவொண்ணாத் துயரை ஏற்படுத்தி,

2016 ஜனவரி 21] [திரு. ஜெ. அன்பழகன்]

சென்னை நகரையே புரட்டிப் போட்டது என்பதும், இதனால் மக்கள் இன்றைக்குப் படு அவஸ்தையிலே இருக்கிறார்கள் என்பதும் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். இதுகுறித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பரம்பாக்கம் ஏரி உரிய நேரத்தில் திறக்கப்படவில்லை என்று இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தன்னுடைய கருத்தை பதிய வைத்துள்ளார். அவருடைய இந்தக் கருத்து தாமதமாகத்தான் அப்பொழுதும் வந்தது. இப்பொழுதும் அதையே திரும்பவும் இந்தச் சட்டமன்றத்தில் கேட்டுக் கொண்டிருக்கின்றார். இதற்கு உரிய விளக்கத்தினை நான் கொஞ்சம் விவரமாகச் சொல்ல வேண்டியிருக்கும். உறுப்பினர் அவர்கள் இடையில் குறுக்கீடு செய்யாமல் பொறுமையாக கேட்க வேண்டுமென்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஒரு குற்றச்சாட்டை இங்கு பதிய வைத்திருக்கின்றீர்கள். (குறுக்கீடு) இல்லை, நடந்ததை நான் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடு) உட்காருங்கள். நான் பதில் சொன்னதற்கு பின்னாலே உங்களுக்கு வாய்ப்பு வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) குறுக்கிடுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. நான் பதில் சொன்னதற்குப் பின்னால், அதில் உங்களுக்கு ஏதாவது ஐயப்பாடு இருந்தால் நீங்கள் கேளுங்கள். உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார், கேளுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: செம்பரம்பாக்கம் ஏரி உரிய நேரத்தில் திறக்கப்படவில்லை என்றும், திடீரென்று

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

1–12–2015 அன்று இரவு மிக அதிக அளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டதால்தான் அடையாறில் பெரு வெள்ளம் ஏற்பட்டு சென்னையில் சில பகுதிகள், அதிலும் குறிப்பாக, ஈக்காட்டுத்தாங்கல், ஜாபர்கான்பேட்டை, கோட்டூர்புரம், சைதாப்பேட்டை போன்ற பகுதிகள் மிகுந்த வெள்ள பாதிப்புக்கு உள்ளாகின என்றும், தண்ணீர் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு கிடைக்கப் பெறுவதற்கு தாமதம் ஏற்பட்டது என்றும் பல்வேறு கற்பனை குற்றச்சாட்டுகளை பல எதிர்க்கட்சிகளும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன.

அடையாறின் உப வடிநிலம் பற்றியும், 1–12–2015 அன்று பெய்த பெருமழை பற்றியும், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறக்கப்பட்ட நீர் அளவு பற்றியும் சில விவரங்களை முதலில் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடையாறு உப வடிநிலம் என்பது சென்னை வடிநிலப் பகுதியில் ஒரு பகுதியாகும். சென்னைப் பகுதி சமதள இடமாகவே உள்ளது. அடையாறு ஆறானது காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆதனூர் ஏரியின் உபரி நீர் கலுங்குகளிலிருந்து தொடங்கி, மொத்தம் 42 கிலோ மீட்டர் தூரம் ஓடி கடலில் கலக்கிறது. அடையாற்றின் தொடக்க இடத்திலிருந்து 18 வது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருநீர்மலை அருகில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் வந்து அடையாறில் கலக்கிறது. அதாவது அடையாறு எங்கிருந்து வருகிறது? இந்த செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் எந்த இடத்தில் கலக்கிறது என்று நான் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். கவனமாக அவர் கேட்க வேண்டும். அடையாற்றின் தொடக்க இடத்திலிருந்து 18 வது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருநீர்மலை அருகில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் அடையாற்றில் கலக்கிறது. அங்கிருந்து 12 கிலோ மீட்டர் தூரம் அடையாறு பயணித்து, நந்தம்பாக்கம் அருகில் சென்னை நகரை அடைகிறது. அங்கிருந்து ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், அடையாறு ஆகிய இடங்களின் வழியாக 12 கிலோ மீட்டர் தூரம் பயணித்து, ஸ்ரீனிவாசபுரத்துக்கும், பெசன்ட் நகருக்குமிடையே வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறது. இந்த அடையாறு ஆற்றின் மொத்த நீர்பிடிப்புப் பகுதி 808 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்தப் பகுதியில் 198 ஏரிகள் உள்ளன.

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 1–05

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரி 358 சதுர கிலோ மீட்டர் நீர்பிடிப்புப் பகுதியைக் கொண்டதாகும். அதாவது அடையாறு ஆற்றினுடைய மொத்த நீர்பிடிப்புப் பகுதி 808 சதுர கிலோ மீட்டர். அதில் 198 ஏரிகள் இருக்கின்றன. ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் 358 சதுர கிலோ மீட்டர்தான் நீர்பிடிப்புப் பகுதியைக் கொண்டதாகும். திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் கவனமாகக் கேட்க வேண்டும். செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3,645 மில்லியன் கன அடி. முழு நீர்மட்டம் 24 அடி ஆகும். செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் வெளியேற்றும் திறன் 33,060 கன அடிதான். செம்பரம்பாக்கம் ஏரியில் 1–11–2015 அன்றைய நிலவரப்படி இருந்த நீர்மட்ட அளவு 5.08 அடி. அதாவது, 228 மில்லியன் கன அடி நீர்தான். சென்னையில் 1918 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கடந்த நவம்பர் மாதம்தான் மிக அதிக அளவில் மழை பெய்தது. அதாவது, 2015 நவம்பர் மாதத்தில் 101.8 செ.மீ. அளவு மழை பெய்தது. எனவே, செம்பரம்பாக்கம் ஏரிக்கு அதிக அளவு நீர்வரத்து ஏற்பட்டதால் மழைக் காலங்களில் தேக்கி வைக்கப்படக்கூடிய நீர் அளவு பற்றிய வரைமுறைகளின்படி, 17–11–2015 அன்று 18,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு, செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் 22.3 அடியில் வைக்கப்பட்டிருந்தது. அதாவது, மொத்த நீர்மட்டம் 24 அடி, 17–11–2015 அன்று 22.3 அடி வைக்கப்பட்டிருந்தது. 30–11–2015 அன்று செம்பரம்பாக்கம் ஏரியில் 22.06 அடி அளவுக்கு நீர் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

வெள்ள நீர் ஒழுங்குமுறைபடுத்துவதற்கான விதிகளின்படி, பருவமழைக் காலம் முழுவதும் நீர்த்தேக்கங்களில் முழு நீர்மட்டத்தைவிட 2 அடி குறைவாகவே நீர் தேக்கி வைக்கப்பட வேண்டும். இந்த வரையறை அனைத்து பொதுப் பணித் துறை நீர்த்தேக்கங்களிலும் விதிமுறைகளின்படி கடைப்பிடிக்கப்படுகிறது. ஏனெனில், தேவையான தண்ணீர் இருப்பு வைக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலும், அதேநேரத்தில் கீழ்ப்பகுதிகளில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் மற்றும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டும் இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

இந்திய வானிலை ஆய்வு மையம் 30–11–2015 அன்று, 'தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் கன மழையோ, மிக கன மழையோ பெய்யும்; தமிழ்நாட்டின் உட்பகுதிகளில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யும்' என அறிவித்தது. வானிலை ஆய்வு மையத்தின் isolated என்ற சொற்றொடரின் பொருள் ஒன்றிரண்டு இடங்களில் மழை பெய்யும் என்பதுதான். கன மழை என்பது 6.4 செ.மீ. முதல் 12.4 செ.மீ. வரைதான் ஆகும். அதாவது, கன மழை என்பது 6.4 செ.மீ. முதல் 12.4 செ.மீ. ஆகும். மிக கன மழை என்பது 12.4 செ.மீ. முதல் 24.4 செ.மீ. என்பதைக் குறிக்கும். (குறிக்கீடு) மிக கன மழை என்பது 12.4 செ.மீ. முதல் 24.4 செ.மீ. என்பதைக் குறிக்கும்.

1–12–2015 அன்று காலை 8–30 மணிக்கு 'scattered heavy to isolated very heavy rain would occur over coastal Tamil Nadu and Puducherry. Isolated extremely heavy rain would occur over Tiruvallur, Chennai, Kancheepuram Districts of Tamil Nadu. Isolated heavy rain may occur over interior Tamil Nadu' என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த அறிவிப்பின்படி, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

1–12–2015 அன்று காலை முதல் செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிக்கத் துவங்கியது. அன்றையதினம் காலையில் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் 22.08 அடி என வைக்கப்பட்டிருந்தது. அன்று மதியம் முதல் அடுத்த நாள் முடிய செம்பரம்பாக்கத்திற்கு அதிக அளவு நீர் வரப்பெற்றது. செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் அளவைக் கண்காணித்து நீரை வெளியேற்றும் பணிக்கு சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர் பொறுப்பு என்றாலும், கன மழை அறிவிப்பின் காரணமாக நீர் வள ஆதாரத் துறையின் சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட மேற்பார்வை அதிகாரிகள் செம்பரம்பாக்கம் ஏரியின் கண்காணிப்பில் ஈடுபட்டனர். செம்பரம்பாக்கம் ஏரிக்கு வரும் நீரின் அளவைக் கருத்தில்கொண்டு, நீரை ஒழுங்குபடுத்தி வெளியேற்றும் பணிகளில் இவர்கள் ஈடுபட்டனர். வரும் நீரின் அளவு அதிகமானதாக இருந்ததால், அதற்கேற்றபடி காலை 10 மணி அளவில் வினாடிக்கு 10,000 கன

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அடியாகவும், நண்பகல் 12 மணிக்கு 12,000 கன அடியாகவும், பிற்பகல் 2 மணி அளவில் 20,960 கன அடியாகவும் நீர் வெளியேற்றப்பட்டது. மாலை 5 மணி அளவில் வினாடிக்கு 25,000 கன அடி நீரும், 6 மணி அளவில் 29,000 கன அடி நீரும் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வெளியேற்றப்பட்டது. 2–12–2015 மதியம் 3–00 மணி வரை இதே அளவு தண்ணீர்தான் வெளியேற்றப்பட்டது. அதன் பின்னர் இது படிப்படியாகக் குறைக்கப்பட்டது. ஆக, உச்சபட்சமாக 29,000 கன அடி நீர்தான் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வெளியேற்றப்பட்டது என்பதனை நான் இங்கு ஆணித்தரமாகக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–10

அடையாறு ஆற்றின் மொத்த நீர்வரத்துப் பகுதியில் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்வரத்துப் பகுதி 44 விழுக்காடுதான். அடையாறு ஆற்றுக்கு செம்பரம்பாக்கம் ஏரி நீர்வரத்து அல்லாமல், வேறு ஆதாரங்களிலிருந்தும் தண்ணீர் வந்தடைகிறது. செம்பரம்பாக்கம் ஏரிக்கு மேலேயே அடையாற்றில் காஞ்சிபுரம் மாவட்டம், முடிச்சூர், தாம்பரம் மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் பெய்த கன மழையாலும், வண்டலூர், ஊரப்பாக்கம், இரும்புலியூர், கூடுவாஞ்சேரி, நந்திவரம், சேரமங்கலம், மாம்பாக்கம், திருமுடிவாக்கம், குன்றத்தூர் ஏரி, மண்ணிவாக்கம் ஏரி மற்றும் மணப்பாக்கம் வாய்க்கால் போன்ற பகுதிகளிலே உள்ள 166 ஏரிகளிலிருந்து வெளியேறிய உபரி வெள்ள நீராலும், அடையாறு நீர்பிடிப்புப் பகுதிகளில் 47 செ.மீ. அளவிற்குப் பெய்த மிக கன மழை காரணமாகவும்—அதாவது, மிக கன மழை என்பது 24 செ.மீ.-தான். ஆனால், அன்றைக்கு 47 செ.மீ. அளவுக்கு கன மழை எங்கு பெய்தது என்றால், அடையாறு நீர்பிடிப்புப் பகுதியில் மட்டும் பெய்தது. செம்பரம்பாக்கம் உபரி நீருடன் சேர்ந்து அதன் கீழே அடையாற்றில் பெருமளவு தண்ணீர் வெளியேறியது. மேலும், நந்திவரம், ஊரப்பாக்கம், மண்ணிவாக்கம் மற்றும் ஆதனூர் ஏரிகள் அவற்றின் உச்ச மட்ட அளவை எட்டி உடைப்பு ஏற்பட்டது. அதாவது, அதற்கு உச்ச மட்ட அளவு என்று ஒன்று இருக்கிறது. அதற்கு மேலாக வரத்து வாய்க்காலுக்கு வந்து கலுங்கிலிருந்து உபரி நீர் வெளியேற்றத்திற்கு மேலாக தண்ணீர் அங்கு வந்ததனால் உடைப்பு ஏற்பட்டது. 1–12–2015 அன்று சென்னை மாநகரத்திற்குட்பட்ட பகுதிகளிலும் 30 செ.மீ. அளவிற்கு மழை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

பெய்தது. எனவேதான், சென்னை நகரில் அடையாறை ஒட்டிய பகுதிகளில் பெரு வெள்ளம் ஏற்பட்டது. இந்த வெள்ளம் குறித்து தமிழக அரசுமீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து தற்போது நான் சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன்.

செம்பரம்பாக்கம் ஏரி தண்ணீர் திறப்பு பற்றியும், அடையாறு ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் பற்றியும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுமீது 9–12–2015 வரை யாரும் எந்தக் குற்றச்சாட்டும் தெரிவிக்கவில்லை. ஏனெனில், கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பெய்த பெரு மழையின் காரணமாக அடையாறில் வெள்ளம் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்தது என்பதால்தான் எந்தக் குற்றச்சாட்டையும் யாரும் வைக்கவில்லை. 5–12–2015 அன்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி வேறு பல குறைபாடுகளை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட பிரதமர் நரேந்திர மோடி அவர்களே தன்னிச்சையாக அரக்கோணம் வரை விமானத்தில் வந்து அங்கிருந்து ஹெலிகாப்டரில் ஏறி சுற்றிப் பார்த்திருக்கிறார். அப்படி வந்தவர் சென்னைக்கும் வந்தபோது முதலமைச்சரோ, அமைச்சர்களோ அவரை ஹெலிகாப்டர் நின்ற இடத்திலே சென்றுகூட வரவேற்கவில்லை. தலைமைச் செயலாளர்தான் வரவேற்றிருக்கிறார். அதன் பின்னர், பிரதமர், முதல்வரையும், ஆளுநரையும் சந்திப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட அறைக்கு வந்தபோது, ஆளுநரும், முதல்வரும் அந்த அறை வாயிலிலேயே நின்று பிரதமரை வரவேற்றிருக்கிறார்கள்" என்ற ஒரு குறைபாட்டைக் கூறியுள்ளார். மேலும், "அரசு உதவி செய்யவே இல்லையா என்ற கேள்விக்கு விடை கூற வேண்டுமேயானால், முகம் தெரியாத அரசு ஊழியர்கள் உயிரைக் கொடுத்து உழைக்கிறார்கள். ஆனால், அரசியல்வாதிகளை முகமாகக் கொண்ட அரசாங்கம் என்று ஒன்று இங்கு இல்லவே இல்லை" என ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டதைத் தெரிவித்துள்ளார். அரசும், அரசு அதிகாரிகளும் வெவ்வேறானவர்களா? அரசாங்கம் அரசு அதிகாரிகளைக் கொண்டதா அல்லது கட்சியினரைக் கொண்டதா? தி.மு.க.–விற்கு இந்தக் குழப்பம் எப்போதுமே உண்டு. எனவேதான், முல்லைப் பெரியாறு பிரச்சினையில்கூட உச்ச நீதிமன்ற ஆணைப்படி அமைக்கப்பட்ட குழுவில் தமிழ்நாடு அரசு பங்கேற்க வேண்டாம்

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

என தி.மு.க.–வின் பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

9–12–2015 அன்று (குறுக்கீடு) முழுமையாகக் கேளுங்கள் ஐயா. கொஞ்சம் முன்னால் வந்து கேளுங்கள். (குறுக்கீடு) விரிவாகச் சொல்ல வேண்டும். இந்தக் கதை எப்படி உங்களால் புனையப்பட்டது என்பதை விரிவாகச் சொன்னால்தான் தெரியவரும். (குறுக்கீடு) 9–12–2015 அன்று ஓர் ஆங்கில நாளேட்டில் பரபரப்புச் செய்திக்காக, அதாவது, 1–12–2015 அன்று ஏற்பட்ட வெள்ளம் கன மழையால் ஏற்பட்ட வெள்ளம்தான் என்று மக்கள் அதை உணர்ந்து, இது கன மழையினால் ஏற்பட்ட வெள்ளம்தான் என்பதை மக்கள் உணர்ந்த நேரத்தில், 9–12–2015 அன்று ஓர் ஆங்கில நாளேட்டில் பரபரப்புச் செய்தியாக செம்பரம்பாக்கம் ஏரியில் தண்ணீர் திறந்துவிட்டது பற்றி ஓர் அவதூறான செய்தி வெளியிடப்பட்டது. எனவேதான், அந்த நாளிதழ்மீது அவதூறு வழக்கு போடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1–15

அந்த நாளேட்டில் அவ்வாறு செய்தி வந்தவுடன், அரசியல் ஆதாயத்திற்காக தி.மு.க.–வினரும், இதர எதிர்க்கட்சிகளும் இது பற்றி அப்பொழுதுதான் பேச ஆரம்பிக்கின்றனர். எப்பொழுது? 1 ஆம் தேதி வெளிவந்ததை, 10 ஆம் தேதிக்குப் பின்னர் பேச ஆரம்பிக்கிறார்கள். தி.மு.க.–வைப் பொறுத்தவரை, வெள்ளம் பற்றியெல்லாம் எந்தக் கவலையும் இல்லை. அவர்களது கவலையெல்லாம் வரவிருக்கின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தல்தான். (மேசையைத் தட்டும் ஒலி), எனவேதான் 7–12–2015 அன்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோது தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி "வெள்ள நிவாரண உதவி என்ற பெயரில் அரசின் இந்த உதவித் தொகையையும் தேர்தலுக்காகப் பயன்படுத்துவார்கள்" என்று கூறியுள்ளார். ஆங்கில நாளேட்டில் வந்த செய்தியை வைத்து அரசுமீது தொடர்ந்து தி.மு.க.–வினர் மற்றும் சில எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு கூறி வருகின்றனர்.

அவர்கள் தெரிவிக்கும் முதல் குற்றச்சாட்டு செம்பரம்பாக்கம் ஏரியைத் திறப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவை எதிர்நோக்கி அதிகாரிகள் காத்திருந்ததாகவும், அவ்வாறு உத்தரவு எதுவும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

கிடைக்கப்பெறாததால் 1–12–2015 அன்றிரவு செம்பரம்பாக்கம் ஏரி உடைப்பைத் தடுப்பதற்காக திடீரென பெருமளவில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதாகவும் ஒரு கற்பனையான குற்றச்சாட்டைக் கூறுகின்றனர். மழைக் காலங்களில் ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் முழுக் கொள்ளளவைவிட 2 அடிக்குக் குறைவாக நீர் இருப்பு வைத்திருந்து மழை நீர் வெளியேற்றப்பட வேண்டும் என்பது வெள்ள நீர் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வகுக்கப்பட்ட விதிகள் ஆகும். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) கருத்துகள் இருக்கின்றன. சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்களோ, அவையெல்லாம் பின்னால் வருகிறது. (குறுக்கீடு) அவையெல்லாம் பின்னால் வருகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்களோ அவையெல்லாம் பின்னால் வருகிறது. ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் முழுக்கொள்ளளவைவிட 2 அடிக்குக் குறைவாக நீர் இருப்பு வைத்திருந்து மழை நீர் வெளியேற்றப்பட வேண்டுமென்பது வெள்ள நீர் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வகுக்கப்பட்ட விதிகளாகும். இதனைச் சம்பந்தப்பட்ட ஏரியின் பொறுப்பு பொறியாளரே செயல்படுத்துவார். அவ்வாறு இருக்கும்போது, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் விடுவதற்கு பொதுப் பணித் துறை அதிகாரிகளால் பொதுப் பணித் துறை செயலாளர்மூலம் தலைமைச் செயலாளரிடம் உத்தரவு கேட்கப்பட்டதாகவும், அவரால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடமிருந்து இதற்கான உத்தரவைப் பெற இயலவில்லை என்றும், அதனால், 1–12–2015 அன்று இரவு செம்பரம்பாக்கம் ஏரி உடைப்பினைத் தவிர்க்கும் வகையில் பெருமளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டு அவதூறு என்றும், தீய எண்ணத்தில் கூறப்படுவது என்றும் விளக்கி, தலைமைச் செயலாளர் அவர்கள் 13–12–2015 அன்று ஓர் அறிக்கையை வெளியிட்டவுடன், அதற்குப் பதில் கூறுவதாகக் கருதி, 15–12–2015 அன்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் "இதுவரை தமிழகத்திலே உள்ள சிறியது முதல் பெரியது வரை எந்த ஏரியாக அல்லது நீர் நிலையாக இருந்தாலும், அதனைத் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா உத்தரவிட்டதாகத்தானே செய்திகள் வெளியிடுவது அரசின் வழக்கமாக இருந்து வருகிறது? குறிப்பாக, கடந்த 30 ஆம் தேதிய நாளேடுகளில் கூட 'பெரியாறு, அமராவதி அணைகள் இன்று திறப்பு—மாண்புமிகு அம்மா அவர்களின்

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உத்தரவு' என்றுதான் உள்ளது. இந்த அணைகளையெல்லாம் திறக்க உத்தரவிடும் முதலமைச்சர், செம்பரம்பாக்கம் ஏரியை மட்டும் போதிய அளவுக்கு உரிய நேரத்தில் திறக்க உத்தரவிடாதது ஏன்?" என்று வினவினார். அதாவது செம்பரம்பாக்கம் ஏரி நீர்ப்பாசன ஏரியல்ல. குடிநீர் ஏரி என்பதையும், அதைத் திறப்பதற்கு எந்த உத்தரவும் யாரும் இடுவதில்லை என்பதையும், மழைக் காலங்களில் அனைத்து ஏரிகளிலும் எந்த அளவிற்கு நீர்மட்டம் வைக்கப்பட வேண்டும் என்பதற்கு—இதுதான் நீங்கள் கேட்கப்போவது—வெள்ள நீர் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான விதிகள் உள்ளன என்பதையும், நீர்ப்பாசன (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்துவிட்டும். மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்துவிடட்டும், அனுமதிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: முடித்துவிடுகிறேன். குற்றச்சாட்டு இல்லை. உட்காருங்கள். நீங்கள் என்னென்ன சொன்னீர்களோ, என்னென்ன பேட்டி கொடுத்தீர்களோ, அதைத்தான் சொல்கிறேனே, தவிர, குற்றச்சாட்டு இல்லை. நீர்ப்பாசனத்திற்கு நீர் திறக்கும் உத்தரவை முதலமைச்சர் என்ற முறையில் அப்போது திரு. கருணாநிதி உத்தரவிட்டுள்ளார் என்பதையும் மறைத்துவிட்டு இதுபோன்ற கேள்வியை திரு. கருணாநிதி எழுப்பினார்.

இதுபற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயத்திற்கு அணைகள் திறக்க அரசு அளவில் முதலமைச்சர் உத்தரவு பெறப்படுவது எப்போதும் உள்ள நடைமுறை என்று தெரிவித்து, விவசாயிகளின் நலன் மட்டுமே கருத்தில் கொள்ளாமல், அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களால் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்பட்டது பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியுள்ளார்கள்.

1–10–2010 அன்று, அதாவது உங்களுடைய ஆட்சி—முந்தைய னைமாரிட்டி திமுக. அரசால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் மத்திய அமைச்சர் திரு. மு.க. அழகிரி கேட்டுக்கொண்டதால், தண்ணீர் திறந்துவிட திரு. கருணாநிதி உத்தரவிட்டார் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, திரு. கருணாநிதியின் மகன் கோரிக்கைக்கேற்ப வைகை அணையைத் திறக்க திரு. கருணாநிதி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

உத்தரவிட்டார் என்றே அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் திரு. கருணாநிதி கோப்பில் கையெழுத்திடாததால்தான் தண்ணீர் திறக்க இயலவில்லை என்பதும் மாவட்ட ஆட்சித் தலைவரால் வெளிப்படையாக அப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–20

23–10–2009 அன்று மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாளில், வைகை அணை திறப்பு பற்றி விவசாயிகள் கேள்வி எழுப்பியபோது, அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் திரு. கருணாநிதி கையெழுத்திட வேண்டிய கோப்பு அவரிடம் உள்ளது என்றும், அன்றைக்குக்கூட தான் முதலமைச்சரின் செயலாளரிடம் பேசி நினைவூட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பு இருக்கின்றது. இதுகுறித்து அப்போது பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

எனவே, விவசாயத்திற்குத் தண்ணீர் திறப்பதற்கான உத்தரவு எப்பொழுதும் முதலமைச்சர்தான் வழங்குவார் என்று தெரிந்தும், வேண்டுமென்றே தற்போதுதான் அதுபோன்ற நடைமுறை உள்ளது என தி.மு.க.–வினர் உண்மைக்கு மாறாக பிரச்சாரம் செய்து வருகின்றனர் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெரிவித்தார்கள். அதற்குப் பதிலளிப்பதாக நினைத்துக்கொண்டு திரு. கருணாநிதி தனது 2–1–2016 தேதியிட்ட அறிக்கையில் "எப்படியோ தேடித் தேடி கண்டுபிடித்து 2010 ஆம் ஆண்டு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட நான் உத்தரவிட்டதை மாண்புமிகு அம்மா அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார். எப்போதும் உள்ள நடைமுறை பற்றி தெரிவிக்க எதையும் தேடித் தேடி கண்டுபிடிக்க வேண்டியதில்லை. பாசன அணை திறப்பிற்காக அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதி உத்தரவிட்ட இன்னும் வேறு சில நிகழ்வுகளை அவர் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதில் சிலவற்றை இப்பொழுது தெரிவிக்கிறேன். 9–4–2009 அன்று மணிமுத்தாறு நீர்த்தேக்கம்; 24–7–2009 அன்று பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்கள்; 10–8–2009 அன்று பவானிசாகர் அணை; 16–10–2009 அன்று கோதையாறு அணை; 13–11–2009 அன்று மணிமுத்தாறு நீர்த்தேக்கம்; 10–12–2009 அன்று கிருஷ்ணகிரி அணை; 13–10–2010 அன்று

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சித்தாறு–I, 2 அணைகள்; 28–5–2010 அன்று தாமிரபரணி ஆற்றின் கோடை மேல் அழகியான் மற்றும் நதி உண்ணி கால்வாய்கள்; 11–6–2010 அன்று பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்கள்; 8–12–2010 அன்று மணிமுத்தாறு அணை; 19–10–2010 அன்று கோதையாறு அணை; 9–12–2010 அன்று கிருஷ்ணகிரி அணை; 28–3–2011 அன்று பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணைகள் என பல்வேறு உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

திரு. கருணாநிதி தனது 18–12–2015 கேள்வி பதில் அறிக்கையில், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமையிடப் பொறியாளர் ஆகியோரை செம்பரம்பாக்கம் ஏரி திறப்பு தொடர்பாக suspend செய்து உத்தரவிட்டதாக உண்மைக்கு மாறான இன்னொரு தகவலைத் தெரிவித்துள்ளார். 1–12–2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செம்பரம்பாக்கம் உள்ளிட்ட நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது என்பதையும், பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டிலுள்ள 45 நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் திறந்து விடப்படுகிறது என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும், 1–12–2015 அன்று இரவுதான் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திடீரென அதிக அளவு தண்ணீர் திறந்து விடப்பட்டது என்ற ஓர் உண்மைக்கு மாறான தகவலை எதிர்க்கட்சியினர் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், 11–12–2015 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களிடம் திரு. கருணாநிதி சமர்ப்பித்த மனுவில், 1–12–2015 அன்று அதிகாலை 5 மணிக்கு செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 33,500 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது என்று முன்னுக்குப் பின் முரணாக, கற்பனையாகத் தெரிவித்துள்ளார். இன்னும் ஒரு படி மேலே போய் 5–1–2016 அன்று தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் "பேரழிவே நடைபெற்றாலும், செம்பரம்பாக்கம் போன்ற ஏரிகள் உடைப்பெடுத்தாலும், அந்த உடைப்புக்குக் காரணம் வேறு யாருமல்ல, தாங்கள்தான் என்று சொல்லாமல் சொல்லி..." என்றெல்லாம் எந்தப் பொருளும் இல்லாமல் வீண் வார்த்தை பேசி செம்பரம்பாக்கம் ஏரி உடைந்துவிட்டது என்று கூறியிருக்கிறார். இது எந்தவிதத்தில் நியாயம்? செம்பரம்பாக்கம் ஏரியில் எந்த நேரத்திலும், எந்தப் பக்கத்திலும் ஒரு சிறிய கசிவுகூட இல்லை. செம்பரம்பாக்கம் ஏரியினுடைய உபரி நீர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

வெளியேறுகின்ற பகுதியில்கூட எந்தப் பிரச்சினையும் இல்லை. அப்படி இருக்கும்போது, செம்பரம்பாக்கம் ஏரி உடைந்துவிட்டது என்று கூறியிருக்கிறார். இது எந்தவிதத்தில் நியாயமானது? மக்களிடத்தில் ஒரு பீதியைக் கிளப்பி, தவறான தகவலை மக்களிடத்தில் பரப்புவதற்காகத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக பல்வேறு தவறான உதாரணங்களைக் கூறுகின்ற ஒரு நிலையை எதிர்க்கட்சியினர், குறிப்பாக, திரு. கருணாநிதி அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

செம்பரம்பாக்கம் ஏரியின் திறப்பு குறித்து எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை என ஓர் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசின்மீது வைக்கப்படுகிறது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 1–12–2015 அன்று காலை வினாடிக்கு 7,500 கன அடி நீர் வெளியேற்றப்பட்டபோது, முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கையை சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்கள் விடுத்தார்கள்.

பிற்பகல் 1–25

அன்று மதியம் 20,000 கன அடி வீதம் நீர் வெளியேற்றப்பட்டபோதும், அடுத்த கட்ட வெள்ள அபாய எச்சரிக்கையையும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் விடுத்தார். தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் பண்பலை வானொலி ஆகிய ஊடகங்கள் 20,000 கன அடி நீர் வெளியேற்றம் குறித்து அன்று மதியம் முதல் செய்திகள் மற்றும் அறிவிப்புகள் வெளியிட்டன. புதிய தலைமுறை, தந்தி டி.வி., சன் செய்திகள், பாலிமர் டி.வி. எனப் பல்வேறு தொலைக்காட்சி சேனல்களில் இந்தச் செய்திகள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தன. அன்று இரவு சன் நியூஸ் தொலைக்காட்சி 7 மணி செய்திகளின்போது, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 25,000 கன அடி நீர் வெளியேற்றப்படுவதாகத் தெரிவித்தது. மாலை நாளேடுகளே, அதாவது, மாலைச் சுடர், மாலை முரசு, மக்கள் குரல், தமிழ் முரசு ஆகிய பத்திரிகைகள் 1–12–2015 மாலை பத்திரிகையில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 20,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது என்ற செய்தியை வெளியிட்டிருந்தன.

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, வருவாய்த் துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் இணைந்து அடையாற்றை ஒட்டியுள்ள தாழ்வான பகுதிகளில்

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஒலிபெருக்கிமூலம் நீர் வெளியேற்றம் குறித்து எச்சரிக்கை செய்தனர். மேலும், சைதாப்பேட்டை, ஜாபர்கான்பேட்டை, கோட்டூர்புரம், ராமாபுரம் என தாழ்நிலைப் பகுதிகளிலிருந்தும் மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றினர். சென்னையில் 30,000 பேருக்கு மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 17,300 பேருக்கு மேலும் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எனவே, பொது மக்களுக்குப் போதுமான எச்சரிக்கை வழங்கப்படவில்லை என்பதும், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்படவில்லை என்பதும் தவறான கருத்து என நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன்.

1–12–2015 அன்றைய பெருமழைக்கு முன்னரே செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து அதிகளவு தண்ணீர் வெளியேற்றி, நீர் இருப்பை 75 சதவீதமாக வைத்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாததால்தான் வெள்ளம் ஏற்பட்டது என்றும் ஒரு தவறான குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது.

1–12–2015 அன்று காலை செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் 22.08 அடி என இருந்தது. அதாவது, சுமார் 86 விழுக்காடு நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. இது வெள்ள நீர் ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளின்படியே செயல்படுத்தப்பட்டது. 75 சதவீதம் நீர் இருப்பு வைக்கப்பட்டிருந்தால், அதிக நீர் வெளியேற்ற வேண்டிய தேவை இருக்காது என்பது சரியான வாதமல்ல. ஏனெனில், 1–12–2015 அன்று நண்பகல் அளவில் செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 14,000 கன அடி என உயர்ந்து, பின்பு மாலையில் 29,000 கன அடி, இரவில் 31,000 கன அடி என அதிகரித்தது. எனவே, 75 சதவீத அளவுக்கு நீரைக் குறைத்து வைத்திருந்தாலும், நீர் திறப்பை இரண்டு மணி நேரத்திற்குதான் ஒத்திவைத்திருக்க முடியும். ஏனெனில், 2–12–2015 அன்று இரவு வரை 26,000 கன அடி நீர் செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்து கொண்டிருந்தது. அதன் பின்னர்தான் படிப்படியாக நீர்வரத்து குறைந்தது. இதைத் தெளிவுபடுத்துவதற்குத்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 8 ஆம் வகுப்பு கணிதப் பாடத்தில் உள்ள 'காலம் மற்றும் வேலை' பற்றிய கணக்குகள்பற்றி படித்து தெரிந்து கொண்டால், இதை எளிதில் புரிந்துகொள்ளலாம் என்று தெரிவித்தார்கள். இந்தக் கணக்குகள்பற்றி விரிவாகவே, ஒரு காலை நாளிதழில் அதன் பின்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்னமும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

இதுபற்றி புரியவில்லை என்றால், அவர்களுக்கு இதைத் தனியே மேலும் விளக்கவும் நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பத்திரிகையில் என்ன வேண்டுமானாலும் செய்திகள் வெளியிடுவீர்கள்; ஆர்ப்பாட்டங்களில் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்கள். அதற்கெல்லாம் பதில் சொல்கிறேன்; பொறுமையாக இருந்து கேளுங்கள். (குறுக்கீடு)

மழை வெள்ளம் ஏற்படும்போது தாங்கள் உடனடி நடவடிக்கை எடுப்பதாக தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலினும் இல்லாத ஒன்றை அடிக்கடி கூறி வருகின்றனர். 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு சில மாவட்டங்களில் பெருமழை பெய்து ஏற்பட்ட சேதங்களின்போது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற முறையில் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

10–3–2008 முதல் காலமில்லா காலத்தில் பெய்த தொடர் மழைக் காரணமாக 3,097 வருவாய்க் கிராமங்கள் பாதிக்கப்பட்டன. 77 வருவாய்க் கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டன. 24 பேருக்குமேல் மழையால் உயிரிழந்தனர். 800–க்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன. 47,000 ஹெக்டேர் நெற்பயிர்கள், 62,000 ஹெக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள், 2,79,000 ஹெக்டேர் பரப்பில் பருப்பு வகைப் பயிர்கள், 41,000 ஹெக்டேர் பரப்பில் இதர பயிர்கள் என 4,30,350 ஹெக்டேர் பரப்பில் பயிர் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. 9,863 கி.மீ. சாலைகள், 945 சிறு பாலங்கள் மற்றும் பாலங்கள், 747 குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் சேதமடைந்துள்ளன.

பிற்பகல் 1–30

10–3–2008 முதல் பாதிப்புகள் ஏற்பட்டாலும், 21–3–2008 அன்றுதான் இதுகுறித்து அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதி, அரசு அதிகாரிகளுடன் விவாதித்து நடவடிக்கையை எடுத்துள்ளார். இந்த இடத்தில் நாம் ஒன்றைப் பார்க்க வேண்டும். அதாவது, 2008 ஆம் ஆண்டில் நடந்த சம்பவத்தின்போது, 13 நாட்கள் கழித்து அதிகாரிகளை அழைத்துப் பேசியிருக்கிறார். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் . . . (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இது record. (குறுக்கீடு) Record, record.

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

(குறுக்கீடு) Record, record. *(குறுக்கீடு)* ஆமாம், உண்மைதான். *(குறுக்கீடு)* Record இதோ இருக்கிறது. *(குறுக்கீடு)* நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். *(குறுக்கீடு)* நான் சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் சொன்னதுதான். நீங்கள் சொன்னதற்கு நாங்கள் பதில் சொல்கிறோம். *(குறுக்கீடு)* நீங்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: நீங்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடு)* நீங்கள் சொன்ன அவதூறான குற்றச்சாட்டுக்கு நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். நன்றாக, பொறுமையாகக் கேளுங்கள். 10–3–2008 அன்று ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு 21–3–2008 அன்றுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. *(குறுக்கீடு)* அதாவது உங்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் உள்ள வேறுபாட்டைச் சொல்கிறேன். அதாவது 10–3–2008 அன்று ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு, வெள்ளச் சேதங்களுக்கு, பயிர்ப் பாதுகாப்பிற்கு 21–3–2008 அன்றுதான் நீங்கள் கூட்டமே போடுகிறீர்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், 1–12–2015 அன்று மழை பெய்து கொண்டிருக்கிறது; (மேசையைத் தட்டும் ஒலி) வண்டி, வாகனங்கள் எதுவும் போக முடியவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) ஆளே வெளிவர முடியவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நேரத்திலும் மாண்புமிகு அம்மா அவர்கள் வீட்டிலிருந்து கிளம்பி, கோட்டைக்கு வந்து அரசு உயர் அதிகாரிகள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை மற்றும் அனைத்துத் துறை அதிகாரிகளையும் அழைத்து பேசி, உரிய நிவாரணங்கள், உரிய நிவாரணப் பணிகள் என்னென்ன செய்யப்பட வேண்டும் என்று உத்தரவு வழங்கினார்கள். இதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மக்கள் படுகின்ற துயரங்களை உடனடியாகப் போக்குகின்ற அரசாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் இருக்கிறது என்பதுதான் மக்களுடைய தீர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள், 1 ஆம் தேதி 12 ஆம் மாதம் ஏற்பட்ட பிரச்சினைக்கு 10 ஆம் தேதியிலிருந்து பிரச்சினையைக் கிளப்பி, அதை ஒரு பூதாகரமாகக் கொண்டுவந்து . . . *(குறுக்கீடு)*

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: அதாவது பெருமழையின் காரணமாக, கன மழையின் காரணமாக. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். ஏதாவது இருந்தால் அப்புறம் பேசலாம். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: அவ்வளவுதான் முடிக்கப் போகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: அதாவது, கன மழையின் காரணமாக, 100 ஆண்டுகளுக்குப் பின்னால் பெய்த கன மழையின் காரணமாகத்தான் இந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறந்துவிடப்பட்ட அதிக மிகை நீர் அல்ல. 29,000 கன அடிதான் அதிகமாக திறந்துவிடப்பட்ட நீர். மொத்த அடையாற்றின் கலுங்கிலிருந்து, உபரி நீரிலிருந்து மொத்தம் 33 ஆயிரம் கன அடிதான், அதனுடைய நீர் செலுத்தும் திறன் இருக்கிறது. 12 கி.மீ. தள்ளிதான், அடையாற்றில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் வந்து சேருகிறது. இதுவெல்லாம் தெரியும். தெரிந்திருந்தும், அதாவது, ஐந்தாண்டுக் கால மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின் சாதனைகளால், குறை சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பே இல்லை. அதனைத் தேடி, தேடிக் கண்டுபிடிக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இயற்கைப் பேரிடரால் ஏற்பட்ட பாதிப்புகளை கையிலெடுத்து, எப்படியாவது ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இதில் என்ன point of order இருக்கிறது? (குறுக்கீடு)

2016 ஜனவரி 21]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதில் என்ன point of order கேட்கிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது, இதுகுறித்து பேசுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: திரு. பாலகிருஷ்ணன் அண்ணன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 50 வருடங்களாக சிதம்பரத்தில் உள்ளே போகும் கால்வாய்களில் எவ்வளவு silt form ஆகியிருந்தது? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கும்போது என்ன point of order கேட்கிறீர்கள்? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதை ஒரே வார்த்தில் எடுத்தது, அவருக்கும் நன்றாகத் தெரியும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இதில் point of order ஒன்றும் இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் விளக்கம் சொல்லி முடிக்கட்டும், பிறகு பேசலாம். (குறுக்கீடு)

***திரு. க. பாலகிருஷ்ணன்:** பிறகு பேச வாய்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: குறுக்கீடு செய்து பேசுவதற்கு இதில் point of order ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி முடிக்கட்டும், பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போது பேச்சைக் குறையுங்கள், அப்புறம் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதாவது, பெருமழையின் காரணமாக ஏற்பட்ட சேதம் குறித்து, 21–3–2008 அன்று தலைமைச்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

செயலாளர் மற்றும் மூத்த அதிகாரிகளோடு பேசி உடனடி நிவாரணப் பணிகளை, அதாவது, 10–3–2008 அன்று ஏற்பட்ட பாதிப்புக்கு 21–3–2008 அன்று பேசி உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பணித்ததாக அந்தக் கூட்டத்தில் திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து, 22–3–2008 அன்று ஒரு அவசரக் கூட்டம் கூட்டப்பட்டு, அனைத்து அதிகாரிகளுடன் இதுகுறித்து விவாதிக்கப்பட்டதாக திரு. கருணாநிதி தெரிவித்துள்ளதுடன், அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றித் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர்கள் நேரில் சென்று பார்த்திடவும், நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும் அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

பிற்பகல் 1–35

அதாவது, 10–3–2008 அன்று முதல் தொடர்ந்து பெய்து வந்த பெருமழைக்கு 21–3–2008 அன்று நிதானமாக விவாதம் செய்து, 22–3–2008 அன்றுதான் அமைச்சர்களும், அதிகாரிகளும் நிவாரணப் பணிகளையே மேற்கொண்டுள்ளனர். இந்த மழை குறித்து 26–3–2008 அன்று சட்டமன்றத்தில் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. இப்படிப் பொறுமையாக, நிதானமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத்தான் போர்க்கால அடிப்படையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கை என முன்னாள் துணை முதல்வர் சட்டமன்றத்திலே தெரிவித்துள்ளார். 10–3–2008 முதல் பெய்து வந்த தொடர்மழை பற்றி 11 நாட்களுக்குப் பிறகு விவாதித்து, பாதிப்புகள் பற்றிய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறுவதுதான், போர்க்கால நடவடிக்கை என்றால், அதுபற்றி என்ன சொல்வது என்பதைத் தமிழக மக்களே முடிவு செய்யட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போதைய பெருமழை, வெள்ளம்பற்றி அரசின்மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் அதே வேளையில், திரு. கருணாநிதி அவர்கள் 1999 ஆம் ஆண்டு புழல் ஏரி உடையக்கூடிய நிலையிலிருந்தபோது, தான் எவ்வாறு துரித நடவடிக்கை எடுத்தார் என்று தனது வீரதீர பிரதாபத்தை 11–11–2015 அன்றைய அறிக்கையில் சொல்லியிருக்கிறார். அதைப் பற்றியே 5–1–2016 அன்று தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் பேசியுள்ளார். திரு. கருணாநிதி தனது அறிக்கையில் "நான் முதலமைச்சராக இருந்தபோது,

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

புழல் ஏரி உடையக்கூடிய நிலை உள்ளதாக உளவுத் துறை மூலமாக நள்ளிரவில் எனக்குத் தகவல் கிடைத்ததும், நள்ளிரவு 2–30 மணிக்கே தலைமைச் செயலகத்திற்குச் சென்று காவலர்களை அழைத்து, நானே அலுவலகத்தைத் திறக்கச்சொல்லி, மக்கள் தலைவர் மூப்பனார் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை அந்த நேரத்திற்கு வரவழைத்து, அதிகாரிகளோடு கலந்தாலோசித்துவிட்டு, அவர்களையும் அழைத்துக்கொண்டு, புழல் ஏரிக்கே நேரில் சென்றவன்" என்று தெரிவித்துள்ளார். 1999 மார்ச் மாதம் இதுபோன்ற பெருமழையின்போது முதலமைச்சர் திரு. கருணாநிதி புழல் ஏரிக்கே சென்று உடைப்பைத் தடுத்ததாக திரு. ஸ்டாலின் அவர்களும் அங்கே பேசியிருக்கிறார்.

1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எவ்வித மழையும் பெய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) புழல் ஏரி உடைப்புப் பற்றி 31–3–1999 அன்று சட்டப் பேரவையில் 'தகவல் கோரல்' என்ற அடிப்படையில் நடந்த விவாதத்தின்போது, திரு. கருணாநிதி, அன்று காலை 4–30 மணியளவில் புலனாய்வுத் துறை I.G யால் செங்குன்றம் ஏரிக்கரை உடையும் அபாயத்தில் இருப்பதாகவும், அதன் காரணமாக சென்னையும் அதன் சுற்றுப்புறமும் மிகப் பெரிய அளவு பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம் என்று சொன்னதாகவும், தலைமைச் செயலகத்திலே அவசரக் கூட்டம் நடத்தியதாகவும் தெரிவித்துள்ளார். அப்போது "செங்குன்றம் ஏரியில் நேற்று இரவு 10 மணியளவில் புழல்–அம்பத்தூர் சாலையில் வேலம்மாள் பாலிடெக்னிக் கட்டடத்திற்கும், செங்குன்றத்திலே உள்ள சென்னைக் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் இடையே 30 அடி அகலமும், 25 அடி ஆழமுமான உடைப்பு ஏரிக்கரையில் ஏற்பட்டிருக்கிறது. அதாவது பெருமழையெல்லாம் பெய்யவில்லை. உடைப்பினால் கசிவு ஏற்பட்டிருக்கிறது. உடைப்பினுடைய அளவைச் சொன்னேன். 30 அடி அகலம், 25 அடி ஆழம். இந்த உடைப்பு ஏற்பட்டபோது, ஏரியில் அதன் கொள்ளளவான 300 கோடி கன அடித் தண்ணீர் முழுவதுமாக ஏரியில் நிரம்பி இருந்தது அந்த நேரத்தில். இரவு உடனடியாக அதிகாரிகள் மட்டத்தில் நடவடிக்கை எடுத்து, பக்கத்திலே உள்ள காவாங்குளம், குளத்தூர், லட்சுமிபுரம், தணிகாசலம் நகர், கொடுங்கையூர் ஆகிய ஊர்களிலே உள்ள மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இரவு துவக்கத்தில், சிறு, சிறு கசிவு என்ற நிலையிலே இருந்ததால், பெரிய அளவில் இதில் பாதிப்பு ஏற்படாது என்பதால், அதிகாரிகள் எனக்கு அப்போது தெரிவிக்காமல் இருந்துள்ளார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

அதன்பின்னர்தான், நள்ளிரவுக்கு மேல் உடைப்பு ஏற்பட்டவுடன் தெரிவித்தார்கள். பொதுப் பணித் துறை அதிகாரிகள், சென்னைக் குடிநீர் வாரிய அதிகாரிகள் எல்லாம் அந்த உடைப்பை அடைப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்கள். பாதிப்பு பெரிய அளவிலே நேரிட்டிருந்தால், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்திற்குச் சொல்லப்பட்டு, அவர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டார்கள். தலைமைச் செயலகத்திலிருந்து காலை 7 மணியளவில் நானும், அமைச்சர்களும், தலைமைச் செயலாளரும் நேராக செங்குன்றம் சென்று உடைப்பு எடுத்த இடத்தைப் பார்வையிட்டோம்" என்று திரு. கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்கள்.

பிற்பகல் 1-40

மழைக்காலமே இல்லாத, மழையே பெய்யாத மார்ச் மாதத்தில் திடீரென எவ்வாறு உடைப்பு ஏற்பட்டிருக்க முடியும்? இந்த விவரத்தைத்தான் 4-4-1999 அன்று ஒரு காலை நாளிதழ் தெரிவித்தது. அப்போதே ஒரு காலை நாளிதழ் இதற்கு சந்தேகத்தைத் தெரிவித்திருக்கிறது. கரையின் உட்பகுதியில் கடந்த ஒரு மாதமாக சிறு ஓட்டை ஏற்பட்டு, வெளிப்பகுதியில் ஊற்றுப்போல தண்ணீர் கசிந்து கொண்டிருந்தது என்றும், கசிவை நிறுத்த சம்பத்தப்பட்ட துறை அலுவலர்கள் மணல் மூட்டைகள் போட்டுத் தடுத்தனர் என்றும், ஆனால் ஊற்றுப்போல் வெளியேறிய நீர் தினமும் அதிக அளவில் வெளியேறத் தொடங்கியது என்றும், ஏரியில் இருந்த தண்ணீரின் காரணமாக, பெரிய அளவில் ஓட்டை விழுந்து உடைப்பு ஏற்பட்டது என்றும் அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது. அதாவது, ஒரு மாதமாக சிறு நீர்க்கசிவு ஏற்பட்டபோது, எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால்தான் புழல் ஏரி உடைப்பு ஏற்பட்டது என்பது தெளிவாகிறது. இதையேதான் வேறுவிதமாக, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் திரு. கருணாநிதியின் விளக்கவுரைக்குப் பின் கேட்டுள்ளார். திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள், 'இந்தக் கோடைக் காலத்தில் இப்படி ஓர் உடைப்பு ஏற்பட்டதற்கான காரணத்தினைக் கண்டறிந்தீர்களா அல்லது வேறு ஏதாவது சதி போன்று இருக்குமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்' என்றார். அதற்குப் பதிலளித்த அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதி, 'எதிர்க்கட்சித் தலைவருடைய

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அந்த ஐயப்பாட்டுக்கு உடனடியாக, திடீரென்று நான் எந்த விளக்கத்தையும் அவசரப்பட்டு அளிக்க விரும்பவில்லை. அதுபற்றி விசாரணை நடத்தித்தான் பிறகு தெரிவிக்க முடியும்' என்று தெரிவித்தார். இதுபற்றி திரு. கருணாநிதி எந்த விசாரணையும் நடத்தவில்லை. இன்றுவரை இந்த உடைப்புப் பற்றிக் காரணம் எதையும் தெரிவிக்கவும் இல்லை. சிறு கசிவு ஏற்பட்டபோது ஒரு மாதமாக நடவடிக்கை எடுக்காமல், பெரும் உடைப்பிற்கு வழிவகுத்தது ஏன் என்பதை இப்போதாவது திரு. கருணாநிதியும், திரு. ஸ்டாலினும் தெரிவிக்கலாம்.

எனவே, இந்த விளக்கங்களுக்குப் பின்னரும், செம்பரம்பாக்கம் ஏரி திறப்புப் பற்றி அரசியல் காரணங்களுக்காக உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்த வேண்டாம் என எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் என்ன point of order இருக்கிறது?

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், என்ன விளக்கம் வேண்டுமென்று அவரைக் கேட்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் பதிலை எதிர்பார்க்கிறேன். செம்பரம்பாக்கம் ஏரி திறந்தது குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கட்சிகளும் அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கின்றன. அதிலே ஒரு மர்மம் இருக்கிறது என்ற காரணத்தால்தான், நீதி விசாரணை கேட்டிருக்கிறார்கள். ஆனால், அதை விளக்குவதற்காக, உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்தால்தான் உண்மை விளங்கும். காரணம், யார்,

[திரு. துரைமுருகன்] [2016 ஜனவரி 21

யார் அதிகாரிகளாக இருந்தார்களோ, அவர்கள்தான் எழுதிக்கொடுப்பார்கள்—அதைப் படிப்பவர்களை நாங்கள் சொல்லவில்லை. ஆனால், ஒன்றை நேரடியாகக் கேட்கிறேன், முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு செம்பரம்பாக்கம் ஏரியைத் திறக்க உத்தரவிட்டார்களா, இல்லையா? (குறுக்கீடு) ஏன் இல்லை? அதைத்தான் சொல்கிறார்கள். Chief Secretary . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரம் விளக்கம் கேட்டதற்குப் பின்பும், திரும்பவும் அதையே கேட்கிறீர்களே? (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குடிநீர் ஏரியைத் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட வேண்டிய அவசியமில்லை. பாசன அணையிலிருந்து தண்ணீரை வெளியேற்றுவதற்குத்தான் ஆணைகள் வெளியிடுவது வழக்கம் என்று தெளிவாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அது உங்களுக்குப் புரியவில்லை என்றால், மீண்டும் ஒரு முறை அந்த விளக்கத்தைப் படித்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: அவருக்குத் தெரியும், எந்தெந்த அணைகளை யார், யார் திறக்கலாம் என்று Protocol Compendium—ல் உத்தரவுப் போட்டிருக்கிறார்கள். இரண்டரை டி.எம்.சி. அடிக்கு மேல் தண்ணீர் கொள்ளளவு இருந்தால், அரசாங்கத்தினுடைய அனுமதியை பெற்ற பிறகுதான் திறக்கலாம். நம்முடைய Chief Secretary அதை ஒரு A.E.—கூட திறக்கலாம் என்று சொன்னார்கள். A.E.—அல்ல; லஸ்கரே திறக்கலாம். ஆனால், செம்பரம்பாக்கம் ஏரி 3 டி.எம்.சி. அடிக்கு மேல் கொள்ளளவு இருக்கிறது. ஆகையினால், முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஆனால், நீங்கள் அதை . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உறுப்பினர் திரு. மைதீன்கான், உங்களுக்கு உடல் நலம் சரியில்லை. பிறகு பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள், நீங்கள் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *நீங்கள் சொன்னதற்கு நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *அதனால்தான் சொல்கிறேன், செம்பரம்பாக்கம் ஏரியைத் திறப்பதில் முன்னேற்பாடு செய்யாதது, அரசாங்கத்தினுடைய முழுப் பொறுப்பு. இதுகுறித்து விசாரிப்பதற்காகத்தான் விசாரணைக் கமிஷன் கேட்டிருக்கிறோம். தைரியம் இருந்தால், விசாரணைக் கமிஷனை இந்த ஆட்சி அமைக்கட்டும். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.*

பிற்பகல் 1–45

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *இல்லை. (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) எந்த ஏரியோ, அணைக்கட்டோ, அதனுடைய முழு கொள்ளளவிலிருந்து நீர் ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, நீர் ஒழுங்குமுறை வரைமுறைகளின்படி, முறைப்படுத்துதலின்படி, 2 அடி கீழே இறக்கி வைக்க வேண்டும். அதனுடைய கொள்ளளவிலிருந்து 2 அடிதான் கீழே இறக்கி வைக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் டி.எம்.சி. அடி கணக்கைச் சொல்கிறீர்களே? அதற்கு நான் உங்களுக்குச் சொல்கிறேன். டி.எம்.சி. அடி கணக்கைச் சொல்கிறீர்களே; அப்படியெல்லாம் கிடையாது. அதாவது, வெள்ள நீர்க் கட்டுப்பாட்டிலிருந்து, 2 அடி கீழே இறக்கி வைக்க வேண்டும். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அதைப்பற்றிக் கேட்கவில்லையென்றால்.*

திரு. துரைமுருகன்: *திறப்பதிலே குளறுபடி செய்ததால்தான்...*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் அவ்வளவு விளக்கம் சொல்லியிருக்கிறார். நீங்கள் திரும்பத் திரும்ப அதையே பேசிக் கொண்டிருக்கிறீர்களே? (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2016 ஜனவரி 21

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இவர்கள் உள்ளேயும், வெளியேயும் கேட்கின்ற கேள்விக்கு பதிலளித்தேன் (குறுக்கீடுகள்) இருங்கள். நீங்கள் வெளியேயும், இங்கே உள்ளே வந்து பேசியதற்கு, நான் உரிய பதிலைத் தந்திருக்கின்றேன். அதாவது, செம்பரம்பாக்கம் ஏரியினுடைய catchment area–வினுடைய அளவு, செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கீழே, சென்னை வடிநிலத்தில், உபரி வடிநிலமாக இருக்கின்ற அடையாற்றினுடைய catchment–லே எவ்வளவு நீர் வந்தது என்பதையும் நான் சொல்லிவிட்டேன். எவ்வளவு மழை பெய்தது என்பதையும் சொல்லிவிட்டேன். அந்த மழையின் மூலமாக எவ்வளவு மழை நீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது– Accumulation ஆனது என்பதையும் சொல்லிவிட்டேன். இதற்கு மேலேயும் நீங்கள் ஏதோ பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; உட்காருங்கள். நான் அதையும் சொல்லிவிடுகிறேன்; (குறுக்கீடுகள்) அதையும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) தாமதப்படுத்தியது காரணம் என்று சொல்கிறீர்களே; அதற்கும் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அதையும் சொல்லிவிடுகிறேன்.

1–11–2015 அன்று காலை 6–00 மணிக்கு; நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். அப்பொழுது நீர்மட்டம் 5.08 அடி; கொள்ளளவு 229 மில்லியன் கன அடி; நீர்வரத்து 127 கன அடி; நீர் வெளியேற்றம் 46 கன அடி.

10–11–2015 அன்று காலை 6–00 மணிக்கு நீர்மட்டம் 10.32 அடி; கொள்ளளவு 791 மில்லியன் கன அடி; நீர்வரத்து 3,330 கன அடி; நீர் வெளியேற்றம் 54 கன அடி. ஏனென்றால், அது full *ஆகவில்லை. நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. சென்னை மாநகரத்தினுடைய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற செம்பரம்பாக்கம் ஏரியை நிரப்ப வேண்டும். அப்பொழுது பெரு மழை, கன மழை என்று எச்சரிக்கையெல்லாம் இல்லை. அதனால் அந்த நீர் அப்பொழுது தேக்கி வைக்கப்படுகிறது.*

16–11–2015 அன்று காலை 6–00 மணிக்கு நீர்மட்டம் 22.57 அடி; இதன் முழு நீர் மட்டம் 24 அடி. அதனால் 22.57 அடியோடு நிறுத்திக்கொண்டோம். அப்பொழுது கொள்ளளவு 3,266 மில்லியன் கன அடி; நீர்வரத்து 13,032 கன அடி; நீர் வெளியேற்றம் 5,000 கன அடி.

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

17–11–2015 அன்று காலை 6–00 மணிக்கு நீர்மட்டம் 22.30 அடியாக இருந்தது. அப்பொழுது நீர்வரத்து 12,000 கன அடி; நீர் வெளியேற்றம் 18,000 கன அடி.

30–11–2015 அன்று காலை 6–00 மணிக்கு நீர்மட்டம் 22.02 அடி உயரத்திற்கு இருந்தது. நீர்வரத்து 500 கன அடியாகக் குறைந்துவிட்டது. செம்பரம்பாக்கம் ஏரியினுடைய நீர்மட்டம் 22 அடியாக இருக்கும்போது, மறுபடியும் நீர்வரத்து 500 கன அடிதான். அப்பொழுது நீர் வெளியேற்றம் 600 கன அடி.

1–12–2015 அன்று காலையில் மறுபடியும் நீர்மட்டம் 22.08 அடியாக இருக்கும்பொழுது, நீர்வரத்து மறுபடியும், மறுபடியும் raise ஆகின்றது. எவ்வளவு? 960 கன அடியாக raise ஆகின்றது. எவ்வளவு வருகிறது? 960 கன அடி நீர் வருகிறது. நாங்கள் எவ்வளவு வெளியேற்றுகிறோம்? 900 கன அடி நீரை வெளியேற்றுகிறோம். ஏனென்றால், 22 அடிக்கு நீர்மட்டம் இருக்கின்றது. 24 அடிக்கு 22 அடி அளவிற்கு நீர்மட்டம் இருக்கின்றது. அதற்கு மேலே நீரைத் தேக்கக்கூடாது என்று, எவ்வளவு வருகின்றதோ—960 கன அடி நீர் வருகின்றது; 900 கன அடி நீரை வெளியேற்றுகிறோம். மதியம் 12–00 மணிக்கு 22.70 அடியாக இருக்கும்பொழுது, எவ்வளவு நீர்வரத்து என்றால், 14,000 கன அடி நீர் வருகிறது. 14,000 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது; அப்பொழுது எவ்வளவு வெளியேற்றுகிறோம்? 14,000 கன அடி நீரை வெளியேற்றுகிறோம். வருகின்ற தண்ணீரை அப்படியே வெளியேற்றுகிறோம். நன்றாகக் கேளுங்கள். 1–12–2015 மாலை 4–00 மணிக்கு நீர்மட்டம் 23.06 அடியாக உயர்ந்துவிடுகிறது. நீர்வரத்து அதிகமாக இருப்பதால் உயர்ந்திருக்கிறது. அப்பொழுது 24,932 கன அடி நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது; நீர்மட்டம் உயர்ந்துவிட்டது. எவ்வளவு வெளியேற்றுகிறோம்? 20,960 கன அடி நீரை வெளியேற்றுகிறோம். மாலை 6–00 மணிக்கு நீர்மட்டம் 23.20 அடி; அப்பொழுது நீர்வரத்து 29,000 கன அடி; highest. 29,000 கன அடி நீர் வருகின்றது; அதை அப்படியே வெளியேற்றுகிறோம்; 29,000 கன அடி நீரையும் அப்படியே வெளியேற்றுகிறோம். இரவு 8–00 மணி; நீர்மட்டம் 23.40 அடி; எவ்வளவு நீர்வரத்து வருகிறது? 31,000 கன அடி நீர் வருகிறது. அதே 29,000 கன அடி நீர்தான் வெளியேற்றப்படுகிறது. நள்ளிரவு 12–00 மணிக்கு, அதே 29,000 கன அடி நீர் வருகிறது; அதே 29,000 கன அடி நீரை வெளியேற்றுகிறோம்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

பிற்பகல் 1–50

அடுத்த நாள் 2–12–2015 அன்று 6–00 மணிக்கு 23.07 அடியாக நீர் இருப்பு இருக்கிறது. நீர்வரத்து சிறிது குறைந்து 26,000 கன அடியாகக் குறைகிறது. ஆனால் 29,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. 2–12–2015 அன்று நள்ளிரவு நீர் வரத்து 11,000 கன அடியாகக் குறைந்துவிடுகிறது. ஆனால், 13,000 கன அடி நீர் வெளியேற்றுகிறோம். 3–12–2015 அன்று நீர்வரத்து 5,000 கன அடியாகக் குறைகிறது. ஆனாலும், 5,000 கன அடி நீர் வெளியேற்றுகிறோம். எவ்வளவு நீர்வரத்து இருந்தது, எவ்வளவு நீர் வெளியேற்றினோம் என்ற விவரம் இதுதான். நீங்களாகவே 1 இலட்சம் கன அடி நீர் திறந்துவிட்டார்கள் என்று சொன்னால், ஒரு இலட்சம் கன அடி நீர் எங்கே போகும்? எப்படிப் போகும்? (குறுக்கீடுகள்) அதாவது, செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்தக் கொள்ளளவே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவரும் பொறுமையாக இருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றார். நீங்கள் எல்லோரும் எழுந்திருந்து பேசினால் எப்படி?*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வருகின்ற உபரி நீரும், ஆதனூரிலிருந்து அடையாற்றுக்கு வருகின்ற நீரும் சேர்ந்து மறுபடியும் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது. அடையாறிலிருந்து கடல் முகத்துவாரம் வரையான மொத்தக் கொள்ளளவுத் திறன் 72,000 கன அடிதான். அதற்கும் மேலாக, 100 ஆண்டுகளுக்குப் பின்னால் பொழிந்த பெரு கனமழையின் காரணமாக பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, செம்பரம்பாக்கம் ஏரி தண்ணீரல்லாமல், கிட்டத்தட்ட 198 ஏரிகளிலிருந்து வரும் நீர் அடையாற்றில் வந்து சேரக்கூடிய சூழல் இருக்கிறது. அதோடு, சென்னை மாநகரில் மழை பெய்து கொண்டே இருக்கிறது. மேலும், சென்னை மாநகரம் சம தளப் பகுதியாகும். அனைத்து வடிகால்களும் கடல் முகத்துவாரத்தின் வழியாக கடலில்தான் சென்று கலக்க முடியும். 24 மணி நேரத்தில்* high tide, low tide *எப்பொழுது வேண்டுமானாலும் வரும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். High tide வரும்பொழுது தண்ணீர் கீழே இறங்காது. அப்படியே* stagnant *ஆக இருக்கும். அதுவும், அந்தச் சமயத்தில் புயலால் கடுமையான காற்று அடித்துக்*

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் அலைகளில் சீற்றம் இருக்கிறது. அலைகளின் சீற்றம் இருக்கும்பொழுது, high tide இருந்தபொழுது தண்ணீர் எப்படி வடியும்? இதனால் கடலுக்குச் செல்ல வேண்டிய தண்ணீர் கடலுக்குள் செல்ல முடியாமல், பரவலாக உடைப்பு ஏற்படுகிறது. இதுதான் இயற்கைப் பேரிடர் என்பதாகும்.

இதை அரசியலாக்க வேண்டும்; தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ள வேண்டும்; மிகப் பெரிய பிரச்சாரமாக ஆக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் எடுத்த ஆயுதம்தான் இது. இந்த ஆயுதத்தை ஒட்டி ஏற்கெனவே புரட்சித் தலைவர் அவர்கள் "மண்வெட்டி கையில் எடுப்பார் சில பேர்; மற்றவருக்குக் குழி பறிப்பார்; அது தன் பக்கம் பார்த்திருக்கும் என்பதைத் தானறிய மறந்திருப்பார்" என்று ஒரு தத்துவப் பாட்டு பாடியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் எடுக்கின்ற இந்தத் தவறான ஆயுதம் உங்களையே திரும்பித் தாக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். தயைகூர்ந்து மக்கள் நலன் கருதி, தேவையில்லாமல் அச்சத்தையும், அச்சுறுத்தல்களையும் மக்களிடம் ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையான அனைத்து விளக்கங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துவிட்டார்கள். இதற்குமேல் கேட்க என்ன இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் பேசி முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். பொறுங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களையும், மற்ற கணக்குகளையும் சொன்னார்கள். எங்களை வாயடைப்பதற்காக வேண்டுமானால் இங்கே அந்தப் புள்ளிவிவரங்களை அவர் சொல்லியிருக்கலாம். ஆனால், மக்கள் மத்தியில் இவை எடுபடாது. (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஜாபர்கான்பேட்டையிலும், சைதாப்பேட்டையிலும் நீங்கள் உள்ளே நுழைய முடியாது. (குறுக்கீடுகள்) ஆகையால், எங்கெங்கு வெள்ளம் வந்ததோ, (குறுக்கீடு)

[திரு. துரைமுருகன்] [2016 ஜனவரி 21

நான் உங்களுக்குச் சவால் விடட்டுமா? சென்னை மாநகரில் தைரியமாகக் களத்தில் இறங்கி நீங்கள் ஓட்டுக் கேட்பீர்களா? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *உங்கள் சவால் வெற்றுச் சவால். (குறுக்கீடுகள்) இது சவால் அல்ல; சவடால்; இது தமிழக மக்களுக்கு நன்றாகவே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் உங்கள் சவடாலெல்லாம் தமிழக மக்களிடம் பலிக்காது. 1–12–2015 அன்று ஏற்பட்ட வெள்ளத்தைப்பற்றி 8–12–2015 வரை மக்கள் யாரும் எதுவும் பேசவில்லை. பெரு மழை, கன மழை காரணமாகத்தான் இந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது என்று மக்கள் நன்றாகவே புரிந்துகொண்டார்கள். நீங்கள்தான் அதை அப்படியே ஜோடித்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அது நடக்காது. அதை நீங்கள் உணர வேண்டும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதற்குமேல் யாருக்கும் வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நேரமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. க. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்?*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் (குறுக்கீடு)...*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு அம்மா அவர்கள் கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களை எங்களையெல்லாம் நேரில் பார்வையிட அனுப்பியிருந்ததால், நாங்கள் பார்வையிட்டுக்கொண்டிருந்தோம். அப்பொழுது, அண்ணன், திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் அங்கு வந்து, என்னிடம் கை குலுக்கிவிட்டு, 'நீங்களே இங்கு வந்து 10 நாட்களாக முகாமிட்டு நன்றாகப் பணியாற்றுகிறீர்கள், மிக்க நன்றி' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள், அதற்குப் பின்னால்தான் ருசிகரமான செய்தியே இருக்கிறது; கை கொடுத்துவிட்டுப் போனபின்பு, அரை மணி நேரத்தில் சிதம்பரத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டார். அங்கு போய்ச் சேர்ந்த பிறகு, அங்கு உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்துவிட்டார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)*

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்?

பிற்பகல் 1–55

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் செம்பரம்பாக்கம் ஏரி சம்பந்தமாக நீண்ட விளக்கங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். கூடுதலாக ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன். அணை வெள்ள நீர்க் கட்டுப்பாட்டு விதியின்படி, முழு கொள்ளளவைவிட இரண்டு அடி கீழேதான் தண்ணீரை அணையில் வைத்திருக்க வேண்டும். ஆனால், டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதி 11-00 மணி வரை 22.8 அடி தேக்கி வைக்கப்பட்டிருந்தது. விதிப்படி 22 அடிதான் தேக்கி வைத்திருக்க வேண்டும். 24 அடி கொள்ளளவில், 2 அடி குறைந்து 22 அடிதான் இருந்திருக்க வேண்டும். டிசம்பர் மாதம் 1 ஆம் தேதி 11-00 மணி வரையில் 22.8 அடிக்கு அங்கே தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. 2 அடி குறைத்துதான் தண்ணீர் வைத்திருக்க வேண்டும் என்கிற விதியை மீறி 0.8 அடி கூடுதலாக தண்ணீரைத் தேக்கி வைத்திருந்தது என்பது ஒரு விதிமுறை மீறல் இல்லையா என்பதைத்தான் நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கட்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் பாலகிருஷ்ணன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 1 ஆம் தேதி மிக அதிகமாக மழைப் பொழிவு இருக்கும் என்று தலைமை வானிலையாளர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அதாவது scattered heavy rain . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிடுகிறேன். திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் சொன்னதில் எந்த ஒரு செய்தியும் இல்லை. அவர் வேண்டுமென்றே சொல்கிறார். அவர் சொன்ன பாயிண்டிற்கு நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களை பதில் சொல்ல விடுங்கள். நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், இன்றைக்கு நீங்கள் பேசப் போகிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசப் போகிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அதில் நீங்கள் விளக்கம் கேட்டால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு, நீங்கள் மேலும் விளக்கம் கேட்டால் எப்படி? (குறுக்கீடு) நேரம் என்ன ஆகிறது என்று பாருங்கள். இன்று, இன்னும் எட்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 1 ஆம் தேதி Isolated Extremely Heavy rain இருக்கும் என்று சொன்னபிறகு, அந்தத் தண்ணீரை முன்கூட்டியே, ** முன்கூட்டியே 22 அடிக்கு மேலாக தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் ** என்று கூறிய வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கூறிய ** என்ற அந்த வார்த்தை முழுவதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அடி கணக்குகளை மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். அதாவது, 22, 22.08, 24 அடிக்கு மேல் நீங்கள் எப்படி தண்ணீரைத் தேக்கி வைக்கலாம் என உறுப்பினர் கேட்கிறார். வெள்ள நீர் வெளியேற்றும் திறன் 33,000 கன அடி, 33,000 கன அடிக்கு மேலாக வருவதை, எதிர்நோக்கி, பெரு மழை, கன மழை பெய்யும் என்று இந்திய வானிலை மையம் எச்சரிக்கை விட்டதனால், 22 அடி வரைக்கும் வைத்து விட்டு—தண்ணீர் கம்மியாகத்தான் வந்தது. 33,000 கன அடி மேல், நீர் வரத்து கம்மியாக வந்த காரணத்தினால், குடிநீர் ஆதாரமாக விளங்குகின்ற ஏரி என்பதால், தண்ணீரைத் தேக்கலாம். 23, 24, 24½ அடி வரைக்கும்கூட தண்ணீரைத் தேக்கலாம். அது நடைமுறையில் இருக்கின்றது. எத்தனையோ நீர்த்தேக்கங்களில், தி.மு.க. ஆட்சியில்கூட, சென்னை மாநகரில், மூன்று ஏரிகளையும் சேர்த்து, 11.5 டி.எம்.சி. அடி, 11 டி.எம்.சி. அடி வரையில் தண்ணீர்த் தேக்கி வைத்திருந்தார்கள். அதற்கு மேலேயும் தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். தேக்கி வைத்த நீரை பக்கத்தில் கொண்டு வைத்திருக்கிறார்கள். அது நடைமுறையாகும். அதாவது நீர்வரத்து அதிகமாக இருந்தால், அதனுடைய வெளியேற்றும் திறனைக் காட்டிலும், வெளியேற்றும் திறனைவிட நீர்வரத்து அதிகமாக வரும் என்று எதிர்பார்த்திருந்தால், கன மழை பொழியப் போகிறது, அதனால் தண்ணீர் திடீர் என்று அதிகரித்துவிட்டால், தண்ணீர் அணையைவிட மேலே வந்து விடும் என்பதால் உபரி நீரை வெளியேற்றலாம். உபரி நீரை வெளியேற்றும் திறன் 33,000 கன அடிதான். 29,000–லிருந்து 31,000 கன அடி வரை வந்தது. அதுவும் ஒரு சில மணி நேரங்களில் வந்து, பின்னர் குறைந்துவிட்டது. 65,000 கன அடி என்று நீங்கள் கூறுகிறீர்கள். எல்லாம் accumulate ஆகின்றன. அத்தனை நீரும் அடையாறில் போய் சேருகின்றது. அடையாறு ஆற்றிலிருந்து, தான் அதிகமாக தண்ணீர் போனது. 70,000–லிருந்து 73,000 கன அடி வரை தண்ணீர் அடையாறு ஆற்றிலிருந்து போனது. வெள்ளம் போனதால், சென்னை மாநகரில் தண்ணீர் வடியவில்லை. High Tide ஆக இருந்தபொழுது அலைகள் அதிகமாக இருந்ததால், வெள்ள நீர் வடியவில்லை. மழையின்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

காரணமாக, வெள்ள நீர் வடியாமல், stagnate ஆகி பரவலாக, தாழ்வான பகுதிகளில் போய், உள்ளே வந்த நீர் வெள்ள நீராக உட்புகும் சூழல் ஏற்பட்டதுதான் உண்மை. இதை யாரும் மறுக்க முடியாது. அதற்காக, நீங்கள் கை, கால், விரல், மூக்கு extra ஆக வைத்தால் தவறு. இரண்டு கை, இரண்டு கால்கள்தான் இருக்கலாம், பத்து கால்கள், பத்து கைகள் கொண்டு அதில் fit செய்தால் எப்படித் தாங்கும்?

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன். நான் நன்றிதானே சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிக்கையை இங்கே சுட்டிக்காட்டினார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதே தவறு. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிக்கையில் செம்பரம்பாக்கம், பூண்டி, புழல் மற்றும் சோழவரம் ஆகிய ஏரிகளிலிருந்து 65,000 கன அடி என்று இருக்கிறது. செம்பரம்பாக்கம் மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) செம்பரம்பாக்கம் மட்டுமல்ல; செம்பரம்பாக்கம் மட்டுமல்ல என்பதை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். தமிழில்தானே இருக்கிறது. பூண்டி, புழல், சோழவரம் ஆகிய ஏரிகளிலிருந்து 65,000 கன அடி உபரி நீர் திறந்து விடப்பட்டது. (குறுக்கீடு) ஆமாம், நீங்கள் செம்பரம்பாக்கம் என்று மட்டும்தானே சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் என்ன சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) 65,000 கன அடி உபரி நீர் திறந்துவிடப்பட்டது. ஆமாம், நீங்கள் செம்பரம்பாக்கம் மட்டும்தானே சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். சென்னை மண்டலத்திலிருக்கிற எல்லா ஏரிகளும், 86 சதவீத ஏரிகள்

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிரம்பி வழிந்தோடிக் கொண்டிருக்கின்றன. சென்னை மண்டலத்திலுள்ள எல்லா ஏரிகளும் நிரம்பிக் கொண்டிருக்கின்றன. வருகின்ற நீரை வெளியேற்றித்தானே ஆக வேண்டும்? நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்கின்றேன். நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அந்த வாட்டர் ரெகுலேஷனை சீராக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு, சீராக்கி செம்பரம்பாக்கம் ஏரி இன்றைக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது. செம்பரம்பாக்கம் ஏரி இன்றைக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னைவாழ் மக்கள் அனைவரையும் காப்பாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் வரலாற்று உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தினை அளித்திருக்கிறார்கள். ** இருந்தாலும் செம்பரம்பாக்கம் ஏரி திறந்ததனால் இது இல்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) அவர் அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அதில் முழு உரிமையும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுப்பொறுப்பில் நீங்கள் சொல்லிவிட்டீர்கள் என்பதற்காக நான் சொல்கிறேன். 1 ஆம் தேதி பெய்த மழையைப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜெ. அன்பழகன்] [2016 ஜனவரி 21

பற்றி நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: *பேசுங்கள் ஒன்றும் பிரச்சினை இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *45 நாட்களுக்குப் பிறகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வாய் திறந்திருக்கிறார். அதற்காக நான் உண்மையிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தலைமைச் செயலாளர்தான் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார். நல்லவேளையாக சட்டமன்றம் கூடிய காரணத்தினால், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறையில் இருக்கிறார் என்பதை . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளர், மாண்புமிகு அம்மா அவர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலப் பொறியாளர் எல்லோருமே விளக்கம் சொல்லி விட்டார்கள். விளக்கம் சொல்லியாகி விட்டது. எல்லோருமே விளக்கம் சொன்னதற்குப் பின்னால், நீங்கள் இந்தச் சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினீர்கள். அதற்குரிய பதிலை நான் விளக்கமாகச் சொல்லவேண்டிய கட்டாயச் சூழ்நிலையை நீங்கள்தான் உருவாக்கினீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாகச் சொல்லவில்லை. ஒன்றரை மாதம் கழித்துச் சொல்லியிருக்கிறார். இதிலே பல பிரச்சினைகள். இங்கே கிட்டத்தட்ட 50 நிமிடங்கள் இதுபற்றிப் பேசினார்கள்.*

2016 ஜனவரி 21] [திரு. ஜெ. அன்பழகன்]

அதற்காகத்தான் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களும், எங்களுடைய தளபதியும் உச்ச நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணை கமிஷனை அமைக்க . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விவரங்களை எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளக்கமாகத் தந்துவிட்டார்கள். அதைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் திரும்பத் திரும்ப இதைப் பேசினால், நான் மீண்டும் அந்த விளக்கத்தினை உங்களுக்குச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் மன்றத்தில் எழுப்பினால், நாங்கள் மன்றத்தில் அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத்தான் இந்த விவாதத்திலே நான் பங்குபெற்றிருக்கிறேன். நீங்கள் 45 நாட்களாக சொல்லாததை இங்கே சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்திருக்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. இதிலே ஒரு கணக்கு சொல்லியிருக்கிறீர்கள். பக்கம் 10, 11, 12-ல் 2,640 கோடி ரூபாயை இந்த அரசு வெள்ள நிவாரணத்திற்காக விடுவித்திருப்பதாக அங்கே சொல்லியிருக்கிறீர்கள். அதிலே ரோடு போடுவதற்கு, பாலங்கள் கட்டுவதற்கு, பாசனக் கட்டமைப்புக்கு என 595.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஒதுக்கீடு முழுவதுமாக செலவு செய்யப்படவில்லை. பிறகு 5 இலட்சம் குடும்பங்களுக்கு, மழையால் குடிசைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 273.10 கோடி ரூபாயும், 25 இலட்சம் குடும்பங்களுக்கு, வெள்ளம் புகுந்த வீடுகளுக்கு 1,274 கோடி ரூபாயும், பயிர் இழப்பினால் பாதிக்கப்பட்ட 4,81,975 விவசாயிகளுக்கு 382 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன் கணக்கை. 451.15 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)*

[2016 ஜனவரி 21

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் எப்பொழுது வேண்டுமானாலும் எழுந்து விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடு)*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக மொத்தம், இந்தப் புத்தகத்திலே 11-வது பக்கம் முடிவிலே நீங்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி இந்த மூன்றுக்கும்–5 இலட்சம் குடும்பம், பாலம் கட்டுவதற்கு, 25 இலட்சம் குடும்பம். இதற்கெல்லாம் சேர்த்து ரூ.2,594.07 கோடிதான் செலவாகி இருக்கிறது. ஆனால், உங்களுக்கு வந்திருக்கிற நிதி நன்கொடையாளர்கள் மூலமாக மட்டும், பத்திரிகை செய்தியிலே 310 கோடி ரூபாய் வந்திருக்கிறது. மத்திய அரசு இரண்டு முறை பணம் கொடுத்திருக்கிறது. ஆனால் ஒரு தடவைதான் கொடுத்ததாக இந்தப் புத்தகத்தில் இருக்கிறது. 2 முறை பணம் கொடுத்திருக்கிறது. ஆயிரம் கோடி, ஆயிரம் கோடி என்று—2,000 கோடி ரூபாய். ஆக, 2,310 கோடி ரூபாய் உங்களுக்கு நிதி வந்திருக்கிறது. ஆனால், நீங்கள் இங்கே சொல்வது என்னவென்றால், 2,640 கோடி ரூபாய் செலவு செய்ததாகச் சொல்கிறீர்கள். ஆனால், ஆளுநர் உரை புத்தகத்திலே 2,594 கோடி ரூபாய்தான் செலவு செய்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். மீதி 46 கோடி ரூபாய் எங்கே இருக்கிறது? கஜானாவில் இருக்கிறதா, இல்லை தனிப்பட்ட ஆளிடம் இருக்கிறதா? எங்கே இருக்கிறது? (குறுக்கீடு) இது உங்களால் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் இருக்கிறது. பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு எவ்வாறு செலவு செய்யப்பட்டிருக்கிறது, எப்படி வந்திருக்கிறது என்பதை எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையிலே நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக 5 அரசாணைகள் மூலமாக 2,634.2955 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்கு என்ன கணக்கு*

2016 ஜனவரி 21] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

என்று கேட்கிறார்கள், பொறுமையாகச் சொல்கிறேன். மனித உயிரிழப்பிற்கு ரூ.6.76 கோடி, கால்நடை சேதத்திற்கு ரூ3.2627 கோடி, வீடுகள் சேதத்திற்கு ரூ.2.12 கோடி, குடிசை சேதத்திற்கு ரூ.273.1020 கோடி, இரண்டு நாட்களுக்கு மேல் வெள்ளத்தால் சூழப்பட்ட குடிசைகள், வீடுகளுக்கான நிவாரணம் ரூ.1,274.0760 கோடி. வேட்டி மற்றும் சேலைகளுக்கு 20 கோடி ரூபாய், பயிரிழப்பிற்கு–வேளாண் பயிர் 405.1095 கோடி ரூபாய், தோட்டக்கலைப் பயிருக்கு ரூ.46.0470 கோடி, மொத்தம் ரூ.451.1565 கோடி. உள் கட்டமைப்புகள்–நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ.150 கோடி, பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரம்–ரூ.50 கோடி, சென்னை மாநகராட்சிக்கு ரூ.200 கோடி, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு ரூ.20 கோடி, ஊரக வளர்ச்சிக்கு ரூ.30 கோடி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.2 கோடி, மின் பகிர்மானக் கழகம் ரூ.50 கோடி, நகராட்சி நிருவாகத் துறை ரூ.75 கோடி, பேரூராட்சிகள் துறை ரூ.5 கோடி, சமூக நலத் துறை ரூ.1 கோடி, இதர இனங்கள்–மீன் வளத் துறைக்கு ரூ.12.8183 கோடி, கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.2 கோடி, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் மாவட்டங்களுக்கு வெள்ள நிவாரணப் பணிகள் தொடர்பான சில்லரைச் செலவினங்களுக்கு ரூ.6 கோடி. ஆக மொத்தம், ரூ.2,634.2955 கோடி. அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.2,640.7955 கோடி. மாவட்ட ஆட்சியர்கள், துறைத் தலைவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது போக, எஞ்சியுள்ள தொகை ரூ.6.50 கோடி. எஞ்சிய தொகை எங்கே இருக்கிறது என்றுதான் கேட்கிறார். அதாவது, இந்தத் தொகை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டது. ஏற்கெனவே மத்திய அரசு கொடுத்ததெல்லாம் எங்கே போனது என்று கேட்கிறார்கள். அவர்கள் பழைய பாக்கியையும் சேர்த்துதான் அதிலே கொடுத்தார்கள். அந்த விவரமும் இருக்கிறது. ஆகவே, பேரிடர் நிவாரண நிதியிலேயிருந்து கொடுத்ததையும், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுத்ததையும் அவர் குழப்பிக்கொள்கிறார். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுத்த அந்தத் தொகை அதிலே அப்படியேதான் இருக்கும். முதலமைச்சர் நிவாரண நிதியிலேதான் இருக்கும். பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு–இப்போது பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.6.50 கோடி கையிலே இருப்பு இருக்கிறது. ஆகவே, இதுதான் செலவு செய்யப்பட்ட

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஜனவரி 21

தொகை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தெளிவாக, அறிவுபூர்வமான கணக்கீடுகளை எடுத்து, அறிவுபூர்வமாக 30 இலட்சம் பேர்களுக்கு வங்கிக் கணக்கிலே நிவாரணம் செலுத்தி, சுட்டி, விரல் நீட்டி, யாரும் குற்றம், குறை சொல்ல முடியாத அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணத் தொகை வழங்கிய முதலமைச்சர் என்று 29 மாநில முதலமைச்சர்களும் பாராட்டுகின்ற வகையிலே நிவாரண உதவித் தொகைகளை வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, உயிரிழப்புகளுக்கும், அவர்கள் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக போர்க்கால அடிப்படையிலே உடனடியாக அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நேரடியாக சென்று இழப்பீடு வழங்குகிற அந்த முறையையும், போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இது எதையுமே தெரியாமல், எந்த விவரமுமே தெரியாமல், இங்கே வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று செவிடன் காதில் ஊதிய சங்காக எதையுமே புரியாத மாதிரியே அவர்கள் நடிக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 2—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார், என்ன விளக்கம்?

திரு. துரைமுருகன்: நாட்டில் ஒரு பேரிடர் நடந்தது. அதற்காக பல நிறுவனங்கள் நிதி கொடுத்தன. இந்த நிதியை பேரிடர் நிவாரண நிதியிலே கணக்கு வைக்காமல் ஏன் முதலமைச்சர் நிவாரண நிதியிலே சேர்க்கிறீர்கள்? அதற்கென்று தனி account இருக்கிறது. இந்தப் பேரிடருக்காக வந்ததை அதிலேதானே சேர்த்திருக்க வேண்டும். முதலமைச்சர் தலைவர் அதற்கு. ஆனால் முதலமைச்சர் நிவாரண நிதியிலே இதைச் சேர்க்கக்கூடாது. ஏன் இதை முதலமைச்சர் நிவாரண நிதியில் சேர்த்தீர்கள். பேரிடருக்கென்று தனியாக நிதி இருக்கிறது.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்குக் கொடுப்பதை நாம் வாங்குகிறோம். அதிலிருந்தும் பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாததுபோல் நடிக்கின்றார். முதலமைச்சர் நிவாரண நிதியிலே எந்தப் பேரிடருக்கும் வழங்கலாம் என்பது அவருக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அது உங்களுக்குத் தெரியும் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொந்தக் கருத்து எதையும் சொல்லவில்லை. கவர்னர் இந்த அவையிலே படித்த கருத்தைத்தான் நான் சொன்னேனே தவிர, என்னுடைய சொந்தக் கருத்து எதுவும் கிடையாது. ** இது கவர்னருடைய உரைப் புத்தகம்; இதிலிருக்கிற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், நீங்கள் கவர்னர் அவர்களைப் பற்றியெல்லாம் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு விஷயத்தைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: ** அதாவது ஓர் உறுப்பினரிடம் பேசும்போது—புத்தகத்திலே இருப்பதைத்தான் பேசுகிறேன், நாங்கள் ஒன்றும் பேசவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேதகு ஆளுநர் அவர்களைப் பற்றி அப்படியெல்லாம் குறிப்பிட முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜெ. அன்பழகன்: வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசவில்லை. கவர்னர் பேசியிருக்கிற பேச்சை நீங்கள் எதற்கு இந்த அவையிலே இந்தப் புத்தகத்திலே வெளியிட்டிருக்கிறீர்கள். இந்தப் புத்தகத்திலே இருப்பதைத்தான் பேசுகிறேன். நான் என்னுடைய சொந்தக் கருத்து எதையுமே சொல்லவில்லை. ரூ.46 கோடி deficit வருகிறது. அது எப்படி வந்தது என்று கேட்டால், அதற்கு மந்திரி விளக்கம் சொல்கிறார்; அவ்வளவுதான். இதிலே இருப்பதைத்தான் நான் கேட்டேன். இதிலே அவர் விளக்கம் கொடுத்திருந்தார் என்றால், நான் கேட்டிருக்கமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: ஆக, மத்திய சர்க்காரிடமிருந்து ரூ.2 ஆயிரம் கோடியும், நன்கொடையாக ரூ.310 கோடியும் கிட்டத்தட்ட ரூ.2,310 கோடி வந்திருக்கிறது. ஏற்கெனவே கடந்த ஆட்சியில் சுனாமி; இதையெல்லாம் நான் பேசவில்லை. ஆனால், ரூ.2,310 கோடி போனால், ரூ.284 கோடிதான் இந்த அரசு செலவு செய்திருக்கிறது. இவ்வளவு பெரிய மழை வெள்ளத்தில் —முக்கால் மணி நேரம் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் படித்தார்கள். அதற்கு இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி, நிதி இதெல்லாம் எவ்வளவு என்று கேட்டால், ரூ.284 கோடிதான். இந்தப் புத்தகம் சொல்கிறது. நான் சொல்லவில்லை.

அடுத்து, சட்டம்–ஒழுங்கு பற்றி இந்தப் புத்தகத்தில் சொல்கிறார்கள். பக்கம் 18–ல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செலவை மட்டும் சொல்கிறார். இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

2016 ஜனவரி 21] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

ஆற்று ஓரத்தில் இருந்தவர்களைக் குடியமர்த்துவதற்கு இடமாற்றுப்படி ரூ.5 ஆயிரம், ஓர் ஆண்டிற்கு பிழைப்பூதியம் ரூ.30 ஆயிரம், மூன்று நாட்களுக்கு உணவு மற்றும் குடிநீர் இப்படியெல்லாம் நிறைய ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இதற்குப் பணம் தேவைப்படுகிறது. இவ்வளவுதான் செய்தார்கள் என்று இல்லை. ரூ.25,000 கோடி வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார். முழு நிவாரண நிதியும் வழங்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வெள்ளத்தை வைத்து வருகிற தேர்தலில் அரசியல் ஆதாயம் தேடலாம் என்று அலைகிறார்கள். நிச்சயமாக மக்கள் உங்களுக்கு சரியான பாடம் புகட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்று சொல்லியிருக்கிறார். மொத்தமாகத்தான் சொல்கிறார். மக்கள் யாருக்குப் பாடம் புகட்டுவார்களோ 2016-ல் புகட்டுவார்கள். அதில் யாரும் அச்சப்பட வேண்டாம். ஏனென்றால், அவர் ஒன்றும் அசைக்க முடியாத தலைவர் கிடையாது. 1996-ல் பர்கூர் தொகுதியில் தோற்றுப்போனவர்தான் அவர். அதனால் அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மக்கள் தி.மு.க-வை பற்றி முழுமையாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நீங்கள் என்னதான் நாடகம் ஆடினாலும் மக்கள் ஒருபோதும் தி.மு.க-வை நம்பவே மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு சமீபத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே உங்களுடைய நிலையை மக்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட நிலைதான் உங்களுக்கு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலேயும் நிச்சயமாக வரும். அதே தோல்வியைத்தான் நிச்சயமாக நீங்கள் சந்திப்பீர்கள். நீங்கள் என்னதான் நாடகம் ஆடினாலும், உங்கள் நாடகத்தை மக்கள் நம்புவதற்குத் தயாராக இல்லை. தி.மு.க-வையும் மக்கள் ஏற்பதற்குத் தயாராக இல்லை.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தேர்தலை தைரியமாக சந்திக்கக்கூடிய ஒரே தலைவி எங்கள் மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தெருத் தெருவாகக் கூட்டணிக்குப் பிச்சை ஏந்துபவர்கள் நாங்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) தைரியம் இருந்தால் தனித்து நிற்கத் தயாரா? (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டணிக்கு அலைகிறீர்களே! வீடு வீடாகப் பத்திரிகை வைத்து பிச்சை ஏந்துகிறீர்களே! தயாரா? (குறுக்கீடுகள்) . . .

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பார்த்து கூட்டணி இல்லாமல் தனியாக நிற்பதற்குத் தயாரா என்று கேட்கிறார். நான் அவரைக் கேட்கிறேன், உங்களுடைய A.D.M.K. கட்சி மட்டும், வேறு எந்தக் கட்சியோடும் கூட்டு இல்லாமல், அவர்களையெல்லாம் கழற்றி விட்டுவிட்டு, தனியாக நிற்பீர்களா? சொல்லுங்கள் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ள நிவாரணத்திற்காக சில தனியார்கள், தொண்டுள்ளம் கொண்டவர்கள், நல்லுள்ளம் படைத்தவர்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்து நிவாரண உதவியை வழங்கி வருகின்றனர். இதை ஏன் நீங்கள் வெள்ள நிவாரண நிதியில் சேர்க்காமல், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் சேர்க்கிறீர்கள் என்கிற ஒரு குற்றச்சாட்டை இங்கே—குற்றச்சாட்டு இல்லை—ஏன் என்கிற வினாவை எழுப்பினார்கள். அதாவது, தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், வெள்ள நிவாரணத்திற்காகப் பெறப்பட்ட நன்கொடைகள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியில்தான் வரவு வைக்கப்பட்டது. பிறகு, அது பேரிடர் நிவாரண

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிதிக்கு மாற்றப்பட்டது. வெள்ள நிவாரண நிதி ஒரு தற்காலிக கணக்கு என்பதால், இதற்காக தனியாக கணக்குத் தொடங்குவது வழக்கமில்லை. இதுவரை வரவு–செலவுத் திட்டத்திலுள்ள 640 கோடி ரூபாயுடன், மத்திய அரசு வழங்கியுள்ள 1,000 கோடி ரூபாயும் சேர்த்து கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. எதற்கு? இந்த வெள்ள நிவாரணத்திற்காக மாநில அரசினுடைய சொந்த நிதி ஆதாரத்திலிருந்து, நிதியிலிருந்துதான் கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தி.மு.க. ஆட்சியிலும் செய்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மையா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஜூன் மாதம் கவர்னர் உரையில் பதிலளிக்கும்போது, நான் இதற்கான பதிலை கரெக்ட்டாக சொல்கிறேன். வரும் ஜூன், ஜூலையில் கரெக்டாக நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இது வழக்கமான நடைமுறைதான். (குறுக்கீடு) இது வழக்கமான நடைமுறைதான். மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை 313 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. (குறுக்கீடு) ஐயா, நீங்கள் அமைதியாகக் கேளுங்கள். மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை 313 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. பேரிடர் நிவாரண நிதிக்கு இந்த நிதி மாற்றப்படும். இதேபோலதான் கடந்த காலத்திலும் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூன் மாதம் வந்து பதில் சொல்கிறேன் என்கிறார். ஜூன் மாதம் நீங்கள் வரவே முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) வந்தால்தானே பதில் சொல்வீர்கள்? போகாத ஊருக்கு வழிகாட்டுவது போன்று இருக்கிறது. வாய்ப்பே இல்லையே? பிறகு எப்படி பதில் சொல்வார்? (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற முறை கடைசியாகப் பேசும்போது சொன்னேன், 'அடுத்த முறை நாங்கள் அங்கே, நீங்கள் இங்கே' என்றேன். இப்போதும் சொல்கிறேன், அடுத்த முறை. . .

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: நடக்காது. நடக்காது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜெ. அன்பழகன், ஏதோ கணக்கெல்லாம் சரி செய்து, கூட்டி 46 கோடி ரூபாய் இதில் குறைவு ஏற்படுகிறது என்று சொல்கிறார். அதாவது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். தெரிந்திருந்தும், நீங்கள் தவறான, குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. எப்பொழுதுமே மாண்புமிகு அம்மா அவர்கள், படிக்கிற காலத்தில் கணக்குப் பாடத்தில் நூற்றுக்கு நூறு (மேசையைத் தட்டும் ஒலி); நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். ஆகவே, 234-க்கு 234-தான் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில். (மேசையைத் தட்டும் ஒலி) இது வரலாறு. அதை நிரூபிக்கப் போகிறார்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: கணக்கு பற்றிச் சொன்னார்கள். நான்கூட நினைத்தேன் இது ஒரு வேளை ** என்பதற்காகத்தான் கேட்கலாம் என்று நினைத்தேன். அது பரவாயில்லை; அமைச்சர் கரெக்ட்டாக கணக்கு சொல்லிவிட்டார். (குறுக்கீடு) **அதாவது, சட்டமன்றத்தில் வைத்திருக்கின்ற அறிக்கையில் சட்டம்–ஒழுங்கைப்பற்றி 18-வது பக்கத்தில் சொல்கிறார்கள். சட்டம்–ஒழுங்கைப் பொறுத்தவரையில் அமைதிப் பூங்காவாக தமிழகம் மாறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். எது அமைதிப் பூங்கா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21] [திரு. ஜெ. அன்பழகன்]

மாநில அமைச்சர் பாவம், மதுரையிலிருந்து வந்து இங்கே இருக்கிறார். அவருடைய ஆபிஸிலேயே குண்டு வீசிட்டாங்க. இதுவா அமைதிப் பூங்கா? ரௌடிகளெல்லாம் இப்போது கத்தி எடுக்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2—20

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்—ஒழுங்கு என்பது ஒட்டுமொத்தமாக உடைமைக்கு, உயிருக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். தி.மு.க. ஆட்சியில் அவர்களுடைய கட்சி மாவட்டச் செயலாளரே கொலை செய்யப்பட்டார்; முன்னாள் அமைச்சர் கொலை செய்யப்பட்டார்; தினகரன் அலுவலகம் கொளுத்தப்பட்டு மூன்று பேர் இறந்தார்கள்; இதையெல்லாம் சொல்லிவிட்டேன். உடைமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பு கொடுக்கின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற சிறிய பிரச்சினை அங்கொன்றும், இங்கொன்றும் நடக்கும். ஆனால், ஒட்டுமொத்த அமைதிக்குக் குந்தகம் இல்லை. 1998—ல் கோயம்புத்தூரில் குண்டு வெடித்தது, 2010—ல் விழுப்புரத்தில் இரயிலில் குண்டு வெடித்தது. இப்படி குண்டு கலாச்சாரத்திற்கு நீங்கள்தான் காரணம். சட்டம்—ஒழுங்கு என்பது பொது அமைதியைக் காப்பது. ஒரு சாதாரண மனிதன் தனிமையில் நடந்து செல்ல முடியுமா உங்கள் ஆட்சியில்? அவர் சொத்துக்கு பாதுகாப்பு உண்டா? நீங்களா சட்டம்—ஒழுங்கைப் பற்றிப் பேசுகிறீர்கள்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு சட்டம்—ஒழுங்கைப் பற்றிப் பேசுவதற்கு சிறிதளவும் அருகதை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: பக்கம் 19—ல், அதற்கு அடுத்த வார்த்தை சொல்கிறார்கள். காவல் துறைக்கு முழு சுதந்திரம்

[திரு. ஜெ. அன்பழகன்] [2016 ஜனவரி 21 அளிக்கப்பட்டுள்ளதால், காவல் துறையினரின் ஊக்கம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ** (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் முறையில்லாத பேச்சு. இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. அன்பழகன் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜெ. அன்பழகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. அதிகாரிகளைப் பற்றி இப்படியெல்லாம் பேசக்கூடாது.

திரு. ஜெ. அன்பழகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகளைப் பற்றி இப்படிப் பேசுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜெ. அன்பழகன்: அதற்குப் பிறகு, ஆளுநர் உரை 31 ஆம் பக்கத்தில் இந்த ஆட்சியில் மின்சாரத்தில் மின் மிகை மாநிலம் என்று சொல்லியிருக்கிறார்கள். மின் மிகை மாநிலம் என்றால் என்ன? நான் அதிகம் இந்த விஷயத்திற்குச் செல்லவில்லை. ஏனென்றால் நேரம் கிடையாது. நம்மிடம் உள்ள மின்சாரத்தை யாரிடமாவது கொடுத்தால்தான் நாம் மின் மிகை மாநிலம். 30 சதவிகிதம் மின்சாரத்தை காசு கொடுத்து வாங்குகிறீர்கள் அதுவும் ஒன்றரை இலட்சம் கூபாய் கோடி கடனில் உள்ள மின்சார வாரியம்மூலம். நீங்கள் எப்படி மின் மிகை மாநிலம் என்று இதில் போடலாம்? மின்சாரத் தட்டுப்பாடு உள்ள மாநிலம் இது. இன்னும் மின் மிகை மாநிலம் என்று போட்டுவிட்டு, யாரை ஏமாற்றுகிறீர்கள் நீங்கள்? இதை வைத்து ஓட்டு வாங்கலாம் என்று பார்க்கிறீர்களா? கிடைக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகத்தில் சொல்லியிருப்பதில் தவறு ஒன்றும் இல்லை. தமிழகம் இன்றைக்கும் மின் மிகை மாநிலம்தான். இதில் யாருக்கும் எந்தவித சந்தேகமும் இல்லை. ஏற்கெனவே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

இதுகுறித்து நான் ஒரு பதில் சொல்லியிருக்கிறேன். மின்வெட்டு, மின் பற்றாக்குறை பற்றி ஏதேனும் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், திரு. எவ. வேலுவுக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன்; முடிந்தால் அதைப் படித்துப் பார்த்து தெரிந்துகொள்ளுங்கள். இப்போது, தமிழகத்தில் எந்த இடத்திலும் மின்வெட்டு அறவே இல்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒரு முறை பதிவு செய்ய விரும்புகிறேன். ஆக, இன்றைய தேதியைப் பொறுத்தளவிலே, தேவைக்கு அதிகமாகத்தான் இருக்கிறது. சில இடங்களில் தேவைக்கு அதிகமாக இருப்பதால், மின் உற்பத்தியைகூட நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் மிகை மாநிலம் என்று பொதுப்படையாக சொல்வதற்குப் பதில், ஒரே ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் இரண்டு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தித் திறன் ஏறத்தாழ 26,806.5 மெகா வாட் இருக்கிறது. அதில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிறுவுதிறன் 18,002.5 மெகா வாட். அதில் தற்போது 8,804 மெகா வாட் மரபு சாரா எரிசக்தி. அதாவது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன். ஆக இரண்டையும், மின்சார வாரியத்தின் நிறுவுதிறனையும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனையும் இணைத்து ஒட்டுமொத்தமாக 26,806.5 மெகா வாட் அளவுக்கு மின்சாரம் கிடைப்பதற்குரிய வழிவகையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து சாதனை படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இன்றைக்கு மின் மிகை மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, மின் மிகை மாநிலம் என்று சொன்னால், மின் உற்பத்தியைத் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்ற திறன் இருந்தால், அது மின் மிகை மாநிலம். இப்போது தேவைக்கு அதிகமான மின் உற்பத்தித் திறன் ஏற்பட்டிருக்கிறது. அதனால் இது மின் மிகை மாநிலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 2—25

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

அவர்கள் மின்சாரத்தைப் பற்றிப் பேசாதே, பேசாதே என்று சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கின்றது. முன்னாள் மின் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இதே அவையில், இந்த ஆட்சி போகும் என்றால் மின்சாரத் தட்டுப்பாட்டினால்தான் தொலைந்து போகும் என்று ஒப்புதல் வாக்குமூலமே கொடுத்திருக்கின்றார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, அரசு அதிகாரிகள் எழுதிக் கொடுத்திருக்கின்ற குறிப்பைப் படிக்கின்றீர்கள் என்று அடிக்கடி சொல்கிறார். பொதுவாக அமைச்சர் பெருமக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் அரசு அதிகாரிகள் இருக்கின்றார்கள். ஆகவே, அரசு அதிகாரிகளைக் குறை சொல்ல வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் பேசும்போது ** என்று சொன்னார். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் வேறு Subject–ல் பேசுங்கள்; வேறு Subject–ல் பேசுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் மீண்டும், மீண்டும் பேசுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு Subject–ல் பேசுங்கள்; வேறு Subject–ல் பேசுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 108–வது பக்கத்தில் மெட்ரோ இரயிலைப் பற்றிச் சொல்லியிருக்கின்றீர்கள். அதில் ஒரு வரி – சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை விரிவுபடுத்துவதற்கான ஒப்புதலை மத்திய அரசிடம் கேட்டு விரைவுபடுத்தச் சொல்கின்றார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21] [திரு. ஜெ. அன்பழகன்]

இதே வார்த்தை போன வருட புத்தகத்திலும் இருக்கின்றது. இந்த ஒரு வருட காலமாக என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இதில் மோனோ இரயிலைக் காணவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேசவிடுங்கள். மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் மெட்ரோ இரயில் கொண்டுவரப்பட்டபோது, 2011 ல் இவர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, இந்த ஐந்தாவது கவர்னர் உரையில், 4 கவர்னர் உரையில் மோனோ இரயில் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். 5 வது கவர்னர் உரையில் மோனோ இரயிலைக் காணவில்லை. ஆனால் அந்தத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது தொடர்ந்து அதே வரியைப் பயன்படுத்துகின்றார்கள். சென்னை நகரம் போக்குவரத்து நெரிசலால் மிக ஸ்தம்பித்துப்போய்க் கிடக்கின்றது. காரணம், இந்த மெட்ரோ இரயிலை குறிய நேரத்தில் செய்து முடிக்கவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த ஆண்டு கவர்னர் உரையில் இருந்ததுதான் இப்போதும் இருக்கிறது என்றும்— திருவொற்றியூர் விம்கோ நகர் வரை பர்மிஷன் வாங்குவதற்கு ஓராண்டு ஆகியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கின்றார். மத்தியிலே நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள் கூட்டணியாக காங்கிரசோடு. (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம், சொல்வதைக் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டுவிட்டு பதில் சொல்லுங்கள். 30–6–2006–ல் மெட்ரோ இரயில் வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை கேபினெட்டில் கொண்டுவருகின்றீர்கள். (குறுக்கீடு) மெட்ரோ இரயிலைத்தான் சொல்கின்றேன். 30-6-2006-ல் மெட்ரோ இரயில் வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை கேபினெட்டில் கொண்டுவருகின்றீர்கள். அந்தத் தீர்மானத்தை மத்திய அரசு 2–11–2007–ல் கேபினெட்டில் வைக்கின்றது. ஆனால்,

[திரு. பி. தங்கமணி] [2016 ஜனவரி 21

2009–ல்தான் approval வாங்குகின்றீர்கள். உங்கள் கேபினெட்டிலும், மத்திய கேபினெட்டிலும் தீர்மானம் நிறைவேற்றி, இரண்டு வருடம் கழித்துத்தான் உங்களுக்கு அனுமதி கிடைக்கின்றது. இப்போது பல்வேறு திட்டங்களின் வாயிலாக–DPR, அதாவது அந்தத் திட்டத்திற்குத் தேவையான அறிக்கைகளை தயாரிக்க தாமதமான காரணத்தினால், அதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி, இப்போது மத்திய அரசிடமிருந்து ஓராண்டுக் காலத்திற்குள் அனுமதி பெற்றிருக்கின்றது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். 30–6–2006–ல் நீங்கள் தீர்மானம் கேபினெட்டில் போட்டீர்கள். நீங்கள் 2–11–2007–ல் மத்திய அரசு கேபினெட்டில் வைத்தீர்கள். அதன்பிறகு இரண்டு வருடங்கள் ஆனது. நீங்கள்தானே கேபினெட்டில் இருந்தீர்கள்? ஏன் இரண்டு வருடங்கள் ஆனது? அதற்கு என்ன பதில் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) அதேபோன்று மோனோ ரயில் பற்றியும் கேட்டீர்கள். அதற்கும் பதிலைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இருங்கள், கேட்டதற்குப் பதில் சொல்ல வேண்டும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மாண்புமிகு அமைச்சரை முழுவதுமாகப் பேசவிடுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சொன்னது விரிவாக்கத் திட்டத்தையெல்லாம் தயார் செய்து ஓராண்டுக் காலத்திற்குள் நாங்கள் அனுமதியை வாங்கியிருக்கின்றோம். ஆனால் மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் இருந்த நீங்கள், மத்திய அரசு கேபினெட்டில் வைத்து தீர்மானம் நிறைவேற்றியபிறகு அனுமதி பெறுவதற்கு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. 5–1–2011–ல்தான் நீங்கள் மெட்ரோ இரயிலுக்கு MoU-வே போடுகின்றீர்கள். ஆட்சி போவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் புரிந்துணர்வு ஒப்பந்தமே போட்டீர்கள். (குறுக்கீடு) இருங்கள். உறுப்பினர் அவர்கள் மோனோ இரயில் பற்றிச் சொன்னார். இங்கே குறுக்கு நெடுக்காக நெருக்கடியாக வீடுகள் எல்லாம் இருக்கின்றன. Underground–ல் போகும்போது பாதிப்பு வரும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இதுவும் இருக்கட்டும்; அதுவும் இருக்கட்டும் என்று சொன்னார்களேயொழிய, இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இப்போதும் டெண்டர் விடப்படவிருக்கின்றது.

2016 ஜனவரி 21] [திரு. பி. தங்கமணி]

28–2–2016–ல் அது வருகின்றது. ஆதலால், டெண்டர் விடப்படவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் மத்திய அரசில் இருந்து மூன்று ஆண்டுக் காலமாக காலதாமதம் செய்ததற்குப் பதில் சொல்லிவிட்டு, மற்றவற்றைச் சொல்லுங்கள்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஒரு நிமிடத்தில் பேசி, உரையை முடியுங்கள். ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *நான் எங்கே பேசினேன்? பேசியது எல்லாம் அவை முன்னவரான நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். அதற்கு அவர் விளக்கம் சொல்லியிருக்கிறார். அதற்கு நான் என்ன செய்யமுடியும்? இன்னும் இங்கு 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். இப்பொழுதே மணி 2–30 ஆகிவிட்டது. (குறுக்கீடு) மணி 2–30 ஆகிவிட்டது. இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஒரு நிமிடத்தில் பேசி உரையை முடியுங்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *5 நிமிடங்கள் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *அதாவது அமைச்சர் ஏன் காலதாமதம் என்று கேட்டார்? அது புதுத் திட்டம். இது* extension. *நீங்கள் கேட்பது திருவொற்றியூர்* extension. *நீங்கள்* extension *கேட்டுவிட்டு, அதே வரியைப் புத்தகத்தில் போடுகிறீர்கள். போன வருடம் என்ன வரி போட்டீர்களோ, அதே வரியைப் போடுகிறீர்கள். இதோ இருக்கிறது புத்தகம்; நான் எடுத்துக்காட்டுகிறேன். நீங்கள் வேண்டுமென்றால் பாருங்கள். அதே வரியை அப்படியே பிரிண்ட் செய்திருக்கிறீர்களே, ஏன் என்றுதான் கேட்டேன். உங்களைக் குறை சொல்லவில்லை. உங்கள் மூலமாக கவர்னர் ஏன் இதுமாதிரி சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார் என்றுதான் கேட்டேன்.*

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலை அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கின்றேன். மத்திய அரசிடம் அனுமதி பெற்றாகிவிட்டது என்றுதான் நான் இப்பொழுது சொல்கிறேன். (குறுக்கீடு) சென்ற முறை வரும் என்று சொன்னோம், இப்பொழுது அனுமதி பெற்றுவிட்டோம் என்றுதான் தகவல் சொல்கிறோம். அதாவது, தூங்குகிறவர்களை எழுப்பலாம்; தூங்குகிற மாதிரி நடிப்பவர்களை எப்படி எழுப்ப முடியும்? இது தேவையில்லாத ஒரு கேள்விதான். அனுமதி பெற்றுவிட்டோம் என்று சொல்கிறோம். 2003 ஆம் ஆண்டிலேயே மெட்ரோ இரயில் சேவையை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதன்முதலில் கொண்டு வந்தார்கள். அதை நீங்கள் கொண்டு வந்ததாக ஒரு பாராட்டு விழா நடத்திக்கொண்டீர்கள். மெட்ரோ இரயில் யார் கொண்டு வந்தது? முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் யார் D.P.R. தயார் செய்தது. 2005 ஆம் ஆண்டு அந்த D.P.R. தயார் செய்தது யார்? மாண்புமிகு அம்மா அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். அதை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இவ்வளவு பேசுகிறீர்கள் அல்லவா? (குறுக்கீடு) நீங்கள் ஆட்சி செய்த 5 ஆண்டுக் காலத்தில் எத்தனை சதவிகிதப் பணிகளை முடித்தீர்கள்? வெறும் 3 சதவிகிதப் பணியை மட்டும்தான் முடித்தீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 73 சதவிகிதப் பணிகளை முடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பத்தரை கிலோ மீட்டர் ஓட்டியிருக்கிறார்கள். இல்லையென்று சொல்லுங்கள் பார்க்கலாம். யாராவது இதற்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இவ்வளவு வேகமாக மெட்ரோ இரயில் பற்றிச் சொன்னது; 5 ஆண்டுக் காலங்களில் நீங்கள் செய்த பணி வெறும் 3 சதவிகிதம் மட்டும்தான். 1,179 கோடி ரூபாய்தான் நீங்கள் செலவு செய்திருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் 9,229 கோடி ரூபாய் செலவு செய்து, பத்தரை கிலோ மீட்டர் அளவிற்கு இரயிலை விட்டிருந்தார்களா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள். இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

2016 ஜனவரி 21]

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஸ்திவாரம் போடுவதுதான் பிரச்சினை. சரி, அடுத்து, அமைச்சர் இலாக்காவிலேயே கேட்கிறேன். புதிய உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தினீர்கள், 100 கோடி ரூபாய் செலவு செய்தீர்கள், நீங்களேதான் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வந்ததாகச் சொன்னீர்கள். அந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இந்தியாவைச் சேர்ந்த டாடாவோ, ரிலையன்ஸோ, அம்பானியோ யாரும் வரவில்லை. இருந்தாலும் நீங்கள் அதைத்தான் சொல்கிறீர்கள். 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை யார் போட்டார்கள் என்று இந்த அவையிலே 2 நாட்களில் அமைச்சர் அறிக்கை வைப்பாரா என்பது என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது ரகசிய ஒப்பந்தம் கிடையாது. யார், யார் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள் என்பதைப் பட்டியலிடுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த வாரத்திலேகூட ஆன்வே கம்பெனியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, இப்பொழுது தொடக்கி வைத்திருக்கிறார்கள். உங்களைப்போல, புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது. . . (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், மாண்புமிகு அமைச்சரைப் பேசவிடுங்கள். நீங்கள் குறுக்கிட்டுப் பேசி, அமைச்சரைப் பதிலே பேச விடமாட்டேன் என்கிறீர்களே. மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: நீங்கள் கேட்டீர்கள், நான் பதில் சொல்கிறேன். நீங்கள் கேட்டதற்குதான் நான் பதில் சொல்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. நான் இதன் உள்ளே செல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், அவர் ஏதோ டாடா, பிர்லாவெல்லாம் வரவில்லை என்று சொன்னார். டாடா, பிர்லா நடத்துவது மட்டும்தான் இந்தியாவில் தொழிற்சாலையா?

[திரு. பி. தங்கமணி] [2016 ஜனவரி 21

மற்றவர்கள் யாரும் தொழிற்சாலை நடத்தவில்லையா? H.C.L. நிறுவனத்தினர் வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர்கள் எல்லாம் வர வேண்டும் என்ற அவசியமே எங்களுக்கு இல்லை. எங்களுக்கு இங்கேயே 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் வந்திருக்கின்றது. இது ஒரு சாதனை. வேறு எந்த மாநிலத்திலும் இதுமாதிரி இல்லாத சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கிருந்து 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் வந்திருக்கின்றது. ஆனால், நீங்கள் டாடா கம்பெனி வந்தால்தான், இங்கு தொழிற்சாலை என்று நினைக்கிறீர்கள். H.C.L. நிறுவனம் வந்திருக்கின்றது. நாளைக்கு அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டப் போகிறார்கள். இப்படிப் பல்வேறு தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. இன்னும் பல தொழிற்சாலைகளை கூடிய விரைவில் மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைக்க இருக்கின்றார்கள். அப்பொழுது நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், உரையை முடியுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: இதோ 2 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இதுவரையில் எந்தத் தொழிற்சாலையும் வரவில்லை என்று சொல்லிவிட்டார். வரப்போகிறது, MoU போட்டிருக்கிறோம், அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் சொல்கிறார். இதுவரை ஒருவருக்காவது வேலைக் கொடுத்திருப்பாரா? ஒரு செங்கல்லையாவது அங்கே வைத்திருப்பாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நான் தெளிவாகச் சொன்னேன். MoU போட்டது, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் ஆம்வே கம்பெனி. (குறுக்கீடு) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது உங்கள் காலத்திலே எப்படி போடப்பட்டது? நான் விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். உங்கள் காலத்திலே நீங்கள் எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டீர்கள்? எத்தனை தொழிற்சாலைகள் வந்தன? எவ்வளவு நாட்களில் வந்தன என்று சொல்ல முடியுமா? உதாரணத்திற்குச் சொல்கிறேன்; நீங்கள்

2016 ஜனவரி 21] [திரு. பி. தங்கமணி]

போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் எப்படி என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

பிற்பகல் 2–35

2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த ஹுண்டாய் கம்பெனி expansion-க்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டுக்குப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். தேர்தல் வந்துவிட்டது. தேர்தல் வந்துவிட்ட காரணத்தினால், அன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடவில்லை. நீங்கள் *2008* ஆம் ஆண்டில்தான் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகிறீர்கள். எப்பொழுது என்றால், *22–1–2008* அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகிறீர்கள். அந்தத் தொழிற்சாலையை எப்பொழுது திறக்கிறீர்கள் தெரியுமா? *2–2–2008* அன்றுதான் திறக்கிறீர்கள். பத்தே நாட்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, ரூ.4,000 கோடி முதலீட்டில் ஒரு factory ஐத் திறக்கிறீர்கள். எப்படி factory யைத் திறக்கிறீர்கள்? அதில் போடப்பட்டுள்ள ஒரு கருத்தை நீங்கள் புரிந்துகொள்ளாமல் போட்டுவிட்டீர்கள். எப்படிப் போட்டிருக்கிறீர்கள் என்றால், புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, அதற்கு G.O. போடும்போது, with effect from *1–1–2006* என்று போட்டிருக்கிறீர்கள். *1–1–2006*-ல் யாருடைய ஆட்சி இருந்தது? அப்படியென்றால் எப்பொழுதிலிருந்து நடந்தது? அதற்கு நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? 10 நாட்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுவிட்டு தொழிற்சாலையைத் திறக்க முடியுமா? புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு 4,000 கோடி ரூபாய், 5,000 கோடி ரூபாய் என்பது, 4 ஆண்டுக் காலத்திலிருந்து 7 ஆண்டுக் காலம் வரை முதலீடு செய்வது ஆகும். ஏதோ புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டவுடனேயே, நாளைக்கு காலையிலேயே Factory யைத் திறக்க முடியாது. உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. ஒரு கோடி ரூபாயில் ஒப்பந்தம் போட்டு செய்தாலும், அதற்கும்கூட ஆறு மாதங்கள் ஆகும் என்பது அனைவருக்கும் தெரியும். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் போடப்பட்டுள்ள *98* ஒப்பந்தங்கள் சம்பந்தமான அனைத்து தொழிற்சாலைகளும் கண்டிப்பாக வரும். அதில் எந்த மாற்றமும் கிடையாது. (குறுக்கீடு)

திரு. ஜெ. அன்பழகன்: சொன்னாரென்றால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன், உரையை முடியுங்கள்.

[2016 ஜனவரி 21

திரு. ஜெ. அன்பழகன்: அவர்தான் சொன்னார், மின் திட்டங்களுக்கு MoU போட்டதற்கு முடியாது, MoU என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூரிலிருந்து விம்கோ நகர் வரை மெட்ரோ இரயில் திட்டம் ஏன் காலதாமதமானது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார். (குறுக்கீடு) ஒரே நிமிடம் பொறுங்கள். அதைவிட, பழையதைவிட, நீட்டிக்க கிட்டத்தட்ட, அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது, (குறுக்கீடு) அதுதான், அதற்கு இப்பொழுது அனுமதி வாங்கியாகிவிட்டது. மத்திய நகர்ப்புறத் துறை அமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வதற்கு விடமாட்டேன் என்கிறீர்களே? அது எப்படிச் சரியாகும்? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், கேள்விமேல் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதிலுக்குப் பதில் விளக்கத்தை சொல்லிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல ஆரம்பித்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அதற்குள் திரும்ப வேறு கேள்விக்குப் போகிறார். நீங்கள் கேட்ட கேள்விக்கு முதலில் பதிலை வாங்குங்கள். பதிலைப் பெற்ற பிறகு, அதில் ஏதாவது பிரச்சினையிருந்தாலோ அல்லது உங்களுக்கு அதில் ஏதாவது குறைபாடு, ஐயப்பாடு இருந்தாலோ கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உரையை முடியுங்கள். உங்கள் உரையை முடித்து, எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். இன்னும் 5, 6 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. ஜெ. அன்பழகன்: சரி. நான் அதிகமாகப் பேசவில்லை. ஜல்லிக்கட்டைப் பற்றிக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதில் நான் ஒரேயொரு கருத்தைமட்டும்

2016 ஜனவரி 21] [திரு. ஜெ. அன்பழகன்]

சொல்கிறேன். எத்தனையோ தீர்மானங்களை இந்த அவையில் நாம் அனைவரும் சேர்ந்து ஒட்டுமொத்தமாகப் போட்டிருக்கிறோம். அதனால், இந்தக் கூட்டத்தொடரில் இன்னும் இருக்கிற 2 நாட்களில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, இதுகுறித்து ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன், உரையை முடியுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மேதகு கவர்னர் அவர்கள் நன்றி சொல்லும்போது, கடைசியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன். நீங்கள் பேசுங்கள். *(சுறுக்கீடு)* நேரம் இல்லை. *(சுறுக்கீடு)* உரையை முடியுங்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு கவர்னர் அவர்கள் கடைசியாக நன்றி தெரிவிக்கும்போது, புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையை முடிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் தமிழர்கள் பண்டிகையான பொங்கலை மறந்துவிட்டார்கள். அதனால் 2016 மே மாதத்தில் தேர்தல் நடந்து எங்கள் தலைவர் கலைஞர் வெற்றிபெற்று, புதிய தலைமைச் செயலகத்தில் இதே கவர்னரை வைத்து, பொங்கல் வாழ்த்துக்களைச் சொல்வோம் என்று தெரிவித்து, விடைபெறுகிறேன். உங்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் நீண்ட விளக்கத்திற்கும் நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் லைன் பற்றிச் சொன்னார். அதுகுறித்த மறு அறிக்கை தயார் செய்யப்பட்டது. மத்திய நகர்ப்புறத் துறை அமைச்சர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள் சென்னைக்கு வந்தபோதே ஏற்கெனவே சொல்லியிருக்கின்றார்கள். நிதித் துறைக்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதைத்தான் கவர்னர்

[திரு. பி. தங்கமணி] [2016 ஜனவரி 21

உரையிலே தெரிவித்திருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி அவர்கள் பேசுகிறபோது, ஒரு பதிலை நான் சொல்லியிருந்தேன். அது "சர்ச்சைக்குரிய இடம்" என்று சொல்லியிருந்தேன். அந்தக் கருத்தை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே திருவெண்ணைநல்லூர் கல்லூரிக்கு ஒரு இடம் பார்க்கப்பட்டது. திருக்கோவிலூர் வட்டம், மணக்குப்பம் கிராமத்திலே 5 ஏக்கர் 79 சென்ட் இடம் பார்க்கப்பட்டது. அந்த இடத்திலே, ஏற்கெனவே ஐயனார்கோயில் என்று வழிபாட்டு வந்தார்கள். ஆகவே, அவர்கள் எங்களுக்கு இடம் வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அதனால் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் அவர்களிடம் பேசி, சமாதானம் செய்யப்பட்டது. ஆகவே "சர்ச்சைக்குரிய இடம்" என்பதை மாற்றி, "பிரச்சினைக்குரிய இடம்" என்று மாற்றிக்கொள்ள வேண்டும். தற்போது எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆகவே இப்பொழுது, அப்பணிக்காக டெண்டர் போடப்பட்டுள்ளது. அந்தப் பணிக்கான கோப்பு Tender Committee-ல் உள்ளது. அது வந்தபின்பு பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் இல்லை. திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-வது சட்டமன்றப் பேரவையினுடைய கடைசி கூட்டத் தொடரில், முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்தில் பேசுவதற்கு அனுமதி வழங்கிய தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21] [திரு. க. பாலகிருஷ்ணன்]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற ஆளுநர் உரையில் மக்களுடைய அடிப்படையான, முக்கியமான பிரச்சினைகள் பற்றி எதையும் குறிப்பிடாமல், புதிய திட்டங்கள் அல்லது அதற்கான கொள்கை அறிவிப்புகள் எல்லாம் இல்லாமல், ஐந்து ஆண்டுகளுடைய பணிகளைப்பற்றி, அரசினுடைய பணிகளின் ஒரு தொகுப்பு என்பதைத் தவிர, இன்னும் சொல்லப்போனால், மணம் இல்லாத ஒரு காகிதப் பூவைப் போல இந்த உரை அமைந்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதுபோல தமிழகம் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக்கொண்டுள்ளதா என்று பரிசீலித்தால் ** என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதுதான், இருங்கள்.

பிற்பகல் 2—40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் ஆதாரங்களோடு பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. க. பாலகிருஷ்ணன்: ஆதாரம் என்னிடத்தில் இருக்கிறது. நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு பேசுங்கள். அதுவரைக்கும் அது அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் ஆதாரங்களை என்னிடத்தில் கொடுத்து, நான் ஒப்புக்கொள்ளும்வரை அது அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், ** என்று சொன்னார். ** அவருடைய கையில் இருந்தால் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்து, அவர் ஒப்புக்கொண்ட பின்புதான் இந்தப் பிரச்சினையை எழுப்ப முடியுமே தவிர, அவராக வந்து, சுயமாக ** அவர் பேசுவது முறையாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், அடுத்த சப்ஜெக்ட்டைப் பற்றி பேசுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அதாவது, ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி என்று சொன்னால், மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் என்பதைத்தான் அளவுகோலாகக் கொள்கிறோம். ஆனால், இந்த அவையிலே கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற தணிக்கைத் துறை அதிகாரியினுடைய (CAG) அறிக்கையில் மாநிலத்தினுடைய மொத்த வளர்ச்சி விகிதம் எப்படி இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஆவணம் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய நகல் என்னிடம் இருக்கிறது. 2010–2011 ஆம் ஆண்டு மொத்த வளர்ச்சி விகிதம் என்பது 21.92 சதவிகிதமாக இருந்திருக்கிறது. 2011–2012 ஆம் ஆண்டு வளர்ச்சி விகிதம் 14.7 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. 2012–2013 ஆம் ஆண்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் என்பது 11.64 சதவிகிதமாக இருந்திருக்கிறது. 2013–2014 ஆம் ஆண்டு வளர்ச்சி விகிதம் என்பது 14.68 சதவிகிதம் என்று அதிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மொத்த மாநில உற்பத்தி வளர்ச்சி விகிதம் என்பது 21.92 சதவிகிதமாக இருந்தது. கடந்த 2013–2014 ஆம் ஆண்டில் 14.68 சதவிகிதம் என்ற அடிப்படையில் குறைந்திருக்கிறபோது, இதனை வேகமான வளர்ச்சி என்று ஆளுநர் குறிப்பிட்டிருப்பது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார். எதை வைத்து வளர்ச்சி விகிதம் போடுகின்றார்கள் என்று சொன்னால், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தை பார்க்கின்றபோது,—ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த முறை சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் சொல்லியிருந்தேன். இப்பொழுது உங்களுக்குப் புரிகின்ற மாதிரி சொல்கிறேன். ஒருவர் ஒரு பொருளை—விவசாயமாக இருந்தாலும் சரி, எந்தவொரு தொழிலாக இருந்தாலும் சரி, ஒரு தொழிற்சாலையை வைத்திருப்பவர் இன்றையதினம் ரூ.1 கோடி வைத்திருக்கிறார் என்று சொன்னால், அடுத்த முறை அவர்

2016 ஜனவரி 21] [திரு. பி. தங்கமணி]

ரூ.1¼ கோடியுடன் ரூ.25 இலட்சத்தைச் சேர்த்து அவர் ஒரு முதலீட்டை போட்டார் என்று சொன்னால், அதைவிட ரூ.50 இலட்சம் வைத்திருப்பவர் இன்னொரு ரூ.50 இலட்சத்தைச் சேர்த்துப் போட்டு ரூ.2 கோடிக்கு முதலீடு போட்டால், அதைத்தான் வளர்ச்சி என்பார்கள். இதை வளர்ச்சி இல்லை என்பார்கள். நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். ஏற்கெனவே குறைவாக இருப்பவர், ரூ.50 இலட்சம் வைத்திருப்பவர் இன்னொரு ரூ.50 இலட்சம் போட்டால் அது 100 சதவிகித வளர்ச்சி. ஆனால், ரூ.1 கோடி வைத்திருப்பவர் ரூ.25 இலட்சம் முதலீடு போட்டால் அது 25 சதவிகித வளர்ச்சிதான். அதுதானேயொழிய, நம்முடைய மாநிலம் வளர்ந்து வரும் மாநிலம். நீங்கள் பக்கத்து மாநிலங்களைப் பார்க்கின்றபோது, நம்முடைய மாநிலம் வருடத்திற்கு வருடம் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. நாம் ஏற்கெனவே வளர்ந்திருக்கின்ற காரணத்தால்தான், இப்போது நான் ரூ.25 இலட்சம் என்று உதாரணத்திற்கு சொன்னேனே, அதுபோல இருப்பதுதானேயொழிய, நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சி எந்தவிதத்திலும் குறையவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் என்று சொல்கின்றபோது, ஒட்டுமொத்தமான Gross State Domestic Production என்றுதான் அர்த்தப்படுத்துகின்றார்கள். அந்த அறிக்கையிலே இருக்கின்ற விவரத்தைத்தான் நான் இங்கே சொல்லியிருக்கின்றேன் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்கு மதுவிலக்கு சம்பந்தமாக ஏராளமான விவாதம் இங்கே நடைபெற்றிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே மதுவிலக்கைத் தளர்த்தியதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முக்கியமான பொறுப்பு உண்டு. அதைத் தொடர்வதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் முக்கியமான

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2016 ஜனவரி 21

பொறுப்பு உண்டு என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழக மக்களில் பெரும்பகுதியான மக்கள், குறிப்பாக, சரிபாதி பெண்கள் மதுவிலக்கு வேண்டும் என்று வற்புறுத்துகின்றபோது, அதைப் படிப்படியாகவாவது அமலாக்குகின்ற முறையிலே இந்த அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கு வங்காளம், கேரளா, திரிபுரா போன்ற மாநிலங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். மேற்கு வங்காள மாநிலம் உருவான காலத்திலேயிருந்து அங்கு மது விற்பனை அமலில் இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அல்ல. கேரளா மாநிலம் 1956-ல் உருவானபோதிலேயிருந்தும், அதற்கு முன்பும் அங்கு மது விற்பனை அமலில் இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அல்ல. திரிபுராவும் அதுபோலத்தான். இன்னும் சொல்லப்போனால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோது அப்படி மதுவிலக்கை அமலாக்க வேண்டுமென்கின்ற கோரிக்கை அங்கு எழுப்பப்பட்டிருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அந்த அரசு அதையும் பரிசீலித்திருக்கும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதேபோல், ஜல்லிக்கட்டு எவ்வளவு முக்கியமானது என்பதை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-45

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரிடம் 'ஏன் மேற்கு வங்காளத்தில் நீங்கள் மதுவிலக்கை அமல்படுத்தவில்லை; கேரளாவில் மதுவிலக்கை அமல்படுத்தவில்லை' என்று கேட்டதற்கு, 'நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே அங்கு மதுவிலக்கு அமல்படுத்தப்படவில்லை; அதனால் நாங்களும் அமல்படுத்தவில்லை' என்று சொல்கிறார். அது எந்த அளவிற்கு ஒரு கொள்கை பிடிப்புள்ள பதிலாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. முதலிலேயே இருந்தது. உண்மையிலேயே மதுவிலக்கை அமல்படுத்தும் எண்ணமிருந்தால், இருந்தால் என்ன? நீங்கள் வந்த பின்னர் அதை அமல்படுத்தியிருக்கலாமே?

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அதைத்தான் நான் கேட்கிறேன். அதை நீங்கள் அமல்படுத்தாதபோது, அடுத்தவர்களுக்கு ஆலோசனை எப்படி சொல்ல முடியும்? நீங்கள் முதலில் அமல்படுத்திவிட்டு, அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். சரி, பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி. கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடதுசாரி அரசே ஏற்று மதுவை விற்பனை செய்யவில்லை. அங்கு கள்ளச்சாராய சாவு ஏற்பட்டபொழுதெல்லாம், அதைக் கட்டுப்படுத்தியது என்பதுதான் உண்மை. இங்கு தமிழக அரசே மது விற்கிறது. அதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவுடைமைக் கட்சியினர் கொள்கைப் பிடிப்பு உடையவர்கள். தனியாரை ஊக்கப்படுத்தி தனியாரைக் கொள்ளையடிக்கவிடுகிறீர்கள். இங்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசுத் துறையிலே கொண்டுவந்து தனியார் கொள்ளையடிப்பதைத் தடுத்து, அரசு கஜானாவிற்கு வருவாயைக் கொண்டு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் எது பரவாயில்லை? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசட்டும்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பிரச்சினையில் ஒரு மாநில மக்கள் விரும்பி, கோரிக்கை வைத்து போராட்டம் நடத்துகிறபொழுது, அதை ஒரு ஆட்சி பரிசீலிப்பது என்பது வேறு. இங்கே அந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டு, போராட்டம் நடைபெறுகிறபொழுதுகூட பரிசீலிக்க வேண்டாமா? முழுமையாக

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2016 ஜனவரி 21

நாளைக்கே அமலாக்க வேண்டும் என்பதுகூட இல்லை. படிப்படியாகவாவது, கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது போன்ற நடவடிக்கைகளால் இந்த அரசு மக்களின் உணர்விற்கு மதிப்பளித்து அதைச் செய்ய வேண்டும் என வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, ஜல்லிக்கட்டு சம்பந்தப்பட்ட வரையில், இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக காங்கிரஸ் கூட்டணி அரசுதான் 2011-லே காட்சிப்படுத்தப்படக்கூடாத விலங்குகள் பட்டியலிலே காளைகளையும் சேர்த்து, ஜல்லிக்கட்டு நடத்த முடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்திவிட்டார்கள். இன்றைக்கு உச்ச நீதிமன்றமும்கூட அந்தச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையிலேதான் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆனால், மத்திய அரசு, 2012 என்று வருகிறபோது, அந்தத் திருத்தத்தைக் கொண்டுவருகிற நேரத்தில், அன்றைக்கு இருந்த தி.மு.க. வும் அதை ஆதரித்திருக்கிறது என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அன்றைக்கு அ.இ.அ.தி.மு.க. தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது. எனவே இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசு இந்த ஆண்டு ஒரு நாடகத்தை நடத்துகிறது. ஒரு Notification-ஐ வெளியிட்டுவிட்டு, நாங்கள் ஜல்லிக்கட்டு நடத்தப்போகிறோம் என்று ஒரு நாடகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இந்த நேரத்திலே கேட்டுகொள்வது என்னவென்று சொன்னால், மத்திய அரசை வற்புறுத்துகிற முறையில் அந்தக் காட்சிப்படுத்தப்படக்கூடாத விலங்குகள் பட்டியலிலிருந்து காளைகளை நீக்குவதற்கான சட்டத் திருத்தம் கோரி தமிழக சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை இந்த அரசு கொண்டுவந்தால், அது தமிழக மக்களுடைய உணர்வுகளுக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்திலே ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளச் சேதத்தைப் பற்றி இங்கே நிறைய விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. கடலூர் மாவட்டம் உட்பட, சென்னை உட்பட, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள் எல்லாம் எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்பட்டன என்பது நம் எல்லாருக்கும் மிக நன்றாகத் தெரியும். வழக்கமாக வெள்ளச் சேதம் என்று சொன்னால், சராசரியாக ஒரு வாரம், பத்து நாட்களுக்கு மட்டும்தான் மழை வரும், வெள்ளச் சேதம் ஏற்படும். ஆனால், இந்த முறை சற்றேறக்குறைய ஒன்றரை

2016 ஜனவரி 21] [திரு. க. பாலகிருஷ்ணன்]

மாதங்களுக்குத் தொடர்ந்து மழை பெய்து, அதனால் அளவிட முடியாத சேதம் ஏற்பட்டிருக்கிறது. நமது மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலேயும் வரலாறு காணாத வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கடலூர் மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட அந்த நேரத்தில் நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் அங்கே வந்தார்கள், பணியாற்றினார்கள். அரசு ஊழியர்கள், மின் வாரிய ஊழியர்கள் அனைவருமே பணியாற்றினார்கள் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. அப்போதுதான் நான்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து, எங்களுடைய கோரிக்கைகளைக் கொடுத்தேன். நிலைமை என்னவென்று சொன்னால், குடிசை வீடுகளுக்கு மட்டும்தான் கணக்கெடுப்புப் பணி நடக்கிறது. அரசு ஆணையில் சொல்லியிருப்பதைப்போல, நீர் புகுந்த வீடுகளுக்கும் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையைக் கொடுத்துவிட்டு, அந்தக் கோரிக்கை அங்கிருந்த அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படாத காரணத்தினால்தான், நாங்கள் அங்கே இரவு ஒன்றே முக்கால் மணி வரை போராட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால். . .

பிற்பகல் 2—50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலே வெள்ளத்தால் குடிசைகளுக்கு பாதிப்பு மற்றும் இழப்பீடுகள் பற்றிய சில விளக்கங்களை இங்கே கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடலூர் மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ள பாதிப்பிலிருந்து மக்களை உடனடியாக மீட்டு, அவர்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையையேற்று, அங்கே பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், குடிசைகளை இழந்தவர்களுக்கு இழப்பீடுகளும், அதாவது, ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.196.10 கோடியில்; 1,513 முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகள், 2,35,273 பாதியளவு பாதிக்கப்பட்ட குடிசைகள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

அவர்கள் சொன்ன நீரில் மூழ்கி ய வீடுகள். அதுதானே நீங்கள் சொன்னீர்கள்? குடிசைகள் அல்லாத வீடுகள் பாதிக்கப்பட்டன. அந்தவகையில், 97,227 நீரில் மூழ்கிய வீடுகளுக்கு, அதாவது 56,667 குடிசைகள் மற்றும் 40,560 வீடுகளுக்கு 119.3113 கோடி ரூபாய் நிவாரணம் அளிக்கப்பட்டுவிட்டது என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக மொத்தம், 3,87,702 வீடுகள் பாதிப்படைந்ததாகக் கணக்கிடப்பட்டு, பாதிப்படைந்தவர்களுக்கு உரிய நிவாரணம் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே கணக்கெடுக்கிற சூழ்நிலையில், நீர் புகுந்த வீடுகள் என்று வருகிறபோது, குடிசை வீடுகளாக இருக்கிற வீடுகள்கூட, ஒரு பகுதி வீடுகள் விடுபட்டுப் போயிருக்கின்ற விவரங்களை நாங்கள் அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறோம். அதேபோல, உதாரணமாக அரசு கட்டியிருக்கிற தொகுப்பு வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்திருந்தால், அது கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. 'தானே' புயலால் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. சுனாமியின்போது தொண்டு நிறுவனங்கள் கட்டிக் கொடுத்த வீடுகளெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாமல் அங்கே விடுபட்டிருக்கின்றன. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே சொன்ன விடுபட்டுப்போன வீடுகள், குடிசைகள், பாதிப்படைந்த பகுதிகள் ஆகியவை குறித்து அவர் கைவசம் ஏதாவது குறிப்புகள் இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதை விசாரித்து உரிய நிவாரணத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த விவரங்களை நான் அரசிடம் ஒப்படைக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தத்தில் இந்த ஆளுநர் உரையில் வீடுகள் இழந்ததற்கு, விவசாயம் பாதிக்கப்பட்டதற்கு என எல்லாவற்றுக்கும் சேர்த்து 33,00,000 பேர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கிட்டத்தட்ட 6, 7 மாவட்டங்களைச் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, 60, 70 இலட்சம் மக்களுக்கு, வரலாற்றில் இல்லாத சேதம் ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 60, 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில், 32, 33 இலட்சம் பேர்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கப்பட்டிருப்பது முழுத் தேவையை ஈடு செய்ததாக ஆகாது. அதைச் செய்ய வேண்டுமென்று நான கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், அமைச்சர்கள், அதிகாரிகள் அங்கே வந்து பணியில் ஈடுபட்டார்களே தவிர, இந்தப் பணியை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகளை ஒரு முறையாவது அழைத்து ஆலோசனை நடத்தி, அந்த அடிப்படையில் விவரங்களைக் கேட்டிருந்தால், இப்போது இங்கே வந்து விவரங்களைக் கொடுக்கவில்லை, கொடுங்கள் என்று சொல்லும் நிலையைத் தவிர்த்திருக்கமுடியும். ஏறக்குறைய இந்த இரண்டு மாத காலத்தில் அந்த மாவட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டி இவ்வளவு பெரிய வெள்ள சேதத்திற்கு என்ன காரணம், என்ன நிவாரணம் மேற்கொள்ள வேண்டும் என்று விவாதித்திருக்கலாம். அப்படிப்பட்ட கூட்டம் நடத்தவில்லை என்பதையும், நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதேபோல, இன்றைக்கு, பயிர்களுக்குச் சாகுபடி இழப்பு என்று சொல்கிறபோது, 1,10,000 ஏக்கர் நிலத்திற்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடலூர் மாவட்டத்திலே ஏற்கெனவே அதிகாரிகள் எடுத்த கணக்கைப் பார்த்தாலே, இன்னும் ஒரு இலட்சம் ஏக்கர் விடுபட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சில பேர் இறந்து போயிருக்கிறார்கள். பிரேதப் பரிசோதனை செய்யப்படவில்லை என்கிற காரணத்திற்காக அவர்களது குடும்பத்தினருக்கு நிவாரணம் மறுக்கப்படுகிறது. ஏனென்றால்,

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2016 ஜனவரி 21 வெள்ளத்தில் இருக்கின்றபோது இறந்துபோனவரின் உடலை மருத்துவமனைக்குக் கொண்டு போக முடியவில்லை. மருத்துவர்களும் அங்கே போய்ச் சேர முடியாத அளவுக்கு போக்குவரத்து தடை இருந்தது. பிணத்தை நீண்ட காலம் வைக்க முடியாமல் அடக்கம் செய்துவிட்டார்கள். ஆனால், பிரேதப் பரிசோதனை செய்யவில்லை என்ற காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு நிவாரணம் மறுக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, அரசாணையிலே வெளியிடப்பட்டிருக்கிற. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனித உயிரிழப்பிற்கு வழங்கப்படுகிற ரூ.4 இலட்சம் நிவாரண நிதி அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. இறந்தவரின் குடும்பத்திலுள்ள legal heirs—வாரிசுதாரர்கள் யாரென்பதை நிர்ணயிக்கிற formalities இருக்கிறது. அந்தப் பிரேதப் பரிசோதனை மாத்திரமல்ல;, அவரது வாரிசுதாரர்கள் யாரென்று சட்டப்படி நிரூபிக்க வேண்டிய கடமையிருக்கிறது. அதற்கான process நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. Post-mortem தேவையில்லை. குடும்பத்திலுள்ள சட்டபூர்வமான வாரிசுதாரர்களை நாம் கணக்கிட வேண்டியிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய உரையின்போதே நான் இதுகுறித்து தெரிவித்தேன். மொத்தத்திலே கடலூர் மாவட்டத்தில் உயிரிழப்புகள் 104 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில், 87 குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுத்து முடித்தாகிவிட்டது. நபருக்கு 4 இலட்சம் ரூபாய் வீதம் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி 3.84 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 17 குடும்பங்களுக்குப் பரிசோதனை அறிக்கையை எதிர்நோக்கி நிலுவையிலுள்ளது. பரிசோதனை

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், உரிய நிவாரணம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரேதப் பரிசோதனை செய்ய முடியாமல், உடலை அடக்கம் செய்துவிட்டவர்களின் பெயர்களை அந்தப் பட்டியலில் சேர்க்க முடியாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மத்திய குழுவினுடைய தலைவர் திரு. என்.வி.ஆர். பிரசாத் அவர்களிடமே நாங்கள் இதுகுறித்து முறையிட்டோம். அவர்கள், பிரேதப் பரிசோதனையை இப்போது செய்யுங்கள் என்று சொன்னார்கள். அதுவும் நடைபெறவில்லை. இறந்தவர்களுடைய வாரிசுகள் எல்லோரும் இருக்கிறார்கள்; மனு கொடுத்திருக்கிறார்கள்; தேவையான சான்றிதழ்களையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், இறந்தவர்களுக்கு பிரேதப் பரிசோதனை செய்யப்படவில்லை என்ற காரணத்தால், நிவாரணம் மறுக்கப்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒருவேளை, இயற்கை இடர்ப்பாடு நிதியிலிருந்து உதவ சட்டரீதியான சிக்கல்கள் ஏதாவது இருக்குமென்று சொன்னால், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தாவது, நிவாரணம் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நிவாரணத்திற்கான அரசாணையிலே கூறப்பட்டிருப்பதை முழுமையாக அமலாக்க வேண்டும். உதாரணமாக, வேலை இழந்திருக்கிற விவசாயத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு, 60 முதல் 90 நாட்கள் வரை, ஒரு நாளைக்கு 60 ரூபாய் வீதம் கணக்கிட்டு, நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று இருக்கிறது. இரண்டு மாதங்கள் வேலை இழந்த அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

விவசாயத்திற்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்பிற்கு ஒரு ஏக்கருக்கு சராசரியாக 5,300 ரூபாய் என்று நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 2013 ஆம் ஆண்டு வறட்சியினால் பாதிக்கப்பட்டபோது,

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2016 ஜனவரி 21

இதே அரசு இன்ஷூரன்ஸ் தொகையையும் சேர்த்து, ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் வழங்கியது. (குறுக்கீடு) வறட்சியின்போது, இன்ஷூரன்ஸ் தொகையையும் சேர்த்து ஒரு ஏக்கருக்கு ரூ.15,000 பேரிடர் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. வறட்சியின்போது, பேரிடர் நிதி, இயற்கை பாதிப்பு நிதி, இன்ஷூரன்ஸ் தொகை ஏக்கருக்கு ரூ.8,000 எல்லாம் சேர்த்து வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இன்றைக்கு ரூ.5,300 இழப்பீடு என்பது முழுமையாக ஈடு செய்வதாக இல்லை.

அதைப்போல, கரும்பு, வாழை உள்ளிட்ட இதர பயிர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

அரசு ஆணையிலே, நாற்றங்காலுக்கு நஷ்ட ஈடு இல்லை என்கிற ஓர் அளவுகோல் இருக்கின்ற காரணத்தினால், பல நாற்றங்கால்களுக்கு நஷ்ட ஈடே கிடைக்காத நிலைமை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் தவிர, வாழை போன்ற தோட்டக்கலைப் பயிர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் இங்கே சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நெல் மட்டுமல்லாமல், தோட்டக்கலைப் பயிர்களுக்கும் இழப்பீடு மற்றும் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். புகையிலை, காய்கறிகள், வாழை, பப்பாளி போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் 7,152 ஹெக்டேர் பரப்பில் பாதிப்பு அடைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 9–12–2015–ல் அனுமதி அளிக்கப்பட்ட ரூ.9.4764 கோடியில், இதுவரை ரூ.9.1476 கோடி, 15,982 பயனாளிகளுக்கு நிவாரணமாக அளிக்கப்பட்டுவிட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு வழங்கப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், வழங்கப்பட்டிருக்கிற தொகை, அந்த

2016 ஜனவரி 21] [திரு. க. பாலகிருஷ்ணன்]

நஷ்டத்தை ஈடு செய்யக்கூடிய அளவுக்கு இல்லையென்கிற காரணத்தினால், அதை உயர்த்தி வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்றையதினம் வெள்ள பாதிப்பு சம்பந்தப்பட்ட வரையில், ஏராளமான சிறிய, நடுத்தர தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 5,000 ரூபாய் என்று நம்முடைய குறுந்தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். சிறிய, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், வாடகைக்கு ஆட்டோ, கார் வைத்திருக்கிறவர்கள், வாகனங்கள் வைத்திருக்கிறவர்கள், இப்படி பலருடைய வாகனங்களெல்லாம் சேதமடைந்திருக்கின்றன. இன்றைக்கு அவர்களெல்லாம் வாகனமும் இல்லாமல், தொழிலும் நடத்த முடியாமல் மிகப் பெரிய அல்லலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அனைவருக்கும் அரசு நஷ்டத்தைக் கணக்கிட்டு நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பேரிடர் பாதிப்பு என்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், கடன் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடனை ஒத்திவைத்தாலும், விவசாயிகள் கட்ட வேண்டும் என்கிற காரணத்தினால், குறைந்தபட்சம் பயிர்க் கடன்களையாவது இரத்து செய்வதற்கு அரசு முன்வர வேண்டும்.

இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிற நேரத்தில், அரசு வங்கிகளில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தினம், தினம் ஏலப் பட்டியல் வந்துகொண்டே இருக்கின்றது. அடமானம் வைத்திருக்கிற நகைகளெல்லாம் ஏலம் விடுகிற அறிவிப்பு வந்து கொண்டிருக்கிறது. எனவே, மத்திய அரசோடு பேசி, வங்கிகளோடு பேசி, ஏலம் விடுவதைத் தடுத்து நிறுத்துவதோடு, அந்தக் கடன்களை அடைப்பதற்கு மேலும் ஓர் ஆண்டு அவகாசம் பெற்றுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் நிறுவனங்களுக்குப் புதிய கடன்கள் வழங்குவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான அவகாசங்கள் கொடுப்பதற்கும், வட்டியில்லாத பெருந்தொகை கடன்கள்

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2016 ஜனவரி 21

போன்றவற்றை வழங்குவதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 2004 சுனாமியிலிருந்து இன்றைக்கு 2016 வரை 9 முறை இயற்கை இடர்ப்பாடுகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. 2004–லே சுனாமி, அதற்குப்பிறகு 'நிஷா' புயல், 'நீலம்' புயல், 2010–லே வெள்ளம், 2013–லே மீண்டும் 'தானே' புயல், இப்போது மீண்டும் மழை, வெள்ளம் என்கிற மிகப் பெரிய இயற்கை இடர்ப்பாடுகளினாலே பாதிக்கப்படுகிற மாவட்டமாக அது இருக்கிறது. அந்தப் பாதிப்பு ஏற்படுகிறபோது நிவாரண உதவிகளை வழங்குகிறோமே தவிர, நிரந்தரமாக இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து காப்பாற்றுகிற தடுப்பு நடவடிக்கைகளை அரசு அங்கு மேற்கொள்வதிலே போதிய கவனம் செலுத்தவில்லை. சொல்லப்போனால், ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் பணம் ஒதுக்கி எல்லா பாசன வடிகால், வாய்க்கால்களைத் தூர்வாரினாலே மிகப் பெரிய அளவிற்கு சேதத்தைத் தவிர்க்க முடியும். வீராணம் ஏரியைத் தூர்வாருவதற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கி இன்னும் அந்தப் பணிகள் துவக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: வீராணம் ஏரியைத் தூர் வாருவதற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டதற்குப் பின்னால், தொடர்ந்து அதனுடைய தண்ணீர் சென்னை மாநகரத்திற்கு வரவேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டதனால், அதனுடைய நீர்மட்டம் குறைய வாய்ப்பில்லாமல் இருந்தது. இப்பொழுது மீண்டும் நீர்மட்டம் இறக்கி வைக்கப்படுகின்ற சூழல் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உறுதியாக இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணி ஆரம்பித்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் உரையை முடியுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டியிருக்கிறது. மணியைப் பாருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: வீராணம் ஏரியைத் தூர்வார 40 கோடி ரூபாய் ஒதுக்கியும் இன்னும் பணிகள் துவங்கப்படவில்லை. நெய்வேலி நிலக்கரி நிறுவனம் அங்கே செயல்படுகிற, காரணத்தினால் ஒவ்வோர் ஆண்டும், அதனுடைய நீரை அதிகமாக வெளியேற்றுகிறபோது, மிகப்பெரிய சேதம் ஏற்படுகிறது. எனவே, அந்த மாவட்டத்தினுடைய கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு, நெய்வேலி நிறுவனம் ஓர் ஆண்டுக்கு 10 கோடி, 15 கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கிடும் வகையில், அவர்களோடு பேசி, உரிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, செம்பரம்பாக்கம் ஏரி சம்பந்தப்பட்டவரையில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலுள்ள NLC நிறுவனத்தினுடைய கழிவுநீரை சென்தாள் ஓடையில் விடுகிற சூழ்நிலை ஏற்பட்டு, அது பரணாறில் கலக்கின்றபோது, வெள்ளப்பெருக்காக இந்த மழைக்காலத்தில் ஏற்பட்டிருந்தது. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய உத்தரவின்பேரில், இங்கே தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளை அழைத்துப் பேசி, ஒரு நிரந்தரத் தீர்வாக, அவர்கள் உரிய பணிகளை அங்கு செய்ய வேண்டுமென்று கூறி, அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஏற்கெனவே சென்னை வெள்ளத்தைப்

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2016 ஜனவரி 21

பற்றி மிக நீண்ட விளக்கங்கள் எல்லாம் சொல்லியிருக்கிற காரணத்தினாலே, அதன் விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், இவ்வளவு பெரிய, வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டு, மிகப் பெரிய சேதமும் நாசமும் ஏற்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், அந்த வெள்ளம் ஏற்படுவதற்கு அடிப்படையான காரணங்கள் என்ன என்பதை அரசும் தெரிந்துகொள்ள வேண்டும்; மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும். ஒருவேளை ஏதாவது குளறுபடிகள், ஏதாவது முறைகேடுகள் அங்கே இருந்திருக்கிறதா, கவனக் குறைவு இருந்திருக்கிறதா என்பதைப் பரிசீலிப்பது, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்குக்கூட உதவி செய்யும். எனவே, அந்த அடிப்படையிலே, ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிடுவதன்மூலம் முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவதற்குப் பயன்படும் என்பதை இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலே அடிக்கடி ஏற்படுகிற இயற்கைப் பேரிடர்களைத் தவிர்ப்பதற்கு, மக்களைப் பாதுகாப்பதற்கு, ஒரு நிரந்தரத் தீர்வு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழகக் கடலோரத்தில் வசிக்கும் மக்களின் பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பேரிடர்களின் அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும்விதமாக, உலக வங்கி நிதியுதவியுடன் 1,481.80 கோடி ரூபாய் மதிப்பிலான கடலோர பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்து, அதனடிப்படையிலே, 4 கட்டங்களாக அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள், மீன் வளத் துறை பணிகள், பேரிடர் எதிர்கொள்வதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள், திட்டச் செயல்பாட்டுக்கான நிதியுதவிகள் என்று அந்த நிதி பிரிக்கப்பட்டு,

2016 ஜனவரி 21] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

அதற்கான பணி நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் நான்கு பேர் பேச வேண்டும்.

திரு. க. பாலகிருஷ்ணன்: சற்று இருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் இல்லை. இன்னும் நான்கு பேர் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் உரையை முடியுங்கள். 25 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. க. பாலகிருஷ்ணன்: நீங்கள் இப்படியெல்லாம் செய்தால் நல்லதல்ல. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். நீங்கள் உரையை முடியுங்கள், நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அடுத்து இந்த நேரத்தில், ** ஏற்கெனவே, திருநாள்கொண்டசேரி என்கிற கிராமத்தில்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் நான்கு பேர் பேச வேண்டும். மணியைப் பாருங்கள்.

பிற்பகல் 3–05

திரு. க. பாலகிருஷ்ணன்: உயர் நீதிமன்ற உத்தரவை மீறி இறந்த முதியவரின் பிணத்தைப் பொதுப் பாதையில்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர். இந்த மாதிரி பிரச்சினை பற்றிச் சொல்லும்போது, ஆதாரத்தோடு பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் 25 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் பேசுகிற அளவிற்குப் பேசுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: **

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் அதெல்லாம் பேசக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) 25 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *அந்த உயர் நீதிமன்ற உத்தரவை மீறி அங்கே* **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நீங்கள் என்ன சொன்னீர்கள்?*

திரு. க. பாலகிருஷ்ணன்: *ஆகவே,* **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் பேசுகிற கருத்துகளுக்கு ஆதாரங்கள் வேண்டும். எந்த ஒரு கருத்து சொன்னாலும், ஆதாரம் கொடுத்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *ஆகவே, அதே மாதிரி இப்படித் தொடர்ந்து, இரண்டு நாட்களுக்கு முன்புகூட, மதுரை மாவட்டம், நரசிங்கப்பட்டி குழித்துறையிலே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.*

அதேபோல, சென்னை உயர் நீதிமன்றம் SC/ST Backlog vacancy-ன்படி 26,000 பேருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற உத்தரவை, 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதி வழங்கியிருக்கிறது. அந்த Backlog vacancy இன்னும் நிரப்பப்படாமல் இருக்கிறது.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 125-வது பிறந்த நாள் விழாவை நாடு முழுவதும் கொண்டாடுவது என மத்திய அரசு தீர்மானித்துள்ளது. தமிழகத்திலேயும் அந்த விழாவைக் கொண்டாடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு சம்பந்தப்பட்ட வரையில், ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, மாநில அரசினுடைய பரிந்துரை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21] [திரு. க. பாலகிருஷ்ணன்]

விலையை தனியார் சர்க்கரை ஆலைகள் கொடுக்க முடியாது என்று அடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன. உயர் நீதிமன்றத்தில் தடையாணை வாங்கியிருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், உச்ச நீதிமன்றமே ஏற்கெனவே தீர்ப்பு வழங்கியிருக்கிற சூழ்நிலையில், மாநில அரசு முயற்சி எடுத்தால், நிச்சயமாக அந்தத் தடையை உடனடியாக இரத்து செய்து, அந்த மாநில அரசின் பரிந்துரை விலையைக் கட்டாயம் கொடுக்க வைக்கச் சொல்ல முடியும். எனவே, இதனால் 600 அல்லது 700 கோடி ரூபாய் வரை விவசாயிகளுக்குப் பாக்கி இருக்கிறது. அதேபோல, இன்றைக்கு இருக்கிற உற்பத்திச் செலவுகளுக்கேற்ப ஒரு டன்னுக்கு 4,000 ரூபாய் என்று விலையைத் தீர்மானிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நம்முடைய . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கரும்பு விவசாயிகளுக்கு வர வேண்டிய தொகைக்கு உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருக்கிறார்கள்; மாநில அரசு அதற்கு அழுத்தம் கொடுத்து வாங்கித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, அந்த உறுப்பினர் கேட்டதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். 1,400 கோடி ரூபாய் பாக்கி இருந்தது. இப்போது 629 கோடி ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு குறைத்திருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும், மாநில அரசு அறிவித்த விலையை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வாங்கித் தரும். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. இப்போது இருக்கின்ற சூழ்நிலை அப்படி. இப்போது சர்க்கரை விலை குறைந்துவிட்ட காரணத்தால், சர்க்கரை ஆலைகள் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குகின்ற காரணத்தால், அவர்களால் இந்த விலையைக் கொடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இருந்தாலும், நாங்கள் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றோம். நிச்சயமாக, மாநில அரசினுடைய ஆதார விலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெற்றுத் தரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே வேலைவாய்ப்பு கிடைக்காமல் இளைஞர்கள் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். அரசு அலுவலகங்களிலே, ஏற்கெனவே வெளியிட்ட கணக்கின்படி, பல ஆயிரம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. புதிய வட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்குப் புதிதாகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்று சொன்னால், அதுமாதிரி செய்திகள் ஒன்றும் இல்லை. எனவே, வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கு, புதிய காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அரசுடைமையாக்கப்பட்டு அதற்கு நிதியுதவியெல்லாம் செய்தாலும்கூட, இன்றைக்கும் நிதி நெருக்கடியினால் அந்த நிருவாகம் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாதா மாதம் சம்பளம் கொடுப்பதற்குக்கூட வழியில்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இதற்கெல்லாம் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.

திரு. க. பாலகிருஷ்ணன்: முடித்துவிடுகிறேன். ** *(குறுக்கீடு)* ஆம், அரசிடம் அறிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்ற அறிக்கை இருந்தால் என்னிடம் காட்டுங்கள். அப்போதுதான் அவைக் குறிப்பில் ஏறும்.

திரு. க. பாலகிருஷ்ணன்: ஆகவே, இப்போது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21]

திரு. க. பாலகிருஷ்ணன்: ஒரே ஒரு விஷயம். இப்போது அங்கே எல்லா கட்டமைப்பு வசதிகளையும் கொண்டிருக்கிற பெரிய ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருக்கிறது. எனவே, அந்த மருத்துவமனையை, முழுமையான அரசு மருத்துவமனையாக, மருத்துவத் துறையின்கீழ் கொண்டுவந்து, சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையாக உயர்த்தினால், அந்தப் பகுதி முழுவதும் பயன்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஏற்கெனவே தனியார் வசம் இருந்தது. அங்கிருக்கக்கூடிய பிரச்சினையை அறிந்துதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலே இல்லாத அளவிற்கு ஒரு தனியார் பல்கலைக்கழகத்தை அரசு பல்கலைக்கழகமாக மாற்றினார்கள். தனியார் பல்கலைக்கழகத்தை முதன்முதலில் அரசு பல்கலைக்கழகமாக மாற்றிய பெருமை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களையே சாரும். அந்தவகையில், அது மாறியதன் காரணமாக, அந்தப் பல்கலைக்கழகத்தின் சம்பளத்திற்கான நிதியினைத் தவறாமல் அளித்து வருகிறது. நேற்றைய ஆளுநர் உரையில்கூட இந்தப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.476.64 கோடி நிதி உதவியாக வழங்கியிருப்பது இடம்பெற்றுள்ளது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், உயர் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 13 பல்கலைக்கழகங்களில் மற்ற பல்கலைக்கழகங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதிகமான நிதி உதவியை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குதான் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கி வருகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்வாணையமாக நமது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயல்பட்டு வருகிறது. ஆனால் மாநிலம் முழுவதற்கும் அதற்கான தலைமை அலுவலகம் சென்னையிலே இருக்கின்ற காரணத்தினால், குமரியிலே இருக்கின்ற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் சென்னைக்கு வந்துதான் அவர்களுக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களைப் பெறுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. மண்டல அளவில் அலுவலகங்களைப் பிரித்து வைத்தால், வெளி மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய இளைஞர்களுக்கு, பெண்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், ஏற்கெனவே கடல் நீர்வழிப் போக்குவரத்து அறிவிக்கப்பட்டது, இன்னும் துவங்கப்படாமலேயே இருக்கிறது. மோனோ இரயில் திட்டமும் அப்படியே இருக்கிறது. அதேபோல், கடந்த 10 ஆண்டுகளாக தி.மு.க. ஆட்சியில் தொடங்கி இப்போது வரை வன உரிமைச் சட்டம் அமலாக்கி, ** என்று சொல்லப்படுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அந்தச் சட்டத்தை அமலாக்கிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கூறுவதற்கு எல்லாம் என்ன ஆதாரம் இருக்கிறது? நீங்கள் ஏதேதோ சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ** என்பதற்கு ஆதாரம் இல்லாததால், அது, அவைக் குறிப்பில் இருக்காது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21]

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, வன உரிமைச் சட்டம் என்பது இன்னும் அமலாக்கப்படாத நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையை முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல், மத்திய அரசும் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்துக்கொண்டிருக்கின்ற நிலைமையில் இருக்கிறது. காவேரி மேம்பாட்டு ஆணையம் அமைக்கவில்லை; காவேரி நீர் ஒழுங்குமுறை குழுவை அமைக்கவில்லை; இலங்கை இராணுவத்தினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கு உருப்படியான நடவடிக்கை எடுக்காத நிலைமை இருக்கிறது; ஏற்கெனவே காங்கிரஸ் அரசிடம் இருந்த அதே அணுகுமுறையைத்தான் தற்போதுள்ள பா.ஜ.க. அரசும் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய பாரம்பரியமான ஜல்லிக்கட்டு விழாவை நடத்துவதற்குக்கூட அவர்கள் உருப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை. மாநில அரசுக்குக் கூடுதலான நிதிச் சுமையை உருவாக்குகிற முறையில் மத்திய அரசின் அணுகுமுறை இருக்கிறது. இவையெல்லாம் ஆளுநர் உரையில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை நிறைவேற்றி, மாநிலத்தின் வருவாயினை சுருக்குகிற முறையில் மத்திய அரசு வேகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. 14 வது நிதிக் குழு பரிந்துரையின் அடிப்படையிலே, கூடுதல் நிதிப் பகிர்வை மறுத்து, கூடுதலான நிதிச்சுமையை தமிழக அரசின் தலையில் சுமத்தியிருக்கிறது. உணவு விநியோகம், மண்ணெண்ணெய் விநியோகம் போன்றவையெல்லாம் வெட்டப்பட்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

என் கேள்வியென்னவென்றால், தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்துக்கொண்டிருக்கின்ற இப்படிப்பட்ட மத்திய அரசின்மீது, இந்த ஆளுநர் உரையிலே குறைந்தபட்ச கண்டனமோ அல்லது வற்புறுத்தலோ இல்லாமல், வெறும் பாராட்டு தெரிவிக்கின்ற தொனியில் ஆளுநர் உரை அமைந்திருப்பது, வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அணுகுமுறை, தமிழக நலனுக்கு விரோதமானது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2016 ஜனவரி 21

அதேபோல், மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவு செய்து உரையை முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசி பாயின்ட். மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கு இருக்கின்ற 60 சதவீத ஊனத்தை 40 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன உரிமைச் சட்டம் அமலாக்கப்படவில்லையென்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வலியுறுத்திச் சொன்னார்கள். வன உரிமைச் சட்டத்தின்கீழ் ** குறித்து, சென்னை உயர் நீதிமன்றம் தடையாணை அளித்ததால், உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு மேல்முறையீட்டினை செய்துள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கிடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது அது உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டிற்குப் போயிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 3–15

திரு. க. பாலகிருஷ்ணன்: உரையை முடித்துவிடுகிறேன். இருந்தாலும், உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதல் அடிப்படையில் அதைக் கொடுப்பதற்கான வழி இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜனவரி 21] [திரு. க. பாலகிருஷ்ணன்]

ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கு இருக்கிற 60 சதவிகித ஊனம் என்பதை 40 சதவிகிதமாகக் குறைத்திட வேண்டுமென்கிற கோரிக்கையை ஏற்று, மாற்றுத் திறனாளிகளின் சட்டத்திற்கே முரணாக இருக்கிற சில விதிகளைத் தளர்த்தி, மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் இந்த உதவித் தொகை கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், மதுவிலக்கு தளர்த்தப்படுவதனால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உரையை முடியுங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும்.

திரு. க. பாலகிருஷ்ணன்: இன்றைக்குத் தமிழ்நாட்டில் கனிம வளம் என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. சகாயம் அவர்களின் அறிக்கை நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் புதுப் புது சப்ஜெக்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லி உரையை முடிக்கிற மாதிரித் தெரியவில்லை.

திரு. க. பாலகிருஷ்ணன்: நன்றி சொல்லி உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: ஆகவே, கனிம வளம் சம்பந்தப்பட்ட வரையில் முழுமையான விசாரணை தமிழகம் முழுவதும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தத்தில் இந்த உரை, ஒரு பழமொழி சொல்வதைப்போல, "உழவடை நேரத்திலே ஊர் சுற்றிவிட்டு, அறுவடை நேரத்திலே அரிவாளை எடுத்துக்கொண்டு போனதைப்போல" அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லி, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய 5 ஆண்டு கால சாதனை மிகுந்த ஆட்சியில், தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் குடும்பங்களிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நலத் திட்டங்கள் உள்ளே உட்கார்ந்துகொண்டு அவர்களுக்குப் பயனளித்துக் கொண்டிருக்கின்றன என்பதனை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திமுக. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தினுடைய நெல் உற்பத்தி 70 இலட்சம் மெட்ரிக் டன்னாகத்தான் இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், அம்மா அவர்கள் எடுத்த நல்ல பல நடவடிக்கைகளின் காரணமாக, இப்பொழுது 120 இலட்சம் மெட்ரிக் டன்னை எட்டிக் கொண்டிருக்கிறது என்பதனை நான் இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய பயன்கள், சாதனைகள். இவற்றையெல்லாம் மறந்துவிட்டு, பழமொழி எல்லாம் இங்கே சொன்னீர்கள் என்றால், இந்த பழமொழி வெளியே சொல்வதற்குத்தான் நன்றாக இருக்கும். இங்கே எடுபடாது, மக்கள் இதை நம்பமாட்டார்கள். (குறுக்கீடு) எப்பொழுதும்போல அண்ணன் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், உள்ளே ஒன்றை வைத்து, வெளியே ஒன்றைப் பேசுவது என்கிற நடைமுறையை கடைப்பிடிக்கிறார் என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கனிம வளத்தைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றை மட்டும் இந்த அவையிலே புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து இதே குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். கடந்த மைனாரிட்டி

2016 ஜனவரி 21] [திரு. பி. தங்கமணி]

தி.மு.க. ஆட்சியில் கிரானைட் தொழில் நன்றாக இயங்கிக் கொண்டிருக்கின்றபொழுது, அரசுக்குக் கிடைத்த வருவாய் 670 கோடி ரூபாய். ஆனால், 2012–ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விசாரணை நடத்தி, அதை நிறுத்தியதற்குப் பிறகும்கூட, இன்றளவும் 1,000 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்று சொன்னால், எந்த ஆட்சி சிறப்பாக கனிம வளத் துறையில் நிருவாகம் செய்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் அதிலே தெளிவாக இருக்கின்ற காரணத்தினால்தான், கிரானைட் தொழில் இல்லாமல் இப்பொழுது 300 கோடி ரூபாய் அதிக வருமானம் அரசுக்கு வந்திருக்கிறது என்பதையும் தாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து கனிம முறைகேடு, முறைகேடு என்று சொல்வது கடந்த கால ஆட்சியில் வேண்டுமானால் நடந்திருக்கலாமே தவிர, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். திரு. குணசேகரன், பேசுங்கள். நேரமாகிவிட்டது. இன்னும் 4 பேர் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, என்ன சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் பேசிய பொருள் நீதிமன்றத்தில் இருப்பதால், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், பேசுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற வகையில், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச அனுமதித்ததற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையில், தமிழக அரசினுடைய சாதனைகளைச் சொல்வதைவிட,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் இதே தமிழக சட்டமன்றப் பேரவையில் அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல தீர்மானங்கள், பல கோரிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இன்றளவும் செயல்படுத்தாத பல அம்சங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 3–20

குறிப்பாக, பக்கத்திலே இருக்கக்கூடிய இலங்கையிலே நடைபெற்ற ஈழத்தமிழர் படுகொலை; அதற்கான நீதி விசாரணை இன்னும் முடிவுறாமல், அங்கே தமிழ் மக்கள் உரிமைகளை இழந்து வாழ்கின்ற நிலை நீடித்துக் கொண்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல; தமிழகத்தினுடைய கடற்கரையோரங்களில் இருக்கக்கூடிய மீனவர்கள் இன்றளவும், மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பின்னாலும், அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலையில், தினந்தோறும் மீன்பிடிக்கச் செல்பவர்கள் வீடு திரும்புவார்களா என ஐயுறும் அவலம் ஏற்படுகிறது. மீனவர்கள் கைது செய்யப்படுவதும், பின்னர் விடுதலை செய்யப்படுவதும், படகுகள் உடைக்கப்படுவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அதைப்போல, உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழி வழக்காடு மொழியாக உருவாக்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. தமிழகத்தினுடைய நதிகள் இணைக்கப்பட வேண்டுமென்ற கொள்கை, 20ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே முன்வைக்கப்பட்டும், இன்றளவும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல், அதற்கான நிதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற நிலையோடு அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதோடுமட்டுமல்ல; பாரதிய ஜனதா கட்சியினுடைய மத்திய அரசாங்கத்தின் புதிய நிதிக் கொள்கை, மாநில அரசாங்கத்தினுடைய வருவாயைக் குறைத்திருக்கிறது என்பதை ஆண்டுதோறும் ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறோம்.

2016 ஜனவரி 21] [திரு. சு. குணசேகரன்]

அதைப்போல, பெரியாறு அணையில் மத்தியப் பாதுகாப்புப் படையை நிறுத்துவது உள்ளிட்ட பிரச்சினைகள், காவேரி மேலாண்மை வாரியம், நீர்க் கண்காணிப்புக் குழு அமைப்பது போன்ற பல்வேறு பிரச்சினைகள்; இப்படி மத்திய அரசைக் கேட்டுக் கேட்டு, அலுத்து, மீண்டும் அதே வாசகங்கள் இந்த ஆளுநர் உரையில் ஏற்றப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில்தான் மத்திய பாரதிய ஜனதா அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை மிகவும் குறைந்திருக்கிற இந்த நேரத்தில், பெட்ரோல் விலையைக் குறைக்காமல், Excise Duty, VAT வரிகளை மத்திய அரசு உயர்த்தியிருக்கின்றது. நவம்பர் மாதம் பெட்ரோலுக்கு ரூ.29.20 ஆக இருந்தது; இன்றைக்கு அதை ரூ.45.48 ஆக உயர்த்தியும், அதைப்போல, டீசலுக்கு ரூ.15.51 ஆக நவம்பர் மாதம் இருந்த கலால் வரி, VAT வரியை இன்றைக்கு ரூ.31.89 ஆக உயர்த்தியும் இருக்கிறது. அந்தவகையில், இன்றைக்கு மக்களுடைய உழைப்பைச் சுரண்டுவது மட்டுமல்ல; மாநில அரசினுடைய நிதியாதாரத்தை நிர்மூலமாக்கியிருக்கிறது.

இப்படிப்பட்ட பாரதிய ஜனதா அரசினுடைய ஒரு மோசமான பொருளாதாரக் கொள்கை, தமிழ்நாட்டு நலன்களைப் புறக்கணிக்கிற இந்தக் கொள்கை நீடித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் கடிதம் எழுதுகிறார் என்று ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் உங்களுக்கு 37 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்து அனுப்பியிருக்கிறார்கள். இந்த 37 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இந்தக் கருத்துகளை வலியுறுத்தி, பாரதிய ஜனதா கட்சியினுடைய தமிழ் மக்களுக்கெதிரான, தமிழின விரோத நடவடிக்கைகளை, அதைப்போல, பொருளாதாரக் கோட்பாடுகளை எதிர்த்து நாடாளுமன்றத்திலே அழுத்தமாக பேசியிருக்கிறார்களா என்று சொன்னால், வருத்தத்தோடு, 'இல்லை' என்பதைத்தான் பதிலாகச் சொல்லும் நிலை அமைந்திருக்கிறது. எனவே, தேர்தலிலே வெற்றி பெறுவது என்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றப் பணிகளை முழுவதும்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2016 ஜனவரி 21

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக இருந்து பார்த்துவிட்டு வந்ததுபோலப் பேசுகிறார். எதை வைத்துக்கொண்டு அவர்கள் அங்கு பேசவில்லை என்று சொல்கிறீர்கள்? நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, ஆணையைப் பெற்று, அங்கே எல்லாப் பிரச்சினைகளையும் எழுப்பி வருகிறார்கள். மாநிலத்தினுடைய நலன், தமிழர்களுடைய நலன் பாதிக்கப்படுமானால், முதலிலே எதிர்ப்புக் குரல் கொடுப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தவறான செய்திகளை இங்கே பதிய வைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அங்கே பேசி பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கு பேசுவது மட்டுமல்ல; அதற்கொரு அழுத்தம் கொடுத்து, இந்தக் கருத்துகளைப் பிரதிபலிக்கும் விதமாக, (குறுக்கீடுகள்) நாடாளுமன்றம் எது எதற்கோ முடக்கப்படுகிறது. ஆனால், 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் மக்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகிற இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு நாளும் அதற்காகக் குரல் கொடுத்து, நாடாளுமன்றத்தின் முன்பாக ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தி, எதையும் செய்தது கிடையாது. எப்படி இது பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை முழுவதுமாகப் படித்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டும். தமிழர்களுடைய நலன் கிஞ்சிற்று பாதிக்கப்படுமேயானாலும்கூட, முதல் குரலை நீங்கள்தான் எழுப்ப வே என்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவான ஆணையை வழங்கியிருக்கிறார்கள்; உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே எந்த அரசு என்று கணக்கில்லை; எந்தக்

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

கட்சி என்று பார்ப்பதில்லை. மொத்தத்தில் தமிழர்கள் நலன் காப்பது ஒன்றுதான், பாதுகாப்பது ஒன்றுதான் முக்கியம். தமிழர்களுடைய வாழ்வுரிமைப் பிரச்சினைகளிலே, ஒட்டுமொத்த தமிழர்களுடைய நலன் காக்கின்ற வகையில், அதற்குக் குரல் கொடுக்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மிகச் சிறப்பாக நாடாளுமன்றப் பணிகளை, 37 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 37 வீரர்களாக, சொக்கத் தங்கமாக இருந்து, அங்கே மத்திய அரசுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீங்கள் இங்கே வந்து ஏதாவது கதை விடாதீர்கள்.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *அதேபோல, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு போன்றவை தமிழக மக்களுடைய வீர விளையாட்டு மட்டுமல்ல; தமிழர் பண்பாட்டின் அடையாளக் குறியீடுகள். ஆனால், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மாடுகளுக்கும், நமக்கும் உள்ள உறவை எடுத்துக்காட்டுகின்றவிதமாக, தமிழ் கலாச்சாரத்தோடு பின்னிப் பிணைந்திருக்கின்ற குறியீடு. ஆனால், கடந்த காங்கிரஸ்–திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அதனுடைய உச்சகட்டமாக வனப் பாதுகாப்புச் சட்டத்தில் காளை மாடுகளைச் சேர்த்து, ஜல்லிக்கட்டு விளையாட்டு தடை செய்யப்பட்டது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்தப் பாதுகாப்புச் சட்டத்தினை, ஓர் அவசரச் சட்டத்தின் மூலமாக மத்திய அரசு திருத்தி, இந்த உரிமையைப் பெற்றுத் தருவதற்குப் பதிலாக, ஏதோ, ஜல்லிக்கட்டு ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும், நடைபெறும் என்று–திரைப்பட நடிகர் வடிவேலு அவர்கள் 'வரும், ஆனால் வராது' என்று சொல்வது போல் சொல்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திருத்தத்தை ஏற்றுக்கொள்கிறேன், திரைப்பட நடிகர் என்னத்த கண்ணையா அவர்கள் சொல்வது போன்று சொல்கிறது, அதுவும் இந்த ஆண்டு தடை நீக்கப்பட்டது என்று பரபரப்பாகச் சொல்லி, அரசு வனப் பாதுகாப்புச் சட்டம் இருக்கின்ற நேரத்தில், மத்திய அரசு ஓர் அவசரச் சட்டத்தை நிறைவேற்றி, அதன் மூலமாக*

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

அந்தத் தடையை நீக்குவதற்குப் பதிலாக, பாரதிய ஜனதா கட்சி ஏதோ ஓர் ஏமாற்று வித்தையை நடத்தி, இன்றைக்கு மீண்டும் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மற்றும் மஞ்சுவிரட்டுக்கு தடையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால், உண்மையிலேயே உச்ச நீதிமன்றம் தடையை நீட்டித்திருந்தாலும், ஒரு தேசிய இனத்தினுடைய பண்பாடு, கலாச்சார நிகழ்வுகளை, குறியீடுகளைத் தடுப்பதற்கு எந்தவொரு அரசியல் சட்டத்திலும் இடமில்லாத நிலையில், PETA நிறுவனம் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களுடைய சூழ்ச்சி வலையால், இன்றைக்குத் தமிழ் மக்களுடைய ஜல்லிக்கட்டு விழா தடை செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில், காவல் துறை பொங்கல் விழாவின்போது, நான்கு நாட்களிலும் வேறு சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளைப் பார்ப்பதை விட்டுவிட்டு, இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மாடுகளை பிடித்துக்கொண்டுகூட போக விடவில்லை. ஜல்லிக்கட்டு விளையாட விடுவது வேறு. நாங்கள் சிவகங்கை மாவட்டத்தில் சமத்துவப் பொங்கல் விழா நடத்தினோம். அந்த விழாவில் ஊர்வலம் போகும்போதெல்லாம் ஒரு காளை மாட்டை கையில் பிடித்துக்கொண்டு போவது வழக்கம். அது ஜல்லிக்கட்டும் இடையாது; மஞ்சுவிரட்டும் இடையாது. நாங்கள் காளை மாட்டைக் கையில் பிடித்துக்கொண்டு போகும்போது, மாட்டைப் பிடித்துக்கொண்டுகூட ப் போகக்கூடாது என்று தடுத்து நிறுத்துகிறார்கள். இப்படி காளை மாடுகளைப் பிடித்துக் கொண்டு போவதற்குக்கூட தடையை ஏற்படுத்துவது என்பது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நீங்கள்தான் எங்களுக்குச் சொல்ல வேண்டும். மத்திய பாரதிய ஜனதா அரசு ஒரு படி மேலே போய் தடை செய்தாலும்கூட, நமக்காக நீங்கள் இரண்டடி முன்னே போய். .

.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் ஜல்லிக்கட்டுபற்றிப் பேசும்போது, காளை மாடுகளை கையில் பிடித்துக்கொண்டு போவதைக்கூட தடை செய்கிறார்கள் என்ற கருத்தினைச் சொன்னார்கள். அதுபோன்று எங்குமே

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நடைபெறவில்லை. இரண்டு காளை மாடுகளை வண்டியில் பூட்டிக்கொண்டு ஜம், ஜம் என்று விவசாய வேலைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; வயலில் உழுதுகொண்டிருக்கிறார்கள்; எல்லா வேலைகளையும் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள் என்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: பொங்கல் தினத்தன்று நான் நடத்திய ஊர்வலத்தில் இருந்த காளை மாட்டை, ஊர்வலத்தில் அனுமதிக்க முடியாது என்று சொல்லி காவல் துறையினர் அந்த மாட்டை கொண்டுபோனபோது, கடைசியாக ஒரு புகைப்படம் மட்டும் எடுத்துக்கொண்டு அந்த மாட்டை விட்டுவிட்டு வந்தேன். இது எனக்கு ஏற்பட்ட அனுபவம். இதுதான் தமிழ்நாடு முழுவதும் நடந்தது. இப்படி, ஜல்லிக்கட்டுக்குத் தடை என்றால், மாட்டுக்கே தடை என்ற அடிப்படையில் செயல்படும் காவல் துறையின் நடவடிக்கைகள் உகந்ததாக இல்லை. அதை நீங்கள்தான் சரிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, வெள்ள பாதிப்பு குறித்து இன்றைக்கு நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. வெள்ள நிவாரணங்களில் பல குறைபாடுகள் இருந்தாலும், அதை சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயிர்க் கடன், குறு, சிறு கடன்கள் ஒத்திவைக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, அக்கடன்களை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தாம்பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ள நிவாரணங்களில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்கின்றார். இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாக இருக்கின்றவகையிலே, 30 இலட்சம் பேர்களுக்கு வங்கிக் கணக்கில் வரவு வைத்து, எள் முனையளவுகூட குற்றம், குறை சொல்ல முடியாத அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணம் வழங்கிய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஜனவரி 21

அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

பிற்பகல் 3–30

திரு. சு. குணசேகரன்: அதைப்போல, மழை, பெருமழை, வெள்ளம் பாதித்த பகுதிகளான சென்னை, கடலூர் போன்ற மாவட்டங்களில் மட்டுமல்லாமல், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட தொடர் மழையாலும் மானாவாரிப் பயிர்கள் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அங்கு இருக்கிற விவசாயிகள் எல்லோரும் தங்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய பாதிப்படைந்த மானாவாரிப் பயிர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடுமையான வறட்சி இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. எனவே, வறட்சி நிவாரணமும் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினை. மாநில அரசும், மத்திய அரசும் இணைந்து ரூ.2,850 விலை கொடுத்திருக்கின்றன. தமிழகத்தில் கிட்டத்தட்ட 21 தனியார் ஆலைகள் இருக்கின்றன. சரிபாதிக்கும் மேலான பரப்பளவு கரும்பு விவசாயிகள் தனியாரிடம்தான் இருக்கிறார்கள். ஆனால், அந்த ஆலைகள் கடந்த ஆண்டு மாநில அரசின் விலையை ஏற்றுக்கொண்டு கொடுக்கவில்லை; இந்த ஆண்டும் கொடுக்கமாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டன. இந்த ஆண்டு, மத்திய அரசு அறிவித்த விலைக்குக் கீழாகவே கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், இதுவரைக்கும் மாநில அரசு இதைப்பற்றி எந்தவிதமான அக்கறையும் செலுத்தவில்லை; நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாக்கிப் பணம் ஒரு பக்கம் ரூ.1,000 கோடியைத் தாண்டி நின்றுகொண்டிருக்கிறது.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ.1,000 கோடிக்கு மேல் தாண்டியிருக்கிறது என்கிறார். எந்த அடிப்படையில் அவர் இவ்வாறு சொல்கிறார் என்று தெரியவில்லை. நான் இப்போதுதான் நிலுவை ரூ.629 கோடி என்று சொன்னேன். பொத்தாம்பொதுவாக நீங்கள் 1,000 கோடி ரூபாய் என்று சொல்லக்கூடாது. 629 கோடி ரூபாய்க்கு நான் ரெக்கார்டு தருகிறேன். 629 கோடி ரூபாய் நிலுவை இருக்கிறது என்றுதான் நாங்கள் சொல்கிறோம்.

அதேபோன்று, மாநில அரசு பரிந்துரைகளின்படி நாங்கள் நிச்சயமாக வாங்கித் தருகிறோம். இந்த நிலை தமிழ்நாட்டில் மட்டுமல்ல; ஏதோ நம்முடைய மாநில அரசு வாங்கித் தரவில்லை என்பது மாதிரி அல்ல; இன்றைக்குள்ள இந்தச் சூழ்நிலையில், வியாபாரம் சரியில்லை, சர்க்கரையின் விலை குறைந்துவிட்டது, அவர்கள் அதனை ஸ்டாக் வைத்திருக்கிறார்கள், அதனால் கொடுக்க முடியவில்லை, வேண்டுமானால் சர்க்கரையை எடுத்துக்கொண்டு, பணத்தைக் கொடுங்கள் என்கின்றனர். யார் பணம் கொடுப்பது? எந்த வங்கியில் பணம் கொடுக்கிறார்கள்? எந்த வங்கியும் பணம் தர மாட்டேன் என்கிறது. எந்தச் சூழ்நிலையிலும் ஆலைகள் பணம் தரமாட்டோம் என்று சொல்லவில்லை. நீங்கள்தான் தனியார் ஆலைகள் பணம் தர மறுக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள். அதை வாங்கித் தருவது எங்களுடைய பொறுப்பு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பொறுப்பு. நாங்கள் கண்டிப்பாக வாங்கிக் கொடுப்போம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. திரும்பத் திரும்ப நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்கு 2,850 ரூபாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலத்தில் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதைச் சொல்லுங்கள். மாநில அரசினுடைய விலையே அங்கு கிடையாது. மத்திய அரசினுடைய விலை ரூ.2,300–ஐ மட்டும்தான் கொடுக்கிறார்கள். அதற்கு மேல் revenue sharing method–க்குப் போய் விட்டார்கள். அங்கெல்லாம் விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான் ரூ.2,850 கொடுத்து வருகிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது. உத்தரப்பிரதேசத்தில் கொடுக்கப்படுகிறது என்றால், அதில் மூன்று variety

[திரு. பி. தங்கமணி] [2016 ஜனவரி 21

வைத்திருக்கிறார்கள். அதாவது, early variety, middle variety, rejected variety என வைத்திருக்கின்றார்கள். நல்ல variety–க்குத்தான் 2,800 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான் ரூ.2,850 கொடுக்கிறார்கள். நீங்கள் தொடர்ந்து மாநில அரசு வாங்கித் தரவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். மாநில அரசு அழுத்தம் கொடுக்கவில்லை எனக் கூறுவது தவறான கருத்து என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிக்கு வந்தவுடனேயே, விவசாயிகளுடைய நலனுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் கூட்டுறவு வங்கி மூலமாகக் கடன் கொடுக்கிற அத்தனை விவசாயிகளுக்கும் ஆண்டுக்கு 3,000, 3,500, 4,000, 5,000 கோடி என அறிவித்து, 5,500 கோடி ரூபாய் வரையிலும் இந்த ஆண்டு அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு, அதனை நபருக்கு ஒரு இலட்சமாக அறிவித்திருக்கிறார்கள். இதுமாதிரி அறிவித்து, அந்தத் தொகையை குறுகிய காலத்தில் கட்டுகிறவர்களுக்கு வட்டியே இல்லை என்று ஒரு அறிவிப்பும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இது மாதிரி அறிவிக்கவில்லை. இந்த 4½ ஆண்டுக் காலத்தில் வட்டியில்லா பயிர்க் கடன் பெற்றிருக்கிற விவசாயிகள் எத்தனை பேர்கள் என்றால், 48,89,885 ஆகும். இதன்மூலமாக 22,058 கோடியே 61 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் தள்ளுபடி செய்யச் சொல்கிறீர்கள். சங்கத்திற்கு என்று சொந்த நிதி கிடையாது. மாநில வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்கும், மாவட்ட வங்கியிலிருந்து 4,455 தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் நிதி போயிருக்கிறது. இதன்மூலமாகக் கொடுக்கிற கடன்கள், விவசாயிகளுக்கு உரிய வகையில் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம். இதை நாங்கள் போடவில்லை. கூட்டுறவுச் சங்கம் கொடுக்கின்ற கடன்களைத் தள்ளுபடி செய்யக்கூடாது என்று மத்திய ரிசர்வ் வங்கியும், நபார்டு வங்கியும் ஓர் அறிக்கை கொடுத்திருக்கின்றன.

2016 ஜனவரி 21] [திரு. செல்லூர் கா. ராஜு]

இது நாங்கள் கொண்டு வந்தது இல்லை. மைனாரிட்டி ஆட்சியான கருணாநிதி ஆட்சிக் காலத்தில், நீங்கள் எல்லாம் அப்போது அவர்களுடன் துணை இருந்தீர்கள். அப்போதுதான் அந்தச் சட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால், இன்றைக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

பிற்பகல் 3–3.5

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் உரங்கள், வாடகைக்கு உழவு இயந்திரங்கள் கொடுத்து, சிறு, குறு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரைக்கும், தங்கள் உற்பத்திப் பொருட்களைக் கிடங்கில் வைத்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளது. தற்போது, கிட்டத்தட்ட 3,879 கிடங்குகள் வரை மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு வைக்கப்படுகிற பொருட்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தானிய ஈட்டுக் கடன் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிக் கொடுத்ததால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இதுவரை எந்த விவசாயியும் பாதிக்கப்படவில்லை; தள்ளுபடி கேட்கவும் இல்லை. கடந்த மாதம் வரை 82.5 சதவீதம் வாங்கிய கடனை விவசாயிகள் சரியாகக் கட்டியிருக்கிறார்கள். தேர்தலுக்காக ஏதாவது பேசி மக்கள் மத்தியில் நன்மை தேடலாம் என்று நினைத்தீர்களானால், அது நடக்காது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன பேச வேண்டுமென்று நினைத்தேனோ, அதையே மறந்துவிட்டேன். கடந்த ஆண்டும் கரும்புக்கு விலை கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் நினைவில் வைத்துக்கொண்டு, உடனடியாக வாங்கிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, நெல்லுக்கு விலை ரூ.1,510 என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேளாண்மை பல்கலைக்கழகம் ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்வதற்கு ரூ.1,450 செலவு என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார்கள். எம்.எஸ். சுவாமிநாதன் அறிக்கையின் அடிப்படையில், உற்பத்திச்

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

செலவோடு 50 விழுக்காடு சேர்த்துதான் விலை கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால், ரூ.2,175 நீங்கள் கொடுத்தால்தான் கட்டுப்படி ஆகும். எனினும், மாநில அரசு கூடுதலாக ரூ.50–ஐக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கம். மத்திய அரசாங்கம் இன்றைக்கு சன்ன இரகத்துக்கு ரூ.1,450–ம், சாதாரண இரகத்துக்கு ரூ.1,410–ம் நிர்ணயித்திருக்கிறது. விவசாயிகளை எல்லா காலமும் காத்துக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய ஒப்பில்லாத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாநில அரசின் ஊக்கத்தொகையாக சன்ன இரகத்துக்கு குவிண்டாலுக்கு ரூ.70–ம், சாதாரண இரகத்துக்கு ரூ.50/–ம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்த ஆண்டு மட்டும், இப்பொழுது 88,800 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் இதுவரை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6 கோடி ரூபாயை ஊக்கத்தொகையாக வழங்கியிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011–2012 ஆம் ஆண்டு 149 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்; 2012–2013–ல் 48 கோடி ரூபாய்; 2013–2014–ல் 65 கோடி ரூபாய்; 2014–2015–ல் 101 கோடி ரூபாய்; இந்த ஆண்டு இதுவரை 6 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் இல்லாத அளவில் நெல்லுக்கு ஊக்கத்தொகை வழங்குகிற ஒரே அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

2016 ஜனவரி 21]

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிட்டத்தட்ட 3,500 பேருக்கு மேற்பட்ட செவிலியர்கள் இரண்டு ஆண்டு ஒப்பந்தம், அதற்குப் பின்னால் நிரந்தரம் என்ற அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, ஐந்தரை ஆண்டுகளுக்கும் மேலாக இன்றைக்கும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் சுகாதாரத் துறை வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு ஆணிவேராக இருந்து பணியாற்றக்கூடியவர்கள் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றக்கூடிய செவிலியர்கள். எனவே, அவர்கள் அனைவருக்குமே உடனடியாக பணி நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குறைந்தபட்சம் ஒரு பணியிடத்திலாவது நிரந்தர செவிலியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். காரணம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் இன்றைக்குக் கூடுதலாக மக்கள் பிரசவத்திற்கு மற்றும் நோய்களுக்கு வந்துகொண்டிருக்கின்ற நேரத்தில், ஒரு மருத்துவர் அங்கே பணியில் இருக்கிறார்; மூன்று செவிலியர்கள் மட்டுமே நிரந்தரமில்லாத செவிலியர்களாக இருக்கிறார்கள். இந்த மூன்று பேர்தான் இரவு, பகல் பாராமல் அந்த மருத்துவமனையைக் கட்டிக்காத்து நோயாளிகளுக்கான உதவிகளை செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு குறைந்தபட்சம் ஒரு நிரந்தரப் பணியிடத்தையாவது உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்த ஆட்சியிலே, இதுவரை யாரும் செய்திடாத ஒரு சரித்திர சாதனையாக 7,243 புதிய செவிலியர்களை MRB என்று சொல்லக்கூடிய, மருத்துவத் தேர்வாணையத்தின் மூலமாக மிகச்

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2016 ஜனவரி 21 சிறப்பாகத் தேர்வு செய்து, பணியமர்த்தி ஒரு வரலாற்றுச் சாதனையை படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3—40

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையிலே, இந்த நான்கரை ஆண்டுகளிலே 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல, மருத்துவமனைகளை தாலுகா மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தி அதிலே பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; புதிய மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கி, அதிலே செவிலியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. ஆக, இதுவரை யாரும் செய்திராத சாதனையாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே, பொற்கால ஆட்சியிலே, புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த ஒப்பந்த செவிலியர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக உருவாக்குகின்ற அந்தப் பணியை செய்வதற்கும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அதை உறுப்பினர் அவர்களும் நன்கு அறிவார்கள். கூடிய விரைவிலே அது இன்னும் விரைவுபடுத்தப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளில் 4 வழிச் சாலைகளில் சுங்கச்சாவடி என்பது மிகப் பெரிய பாதிப்பை, பயணிகளுக்கு சுமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. 20 ஆண்டுகள் ஒப்பந்தம் என்ற அடிப்படையில் அந்த சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டு, 20 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பின்னாலும், மத்திய அரசு இன்றைக்கு அதை நீடித்துக்கொண்டிருக்கிறது என்பது ஒரு மோசமான செயல், நடவடிக்கை. எனவே, தமிழக அரசு 4 வழிச் சாலைகளில், குறிப்பிட்ட காலத்திற்கு மேலாக இயங்கக்கூடிய

2016 ஜனவரி 21] [திரு. சு. குணசேகரன்]

சுங்கச்சாவடிகளை எடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதை நீக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது 7 மீட்டர் அகலம் இருக்கக்கூடிய எல்லா தேசிய நெடுஞ்சாலைகளையும் 10 மீட்டர் அகலமுள்ள சாலைகளாக மாற்றி, எல்லா சாலைகளிலுமே இன்றைக்குச் சுங்கச் சாவடி அமைக்கின்ற பணியைத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலையை தமிழக அரசு அனுமதித்தால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எந்தப் பெரிய, சிறிய நகரத்திற்கும் யாராவது ஒரு தனிப்பட்ட மனிதன் எந்த வாகனத்தில் சென்றாலும், சுங்கச் சாவடிக்கென்று ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 200, 300 ரூபாய்க்கு மேலாக செலவழிக்க வேண்டிய ஒரு மிக மோசமான, அவலமான நிலை ஏற்படும். 4 வழிச் சாலைக்கு அவர்கள் கேட்டார்கள், கொடுத்தார்கள்; அது வேறு விஷயம். ஆனால் இருக்கிற சாலைகளையெல்லாம் 7 மீட்டர் அகலத்தை 10 மீட்டர் ஆக்க யாரிடமும் அனுமதி கேட்காமல் அவர்களாகவே அதிகப்படுத்துகிறார்கள். அதற்குப் பின்பு சுங்கச்சாவடி அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சிவகங்கை மாவட்டத்தில்கூட திருப்புவனம், தொண்டி, சிவகங்கை செல்லக்கூடிய சாலையை யாருக்குமே தெரியாமல் 7 மீட்டர் அகலம் கொண்ட சாலையை 10 மீட்டர் சாலையாக மாற்றிவிட்டு, 3 இடங்களிலே சுங்கச்சாவடி போட வருகிறார்கள். இவையெல்லாம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மிகப் பெரிய பாதிப்பிற்கு உள்ளாக்கக்கூடிய செயலாக இருக்கிறது. எனவே, வெள்ளைக்காரன் காலத்திலேகூட ஒரு கேள்வி கேட்டு வரியைப் போட்டான். ஆனால், மத்திய அரசு இன்றைக்கு தான்தோன்றித்தனமாக இங்கே வந்து, மாநில அரசிடம் அனுமதி கேட்கிறதா, இல்லையா, மாவட்ட நிருவாகத்தின் அனுமதி கேட்கிறதா என்பதே தெரியாத அளவிற்கு இன்றைக்கு மிக மோசமாக, சாலைப் போக்குவரத்தை பாதிக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. இதை நமது மாநில அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, உடனடியாக சுங்கச்சாவடிகள் தொடங்குவதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இன்றைக்குச் செயல்படாமல் இருக்கின்றன. கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னால், அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்கள் எல்லாம் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

பணி நியமனம் செய்யப்பட்டார்கள். கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் செயல்படாத நிலையில், ஊழியர்களுக்குக் கடந்த 2 ஆண்டுக் காலமாக ஊதியமே இல்லாமல் பணியாற்றக்கூடிய நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் வைக்கிற கோரிக்கை– ஒன்று, நிதி கொடுத்து, புனரமைத்து செயல்பட வையுங்கள், இல்லையென்று சொன்னால், பணியாளர்களை வேறு துறைக்கு மாற்றுங்கள் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், உங்களைத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்கள் கவனிக்காதது மாதிரி இருக்காதீர்கள். அதனாலே அவர்களுக்கு வேறு இடத்திலாவது பணியினைக் கொடுங்கள். 2 வருடங்களாக சம்பளம் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் 1–லிருந்து வி.ஏ.ஓ. தேர்வு வரைக்கும், அதைப்போல பல அரசுப் பணியாளர்களுக்கான தேர்வுகளையெல்லாம் நடத்திக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் இன்டர்வியூ அல்லது எழுத்துத் தேர்வு என்று மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வரக்கூடிய நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்தியாவில் இருக்கக்கூடிய மகாராஷ்டிரா, கேரளா, ஆந்திரா போன்ற பல மாநிலங்களில் ஒன்றுக்கு 4 பகுதிகளாக வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று தேர்வாணையக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் சென்னையை மட்டுமே மையப்படுத்தியிருக்கிறது. எனவே, முதல்கட்டமாக மதுரையை மையமாக வைத்து, மதுரையிலே ஒரு தேர்வாணையக் கிளை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 2 ஆண்டுகளுக்கு அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது பதிவு விடுபட்டுப் போனவர்கள் பழைய பதிவு சீனியாரிட்டி அடிப்படையிலேயே பதிந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பு வழங்கப்படும். ஆனால் கடந்த 5 ஆண்டு காலமாக நமது அரசில் அத்தகைய ஒரு வாய்ப்பு வழங்கப்படாத காரணத்தால், வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போன, இப்படிப் பல காரணங்களால், பட்டியலில் இருந்தவர்களுடைய அந்த வேலைவாய்ப்பு சீனியாரிட்டி இன்றைக்கு விடுபட்டுப் போயிருக்கிறது. எனவே, ஒரு கால அளவைக் கொடுத்து அவர்கள் பழைய சீனியாரிட்டியிலேயே

2016 ஜனவரி 21] [திரு. சு. குணசேகரன்]

பதிந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது கடை நிலையிலே இருக்கக்கூடிய பணியாளர்கள் தேர்வு என்பது வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக மட்டுமல்லாமல், விண்ணப்பங்களை நேரடியாகக் கொடுத்து, அதன் மூலமாக அவர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிக்கு அனுப்புகின்ற ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருக்கிற காரணத்தால், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வைத்திருப்பதே எதற்காக என்ற ஒரு புதிய கேள்வி எழுந்திருக்கிறது. எனவே அதை . . .

பிற்பகல் 3–4.5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பட்டியல் பெற்று சீனியாரிட்டி அடிப்படையில் காலிப் பணியிடங்களை நிரப்பிட அவர்கள் 1:5 என்ற விகிதாச்சாரத்தில் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவது வழக்கமாக இருந்தது. உச்ச நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அது வழக்காக மாறி, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகவும் நீங்கள் அனுப்புங்கள்; ஓப்பனாகவும், நீங்கள் விளம்பரப்படுத்தி, அதன் மூலமாக நேர்முகத் தேர்வு நடத்தியும் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில்தான் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: அதைப்போல, கடைநிலைப் பணிகளில் கணவனை இழந்த பெண்களுக்குக் கூடுதலாக முன்னுரிமை அளிக்கிற வகையில், அந்த வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சூரிய மின் உற்பத்திக்கு தமிழகத்திலே முன்னுரிமை கொடுக்கப்பட்டு அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

ஆனால், சூரிய மின் உற்பத்தி என்று வருகிற நேரத்தில், ஒரு மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு கிட்டத்தட்ட 4, 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. எனவே, கூடுதலாக சூரிய மின் உற்பத்தி உருவாக, உருவாக கூடுதலான நிலங்கள் தேவைப்படுகிற ஒரு சூழலில் இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்களில் எல்லாம் அதானி குரூப்பிற்கு கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் எடுக்கப்படுகின்றன. ஆனால், ஒரு தனிப்பட்ட நபருக்கே இப்படி ஒரு வாய்ப்பை அளிப்பதைவிட, அந்த நிலங்கள் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள், (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேனே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவே தவறான செய்தி. இதுவரைக்கும் 2,500 ஏக்கர் நிலம்தான் வாங்கியிருக்கிறார்கள். அவற்றைக்கூட முழுமையாகப் பதிவு செய்யவில்லை. அந்தப் பகுதியில் வெறும் ரூ.30 ஆயிரம், ரூ.35 ஆயிரத்திற்குப் பல பேர் நிலங்களை விற்றுக்கொண்டிருந்தார்கள். இப்போதுதான் இலட்சக்கணக்கில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு நல்லதுதான். பயன்படாத நிலத்திற்கு இன்னும் மரியாதை கூடியிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்திவிடாதீர்கள். பாவம்! ஏழையெளிய மக்கள், கொஞ்சம் நிலம் வைத்திருக்கிற அவர்கள் பிழைத்துக்கொள்ளட்டும். அதைத் தடுக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: நான் சொல்ல வருவது நீங்கள் தனியாருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளை ஒரு கூட்டுறவு அமைப்பாக உருவாக்கி, அதன்மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து, நீங்கள் கொடுத்தீர்கள் என்றால், மாதா மாதம் அவர்களுக்கு வருமானம் வரும். ஏனென்றால், சூரிய மின்சக்திமூலம் வேலைவாய்ப்பிற்கு வழியே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அது ஒன்றும் கட்டாயம் கிடையாது. நீங்கள் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம். இதிலே open competition தானே? அதற்கு விவசாயிகள் இவ்வளவிற்குக் குறைத்து கொடுக்கமாட்டேன் என்று சொன்னால், தாராளமாகச் சொல்லாம். அது யாருக்கும் கட்டாயம் கிடையாது. அதை ஒன்றும் வற்புறுத்தி வாங்குவதும் கிடையாது. அவர்கள் நல்ல விலையாக இருக்கிறது என்று நினைத்தால், கொடுத்துவிட்டுப் போகிறார்கள். போதவில்லை என்று சொல்கிறவர்கள், கொடுக்காமல் இருந்துவிடுகிறார்கள். இது அவரவர் விருப்பம்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: அதைப்போல, இந்த மின் சக்திக்காக புதிய வழித்தடங்களையெல்லாம் இப்போது உருவாக்கிக்கொண்டிருக்கிறீர்கள். வழித்தடம் அமைக்கும்போது, கோபுரம், பெரிய டவர் போடுகிறீர்கள். பெரிய பெரிய கம்பிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு செல்கிறீர்கள். விவசாய நிலங்களுக்குமேல் சென்றால், உரிய இழப்பீடு எதையும் கொடுப்பது கிடையாது. கேட்டால் கோபுரம் போட்ட இடத்திற்கு, அது எத்தனை சென்ட் வந்தாலும், அதற்கான நில மதிப்பீட்டு அளவின்படி கொடுப்பதே இல்லை என்ற ஒரு நிலையை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்போது விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய கொஞ்சம் நிலம்கூட இதனால் மிகப் பெரிய பாதிப்பிற்குள்ளாகிறது. கோபுரத்தினாலே மிகப் பெரிய பாதிப்புதானே தவிர, இது யாருக்குமே பிரயோஜனப்படாது. அதனால் அவர்களுக்குக் கூடுதலான இழப்பீடுகளை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மதுரை சட்டக் கல்லூரியில் உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழி வழக்காடு மொழியாக வேண்டும் என்பதற்காக ஒரு போராட்டத்தை நடத்திய மாணவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டு, அவர்கள் கல்லூரியை விட்டு நீக்கப்படக்கூடிய அளவிற்கு ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தி, அவர்கள் மீண்டும் கல்லூரியில் படிப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாநில சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை வேண்டும் என்பதற்காக

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

நடைபெற்ற ஒரு போராட்டம் அது என்பதை நாம் கருத்திற்கொண்டு, அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் கடந்த ஆண்டும் உயர்த்திவிட்டீர்கள், இந்த ஆண்டும் உயர்த்திவிட்டீர்கள். மிக்க சந்தோஷம், மகிழ்ச்சிதான். ஆனால், எங்களுடைய சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு மிகப் பெரிய வேதனையாக இருக்கிறது. நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கிற இந்த நேரத்திலேயும் சரி, பல முறை நாங்கள் இதைக் கேட்டுவிட்டோம். ஆனால் சிவகங்கையில் இருக்கக்கூடிய 6,039 ஏக்கர், 126 கண்மாய்களுக்கு இன்றுவரைக்கும் தண்ணீர் வரவில்லை. கடந்த ஆண்டும் வரவில்லை, இந்த ஆண்டும் வரவில்லை. (குறுக்கீடு) நான் என்ன உங்களிடம் பொய்யா சொல்லப்போகிறேன்? தண்ணீர் வரவில்லை. அதனால், இந்தக் கால்வாய்களைச் சீரமைத்து . . .

பிற்பகல் 3—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி, அங்கே தண்ணீர் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் போதவில்லை, அந்த நாளை நீட்டித்துக் கொடுங்கள் என்றுதான் இவர் கோரிக்கை வைத்திருக்கின்றார். ஆனால், இங்கே வந்து வேறுவிதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: சரி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விருப்பப்படியே தண்ணீர் கொடுக்கட்டும். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அது எங்கள் விருப்பமில்லை. As per Water Regulation G.O., நீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: சிவகங்கை மாவட்டத்திலிருக்கக்கூடிய பெரியாறு கால்வாய்கள், மிகப் பெரிய அளவில் அகலமான கால்வாய்களாக இருக்கிற காரணத்தால், தண்ணீர் சரியாக வந்து சேருவதில்லை என்று பல காரணங்கள் சொல்கின்றனர். எந்தக் காரணத்தாலோ, 142 அடி உயரம் தண்ணீர் தேங்கியதற்குப் பின்னரும், எங்கள் மாவட்டத்திற்கு உரிய தண்ணீர் கிடைக்கவில்லை; விவசாயம் நடைபெறவில்லை; நீராதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக நிருவாக நடைமுறைகளை உருவாக்கி, எதிர்காலத்திலேயாவது தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டம் ஏற்கெனவே கடுமையான வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கே காலம் காலமாக, எப்போதோ ஒரு காலத்தில் உருவாக்கப்பட்ட வேலிக் கருவை, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் மிகப் பெரிய ஆதிக்கம் செலுத்துகிறது. அதனால் அங்கே சுற்றுச்சூழல் மிகப் பெரிய பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறது. நீர், மண் வளங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மதுரை உயர் நீதிமன்றமே உடனடியாக வேலிக் கருவையை அகற்ற வேண்டுமென்று கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் உத்தரவிட்டும், இதுவரை சிவகங்கை மாவட்டத்திலுள்ள கண்மாய் மற்றும் பொது இடங்களில் இருக்கக்கூடிய வேலிக் கருவையை அழிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட நிருவாகம் எடுக்கவில்லை. கடந்த ஓராண்டுக் காலமாக பலரும் அந்தக் கண்மாய்களில் இருக்கும் வேலிக் கருவையை வெட்டுவதற்கு முயற்சி செய்தும், கிராமங்கள், பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டுக் கொடுத்தும்கூட, அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். உயர் நீதிமன்றம் ஒரு பக்கம் வெட்டச் சொல்லி, அழிக்கச் சொல்லி,

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

உத்தரவு போட்டிருக்கிறது. நீங்கள், வேலிக் கருவையை அழிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் சொல்லிவிட்டீர்கள். ஆனால், மாவட்ட நிருவாகம் உரிய அனுமதி கொடுக்காத காரணத்தால், அந்த வேலிக் கருவை அப்படியே இன்றும் நீடித்துக்கொண்டிருக்கின்றது. எனவே, உடனடியாக மாவட்ட நிருவாகத்திற்கு நீங்கள் வழிகாட்டி, வேலிக் கருவைகளை அழிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அதைப்போல, சிவகங்கை மற்றும் பக்கத்திலிருக்கக்கூடிய பல மாவட்டங்களில் இன்றைக்கு வனத் துறைக்குக் கூடுதலான நிலங்கள் இருக்கின்றன. வனத் துறைக்கு இருக்கக்கூடிய நிலங்களில், இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், அவர்கள் காடுகளை வளர்ப்பதே கிடையாது. அதற்குப் பதிலாக, வெறும் யூக்கலிப்டஸ் மரங்களைத்தான் வளர்த்துக்கொண்டிருக்கின்றனர். இந்த மரங்களை வளர்க்கிற காரணத்தால், காடுகளில் இருக்க வேண்டிய சின்ன, சின்ன மிருகங்களிலிருந்து எல்லாமுமே அழிந்து, அங்கே இருக்கக்கூடிய குரங்குகளிலிருந்து எல்லாமே இப்போது சாப்பிடுவதற்கு, வீடுகளுக்குத்தான் வருகின்றன, காட்டுக்குள் வசிப்பதில்லை. ஆக, வனத் துறை காடுகளை உருவாக்குவதற்குப் பதிலாக, இன்றைக்கு காகித கம்பெனிகளுக்கு ஏஜெண்ட்டாக இருந்துகொண்டு, யூக்கலிப்டஸ் மரங்களை வளர்ப்பது என்பது, பின்தங்கி இருக்கக்கூடிய மாவட்டங்களில் மிகப் பெரிய மழை மற்றும் மண் வளப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. எனவே, வனத் துறையில் இப்படிப்பட்ட யூக்கலிப்டஸ் மரங்களை நட வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவு எடுத்துக்கொண்டு நட வேண்டும். இருக்கக்கூடிய எல்லா நிலங்களிலுமே இந்த மாதிரியான யூக்கலிப்டஸ் மரங்களை நடுவது என்பது தவறு. அதுவும் குறிப்பாக, சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில்தான் இன்றைக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உடனடியாக வனத் துறை இதன்மீது அக்கறை செலுத்தி, யூக்கலிப்டஸ் மரங்களை அழித்து, வனங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அம்மா திட்டத்தின் மூலமாக முதியோர், விதவைகள் ஓய்வூதியம் ஆகியவற்றிற்கு எல்லாருமே ஆர்டர்களை கையில் வாங்கி வைத்துக்கொண்டிருந்தும், இன்றுவரைக்கும் உதவி கிடைக்கவில்லை. நீங்கள் முதியோர்

2016 ஜனவரி 21] [திரு. சு. குணசேகரன்]

பென்ஷன் கொடுக்கவில்லை என்றாலும் பரவாயில்லை; கணவனை இழந்த விதவைகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில், ஆர்டரைக் கையில் வைத்திருக்கக்கூடியவர்கள் அனைவருக்கும், உடனடியாக, எத்தனை பேர் இருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 பிரிவுகளில் அந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதனால், அதில் எந்தவிதமான நிலுவையும் இல்லை. உத்தரவு இருப்பவர்களுக்கு அவர்களுடைய வங்கிக் கணக்கு மூலமாகவும், பயோ மெட்ரிக் முறை மூலமாகவும், மணி ஆர்டர் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, உத்தரவு இருப்பவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முகாம்களில் பங்கேற்று ரசீதுகள் வைத்திருப்பவர்கள், அதாவது, அந்த மனு கொடுத்து ரசீது வைத்திருப்பவர்களில் சில பேர் அதை உத்தரவாகக் கருதுகிறார்கள். ஆகவே, உத்தரவு இருக்கக்கூடிய அனைத்துப் பயனாளிகளுக்கும் வழங்கப்படும். இந்த ஆண்டு முழுவதும் நிதி ஒதுக்கீடு 4,200 கோடி ரூபாய். இந்தியாவிலேயே முதியோர் ஓய்வூதியத் தொகைக்காக 4,200 கோடி ரூபாய் கொடுக்கின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: என்னுடைய சிவகங்கை தொகுதியில் இருக்கக்கூடிய உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான பேருந்து செல்லக்கூடிய சாலைகளில், பல சாலைகள் இன்றைக்கு மிக மோசமாக இருப்பதனால், பேருந்து வசதி நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதை நான் பல முறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். ஆனாலும், அந்தச் சாலைகள் செப்பனிடப்படாததால், மிகப் பெரிய அளவுக்கு

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

பேருந்து வசதி நிறுத்தப்பட்டிருக்கக்கூடிய நிலையில், அதை உடனடியாக செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–55

அதைப்போல, மதுவிலக்குப் பிரச்சினை என்பது எல்லோராலும் முன்வைக்கப்பட்டது. மதுப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகளை ஏற்படுத்தவில்லை என்று சொன்னாலும், என்னுடைய வேண்டுகோள் என்னவென்று சொன்னால், முதலில் மதுவில் இருக்கும் ஆல்கஹாலைக் குறைத்தாலே பாதிப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன். எங்கு பார்த்தாலும், குடித்துவிட்டு, பைக்கில் விபத்து, காரில் செல்லும்போது விபத்து. சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழும்புவதற்கு மதுவில் ஆல்கஹால் ரொம்ப கூடுதலாக இருப்பது காரணம் நான் நினைக்கிறேன். ஆல்கஹால் குறைத்து இருக்கக்கூடிய சாராயத்தையாவது கொடுங்கள்—இதுவரைக்கும் நான் குடித்தது கிடையாது. குடித்த ஆட்கள் நடப்பதைப் பார்த்தால் அப்படித் தெரிகிறது—ஆகையால் அதைக் குறைக்க வேண்டும். அதைப்போல் நீங்கள் கடைகளையும் குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தொகுதியில் உள்ளாட்சித் துறைக்குட்பட்ட பேருந்து செல்லும் சாலைகள் மற்றும் அவருடைய மாவட்டம், பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில், எங்களது ஊரக வளர்ச்சித் துறை மூலமாக இன்றைக்குக் கிட்டத்தட்ட 16,536.33 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின், ஐந்தாண்டுக் காலத்திலே 6,802.97 கோடி ரூபாய்க்குத்தான் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைவிட 9,733 கோடி ரூபாய்க்கும் அதிகமாக சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்

2016 ஜனவரி 21] [திரு. எஸ்.பி. வேலுமணி]

தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களின் தொகுதியில் மட்டும் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில், ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 11,864 பணிகள் எடுக்கப்பட்டு 207.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு சாலை மற்றும் அனைத்துப் பணிகளும் செய்யப்பட்டுள்ளன. பல முறை அமைச்சரிடம் வலியுறுத்தியதாக, என்னிடம் சொல்லியதாகச் சொன்னார்கள். எந்தெந்த சாலைகள் பழுதடைந்திருக்கின்றனவோ, அவை துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அனைத்துச் சாலைகளையும் செப்பனிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அனைத்துச் சாலைகளையும் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அப்படி ஏதாவது விடுபட்ட சாலையிருந்தால், நிச்சயமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் செப்பனிட்டுத் தருவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சு. குணசேகரன் அவர்கள், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர். அவர் சட்டமன்றத்தில் பேசிய உடனே வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டி சிலை அமைக்கப்பட்டது. ஆதி திராவிட பெண், குயிலிக்கு ஸ்தூபி வைத்து, தூண் வைத்து இன்றைக்கு வருடா வருடம் அரசு விழா நடைபெறுகிறது. அதற்கு அண்ணன் நன்றி உள்ளத்தோடு இருக்க வேண்டும். அதைப்போல, அவர் தொகுதியில் தாலுகாக்களைப் பிரித்துக் கொடுத்திருப்பது என்பதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய தொகுதிக்குட்பட்ட சிவகங்கை நகராட்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்தான் இன்றைக்குத் தலைவராக இருக்கிறார். அவர்கள் நினைத்தால், இன்றைக்கு டவுனுக்குள் நிறைய சாலைகள் போடலாம். அனைத்து மின்விளக்கு வசதிகள், ஹைமாஸ்ட் விளக்கு வசதிகள் என்று எல்லாமே போட்டு, அவர்களின் தொகுதியில் என்னென்ன கேட்கிறார்களோ, அனைத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுத்து

[திருமதி எஸ். கோகுல இந்திரா] [2016 ஜனவரி 21 பெருமைப்படுத்தியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முதலில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல், திட்டங்கள் கொடுத்த நேரத்தில் மனம் திறந்து பாராட்டியிருக்கிறேன், நன்றி சொல்லியிருக்கிறேன். நன்றி சொல்வதில் நாங்கள் யாருக்கும் குறைந்தவர்கள் கிடையாது. அதேமாதிரி கோரிக்கை வைப்பதிலும் நாங்கள் யாருக்கும் குறைந்தவர்கள் கிடையாது. எனவேதான், செய்ததற்கு நன்றி; செய்ய வேண்டியதற்குக் கோரிக்கை. அந்த அடிப்படையில் நீங்கள் ஏற்றுக்கொண்டு, உடனடியாக சாலைகளை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்திற்கென்று கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டிலேயே நீங்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல், நான் மாண்புமிகு தமிழக முதல்வரிடம் கடந்த முறை நேரடியாக வைத்த கோரிக்கை; வீரமங்கை வேலு நாச்சியாருக்கும், குயிலிக்கும் நினைவு மண்டபமும், மணிமண்டபமும் அமைத்ததைப்போல, அவர்களோடு இணைந்து வெள்ளையர்களை எதிர்த்து போராடிய மாமன்னர்கள் மருதுபாண்டியர்களுக்கும் சிவகங்கையில் மணிமண்டபம் கட்ட வேண்டுமென்று சொன்னேன். அவர்களும் செய்து தருவதாகச் சொல்லியிருந்தார்கள். எனவே, மருதுபாண்டியர்களுக்கான மணிமண்டபத்தை அவர்களின் அனுமதியோடு எங்களுக்கு அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவீரர்கள் மருதுபாண்டியர்களுக்கு திருப்பத்தூரிலே சிலை இருக்கிறது; ஸ்தூபி இருக்கிறது; வருடா வருடம் அரசு விழாவை மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்தி

2016 ஜனவரி 21] [திருமதி எஸ். கோகுல இந்திரா]

வருகிறார்கள். ஆக, அவர்கள் தூக்கிலிடப்பட்ட அந்த இடத்தில் அவர்களின் சிலை அமைத்து வருடா வருடம் மரியாதை செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

பிற்பகல் 4–00

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். எனவே, நீங்கள் தடை ஒன்றும் சொல்லிவிட வேண்டாம். கிடைக்கட்டும். அதேபோன்று, நிறைவாக என்னுடைய கருத்தாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சற்று முன்னால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் பேசியபோது, ஒரு சுவையான அரசியல் விவாதம் நடைபெற்றது. இரண்டு கட்சிகளான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், தேர்தலில் நீங்கள் தனித்துப் போட்டியிடத் தயாரா, தேர்தலில் நீங்கள் தனித்துப் போட்டியிடத் தயாரா என்று விவாதம் நடத்தினார்கள். இரண்டு கட்சிகளும் 50 ஆண்டுக் காலத்திற்கு மேலாக தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள். எனவே, நீங்கள் விட்ட சவால் சரிதான். நீங்கள் இரண்டு பேரும் தனித்து தேர்தலில் போட்டியிடுவதுதான் மக்களுக்கு, தார்மீக ஜனநாயகத்துக்குப் பொருத்தமானது. நீங்கள் தேர்தலில் தனியாகப் போட்டியிட வேண்டும். (குறுக்கீடு) மற்ற கட்சிகளையெல்லாம் இணைத்து உங்களோடு மோதுவதற்கு மக்கள் நலக் கூட்டணி தயாராக இருக்கிறது. எனவே, நாங்களெல்லாம் ஒரு கூட்டணி அமைக்கிற விதமாக, நீங்களும் தனியாக தேர்தலில் போட்டியிடுவதாக அறிவிக்க வேண்டும்; அவர்களும் அவ்வாறே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் ஒரு மும்முனைப் போட்டியோடு, தமிழகத்தில் ஒரு சிறந்த ஜனநாயகம் உருவாகவிருக்கிறது என்று சொல்லி, அதற்காக நீங்கள் வழிவிட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

எனது தொகுதி, கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. குணசேகரன்] [2016 ஜனவரி 21

தொகுதிக் கோரிக்கைகள்:

சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் வட்டம், காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான பேருந்து செல்லும் சாலைகள் மிக மோசமாகப் பழுதாகி உள்ளதால், பேருந்து வசதி நிறுத்தப்பட்டுள்ளது. கீழ்க்காணும் இச்சாலைகளை மராமத்து செய்து தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்:

1. வேளாரேந்தல் சாலையிலிருந்து கடத்தகுடி, பாளையேந்தல், ஏலந்தக்கரை கோடியக்கரை வழியாக சூராணம் சாலை வரை சுமார் நான்கரை கிலோ மீட்டர்.

2. காளையார்கோவில்–முடிக்கரை சாலையில் காரைவச்சி விலக்கு முதல் சி.கிளுவச்சி வழியாக கிளுவச்சி வரை 3 கிலோ மீட்டர்.

3. சேத்தூர்–மூலக்கரை–கீழச்சேத்தூர் வழியாக சாலியேந்திடல் வரை 3 கிலோ மீட்டர்.

4. சாத்தரசன்கோட்டை–மறவமங்கலம் சாலை அதப்பட்டத்திலிருந்து சுண்டங்குறிச்சி–கொல்லாவயல் வழியாக கடியாவயல்விலக்கு வரை 4 கிலோ மீட்டர்.

5. கொல்லங்குடி–முத்தூர் சாலையில் குருவாடிப்பட்டி வழியாக வாணியங்குடி வரை 2 கிலோ மீட்டர்.

சிவகங்கை வட்டம், சிவகங்கை ஒன்றியம்:

1. வடமாத்தூர் மானாமதுரை சாலையில் மாத்தூர் வழியாக முலக்குளம் வரை இரண்டரை கிலோ மீட்டர்.

2. மதுரை தொண்டி சாலையில் பனையூர் விலக்கிலிருந்து பனையூர் வரை ஒன்றரை கிலோ மீட்டர்.

3. மதுரை தொண்டி சாலையிலிருந்து காளமேக்கிவிலக்கிலிருந்து காளமேக்கு பாசாங்கரை சாலை 2 கிலோ மீட்டர்.

2016 ஜனவரி 21] [திரு. சு. குணசேகரன்]

4. கோவானூரிலிருந்து எறும்புகுடி வழியாக பெரியகோட்டை சாலை இரண்டரை கிலோ மீட்டர்.

5. இலுப்பைக்குடியிலிருந்து தமராக்கி வழியாக குமாரப்பட்டி வரை மூன்றரை கிலோ மீட்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், அவருடைய கருத்தைச் சொன்னார். அவர்கள் கட்சியும் தனியாக தேர்தலில் போட்டியிட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி அவர்கள் பேசியபோது, உள்நாட்டு நதிகளை இணைக்கின்ற திட்டத்தைப் பற்றிய தனது கோரிக்கையை இங்கே வலியுறுத்திச் சொன்னார்கள். தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தின்கீழ், மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவேரி, குண்டாறு இணைப்புத் திட்டத்தையும், பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தினையும் உடனடியாகச் செயல்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறார்கள் என்பதனை இந்த நல்ல நேரத்தில் கூறிக்கொள்கிறேன். நம்முடைய உள்நாட்டில் ஓடுகின்ற ஆறுகளில், எங்கெல்லாம் ஆறுகளை இணைக்கின்ற சாத்தியக் கூறுகள் உண்டோ, அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, முதற்கட்டமாக, அதனை எடுக்க வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆணையினை ஏற்று, காவேரி—குண்டாறு இணைப்பின் முதற்கட்டமாக, காவேரி—குண்டாறு இணைப்புக் கால்வாய் பணிகளைச் செய்ய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதனைத் தவிர, பெண்ணையாறு-பாலாறு இணைப்புக் கால்வாய்கள் இரு இடங்களில் அமைக்க அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பதனையும், இவற்றை விரைவில் பெற்று பணிகள் துவங்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனையும் இந்த நேரத்தில்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

சொல்லிக்கொள்கிறேன். இதுதவிர, காவேரி–சரபங்கா–திருமணிமுத்தாறு–ஐயாறு இணைப்புக் கால்வாய்த் திட்டங்களையும் மேற்கொள்ள அனைத்து முயற்சிகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆணையினை ஏற்று எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையில் பேசுகின்ற வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி பாராட்டிக்கொள்கிறேன். ஆளுநர் உரையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் தமிழகத்தில் நடைபெறுகின்ற ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு என்னென்ன திட்டங்கள் கொண்டுவரப்பட்டன; அந்தத் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; அந்தத் திட்டங்கள் மக்களுக்கு எப்படிப் போய்ச் சேர்ந்திருக்கின்றன போன்ற விவரங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. புதிய திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களைச் செயலாற்றி, மக்கள் நல அரசாக, தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்படுவதை எங்களுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனதார வரவேற்றுப் பாராட்டுகிறது.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக, கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் தென் பகுதிகளான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் கனமழை பெய்தது. குறிப்பாக, சென்னை, திருவள்ளூர் பகுதிகளில் கனமழை பெய்து ஏற்பட்ட வெள்ளச் சேதத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், செம்பரம்பாக்கம் ஏரி சம்பந்தமாக நீண்ட விளக்கத்தை இங்கே அளித்தார்கள். அந்த அடிப்படையில், நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. தமிழக அரசு, வெள்ளச் சேதத்தை சரியாகக் கையாண்டு, பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் சகஜ நிலைக்குக் கொண்டுவந்திருப்பது

2016 ஜனவரி 21] [திரு. பி.வி. கதிரவன்]

பாராட்டுக்குரியது. இந்த மாவட்டங்களிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களைக் குறுகிய காலத்தில், இவ்வளவு சீக்கிரத்தில் சகஜ நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில்தான். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அதிகாரி பெருமக்கள் எல்லோரும் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்குச் சென்று, காலை முதல் இரவு வரை இருந்து, 20 நாட்களில் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் சகஜ நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக தமிழக அரசை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்தில் பாராட்டுவது எங்களுடைய கடமை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–05

அமைச்சர் பெருமக்கள் மட்டுமல்ல; ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அதிகாரிகளும், அமைச்சர்களுடைய சார்பிலே அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் வந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒவ்வொரு நாளும் நிவாரண உதவிகளை செய்து, அந்தப் பகுதிகளை மீண்டும் சகஜ நிலைக்குக் கொண்டுவந்தார்கள். தொற்றுநோய் வரவிடாமல், அந்தப் பகுதி மக்களுக்கு மன நிம்மதியை ஏற்படுத்திய பெருமை தமிழக அரசுக்கு உண்டு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேநேரத்தில், தமிழகத்தில் மனித நேயம் இருக்கின்றது; மனித நேயம் கொண்ட மக்கள் தமிழகத்தில் இருக்கின்றார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக இந்த வெள்ள நேரத்தில் மனிதர்கள் ஒவ்வொருவரும், குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள், அதேபோன்று தொண்டு நிறுவனங்கள் போன்ற பல வகை நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் எல்லாம் அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஈர்ப்போடு வந்து, உரிமையோடு வந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியுள்ளார்கள். தமிழகத்தில் மனித நேயம் இருக்கிறது என்பதை இதன்மூலம் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். அதையும் இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழக அரசு சார்பிலே இதுவரை 2,640 கோடி ரூபாய் செலவு செய்து, வெள்ள நிவாரண பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னால் அது

[திரு. பி.வி. கதிரவன்] [2016 ஜனவரி 21

பாராட்டக்கூடியது. அதேநேரத்தில், இந்த வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு கொடுக்க வேண்டிய பணத்தை உடனடியாக வழங்கி, தமிழக அரசுக்கு ஈடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே நிலவும் சட்டம்–ஒழுங்கு; கடந்த திராவிட முன்னேற்றக் கழக 5 ஆண்டுக் கால ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளால் அனைவரும் எப்படி பாதிக்கப்பட்டார்கள் என்பதெல்லாம் மக்களுக்குத் தெரியும். அதனால்தான் அவர்களை ஆட்சியிலிருந்து மாற்றி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைத் தமிழகத்திற்கு முதலமைச்சராக மக்கள் ஆக்கினார்கள். அந்த அடிப்படையில் காவல் துறையை சுயமாக செயல்பட விட்டு, அரசியல்வாதிகளோ, அமைச்சர்களோ காவல் துறையில் எந்தவித இடையூறும் செய்யக் கூடாது என்று ஆணையிட்டு, இன்றையதினம் தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக மாறியிருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை கடந்த 9 மற்றும் 10 செப்டம்பர் மாதம் சென்னையில் நடத்தினார்கள். உலக அளவில் முதலீட்டாளர்கள் வந்தார்கள்; இந்திய அளவிலும் வந்தா முதலீடு, 2 இலட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இங்கே ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கு என்ன காரணம்? இந்த மாநிலம் எந்தப் பிரச்சினையும் இல்லாத மாநிலமாக இருக்கின்றது; எந்தத் தொந்தரவும் இல்லாத மாநிலமாக இருக்கின்றது; இந்த மாநில அரசு அவர்களுக்கு உதவிகரமாக இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான், உலக அளவிலே, இந்திய அளவிலே இங்கு வந்து முதலீடு செய்திருக்கின்றார்கள். இது ஒன்றே, தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, காவேரிப் பிரச்சினை. மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சிக்கு வந்த பின்னர், காவேரிப் பிரச்சினை தொடர்பான நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசு Gazette–ல் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சென்று, போராடி அதை Gazette–ல் வெளியிடச் செய்தார். அந்தப் பெருமை

2016 ஜனவரி 21] [திரு. பி.வி. கதிரவன்]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. அது இந்த ஆட்சியினுடைய சரித்திரம். அதிலே இந்த ஆட்சியின் நடவடிக்கை பெரிய பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் டெல்டா பகுதி விவசாயிகளுக்கு முக்கியமாக விளங்குவது காவேரி. அந்தக் காவேரி டெல்டா பகுதி விவசாயிகள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டி, சிராட்டி அவர்களுக்குப் பரிசு கொடுத்திருக்கின்றார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம் அவர்களுடைய விடா முயற்சி; மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய விடா முயற்சி. உச்ச நீதிமன்றம் வரை சென்று தீர்ப்பினைப் பெற்றுத் தந்திருக்கின்றார்கள்.

அதேபோன்று, முல்லைப்பெரியாறு. முல்லைப்பெரியாறு அணையில் 136 அடி வரைதான் தண்ணீர் உயர்த்தப்பட முடியும் என்று இருந்ததை, உச்ச நீதிமன்றம் சென்று தீர்ப்பு பெற்று 142 அடியாக உயர்த்திய பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் அணையின் நீர்மட்டத்தை உயர்த்தித் தந்த அந்த ஆண்டே, 2014 மற்றும் 2015 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் மழை பொழிந்து, 142 அடியாக உயர்த்தப்பட்டிருப்பது பெருமைக்குரிய விஷயம். அதற்குக் காரணம், இங்கு நல்ல ஆட்சி நடக்கிறது. தமிழக மக்களுக்குத் தேவையான ஆட்சி நடக்கிறது. அதை நிரூபிக்கின்ற வகையிலே 142 அடியாக உயர்த்தியிருக்கின்றார்கள். இது பாராட்டக்கூடியது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4—10

அதேபோன்று, அந்த பெரியாறு அணையைத் தொடர்ந்து, தேனியில் இருக்கின்ற வைகை அணையிலிருந்து 1999 ஆம் ஆண்டிலிருந்து, அதாவது 58 கிராம கால்வாய்த் திட்டம் கொண்டுவரப்பட்டு, அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உண்டான முழுப் பணத்தையும், அதாவது 8 கோடியே 7 இலட்சம் ரூபாயைக் கொடுத்து அந்த வேலை நடந்து வருகிறது. இன்னும் 2 சதவிகித வேலையளவிற்கு அதிலே தொய்வு இருக்கிறது. அந்த வேலைகளையும் உடனடியாகச் செய்து, வருகின்ற பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் அதைத் திறக்க மாண்புமிகு

[திரு. பி.வி. கதிரவன்] [2016 ஜனவரி 21

தமிழக முதல்வர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தவர்களுக்கு மரியாதைக் கொடுக்கின்ற தலைவர்களில் ஒருவர். நமது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய பிறந்த தினம் வருகின்ற ஜனவரி 23 ஆம் தேதி வருகிறது. அந்த ஜனவரி 23 ஆம் தேதியை தேச பக்தி தினம்–Desh Prem Divas என்ற தினமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்படுகிறது. மேற்கு வங்கம், பீகார், ஒடிசா, ஜார்கண்ட் மாநிலங்களிலே அந்த மாநில அரசுகள் நேதாஜியின் பிறந்த தினமான ஜனவரி 23 ஆம் தேதியை தேச பக்தி தினமாக அறிவித்திருக்கிறது. அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நாட்டு சுதந்திரத்திற்கு முதன்முதலாக வித்திட்ட தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய பிறந்த தினத்தை தேச பக்தி தினமாக அறிவிக்க வேண்டும். மாணவர்களிடையே, இளைஞர்களிடையே தேச பக்தி குறைந்து வருகிறது. இந்தியா மட்டுமல்ல; உலக அளவிலே சிலர் தீவிரவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை மாற்றப்பட வேண்டும். இந்திய நாட்டினுடைய தலைவர்களில் நேரு அவர்கள் பிறந்த தினமான நவம்பர் 14 ஆம் தேதியை குழந்தைகள் தினம் என்று அறிவித்திருக்கின்றார்கள். அதேபோன்று, சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுடைய பிறந்த தினமான செப்டம்பர் 5 ஆம் தேதியை ஆசிரியர் தினம் என்று அறிவித்திருக்கிறார்கள். அக்டோபர் 2 ஆம் தேதியை காந்தி ஜெயந்தி என்று அறிவித்திருக்கின்றார்கள். அதேபோன்று, நமது நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய பிறந்த தினமான ஜனவரி 23 ஆம் தேதியை தேச பக்தி தினமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்று இளைஞர்கள் மத்தியிலே தாய் நாட்டைப் பற்றியும், இந்திய நாட்டைப் பற்றியுமான அந்த உணர்வு தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற நம்பிக்கையில் இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒவ்வொரு மாநிலத்திலும் நேதாஜி பற்றிய ஆவணங்கள் இருக்கின்றன. மேற்கு வங்கத்திலே அன்றிருந்த முதல்வர், நேதாஜியின் ஆவணத்தை வெளியிட்டிருக்கின்றார். அதேபோன்று, நேதாஜி சம்பந்தமாக தமிழகத்தில் இருக்கின்ற

2016 ஜனவரி 21] [திரு. பி.வி. கதிரவன்]

ஆவணத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஜல்லிக்கட்டு என்பது தமிழக மக்களின் ஒரு பாரம்பரிய கலை, விளையாட்டு. அதாவது, கோயில் திருவிழாக்களில் ஜல்லிக்கட்டு நடத்துவது தமிழகத்தில் ஒரு பாரம்பரியமாக இருந்து வருகிறது. அதன்படி பார்த்தால், அந்தக் காலத்திலிருந்து தொடர்ந்து ஜல்லிக்கட்டு இருந்து வந்திருக்கின்றது. அதேமாதிரி rekla race-ம் இருந்து வந்திருக்கிறது. மத்திய அரசு காளை மாட்டை வன விலங்குப் பட்டியலிலே சேர்த்திருக்கிறது. ஆனால், மத்திய அரசு ஓர் அறிவிக்கை வெளியிட்டது. ஜனவரி 8 ஆம் தேதி ஒரு notification போட்டது. அந்த notification ஐக் கொடுத்தவுடன் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுவார்கள் என்று சொல்லி, தமிழக அரசு உடனேயே ஒரு கேவியட் போட்டு வைத்து, அதற்கு எதிர்ப்பாக ஆணை வாங்கிவிடக் கூடாது என்று. ஆனால், அங்கு எதுவும் கேட்காமல், தடை விதித்து 4 வாரம் கழித்து கேட்போம் என்று நீதிபதிகள் சொன்னார்கள். அதாவது, மத்திய அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது; ஆனால், அந்தச் சட்டம் கொண்டு வந்து Supreme Court-லே stay ஆனவுடனே, BJP அரசு என்ன கடிதம் எழுதுகிறது என்று பார்த்தால், 'நீங்கள் தமிழகத்தில் சட்டம் போட்டுக்கொள்ளுங்கள், நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை' என்று சொல்கிறது. சட்டம் கொண்டு வந்தது மத்திய அரசு. ஆனால், நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள் என்று தமிழக அரசிடம் சொல்கிறது. இது எப்படி நியாயமாக இருக்கும்? ஆனால், பிரதமர் மோடி அவர்கள் 2014 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஓட்டு கேட்டு வந்தார். தமிழகத்தில் என்ன சொல்லி ஓட்டுக் கேட்டார் என்றால், ஜல்லிக்கட்டு நிச்சயமாக நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழகத்திலே நடத்துவோம் என்று சொன்னார். ஏனென்றால், அது மத்திய அரசினுடைய பொறுப்பு. மத்திய அரசுதான் புதிய சட்டத்தைப் போட்டது. அதுமட்டுமல்லாமல், அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான், UPA Government தான். அப்பொழுது ஆட்சியிலே காங்கிரசும் இருந்தது; தி.மு.க.-வும் இருந்தது. ஆனால், அவர்கள்தான் முதலிலே ஜல்லிக்கட்டை நடத்த வேண்டுமென்று இப்பொழுது சொல்கிறார்கள்; அவர்கள்தான் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அதே போன்றுதான்

[திரு. பி.வி. கதிரவன்] [2016 ஜனவரி 21

BJP–யும் அதை நடத்துவோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தது. ஆனால் அதற்கு அனுமதியை இன்று கொடுத்தார்களா?

பிற்பகல் 4–15

ஜனவரி 15 ஆம் தேதி ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும். ஜனவரி 8 ஆம் தேதி notification கொடுக்கிறார்கள். அதனால் அவர்களுடைய மெத்தனம் புரிகிறது. இதுகுறித்த வழக்கு இப்பொழுது உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. அதற்கு என்ன முக்கிய காரணம் என்றால், PETA என்ற அமைப்பு, எப்படியாவது இந்திய நாட்டில் இருக்கின்ற காளைகளை, பசுக்களை வளரவிடக்கூடாது; அவற்றினுடைய உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்பது அவர்களுடைய திட்டம். ஏனென்றால், அதுபோன்று பசு மாடுகளோ, காளை மாடுகளோ இல்லையென்றால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய காலகட்டம் வரும். அதற்குத்தான் திட்டமிட்டு, PETA என்கின்ற அமைப்பு இதைச் செய்து வருகிறது. தமிழக அரசும், மத்திய அரசும் இதிலே தலையிட்டு, உடனடியாக, இந்த ஆண்டே ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விவசாயத் துறையில், தமிழகம் இன்று 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தியைக் கொடுத்திருக்கிறது. அதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு இரண்டு முறை விருதுகளைப் பெற்றிருக்கிறது. அதற்குக் காரணம் நல்ல விவசாய உற்பத்தி தமிழகத்தில் இருக்கிறது; நல்ல உற்பத்தி செய்ய முடியும்; நல்ல அரசு நடந்தால்தான் நல்ல உற்பத்தி வரும். அதில் மாற்றுக் கருத்தே இருக்க முடியாது. அந்த அடிப்படையிலே இரண்டாம் பசுமைப் புரட்சி என்ற சிறந்த திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். தொலைநோக்குத் திட்டம் 2023 திட்டத்தைக் கொண்டுவந்து, இன்றைக்கு விவசாயத் துறையில் 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னால், அதற்குக் காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டம் 2023 என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2016 ஜனவரி 21] [திரு. பி.வி. கதிரவன்]

பள்ளிக் கல்வித் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் இதுவரைக்கும் கிட்டத்தட்ட 65,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று பள்ளிக் கல்வித் துறைக்கு எந்த மாநில அரசும் அதிகமான நிதியை ஒதுக்கியிருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் பள்ளி மாணவர்களுக்கு 14 வகையான சலுகைகள், இது சாதாரண விஷயம் இல்லை. ஒரு சாதாரண பாமரன், அவருடைய குழந்தையைப் படிக்க வைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவருடைய குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பி, திரும்பி வரவைத்தால் போதும். ஏனென்றால், அவர்களுக்கு பஸ் பாஸ் இருக்கிறது; சைக்கிள் இருக்கிறது; லேப்–டாப் இருக்கிறது. மாணவர்களுக்கு 14 வகையான உபகரணங்களைக் கொடுக்கின்ற அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைத் தவிர, வேறு எந்த அரசும் இந்தியாவிலே இருக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலே எனக்கு ஒரு கோரிக்கை. பகுதிநேர ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 15,000 பேருக்குமேல் வேலை பார்க்கிறார்கள். இப்பொழுது ரூ.7,000 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் அல்லது அவர்களை நிரந்தரப் பணியாளர்களாகக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக மீனவர்கள் தினமும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு இதில் தலையிட வேண்டும். ஒரு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு இதிலே தலையிட வேண்டும். ஏனென்றால், அவர்கள் அந்த நாட்டுப் பிரச்சினை என்று விட்டுவிடுவார்கள். அந்த நாட்டுப் பிரச்சினையை இந்திய அரசுதான் தீர்க்க முடியும். ஆனால், இந்திய அரசு, திரு. மோடி அரசு, இதிலே தலையிட்டு இந்திய மீனவர்களைக் காப்பதில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஒரு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2016 ஜனவரி 21

அதுபோன்று, தமிழக அரசு கச்சத் தீவை மீட்பதில் உச்ச நீதிமன்றம் வரை சென்றிருக்கிறது. கச்சத் தீவு மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்த வழக்கைப் போட்டிருக்கிறது. இப்பொழுது தமிழக அரசும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபின், அந்த வழக்கிலே தன்னை ஒரு வாதியாக இணைத்துக்கொண்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறது. கச்சத் தீவை விரைவாகப் பெற்றால் மீனவர்களுக்கு நெடுந்தூர பிரச்சினை இருக்காது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாவட்டத்திலிருந்து வைகை நதி வருகிறது. குடிதண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்ட இடம் உசிலம்பட்டி ஆகும். இரண்டு பகுதிகளுக்கு வைகை நதி வருகிறது. அந்த இரண்டு பகுதிகளும் வைகை அணையை நம்பியிருக்கின்றன. ஆனால் தண்ணீர் வராமல் போகிறது. அதனால்தான் தமிழக அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஒரு புதிய திட்டத்தை இப்பொழுது வகுத்திருக்கிறது. வைகை அணையிலிருந்து நேரடியாக உசிலம்பட்டிக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் கொண்டுவந்து, நாளொன்றுக்கு 50 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுப்பதற்காக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். வருகிற பிப்ரவரி மாதத்திற்குள் அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–20

தென் மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீரை, சுற்றுச்சூழலை மிகவும் பாதிக்க வைத்தது சீமைக் கருவேல மரங்கள்தான். அவை தென் மாவட்டங்களில் அதிகமாக இருக்கின்றன. ஆனால், நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைச் சந்தித்து, 'இதையெல்லாம் அவரவர்களே வெட்டிச்செல்ல அனுமதியுங்கள்; அவர்களே வெட்டிச் சென்றுவிடுவார்கள்' என்று சொன்னேன். அதற்கு அவர் 'இல்லை, அப்படிச் செய்ய முடியாது. அதை வெட்டி அதில் என்ன பணம் வருகிறது என்பதை அரசுக்குச் சொல்ல வேண்டும்' என்று சொல்கிறார். அப்படிச் செய்தால் தாமதமாகும். ஆகையால், அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற President–களே கருவேல மரங்களை

2016 ஜனவரி 21] [திரு. பி.வி. கதிரவன்]

வெட்டி எடுக்கின்ற மாதிரி உத்தரவு போட்டால், அவர்களே மரங்களை வெட்டி எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். ஆகவே, தமிழக அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலிக் கருவையால் நிறைய பாதிப்பு இருக்கின்றது நிலத்தடி நீர்ப் பாதிப்பு; விவசாயம் அறவே இல்லாமல் போகின்றது, சுற்றுச்சூழல் பாதிக்கிறது. இதில் பல துறைகள் சம்பந்தப்பட்டு இருப்பதனால், இதற்கு ஒரு நல்ல முடிவை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், T.N.P.S.C. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகம் சென்னையில் உள்ளது. அது, 1924 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 90 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. ஆனால், எந்த விஷயம் ஆனாலும், தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலிருந்து சென்னைக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் எப்படி மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ, அதுபோன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகமும் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதியில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்குக் கொள்கை. சாராயக்கடை, கள்ளுக் கடைகளைத் திறப்பதற்கு முதன்முதலாகக் கையெழுத்து போட்டவர்களெல்லாம், இன்று மதுக்கடைகளையெல்லாம் அடைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும்போது அதை முதன்முதலாகக் கொண்டுவந்தார்கள். ஆனால், இன்று அனைவருமே அது இருக்கக்கூடாது என்ற ஒரு சிந்தனைக்கு வந்திருக்கின்றார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மதுப் பழக்கம் குறைக்கப்பட வேண்டுமென்ற கருத்து பொது மக்களிடையே வந்திருக்கிறது. இந்த மதுப் பழக்கத்தைக் குறைக்க வேண்டுமென்று ஒட்டுமொத்தமான ஒரு முடிவு வந்திருக்கிறது. அதனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை கூர்ந்து மதுக் கடைகளின் நேரத்தையும், கடைகளையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், அவர் சொன்னதைப்போன்று, ஆல்கஹால் அளவு குறைக்கப்பட வேண்டும். இதுபோன்ற நிலையைக் கண்டிப்பாகக் கொண்டுவர வேண்டும். ஏனென்றால், அதனால் உடல்நலக் கேடு ஏற்படுகின்றது;

[திரு. பி.வி. கதிரவன்] [2016 ஜனவரி 21

சண்டை சச்சரவுகள் வருகின்றன. அதைக் குறைக்க வேண்டுமென்று தமிழக அரசை, மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையிலே இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இருக்கின்றன. ஒரு காலத்தில் மருத்துவமனைகள் எப்படி இருந்தன? ஆனால், இன்றைக்குப் பார்த்தால் எவ்வளவு சுத்தமாகவும், எவ்வளவு அருமையாகவும் இருக்கின்றன. அங்கு போய் சிகிச்சைகளைப் பெறுவதற்கு மக்களுக்கு எவ்வளவு அருமையாக இருக்கிறது! இதை யாரும் மறுக்க முடியாது. ஒரு காலத்தில் அந்த மருத்துவமனைகளுக்கு உள்ளேயே போக முடியாது. இன்றைக்கு இருக்கின்ற மருத்துவமனைக்குள்ளே போய் வருகின்றபோது அந்த நிலைமையே மாறியிருக்கிறது. அதுசம்பந்தமாகத்தான் நம்முடைய மேதகு ஆளுநர் உரையிலே ஒரு விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே சிசு இறப்பு விகிதம் குறைந்து, தமிழகம் 2–வது இடத்திலும் மற்றும் மகப்பேறு இறப்பு விகிதம் குறைந்து 3–வது இடத்திற்கும் வந்திருக்கிறது. அதாவது குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை சிறப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின்சாரத் துறை. மின்சாரத் துறையிலே கடந்த 5 ஆண்டுகளில் அவ்வளவு பிரச்சினைகள் இருந்தன. மின் தட்டுப்பாடு அவ்வளவு இருந்தது. அதன் அடிப்படையில்தான் அன்றைக்கு இருந்த மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, 'எங்களுடைய தோல்விக்கு இந்த மின்வெட்டுதான் முதல் காரணம்' என்று சொல்லியிருக்கிறார். அந்தமாதிரி மின்வெட்டு இருக்கின்றபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தப் பொறுப்புக்கு வந்தார்கள். பொறுப்பேற்றதிலிருந்து 'நிச்சயமாக தமிழகத்தை மின்சாரத் துறையிலே, மின் மிகை மாநிலமாக மாற்றுவேன்' என்று சபதமிட்டார்கள். அதை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே அவர்களைப் பாராட்டுவது நம்முடைய கடமை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21] [திரு. பி.வி. கதிரவன்]

பிற்பகல் 4—25

பழம்பெரும் நடிகர் திரு. பி.யு. சின்னப்பா அவர்கள் 19 வயதிலே நாடகத் துறையிலே இறங்கி, சினிமாத் துறைக்குச் சென்று தனது 35 வயதிலே இறந்திருக்கிறார். தனது 19—வயதிலிருந்து 35 வயதுக்குள் 26 படங்களில் நடித்திருக்கிறார். நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களோடு நடித்திருக்கிறார். அவ்வளவு பழம்பெரும் நடிகர். அவர் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்த ஊரிலே அவர் பெயரிலே பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு அவருடைய சிலை வைக்கப்பட வேண்டுமென்று அங்குள்ள மக்களெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அவர் கலைத் துறையிலே, நடிப்புத் துறையிலே சிறந்து விளங்கியிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலட்சிய நடிகர்களைப் பாதுகாக்கின்றவர். அந்த அடிப்படையிலே பி.யு. சின்னப்பா அவர்களுக்கு சிலை வைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டம். இந்தத் திட்டத்தை சாதாரணமானவர்களால் கொண்டுவர முடியாது. 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அதை 2016 என்று அவர் கொண்டு வரவில்லை. அவர் மக்களின், ஓட்டுக்களை மட்டும் சிந்திப்பவராக இருந்தால், 2016 என்று கொண்டு வந்திருப்பார். தமிழக மக்களை உண்மையாக முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்; மக்களை முன்னுக்குக் கொண்டு வர நம்மால்தான் முடியுமென்று, நல்ல சிந்தனையோடு தொலைநோக்குத் திட்டம் 2023—ஐக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் உண்மையிலேயே எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்களுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, மேதகு ஆளுநர் உரையை வரவேற்று, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

[2016 ஜனவரி 21

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு

எனும் வள்ளுவரின் குறளுக்கேற்ப, 'மகராசி அம்மாவின் ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) மனநிறைவோடு வாழ்கிறோம்' என மாநிலத்து மக்களெல்லாம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திட, சுழலும் பூமியாய் உழைப்பு, பொழியும் மழையாய் கருணை, குளிரும் நீராய் கனிவு, உருகும் மெழுகாய் தியாகமும் கொண்ட தெய்வ திருவுருவமாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் மலர்ப் பாதங்களில் வணங்குகிறேன்.

அம்மா, பிறந்தவர்கள் அனைவரும் சிறந்தவர்கள் ஆவதில்லை; சிறந்தவர்கள் அனைவரும் மக்களின் மனங்களில் நிறைந்தவர்கள் ஆவதில்லை; நிறைந்தவர்கள் அனைவரும் மனித நெஞ்சங்களில் நிரந்தரம் ஆவதில்லை; ஆனால் பிறந்து, சிறந்து, நிறைந்து, ஏழை, எளிய மக்களின் இல்லமெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) நிரந்தரமாய் அமர்ந்திருக்கும் சிங்கநிகர் தங்கத் தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் நாட்டிற்கு அர்ப்பணிக்கும் நலன் பயக்கும் ஆளுநர் உரையில் வழிமொழிந்து பேசும் வாய்ப்பினைத் தந்தமைக்கு கோடானுகோடி நன்றி மலர்களைத் தாயின் பொற்பாத மலர்களில் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறையருள் அம்மா பக்கம் இருந்திடும்போது இங்கே, மறைவாக எதிரி செய்யும் மாய்மாலம் என்ன செய்யும் என்பதற்கிணங்க, உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகளில் நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம் எவருமே பெற்றிட முடியாத இமாலய வெற்றியினை ஆர்.கே. நகர் தொகுதி இடைத் தேர்தலில் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) 'அம்மா என்றால் வெற்றி, வெற்றி என்றால் அம்மா' என்பதைத் தொடர் நிகழ்வாக்கி, அடக்க நினைத்தோரை அதிர்ந்திட வைத்து, அநீதியை எதிர்த்து அறப்போர் நடத்தி, நீதியை வெண்றெடுத்து 5 ஆம் முறை முதல்வராய் அரியாசனத்தில் அமர்ந்திட்ட பேரறிவுப் பெருந்தகையே! (மேசையைத் தட்டும் ஒலி) பெருமை மிக்க எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) சோதனை என்பது தங்களுக்குப் புதிதல்ல.

2016 ஜனவரி 21] [திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்]

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் நாள் பழனி பொதுக் கூட்டத்தில் "அரசியல் ரீதியாக என்னை அழிக்க முடியாதவர்கள் என் உயிருக்கே ஆபத்தை விளைவித்து என்னை அழிக்க நினைக்கிறார்கள்" எனப் பேசினீர்கள். பேசிய 4—வது நாள், அதாவது 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 ஆம் நாள் புதுவை சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரம் முடித்துவிட்டு, தங்களது கார் சென்னையை நெருங்கும் சமயம் சதிகாரர்களின் சதிச்செயலால், அதிகாரத்தால் ஏவிவிடப்பட்ட லாரி ஒன்று மோதியபோது, அப்பளமாய் நொறுங்கியது அம்மாவின் கார். குறையில்லா தலைவியைத்தான் கொல்லவே திட்டம் போட்டார்கள். ஆனால், கறையில்லா கடவுள் வந்து கணக்கையே மாற்றிவிட்டார் எனும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை துன்பங்கள் வந்து இதயத்தைத் துளைத்தாலும், புத்தனைப்போல் பொறுமை காத்து, 1991—ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 168—ல், 163—ல் வெற்றி பெற்று, 1991 ஜூன் 24—ல் சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தமிழகத்தின் ஒன்பதாவது முதல்வராகப் பதவியேற்று, கசப்பே இல்லை என்றால், இனிப்புக்கென்ன சிறப்பு, எதிரியே இல்லை என்றால் உண்மை வாழ்க்கைக்கு என்ன மதிப்பு எனும் பேருண்மையை உலகிற்கு உணர்த்திய பெருமைக்குரியவர் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4—30

இருள் படிந்து கிடந்த தமிழகத்திற்கு அருள் தரவே அவதரித்த அருட்கொடையாம் மாண்புமிகு அம்மா அவர்கள், முதன்முதலாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று 1991—1996—ல் எத்தனையோ திட்டங்களைத் தந்தாலும், காலத்தால் மறக்க முடியாததும் மனித குலத்தின் மாண்பிற்குரியதும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டங்கள்.

1992 ஆம் ஆண்டு அக்டோபர் 15—ஆம் நாள் தினத்தந்தியில் ஒரு செய்தி வெளியாகிறது. கருவில் இருக்கும் பெண் குழந்தையை அழித்துவிடச்சொல்லி மாமனாரும், மாமியாரும் வற்புறுத்தியதால் அதைச் செய்ய மனமில்லாமல் சேலம் மாவட்டம், தொப்பூர், காமராஜர்புரத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரி என்ற 19 வயது இளம் மனைவி தற்கொலை செய்துகொண்டார் என்பதுதான் அந்தச்

[திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்] [2016 ஜனவரி 21 செய்தி. இந்தச் செய்தியைப் படித்த மனித நேய தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மனம் கலங்கினார்கள். அப்பொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உள்ளத்தில் கருணைப் பெருக்கால் உதித்த திட்டம்தான் தொட்டில் குழந்தைத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளப்பரிய திட்டத்தை அன்னை தெரசா அவர்களே மனமுவந்து பாராட்டினார்கள்.

இந்த ஒப்பற்ற திட்டத்தால் முதன்முதலாக மீட்கப்பட்ட ஐந்து குழந்தைகள் தற்பொழுது வளர்ந்து, கணிப்பொறி, அறிவியல், பொறியியல், வணிகவியல், நடனம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கி, தங்களுக்கு உயிர் கொடுத்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள் (மேசையை தட்டும் ஒலி) என்பதோடு, இத்திட்டத்தால் பெண் குழந்தைகள், "மாதராய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும்" என்று பரணி பாடுவார்கள் என்று 24-4-2013 தினத்தந்தி நாளிதழில் தலையங்கச் செய்தியாக வெளியானதை நாடும் மறந்துவிடவில்லை; நாட்டு மக்களும் மறந்துவிடவில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெரியார் காண விழைந்த பெண்ணினத்து விடுதலையின் பீடுநடையாம், பெருமைமிகு புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு பொருள் வளம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதுபோல பிறக்கும் அனைத்துக் குழந்தைகளின் நல்வாழ்வும் முக்கியமானது என்ற கருத்திலும், குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிப்பதைத் தலையாய கடமையாகக் கருதியும் தாயுள்ளம் கொண்டு, வசதி படைத்தவர்கள் வீட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கும் வசதியில்லாமல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பிறக்கும் குழந்தைகளுக்கும் வேறுபாடும், வித்தியாசமும் இருக்கக்கூடாது என்னும் நோக்கில், மாண்புமிகு புரட்சித் தலைவியின் வருகைக்கு பிறகுதான் சாமானிய மக்களின் வாழ்வில் சந்தோஷம் குடிகொண்டது என்பதை மெய்ப்பிக்கும் வகையில், "அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்" என்ற அற்புதமான திட்டம் செயலாக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்திட்டத்தின்மூலம் ரூபாய் ஆயிரம் மதிப்புள்ள 16 பொருட்களடங்கிய பெட்டகம் வழங்கப்படுகிறது. இது உலகிலுள்ள உயிர்கள் யாவும் உச்சரிக்கும் முதல் வார்த்தை 'அம்மா' எனும் அதிசயத் தலைவியின் கருணை மனதில் மலர்ந்த

2016 ஜனவரி 21] [திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்]
மற்றுமொரு மணம் வீசும் மலர். இச்செய்தியினை "முதலமைச்சரின் முதல் பரிசு" என தினசரி நாளிதழ்கள் பாராட்டின.

சேதுவிற்காக உயிரையும் இழப்பேன், நூலகத்திற்காக தீக்குளிப்பேன், ஈழத்திற்காக என்னையே மாய்த்துக்கொள்வேன் என வாய்ஜாலம் காட்டி, கோடிகளை குடும்ப சொத்தாக்கிய தன்னல அரசியல் தலைவர் அல்ல எங்கள் அம்மா. இந்தியா–பாகிஸ்தான் யுத்தம் நடைபெற்றபோது, கவிஞர் கண்ணதாசன் தலைமையில் பஞ்சாப் பகுதிக்குச் சென்ற திரைப்படக் குழுவில், அற்புதத் தாய் அம்மா அவர்களும் இடம்பெற்று தமது தேசப் பற்றை வெளிப்படுத்தினார்கள்.

இச்செய்தியை "போர் வீரனே அஞ்சும் போர்க்களத்தில் ஒரு பூ பூத்தது–அந்தப் பூ புரட்சித் தலைவி" என்று புகழ்ந்துரைத்தான் ஒரு கவிஞன். (மேசையைத் தட்டும் ஒலி) போர்க்களத்திலிருந்து சென்னை திரும்புமுன் டில்லியில் குடியரசுத் தலைவர் மேன்மைமிகு டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் திரைப்படக் குழுவினரை வரவேற்று வாழ்த்தினார்கள். முதல்வராய் கோட்டையில் நுழையும் முன்பே, குடியரசுத் தலைவர் கொலுவிருக்கும் செங்கோட்டையில் வாழ்த்து பெற்ற பெருமைக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்வோடு மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனிய தமிழ்நாடு, இந்தியாவின் பார்வையில் மட்டுமல்லாது, அகில உலகப் பார்வையிலும் ஓர் அமைதிப் பூங்கா; வாழும் மக்களுக்கு வசதிகள் அனைத்தும் தந்துள்ள மாட்சிமை மிகுந்த ஆட்சியை நல்குவது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை நிரூபிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு நலிவடைந்தோருக்கு வீடு வழங்கும் திட்டத்தில் முனைப்பாகச் செயல்பட்டு, மத்திய அரசின் முழு இலக்கையும் நிறைவு செய்துள்ளமைக்கு 11–3–2015–ல் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்களும், மின் உற்பத்தியைப் பெருக்கியமைக்காக மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. பியூஷ் கோயல் அவர்களும் நாடாளுமன்றத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள்.

[திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்] [2016 ஜனவரி 21 பிற்பகல் 4–35

15–3–2015 அன்று டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய தொழில் வர்த்தக சபைகளின் கூட்டமைப்பின் தலைவர் திரு. ராணா கபூர் அவர்கள் 8 துறைகளில் நாட்டிலேயே தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது என பெருமைபடத் தெரிவித்துள்ளார்கள்.

24–11–2012 அன்று தமிழக மக்களுக்காக அளித்துவரும் நலத் திட்ட உதவிகள் குறித்த புகைப்படங்களைப் பார்த்த ஐஸ்லாந்து நாடாளுமன்றக் குழு தலைவர் திரு. அஸ்தா ஆர். ஜோக்கன்னஸ்பர்க் அவர்கள் முதலமைச்சர் அம்மா அவர்களை மக்கள் நலன் காக்கும் இரும்புப் பெண்மணி எனப் புகழாரம் சூட்டியதை பத்திரிகைகளெல்லாம் பாராட்டின. (மேசையைத் தட்டும் ஒலி)

1–1–2014 அன்று சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையிலுள்ள அம்மா உணவகத்தைப் பார்வையிட்ட சண்டிகர் மாநகராட்சி மேயர் திரு. ஹர்புல் சந்தர் கல்யாண் அவர்கள் நிருபர்களிடம் மலிவுவிலை உணவகத்தைச் செயல்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்ததோடு, சண்டிகரிலும் விரைவில் தொடங்குவோம் எனக் கூறியுள்ளார்கள். இதுபோன்று அண்டை மாநிலங்களும், உலக நாடுகளும் வியந்து போற்றுகின்ற உன்னத ஆட்சியை வழங்குபவர்தான் தென்னகத்தின் பெண்ணரசி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரே துறையில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் ஊழல், மக்களாட்சிக் கொள்கையை தன் மக்கள் ஆட்சி என மைனாரிட்டி ஆட்சி நடத்திய கோபாலபுரம்; இத்தாலி காங்கிரசும் இனத் துரோகக் கட்சியும் கூடி ஆட்சிபுரிந்த காலத்தில் ஜல்லிக்கட்டு தடையைக் கொண்டுவந்தபோது, விடிந்தால் கிளறுவதும், உளறுவதுமாக உள்ள தமிழகத் தலைவரைக் கொண்ட சத்தியமூர்த்தி பவன்; கட்சித் தலைவருக்குரிய கண்ணியம் எதுவுமின்றி, உடனிருந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் இழந்துவிட்டு, தனக்கும் தெரியாமல், கேட்பவர்களுக்கும் புரியாமல், தள்ளாடும் வார்த்தைகளைத் தடுமாறிப் பேசி, என்னவென்று கேட்கும் பத்திரிகையாளர்கள்மீது எச்சில் துப்பும் நகைப்பிற்குரிய கோயம்பேடு போன்ற வெத்துவேட்டு கட்சிகளின் பித்தலாட்டக் கதைகள் தமிழக மக்களிடத்தில் ஒரு காலமும் எடுபடாது

2016 ஜனவரி 21] [திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்]

என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திடம் கொண்ட மனம், தீர்க்கமான பாதை, தெளிவான பயணம், பேதமில்லா பார்வை எனும் பெருமை சூழ்ந்த பேரறிவுத் தாயாம் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழுக்குத் தன்னை ஈந்த பாரதி முதல் தமிழருக்குத் தண்ணீர் தந்த பென்னி குயிக் வரை மணிமண்டபங்கள், திருவுருவச் சிலைகளால் தியாகங்களைப் போற்றியுள்ளதோடு, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ தமிழ்நாட்டிற்கு அர்ப்பணித்து, 2015 செப்டம்பர் 9, 10 தேதிகளில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்திக் காட்டி, 2,42,160 கோடி ரூபாய் முதலீட்டையும், 4,70,065 பேருக்கு வேலைவாய்ப்பையும் உருவாக்கித் தந்து, இல்லாமையைத் தீர்த்து, கல்லாமையை மாய்த்து, வேலையில்லாமையைத் துரத்தும் சரித்திரப் புகழ்மிக்க சாதனைத் தலைவியாக விளங்குபவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்றால் மிகையாகாது.

வானம் பார்த்த பூமியில் பிறந்து, வான்வெளி ஆராய்ச்சியின் வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் பிறந்த அக்டோபர் 15 ஆம் தேதியை இளைஞர் எழுச்சி நாள் என அறிவித்து, அப்துல் கலாம் விருதையும் செயலாக்கி, நினைவில்லம் அமைக்க நிலம் ஒதுக்கித் தந்து, முத்திரை பதித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

காவேரி பிரச்சினைக்காக வீரமங்கை வேலுநாச்சியாரும், ஜான்சி ராணியும் படையெடுத்தார்கள் என்பதும், காவேரியின் குறுக்கே கட்டிய கிருஷ்ணராஜசாகர் அணையை முதலாம் ராஜராஜ சோழன் உடைத்தான் என்பதும் படித்தறிந்த வரலாறு. 1968–ல் காவேரியின் குறுக்கே அணை கட்டும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, 1974–ல் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காமல் விட்டுவிட்டு, 2007–ல் வெளியிட்ட காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடாமல் செய்து, காவேரி டெல்டாவாழ் மக்களின் வாழ்விற்கு வஞ்சகம் விளைவித்தது கண்முன்னே பார்த்த துரோகச் செயல். ஆனால், காவேரிப் பிரச்சினைக்காக "தமிழ் மக்களுக்காக தண்ணீர் பெற்றுத் தருவதே தலையாய பணி" என்று 22 ஆண்டுக் காலம் இடைவிடாது சட்டப் போராட்டம் நடத்தி, 19–2–2013–ல் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) எவராலும் செய்ய

[திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்] [2016 ஜனவரி 21 முடியாததைச் செய்து காட்டியதும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக்கொள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று நீரைத் தேக்கியதும், வரலாறும் வாழ்த்துக் கூறும் வல்லமையின் பிறப்பிடம் என் தாய், காவேரி பெருவளத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 4—40

2006—2011—ல் ஆட்சியிலிருந்த மைனாரிட்டி அரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 40 நிமிடங்கள் உண்ணாவிரத நாடகம் நடத்தி, போர் முடிந்துவிட்டது எனக் கூறிய பின், முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்டவர்கள் ஒன்றரை இலட்சம் இலங்கைத் தமிழர்கள். ஆனால், இலங்கைத் தமிழர்களுக்காக இலங்கையின்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை 8—6—2011—ல் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தவரும், இலங்கை இனப் படுகொலை குறித்த சர்வதேச விசாரணை நடத்தக் கோரும் தீர்மானத்தை, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இந்தியா கொண்டுவர வேண்டும்; இலங்கைக்கு ஆதரவான தீர்மானத்தை இராஜதந்திர ரீதியில் தோற்கடிக்க வேண்டுமென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை 16—9—2015 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றியவரும், தமிழினம் காக்கும் தங்கமனத் தலைவி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விலையில்லா அரிசியால் பசிக்கு விடை கொடுத்த ஈகையின் இருப்பாம், ஈரிலையின் துடிப்பாம், படிக்கும் மாணவர்கட்கு மடிக் கணினி, பாடப் புத்தகங்கள் எனப் பரிவோடு அள்ளித் தரும் பத்தரை மாற்றுத் தங்கமாம் பொன்மனத் தலைவியின் முழக்கம் 'மக்களால் நான், மக்களுக்காக நான்', 'உங்களால் நான், உங்களுக்காக நான்' என்பது நாடறிந்தது.

ஆனால், சமீபத்தில் நாடு முழுக்க ஓர் அவலம் அரங்கேறியது. அதுதான் 'நமக்கு நாமே விடியல் மீட்புப் பயணம்'. இந்தப் பயணம் குறித்து நடைப் பயணக்காரரின் சகோதரர் சொல்கிறார், 'இது ஒரு காமெடி டைம்ஸ்'. இந்தக் கருத்து குறித்து தினமணி நாளிதழ் வாசகர்களிடம் கருத்து கேட்டது. சகோதரர் சொன்னது சரியே என 62 சதவீதம், தேர்தல் ஸ்டன்ட் என 23 சதவீதம்,

2016 ஜனவரி 21] [திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்]

ஏற்கலாம் என 15 சதவீதம். இதுதான் நமக்கு நாமே நடைப்பயண விவரம்.

2004 ஆம் ஆண்டு தமிழக கடலோரப் பகுதிகளைக் காணாமல் செய்து 610 உயிர்களைப் பலி வாங்கிய சுனாமியின்போதும், 2011 ஆம் ஆண்டு 42 பேர் உயிரிழப்பு, முந்திரி உள்பட பல இலட்சக்கணக்கான மரங்கள் சாய்ந்து, கோடிக்கணக்கான ரூபாய் அளவில் பொருட்சேதம் ஏற்படுத்திய 'தானே' புயலின்போதும், அசுர வேகத்தில் அமைச்சுப் பணிகளைச் செயல்பட வைத்து, அழிவுகளின் அடிச்சுவடுகூடத் தெரியாமல், தாயாக இருந்து சேயாகிய மக்களின் இன்னல்களைக் களைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) சமீபத்தில் கடந்த நூறாண்டுக் காலத்தில் பெய்திராத பெருமழைக்கு, முறையாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டதால், பாதிப்புகளையும் உயிரிழப்புகளையும் குறைப்பதற்கு வழிவகுத்தாலும், பெருவெள்ளம் பாதிப்பின் சுவடுகளை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

நாளொன்றுக்கு 24 மணி நேரத்தில், 20 மணி நேரம் நாட்டு மக்களின் நலன் கருதி உழைக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, வெள்ள பாதிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டு, 7,244 நிவாரண முகாம்களைத் திறந்து, 23.51 இலட்சம் நபர்களுக்கு தங்குமிடம் மற்றும் 1.36 கோடி உணவுப் பொட்டலங்களை வழங்கியுள்ளது. மேலும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நான்கு நாட்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம் அறிவிக்கப்பட்டு, 1.54 கோடி பயணிகள் பயனடைந்துள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 36,840 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, துப்புரவுப் பணியும் துரிதப்படுத்தப்பட்டதால், தொற்றுநோய் பரவாமல் தடுத்தது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. மக்களின் துயர் துடைத்திட மேற்கொண்ட இப்பணி குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மதிநுட்பம் வாய்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, வெள்ளம் பாதித்த பகுதிகளில் மிகக் குறுகிய காலத்திற்குள் இயல்பு நிலையைக் கொண்டு வந்ததுடன், வெள்ளத்தின்போது

[திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்] [2016 ஜனவரி 21

சேதமான பட்டா, கல்விச் சான்றிதழ்கள், குடும்ப அட்டைகள், எரிவாயு இணைப்பு அட்டைகள், ஆதார் அட்டைகள், வங்கிக் கணக்குப் புத்தகங்கள் போன்ற ஆவணங்களை வழங்கிட சிறப்பு முகாம்களை நடத்தியதோடு, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும், கூடுதல் சீருடைத் தொகுப்புகளையும் வழங்கியது பாராட்டிற்குரிய பணி என்று பயனடைந்தவர்கள் மனதார வாழ்த்துகின்றார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சாலைகள், பாலங்கள், பாசன கட்டமைப்புகள், கட்டடங்கள் போன்ற பொது கட்டமைப்பு வசதிகளை உடனடியாக சரி செய்வதற்காக 595.82 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இதுபோன்ற பணிகளை இந்த அம்மாவால்தான் செய்ய முடியுமென மக்கள் மனமுவந்து பாராட்டுகிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–45

குடிசைகள் முழுமையாக அல்லது பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு தலா ரூ.5,000/–, உடை, பாத்திரங்கள் போன்ற தனிப்பட்ட உடைமைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.5,000/–, குடிசைகள் பாதிக்கப்பட்டு வெள்ளம் புகுந்திருந்தால், அக்குடும்பங்களுக்கு ரூ.10,000/– என நேரடியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சேரும் வகையில் அவர்களுடைய வங்கிக் கணக்கில் வழங்கியுள்ளது, மாண்புமிகு அம்மா அவர்களின் பேரிடர் காலப் பணிகளுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

துயர் துடைக்கும் பணியில் தொய்வின்றிப் பணியாற்றும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, குடிசைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்ததால், பாதிக்கப்பட்ட 5 இலட்சம் குடும்பங்களுக்கு 273.10 கோடி ரூபாயும், வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் பாதிக்கப்பட்ட 25 இலட்சம் குடும்பங்களுக்கு 1,274 கோடி ரூபாயும், 3.82 இலட்சம் ஹெக்டேர் பரப்பிற்கு பயிர் இழப்பினால் பாதிக்கப்பட்ட 4 இலட்சத்து 81 ஆயிரத்து 975 விவசாயிகளுக்கு 451.15 கோடி ரூபாயும், ஆக இதுவரை வெள்ள நிவாரணத்திற்காக 2,640 கோடி ரூபாயை வழங்கியுள்ளதுடன், மாநிலத்தை வெள்ளம் பாதித்த மாநிலமாக அறிவித்திருப்பதால் பயிர்க் கடன்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக் கடன்கள் உள்ளிட்ட இதர கடன்கள் வசூலையும் ஒத்திவைக்கச்

2016 ஜனவரி 21] [திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்]

செய்துள்ளது, இயற்கை தந்த பெரும் இழப்பையும் இல்லாமல் செய்த பெண் குலத்தின் பொன் விளக்காம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை நிறைவாக்கி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"தாயின் பேனா குனியும்போதெல்லாம் தமிழகம் தலை நிமிரும்" என்பதற்கிணங்க, சென்னைவாழ் மக்களின் நிறைவேறாத நீண்டநாள் ஆசையான மெட்ரோ இரயிலை முதன்முதலாக இயக்கி புதுமை படைத்து, வரலாறும் படைத்தவர் வாகைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

தலைநகர் தாகம் தீர்த்த புதிய வீராணம் திட்டம்; சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பன்முக உயர் சிறப்பு மருத்துவமனை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம், சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள், வருமான உச்ச வரம்பின்றி மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் திருமண உதவித் தொகை, பயனிகளுக்கு 10 ரூபாய்க்கு பாதுகாக்கப்பட்ட அம்மா குடிநீர், அம்மா சிமென்ட், அம்மா மருந்தகம், இல்லத் தாய்மார்களுக்கு விலையில்லா மிக்கி, கிரைண்டர், மின் விசிறி, வறிய குடும்பங்களின் வாட்டத்தைப் போக்கிட விலையில்லா வெள்ளாடுகள், கறவைப் பசு மாடுகள், திருக்கோயில்களில் அன்னதானம் போன்ற எண்ணிலடங்காத் திட்டங்களை நாளும் நல்குவதுடன், திட்டங்களைத் தேடி மக்கள் செல்ல வேண்டாம், மக்களைத் தேடி திட்டங்கள் செல்ல வேண்டும் என்று செயல்படும் சீர்மிகு ஆட்சியின் சிறப்பினை எண்ணிப் பார்க்காத நெஞ்சங்கள் இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) ஏறிட்டுப் பார்க்காத தலைவர்களும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்மா, உலகில் எல்லோருக்கும் தாய்மொழி உண்டு. ஆனால் தமிழகத்திலுள்ள 7½ கோடி தமிழ் மக்களுக்கும் எங்கள் தாய்தான் மொழி. எங்கள் தாய்தான் விழி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தாய்தான் வழி என போற்றி வணங்கும் தமிழகத்தில் தாயின் நலத் திட்டங்கள் இல்லாத வீடுகளே இல்லை எனும் அளவிற்கு, தமிழர்களின் வாழ்வைத் தரணியில் உயர்த்தியதால், ஆறாம் முறையும் அரசாள அன்னைத் தமிழ் பூமியின் ஆசிபெற்ற அன்புத் தெய்வம் அம்மா அவர்களே.

[திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்] [2016 ஜனவரி 21

எதிர்வரும் பொதுத் தேர்தலில், எதிர் அணிகள் எத்தனை வியூகங்கள் அமைத்தாலும், 2016-ல் மட்டுமல்ல; வாழ்நாள் முழுவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) இதுவே தமிழகம் காணப்போகும் காட்சி என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் ஆப்பிரிக்காவின் அடையாளம் நெல்சன் மண்டேலா, சிங்கப்பூரின் அடையாளம், லீ குவான் யூ, பாரத தேசத்தின் அடையாளம் அண்ணல் காந்தி, இந்திய ஆன்மிகத்தின் அடையாளம், விவேகானந்தர், ஆனால் உலகத் தமிழினத்தின் ஒரே அடையாளம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 68-வது பிறந்த நாளில் எல்லா நலமும் இனிதே பெற்று பல்லாண்டு வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, வாழ்த்த வயதில்லையென்பதால் வணங்கி, தந்த வாய்ப்பிற்கு தாயின் பொற்பாத மலர்களில் மீண்டும் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, பணிந்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

தமிழகத்தில் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, மக்கள் வாழ்வை மேம்படுத்திட திட்டங்களைச் செயல்படுத்தியிருந்தாலும், ஏழை, எளிய மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. கடுமையான விலைவாசி உயர்வும், கீழ்த்தட்டு, அடித்தட்டு மக்கள் முன்னேற்றம் இல்லாமலும் காணப்படுகிறார்கள். நான் தமிழக சட்டமன்றப் பேரவையில் கொண்டு வருவதற்காக அளித்த மதுவிலக்கு மற்றும் மதுவினால் பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வு மது அடிமைகள் மீட்பு குறித்த தனிநபர் சட்ட மசோதாவிற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய பாரதிய ஜனதா அரசுக்கு தங்களுடைய 37 மக்களவை உறுப்பினர்கள்

2016 ஜனவரி 21] [திருமதி எஸ். விஜயதரணி]

மற்றும் பல மாநிலங்களவை உறுப்பினர்கள் உங்கள் கட்சியிலிருந்து உதவியாக அவர்களுக்குப் பல்வேறு சட்டங்கள் நிறைவேற வாக்களித்து, பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். மதுவிலக்கை பூரணமாக அமல்படுத்த, நிகர நிதியை மத்திய அரசு முழுமையாக வழங்கினால் அதை அமல்படுத்த மாநில அரசுக்கு ஏதுவாக இருக்குமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையில் தெரிவித்தார்கள். எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களின் பலம் என்பது உங்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்தி மத்திய அரசிடம் அழுத்தம் கொடுத்து, நிகர நிதியைப் பெற்று மதுவிலக்கை படிப்படியாகவாவது அமல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு சிறிய ஆலோசனை. உங்கள் காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகாவில் எல்லாம் முதலில் மதுவிலக்கை அமல்படுத்தி மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் மதுவிலக்கை அமல் செய்துவிட்டோம், நீங்களும் அமல்படுத்துங்கள் என்று பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல ஆலோசனையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கேரளாவில் அதைத்தான் தற்பொழுது செய்துகொண்டிருக்கிறோம். படிப்படியாக மதுக் கடைகளைக் குறைப்பது, மதுப் பழக்கத்திற்கு மக்களை ஆளாக்காமல் தடுப்பது, இவையெல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் செய்திருப்பது ஒரு

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2016 ஜனவரி 21

eyewash. அதனால் எந்தவிதத்திலும் மது விற்பனை அளவு அங்கு குறையவே இல்லை. ஏற்கெனவே நீதிமன்றம் அதற்குத் தடை விதித்திருக்கிறது. ஆக, எல்லா வகையிலும் இன்றைக்குக் கேரளாவில் மதுவிலக்கு அமல்படுத்தப்படவில்லை. அது வெறும் வெற்று அறிவிப்பாகச் சென்றுவிட்டது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அதில் உள்ளார்ந்த ஈடுபாடு இல்லாமல் மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு போலி திட்டத்தைக் கொண்டுவந்த காரணத்தினால்தான் அதைச் செயல்படுத்த முடியவில்லை. அதனால் நீதிமன்ற தடையாணை பெற்று, இல இடங்களில் நடந்துகொண்டுதான் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைய விஷயங்களை சொன்னாலும், ஒரு விஷயத்தை உறுதியாக சொல்லியிருக்கிறார்கள். கேரளாவில் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதைப் பற்றி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அது அவர்களுடைய உறுதியான உணர்வைத்தான் வெளிப்படுத்துகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. கிளப்புகளைத் தவிர, தனியார் நடத்துகிற இடங்களில், அரசு நடத்துகிற இடங்களில் தடை செய்திருக்கிறார்கள். தனியார் தடை செய்த கிளப்புகள் FL2, FL3 Bar license வைத்திருக்கிறவர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை வாங்கியிருப்பதால், இப்பொழுது அவர்கள் தொடர்ந்து நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். மதுக் கடைகளும், பார்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: அதாவது, நீதிமன்றத் தடையாணை எல்லாம் பெறலாம். ஆனால், அடிப்படையாக பூரண மதுவிலக்கை படிப்படியாக அமல்படுத்த வேண்டும் என்கிற நோக்கம் என்பது

2016 ஜனவரி 21] [திருமதி எஸ். விஜயதரணி]

ஓர் அரசுக்குத் தேவை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். அதை கேரள அரசு செய்திருக்கிறது. அதை ஏன் நாம் ஆரம்பிக்கக்கூடாது? Atleast start–up–ஆகவாவது இருக்கலாமே. அந்த அளவில்தான் அந்த suggestion.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நீங்கள் முதலில் கர்நாடகாவில் suggestion ஐ சொல்லுங்கள். கர்நாடகாவில் உங்களுடைய காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெறுகிறது. கர்நாடகாவில் முதலில் ஒட்டுமொத்த பூரண மதுவிலக்கை அமல்படுத்தச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு நீங்கள் கோரிக்கை வையுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவில் எங்களுடைய கட்சியின் முதலமைச்சர் அவர்கள் உங்களை மாதிரி சொல்லியிருக்கிறார்கள். மத்தியில் இருக்கும் பாரதிய ஜனதா அரசாங்கம் நிகர நிதியை முழுமையாக தருமேயானால், நாங்கள் மதுவிலக்கை அமல்படுத்துகிறோம் என்று அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்த நோக்கம் என்பது சரியானது. அந்த அளவில் நீங்கள் இப்போதுதான் மதுவிலக்கைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். மத்திய அரசு பணம் தரட்டும், நாங்களும் நிறுத்துகிறோம் என்று நீங்களும் சொல்கிறீர்கள். அதையே முன்னேற்றமாக நான் பார்க்கிறேன். ஆகையால் அடுத்த முன்னேற்றத்திற்குப் போகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தெளிவாகச் சொல்லியிருக்கிறது. மத்திய அரசு நாடு முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்துவதனால் ஏற்படுகின்ற வருவாய் இழப்பை மாநிலங்களுக்கு ஈடு செய்யுமானால், உடனடியாக நாங்களும் மதுவிலக்கை அமல்படுத்துவதற்குத் தயார் என்பது ஆரம்ப நிலையிலிருந்தே அரசினுடைய கொள்கை. அன்றிலிருந்து அதைத்தான் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

[2016 ஜனவரி 21

பிற்பகல் 4—55

திருமதி எஸ். விஜயதரணி: அடிப்படையாக மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டுமென்பது உறுதியான நிலைப்பாடாக மக்கள் மத்தியில் இன்றைக்கு நிலவி வருகிறது. மக்களுடைய மனநிலையை அறிந்துதான், இந்தக் கோரிக்கையை நாங்கள் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறோம். அதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். அனைத்து அரசியல் கட்சிகளும், வெறும் அரசியல் செய்வதற்காக இதைச் சொல்கிறார்கள் என்பதைத் தாண்டி, இதில் ஒரு பார்வை ஆளுங்கட்சிக்கு இருந்தால், இதிலே வருங்காலத்திலே அவர்களுக்கும் நன்மை இருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை. எனவே, இதை ஒரு suggestion ஆக எடுத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக நன்மை கிடைக்கும்.

அதேபோல, அதிகமான பலம் உங்களுக்கு பாராளுமன்றத்திலே இருக்கின்றது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். G.S.T. வரி, அதாவது, பொருட்கள் மற்றும் சேவைகள் வரியைப் பற்றி ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரையில், உரிய இழப்பீடுகள் போன்றவற்றையெல்லாம் சரியாக நிர்ணயித்து, அதன் பின்னர்தான் அதற்கு வாக்களிக்க நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். அவசரப்பட்டு, அவசர கதியில் அந்த G.S.T. சட்டத்தை தற்போது உள்ள வடிவத்தில், இந்த அரசாங்கமோ அல்லது உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களோ ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பது என்னுடைய கோரிக்கையாக இருக்கிறது. ஏனென்றால், மாநில அரசினுடைய நிதி பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றது; நிதிக் குறைப்பு இருக்கிறது. காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் அதை வலிமையாக எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.S.T.–ஐப் பொறுத்தவரையில், வெளிப்படையான தன்மை வேண்டும்; இழப்பீட்டுத் தொகை வேண்டும். அந்த அளவிற்கெல்லாம் வரையறுக்கப்பட்டு, மைய அரசு வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்குப் பிறகுதான் ஆதரவு தெரிவிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்

2016 ஜனவரி 21] [திரு. எம்.சி. சம்பத்]

உறுதியாக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. 14–வது நிதி ஆணையம், மாநில அரசுக்கு நிதிக் குறைப்பு செய்து, பெரிய அளவில் அநீதி இழைத்திருப்பதை சென்ற பட்ஜெட் உரையிலும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அதேபோல, இப்போது ஆளுநர் உரையிலும், கிட்டத்தட்ட ஓராண்டிற்குப் பிறகு அது மீண்டும் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஓராண்டில் நிறைய சட்டங்களை ஆதரித்து நீங்கள் டெல்லியில் பாராளுமன்றத்தில் ஓட்டு போட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள். தயவு செய்து நம்முடைய மாநில அரசுக்கு இந்த நிதிக் குறைப்பு நியாயமற்றது என்பதை வலியுறுத்தி, நீங்கள் அதைப் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலேயே சொல்லியிருக்கிறேன். மாநில நலன் பாதிக்கப்படுகிறது என்று சொன்னால், அதற்கு ஒருபோதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணையாக இருக்காது; ஆதரிக்காது என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தினுடைய உரிமைகள், தமிழர்களுடைய நலன், தமிழர்களுடைய வாழ்வுரிமை, ஒட்டுமொத்த மீனவர் நலன்; இப்படி தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டாலும் சரி, உரிமைகள் பாதிக்கப்பட்டாலும் சரி, அதை முதலிலே எதிர்ப்பது, அங்கே எந்த அரசாங்கம் இருந்தாலும் சரி, உங்களுடைய அரசாங்கம் மத்தியில் இருந்தபோதும், தமிழர்களுக்கு விரோதமாக நீங்கள் நடந்துகொண்டபோது, அப்பொழுதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்த்து வந்தார்கள்; இப்பொழுதும் அப்படித்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அரசாங்கம் என்று

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2016 ஜனவரி 21

அல்ல; தற்போது மத்தியிலே உள்ள பாரதிய ஜனதா கட்சி அரசு தமிழர்களுக்கு எதிராகச் செய்தாலும், அதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்த்துத்தான் வருகிறார்கள். ஆகவே, இதிலே ஒன்று மட்டும் தெரிகிறது. தமிழர்களுக்கு எதிராகச் செயல்படுவதில் இரண்டு கட்சியினரும் கிட்டத்தட்ட ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுக்கு எதிராக எப்பொழுதும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி இருந்ததில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். அந்தவிதத்தில், இன்றைக்கு (குறுக்கீடுகள்) தமிழ்நாட்டில் நாங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டிற்கு எதிராக எந்தச் சூழ்நிலையிலும் இருந்ததில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் சொல்கிறார்கள். காவேரிப் பிரச்சினையில், 17 ஆண்டுகளுக்குப் பின்னர் நடுவர் மன்றத்தில் இறுதித் தீர்ப்பு வந்தது. இறுதித் தீர்ப்பினை நாம் உறுதிப்படுத்த வேண்டுமென்றால், அதை மத்திய அரசின் Gazette-ல் வெளியிட வேண்டும். 2007-ல் தீர்ப்பு வந்தது. அப்பொழுது தி.மு.க.-வின் கூட்டணியோடு உங்களுடைய கட்சியின் தலைமையில்தான் ஆட்சி இருந்தது. அப்போது நீங்கள் அதற்கான அரசாணையைக் கொடுக்கவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்கூட, உடனடியாக அதற்கான அரசாணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வள்ளுவர் கோட்டத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். ஆனால், நீங்கள் அதைத் தரவில்லை. 2011-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்ததற்குப் பின்னால், பல முறை பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியும், அதற்குப் பிறகும் அவர்கள் செவி சாய்க்கவில்லை என்ற சூழ்நிலை வந்தபோது, உச்ச நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு வாதாடி, போராடி, சட்டப் போராட்டம் நடத்தித்தான், மேசையைத் தட்டும்

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஒலி) காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்புக்கு அரசாணையைப் பெற்றார்கள் என்பது வரலாறு. நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, எங்கே கொடுத்தீர்கள்? கொடுக்கவில்லையே? அது மிகப் பெரிய தூரோகம்தானே? ஒப்புக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 மாநிலங்கள் சம்பந்தப்படும்போது, தேசிய கட்சிகளுக்கு சில சிரமங்கள் இருக்கும். இருந்தாலும்கூட, அந்த இடத்தில் பிரதமராக இருந்த எங்களுடைய மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், தமிழகத்திற்குச் சாதகமாகத்தான் முடிவெடுத்தார். அதை நீங்கள் இல்லையென்றே சொல்ல முடியாது. It is all on record.

பிற்பகல் 5-00

இன்றைக்குக் கச்சா எண்ணெய்யின் விலை பெரிய அளவில் சரிந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கச்சா எண்ணெய்யின் விலை ஒரு barrel-க்கு 115 டாலரிலிருந்து 123 டாலர் வரை மாறி, மாறிக் கொண்டிருந்தது. ஏற்றத்தைத்தான் நாம் அப்பொழுது பார்த்தோம், இறக்கத்தையே பார்க்கவில்லை. ஆனால், இன்றைக்கு பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு நிறைய நல்லது நடக்கிறது என்று சிலர் சொல்லலாம். ஆனால், பெரிய அளவில் சரிவு இருக்கிறது. இன்று சர்வதேச சந்தையில் ஒரு barrel கச்சா எண்ணெய்யின் விலை 115 டாலரிலிருந்து 29 டாலராகக் குறைந்திருக்கிறது. ஆனால், அதனுடைய பலனை இந்திய மக்கள் பெறவில்லை; தமிழக மக்களும் பெறவில்லை. குறிப்பாக, கலால் வரியை அதற்கு நிகராக ஏற்றிக்கொண்டே இருக்கிறார்கள். மாநில வரிகளிலும் நாம் மாற்றம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. சில மாநிலங்களில் மாநில வரியைக் குறைத்திருக்கிறார்கள். ஆனால், பெரிய அளவில் மாற்றங்களைத் தர முடியவில்லை; மக்களுக்குப் பலனைத் தர முடியவில்லை. இதனால், மத்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற அதிக நிதி வருவாய் 14 இலட்சம் கோடி ரூபாய் ஆகும். இந்திய அரசு பட்ஜெட்டின் அளவே 18 இலட்சம் கோடி ரூபாய்தான். ஆனால், 14 இலட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு இதனால் அதிக இலாபம் பெற்றிருக்கிறது. இந்தப் பணத்தை யாருக்குத் தந்தார்கள்? என்ன

[திருமதி எஸ். விஜயதரணி] [2016 ஜனவரி 21

மேம்பாட்டுப் பணிகளைச் செய்தார்கள்? என்ன கட்டமைப்புகளை உயர்த்தினார்கள்? எவ்வளவு வேலைவாய்ப்பைத் தந்திருக்கிறார்கள்? தமிழ்நாட்டு மக்களுக்கு எதையாவது செய்திருக்கிறார்களா? இதையெல்லாம் நீங்கள் தயவுசெய்து உங்கள் உறுப்பினர்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கேளுங்கள்; நாங்களும் உங்களுடன் சேர்ந்து கேட்கிறோம். அந்த அளவில் இந்த விஷயத்தில் நாம் போராடும் தன்மையோடு நம்மை வெளிப்படுத்த வேண்டும் என்ற கருத்தை நான் இன்று இந்தச் சட்டமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்கள் மாநாடு வழியாக செயல்படுத்தப்பட்ட, செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் குறித்த வெள்ளை அறிக்கையை விரைவில் இந்த அவைமுன் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திற்கு 2,11,483 கோடி ரூபாய் கடன் இருப்பதாகத் தெரிகிறது. மேலும் கடனில் மூழ்கி தத்தளிக்காமல் இருக்க நாம் செய்ய வேண்டிய சிக்கன நடவடிக்கைகள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து அரசு ஆலோசித்து, அதை அறிக்கையாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் லோக் ஆயுக்தா உருவாக்கும் சட்டத்தை தமிழ்நாடு அரசு இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொதுக் கடன் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் பெற்றுள்ள பொதுக் கடன் பற்றி சில ஐயப்பாடுகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதுபற்றி ஒரு சிறிய விளக்கத்தைக் கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் நடைபெறுகின்ற தமிழ்நாடு அரசு, தனது மூலதனச் செலவுகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு வழங்கும் கடன்கள் முதலான நிதித் தேவைகளுக்காக வெளிச் சந்தை, பன்னாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நபார்டு போன்ற நிதி

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுகிறது. இவ்வாறு பெறப்படும் பொதுக் கடன், பள்ளிகள், மருத்துவமனைகள் கட்டுதல் மற்றும் தரமான சாலைகளை அமைத்தல் போன்ற பணிகளுக்காகச் செலவிடுவதன்மூலம் சமூக, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது. இந்த முதலீட்டிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் மாநிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவுகிறது. கடுமையான நிதி நெருக்கடி ஏற்படும் சூழ்நிலைகளைத் தவிர, மற்ற சமயங்களில் பெறப்படும் கடன்கள் மாநிலத்தின் மூலதனப் பணிகளுக்கான செலவினங்களுக்காகவும், அரசு பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் கழகங்களுக்குக் கடன்கள் வழங்கவும் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.

14–வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிலுவைக் கடன் விகிதம் 2015–2016 ஆம் ஆண்டு தொடங்கி, அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் 25 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற 2011–2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை, இந்த வரம்பிற்குள்ளாகவே அரசின் பொதுக் கடன் இருக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி செய்து வருகிறது. 14–வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, குறிப்பிட்ட வரையறைக்குள்தான் இந்தக் கடன் இருக்கும்படியாக இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி செய்து வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளில், அதாவது 2011–2012 முதல் 2014–2015 வரை நமது மாநில அரசு பெற்ற நிகரக் கடன் 78,617.31 கோடி ரூபாய் ஆகும். இதே காலகட்டத்தில் மூலதனச் செலவினம் (creation of assets) 76,510.67 கோடி ரூபாய் ஆக இருக்கிறது. இது சாலைகள் அமைத்தல், பாலங்கள், கட்டடங்கள் போன்ற மூலதன சொத்துகளை உருவாக்கும் நோக்கத்திற்காகவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இந்தக் கடன் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்கிறது.

மாநில அரசின் பொதுக் கடன் அளவு மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் 19.10 சதவீதம் ஆகும். 2010–2011 ஆம் ஆண்டு இறுதியில், அதாவது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மொத்தக் கடன் நிலுவை, மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் 19.54 சதவீதமாக இருந்தது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 21

பிற்பகல் 5–05

இதனை 2014–2015 ஆம் ஆண்டில் 19.10 சதவிகிதமாக மாண்புமிகு அம்மாவின் அரசு குறைத்துள்ளது. 2014–2015 ஆம் ஆண்டு வரையில் மாநில அரசின் கடன் நிலுவைத் தொகை 1,79,967 கோடி ரூபாயாகவுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டு இறுதி வரையில் அதாவது, 31–3–2015–ல் நிலுவையில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களின் கடன்கள் 91,942 கோடி ரூபாயாகும். எனவே, பொதுத் துறை நிறுவனங்களின் கடனுடன் மாநிலத்தின் மொத்த பொதுக் கடன் 2014–2015 ஆம் ஆண்டு வரை 2,71,909 கோடி ரூபாயாகும். 2015–2016 ஆம் ஆண்டிற்கு நிகரக் கடன் 30,446.67 கோடி ரூபாய் பெறப்படும் எனவும், இதனால், 2015–2016 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த நிகரக் கடன் 2,11,484 கோடி ரூபாயாக இருக்கும் என்றும், இது நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்குள்தான் உள்ளது என்றும் நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். இதுவரை பெற்றுள்ள கடன் அளவுப்படி, மொத்த தமிழகத்தின் தற்போதைய அரசின் நிகரக் கடன் 1,98,615 கோடி ரூபாய் மட்டுமே. 14–வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி 2015–2016 ஆம் ஆண்டில் கடனுக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் 25%–க்குள் குறைவாகப் பேணப்பட வேண்டும். 2015–2016 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டப்படி பொதுக் கடன் ரூ.2,11,484 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 19.28% இருக்கும். ஆக, 25% உட்பட்டதாக இருக்கும்.

நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக பொதுக் கடன் பெறுவது என்பது உலகில் உள்ள அனைத்து அரசுகளும் கையாளும் கருவியாகும். கடன் பெற்று உள்கட்டமைப்பு போன்ற அசையாச் சொத்துகளை உருவாக்குவதில் முதலீடு செய்வதால், பொருளாதார வளர்ச்சி தூண்டிவிடப்படுகிறது. அத்தகைய பொருளாதார விரிவாக்கம் அதிக வருவாயைப் பெருக்குவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும், மாநிலங்களுக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கும் வழிவகுக்கிறது. எனவே, கடன் நிலுவைத் தொகையானது உயர்ந்துள்ள போதிலும், வருவாய்ப் பெருக்கத்தின் காரணமாக, தவணை தவறாமல் இந்த அரசால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் கடனைத் திருப்பிச் செலுத்த முடிந்துள்ளது.

2016 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பொதுக் கடனைப் பெற்றுத்தான் மூலதனச் செலவினங்கள் உள்பட பிற செலவினங்களை மேற்கொள்கின்றன. உதாரணமாக, மத்திய அரசின் பொதுக் கடன் நிலுவை 2014–2015 திருத்த மதிப்பீட்டில் 62,78,544 கோடி ரூபாயாக, அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 49.6% ஆகவும், 2015–2016 வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.68,94,691 கோடி ரூபாயாக, அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 48.8% ஆகவும் உள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி, 2014–2015 வரையில் மொத்தக் கடன் நிலுவைக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 25% ஆகும். குஜராத்தைப் பொறுத்தவரையில் 23.7%, கர்நாடகாவைப் பொறுத்தவரையில் 22.9%, கேரளாவைத் பொறுத்தவரையில் 29.7%, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தக் கடன் நிலுவைக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் 20% ஆகவே கணிக்கப்பட்டிருப்பினும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக இது 19.10% என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாநில அரசின் மொத்த பொதுக் கடனுக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் ஆகியவை மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகளில் வரையறுக்கப்பட்ட அளவைக் காட்டிலும் குறைந்த அளவிலேயே உள்ளது. மொத்தக் கடனுக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரத்தைக் குறைந்த அளவில் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய நல்லரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் லோக் ஆயுக்தாவை உருவாக்கும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். தமிழகத்தில் பாரம்பரிய விளையாட்டான உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு நடைபெற சட்டத் திருத்தம் கொண்டுவர அவசியம் உள்ளது. 2012 ஆம் ஆண்டில் அந்த அரசாணை போடப்பட்டபொழுது, தமிழ்நாட்டில் நீங்கள்தான் ஆளும்கட்சியாக

[திருமதி எஸ். விஜயதரணி] [2016 ஜனவரி 21

இருந்திருக்கிறீர்கள். அந்த விதத்தில் அதற்கென்று சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 5–10

2015–2016 இந்த 2 ஆண்டுகளில், கடந்த 10 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் இது நிறுத்தப்படவே இல்லை. இந்த விளையாட்டு தொடர்ந்து 2014 வரை, அது என்ன அரசாணை போட்டிருந்தாலும், எந்த லிஸ்ட்டில் சேர்த்திருந்தாலும் அந்த விளையாட்டு நடந்தது; தமிழ்நாட்டிலே நடைபெற்றது. 2014 வரைக்கும் நிறுத்தவே இல்லை. காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுதும் நிறுத்தவில்லை. ஆனால், பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு 2015 ஜனவரி, 2016 ஜனவரி இப்போதுதான் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், ஏதோ காங்கிரஸ் கட்சி லிஸ்ட்டில் கொண்டு வந்து, அதனால்தான் நிறுத்திவிட்டார்கள் என்கிற அந்த வாதம் சரியல்ல. உச்ச நீதிமன்றத்திற்குப் போனது, கோர்ட்டிற்குப் போனது எல்லாம் சரிதான். ஆனால், அந்த அரசாணைக்குப் பிறகு 2014 வரைக்கும் நடந்திருக்கிறது. நீங்கள் அதைப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதே 2014 வரைக்கும் அந்த விளையாட்டு தமிழ்நாட்டிலே நடைபெற்றது. 2015–லும், 2016–லும் இதற்கு ஒரு தீர்த நடவடிக்கை மத்தியிலிருக்கிற பாரதிய ஜனதா அரசாங்கம் எடுத்திருக்க வேண்டும். அதேபோல, இங்கேயும் அதற்குண்டான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இப்போதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. இனிமேல் அடுத்து வருகிற ஆண்டிலாவது நடத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை பாதுகாப்பான ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. அது மிருகத்திற்கு மட்டும் பாதுகாப்பில்லை. மனிதனுக்கும் பாதுகாப்பான ஒரு ஜல்லிக்கட்டாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு தடையாணை பெற்றதற்கு அடிப்படைக் காரணமே உங்களுடைய மத்திய அரசாட்சிதான். அங்கே உங்களுடைய அமைச்சராக இருந்த திரு. ஜெயராம் ரமேஷ் அவர்கள் அன்றைக்கு இந்தக் காளைகளைக் காட்சிப் பொருளாக்கக்கூடாது என்று அந்தப் பட்டியலில் சேர்த்ததுதான்*

2016 ஜனவரி 21] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

38. This Government has striven successfully with an indomitable spirit for the upliftment of vulnerable sections of society like women, children, transgenders, senior citizens and destitutes. It has enhanced the assistance under social security pensions to eligible individuals from Rs.500 per month to Rs.1,000 per month. The 'Puratchi Thalaivar M.G.R. Nutritious Meal Programme' and the 'Integrated Child Development Services' (ICDS) Scheme have improved the nutritional status of the children significantly. The plethora of schemes implemented for the welfare of vulnerable sections such as gold for Thirumangalyam under Marriage Assistance Schemes, Cradle Baby Scheme, Social Security Pension for the transgenders, Integrated Complex of Special Homes for senior citizens and destitute children have ensured a strong social security net in the State.

39. The welfare of socially disadvantaged sections of Society such as Scheduled Castes, Scheduled Tribes, Backward Classes, Most Backward Classes, Denotified Communities and Minorities scaled great heights under this Government. Various income generation activities being implemented for the welfare of Scheduled Castes and Scheduled Tribes, like self employment programme for youth, Economic Development Programme, Revolving Fund and economic assistance to Self Help Groups have empowered these communities. A noteworthy achievement of this Government is extension of Post-Matric Scholarship to students belonging

to Scheduled Castes and Scheduled Tribes studying in private self-financing colleges, thereby enabling them to pursue higher studies without any financial difficulty.

40. I have briefly outlined the various policies and programmes of this Government. The State has marched forward with unparalleled accomplishments in all the sectors and will continue to excel in the future as well. I am confident that the innovative initiatives undertaken by this Government under the guidance and ingenuity of the Hon'ble Chief Minister will enable the State to achieve the Numero Uno status in the Country.

41. I am sure that this august House will debate and deliberate on various issues, setting the highest benchmark, to fulfill the aspirations of the people. I conclude my address with warm New Year greetings once again.

Nanri, Vanakkam, Jai Hind.

TRUTH ALONE TRIUMPHS

2016 ஜனவரி 21]

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே,

வணக்கம்.

பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் 2016 ஆம் ஆண்டிற்கான முதல் கூட்டத் தொடரை தொடக்கி வைத்து துவக்க உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களுடன் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாமன்றத்தில் தொடர்ந்து ஐந்தாவது முறையாக இத்தகைய பேருரையை ஆற்றும் வாய்ப்பு கிடைத்ததை பெரும் பேறாகக் கருதுகிறேன். பதினான்காவது சட்டப் பேரவையின் இறுதிக் கூட்டத்தொடர் என்ற முறையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் பல முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்களையும், ஆழ்ந்த கருத்துக்களையும் வழங்கி, இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் ஆற்றிய அரும் பணியை பதிவு செய்யும் வகையில் இந்தக் கூட்டத்தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றல்மிகு சீரிய தலைமையின்கீழ் 2011 ஆம் ஆண்டு மே திங்களில், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மக்கள் நலம் பேணுவதையே அரசு கொள்கைகளின் அடித்தளமாகக் கொண்டு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பலனளிக்கக்கூடிய வகையில் எண்ணற்ற பல சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் பலனாக அனைவருக்கும் பயனளிக்கும் வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் நலத் திட்டங்களைத் திட்டமிட்டு செயலாக்குவதில் முன்னோடி மாநிலமாகவும், பிற மாநிலங்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரி 'மக்கள் நல' அரசாகவும், தமிழக அரசு உருப்பெற்றுள்ளது என்பதை பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அண்மையில் நடைபெற்ற டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பெரும் வெற்றியைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இம்மாபெரும் வெற்றி, அறிவுக் கூர்மையும் மதிநுட்பமும் வாய்ந்த

[2016 ஜனவரி 21

அவரது தலைமையின்மீது தமிழக மக்கள் வைத்துள்ள அளப்பரிய நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டியுள்ளது.

3. சமுதாய சமத்துவத்தை ஊக்குவிக்கவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் பல்வேறு சமூகநலத் திட்டங்களுக்கு, தமிழ்நாடு பெருமளவிலான நிதியைப் பயன்படுத்தி வருகிறது. கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு ஆகியவற்றுடன் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் உயர் செலவினங்கள்மூலம், நமது நாட்டில் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் உயர் அளவை நமது மாநிலம் எட்டியுள்ளது. வளர்ந்துவரும் பொருளாதார நாடுகள் எதிர்கொள்ளும் இரு முக்கிய சவால்களான வறுமையையும், வேலைவாய்ப்பின்மையையும் முழுமையாக அகற்றிட இந்த அரசு திட்டமிட்ட முறையில் செயல்பட்டு வருகிறது. நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் வாயிலாகவும், திட்டங்களை ஒருங்கிணைத்தும், கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் காணப்படும் வறுமையைக் குறைக்க சிறப்பான நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பின்மையைக் குறைக்கவும், மனிதவள ஆதாயத்தை முழுமையாகப் பயன்படுத்தவும், திறன் பெறாத இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கவும், படித்த இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், தேவையான பல்வேறு செயல் திட்டங்களுக்கு மாநில திறன் மேம்பாட்டு இயக்கம் அனுமதியளித்து நிதியை வழங்கி வருகிறது. மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண செயல்படுத்தப்படும் மத்திய அரசுத் திட்டங்கள், மாநிலத் திட்டங்களோடு நிதி ஆதாரங்கள் மற்றும் திட்டமிடல் ஆகிய இரண்டு வழிவகைகளிலும் திறம்பட ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4. வடகிழக்குப் பருவமழைக் காலத்தின்போது கடந்த நூறு ஆண்டு காலத்தில் பெய்திராத அளவிற்கு ஒரே நாளில் கொட்டித் தீர்த்த மழையுடன், குறுகிய காலகட்டத்தில் தான்கு முறை பெய்த தொடர் கனமழையினால், மிகக் கடுமையான பெருவெள்ளம் ஏற்பட்டு, சென்னையின் பெரும் பகுதிகளும், கடலோர மாவட்டங்களின் சில பகுதிகளும் வெள்ளத்தால் மூழ்கியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். பயிர்கள், கால்நடைகள், பொதுக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் தனியார் சொத்துக்களுக்குப்

2016 ஜனவரி 21]

பெரும் சேதத்தை இது விளைவித்ததோடு, மனித உயிரிழப்புகளையும் இந்த வெள்ளம் ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறமையான தலைமையின்கீழ் இந்த அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் முன்னேற்பாடுகளும் உயிரிழப்புகளைக் குறைக்க வழிவகுத்தபோதிலும், இந்தப் பெரும் வெள்ளம், கடுமையான வெள்ள பாதிப்பின் சுவடுகளை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

5. மாநில அரசு துரிதமாகச் செயல்பட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டன. இத்துடன், மத்திய அரசு அமைப்புகளுடன் இணைந்து போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு, வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளிலும், தாழ்வான பகுதிகளிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாநில அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்காக 7,244 நிவாரண முகாம்களைத் திறந்து, 23.51 இலட்சம் நபர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1.36 கோடி உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட பயணிகளுக்கு நான்கு நாட்கள் இலவசப் பேருந்துப் பயணம் அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 1.54 கோடி பயணிகள் பெரும் பயன்பெற்றனர். தொண்டு நிறுவனங்கள் மற்றும் கொடையாளர்களின் உதவிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, நிவாரணப் பொருட்களை அளிப்பதற்கான பணிகள் செவ்வனே மேற்கொள்ளப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளில் 36,840 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதேநேரத்தில், சென்னை மாநகரத்தில் வெள்ளத்திற்குப்பின் தேங்கியிருந்த குப்பைகளை அகற்றி தூய்மைப்படுத்துவதற்கான மாபெரும் துப்புரவுப் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய பெரும் பேரிடர் ஏற்பட்ட போதிலும், மாநில சுகாதாரத் துறையின் திறமையான நடவடிக்கைகளால் தொற்றுநோய் பரவ விடாமல் தடுத்தது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும்

[2016 ஜனவரி 21

திறம்படச் செயலாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, மொத்த மாநில நிர்வாகமும் இரவு பகலாக உழைத்தது என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

6. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மதிநுட்பம் மிக்க தலைமையின்கீழ் செயல்படும் இந்த அரசு வெள்ளம் பாதித்த பகுதிகளில் மிகக் குறுகிய காலத்திற்குள் மீண்டும் இயல்பு நிலையைக் கொண்டு வந்தது. வெள்ளத்தின்போது சேதமான, பட்டா, கல்விச் சான்றிதழ்கள், குடும்ப அட்டைகள், எரிவாயு இணைப்பு அட்டைகள், ஆதார் அடையாள அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், வங்கிக் கணக்குப் புத்தகங்கள், விற்பனைப் பத்திரங்கள் போன்ற ஆவணங்களின் நகல்களை வழங்குவதற்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் கூடுதல் சீருடைத் தொகுப்புகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்தப் பெருவெள்ளத்திற்குப் பிறகு மக்களை இயல்பு வாழ்க்கைக்கு மீண்டும் திரும்பச் செய்ய மாநில அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், ஒற்றுமையுணர்வு, மனிதநேயம் மற்றும் சகோதரத்துவத்தோடு தாமாகவே முன்வந்து உதவி செய்த எண்ணற்ற பொதுமக்களுக்கும், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளுக்கு எனது பாராட்டுதலைப் பதிவு செய்யவும் விரும்புகிறேன்.

7. பெருமழையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு குறித்த விவரங்களுடன் 8,481 கோடி ரூபாய் நிதியுதவி கோரி, நவம்பர் திங்கள் 23 ஆம் நாள் முதற்கட்டமாக இந்த அரசால் மத்திய அரசிற்கு கோரிக்கை மனு ஒன்று அளிக்கப்பட்டது. வெள்ள பாதிப்பை அளவிட மத்திய அரசால் மத்தியக் குழு உடனடியாக அனுப்பப்பட்டது. இதன் பின்னர் டிசம்பர் மாதத்தில் மீண்டும் பெய்த பெரும் மழையால் கூடுதல் சேதம் ஏற்பட்டது. இதனை மாண்புமிகு பிரதமர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்து, தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, 2015 டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளன்று, 1,000 கோடி ரூபாயை மத்திய அரசு உடனடியாக வழங்கியது. இதற்காக மத்திய அரசிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெள்ள பாதிப்பை மிகக்கடுமையான இயற்கைச் சீற்றமாகவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணப்

2016 ஜனவரி 21]

பணிகளையும், மறுசீரமைப்புப் பணிகளையும் மேற்கொள்வதற்குத் தேவையான 17,432 கோடி ரூபாய் நிதியுதவி கோரி, கூடுதல் கோரிக்கை மனுவும் மத்திய அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மறுசீரமைப்புப் பணிகளை தாமதமின்றி மேற்கொள்வதற்காகக் கோரப்பட்ட நிதியுதவியை உடனடியாக அளித்திடுமாறு மத்திய அரசை வலியுறுத்துகிறேன். இத்தருணத்தில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நன்கொடை வழங்கிய பல்வேறு மாநில அரசுகள், தொழிலதிபர்கள், நிறுவனங்கள் மற்றும் நல்லுள்ளம் கொண்டோரின் உதவியை நன்றியுடன் ஏற்று பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

8. பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் இடைக்கும் வகையில் நிவாரணத் தொகுப்பை மாநில அரசு அறிவித்து செயல்படுத்தியுள்ளது. சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், பாசனக் கட்டமைப்புகள், கட்டடங்கள் போன்ற பாதிக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு வசதிகளை உடனடியாகச் சரி செய்வதற்காக 595.82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிசைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும், பகுதியாக பாதிக்கப்பட்டிருந்தாலும், அக்குடிசைகளில் வசித்த குடும்பங்களுக்குத் தலா 5,000 ரூபாய் நிவாரணமாக இந்த அரசு வழங்கியுள்ளது. மேலும், வீடுகளில் வெள்ளம் புகுந்து, உடைகள், பாத்திரங்கள் போன்ற தனிப்பட்ட உடமைகள் பாதிக்கப்பட்டிருந்தால் அந்தக் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கு, குடிசைகள் பாதிக்கப்பட்டு வெள்ளமும் புகுந்திருந்தால், மொத்தமாக 10,000 ரூபாயை நிதியுதவியாக இந்த அரசு வழங்கியுள்ளது. இந்த நிவாரண உதவி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேரடியாகச் சேரும்வகையில் அவர்களது வங்கிக் கணக்குகளிலேயே வழங்கியது இந்த அரசின் பாராட்டத்தக்க சாதனையாகும். குடிசைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட 5 இலட்சம் குடும்பங்களுக்கு 273.10 கோடி ரூபாயும், வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் பாதிக்கப்பட்ட 25 இலட்சம் குடும்பங்களுக்கு 1,274 கோடி ரூபாயும் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், பயிர் இழப்பினால் பாதிக்கப்பட்ட 4,81,975 விவசாயிகளுக்கு 3.82 இலட்சம் ஹெக்டேர் பரப்பிற்கு, 451.15 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக, இதுவரை வெள்ள நிவாரணத்திற்காக மாநில அரசு 2,640 கோடி

[2016 ஜனவரி 21

ரூபாய் நிதியை விடுவித்துள்ளது. மாநிலத்தை வெள்ளம் பாதித்த மாநிலமாக அறிவித்திருப்பதால், பயிர்க் கடன்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக் கடன்கள் உள்ளிட்ட இதரக் கடன் வசூலையும் ஒத்திவைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

9. குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டமிட்ட வகையில் நமது மாநிலம் உயர் வளர்ச்சியை எட்டச் செய்வதற்காக, தொலைநோக்குத் திட்டம் 2023 என்ற உயர் இலக்கைக் கொண்ட இலட்சியத் திட்டத்தை வடிவமைத்து செயலாக்கியது இந்த அரசின் பாராட்டத்தக்க சாதனைகளுள் ஒன்றாகும். இத்திட்டத்தின்படி தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் போன்ற செயலாக்க அமைப்புகளும், அரசுத் துறை தனியார் பங்களிப்பு சட்ட விதிகள் போன்ற சட்டபூர்வ வரைமுறைகளும், தமிழ்நாடு கட்டமைப்பு நிதியம், தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் மற்றும் செயற்திட்ட தயாரிப்பு நிதியம் போன்ற நிதி ஆதார அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கண்டறியப்பட்ட 217 திட்டங்களில், 84 திட்டங்களின் செயலாக்கம் வேகமாக நடந்து வருகிறது. பிற திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல் வடிவம் பெற்று வருகின்றன. கட்டமைப்புகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டும் வழிமுறைகளை அமைப்பு முறையில் ஒருங்கிணைக்கும் இத்தகைய சிறப்பு முயற்சி ஒரு மாநில அரசால் மேற்கொள்ளப்படுவது நமது நாட்டில் இதுவே முதன்முறையாகும் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

10. கட்டமைப்பு மேம்பாட்டில் கவனம் செலுத்தும் அதே நேரத்தில், மாநிலத்தின் பகுதிகளுக்கிடையே காணப்படும் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் உள்ள வேறுபாடுகளைக் களைந்திட மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி என்ற நிதியத்தை இந்த அரசு அமைத்துள்ளது. இந்த நிதியம்மூலம் 105 பின்தங்கிய வட்டாரங்களில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த சமச்சீர் வளர்ச்சி என்ற குறிக்கோளை எய்துவதற்காக, 230 கோடி ரூபாய் செலவில் 445 திட்டங்களுக்கு இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக எளிதில் செல்லமுடியாத மலைப் பகுதிகளிலும், மிகவும் பின்தங்கிய பகுதிகளிலும் வாழும் மக்களையும் பயன்பெறச் செய்து, முக்கிய சமூகப் பொருளாதாரக் குறியீடுகளில் உள்ள இடைவெளியைக் குறைக்க வழி ஏற்பட்டுள்ளது.

2016 ஜனவரி 21]

11. தமிழ்மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றிற்கு இந்த அரசு எப்போதுமே உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. முதன்முறையாக, இசை மற்றும் கவின் கலைகளுக்கென தனிப் பல்கலைக்கழகம் ஒன்றை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. தகுதி வாய்ந்த அறிஞர்களின் இலக்கியச் சாதனைகளைப் பாராட்டும் வகையில், தமிழ்த் தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, ஜி.யு. போப் விருது, அம்மா இலக்கிய விருது போன்ற பல விருதுகள் இந்த அரசால் நிறுவப்பட்டுள்ளன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாளை ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் தினமாகக் கொண்டாட இந்த அரசு முடிவெடுத்துள்ளது. நமது சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் இந்த அரசு பல நினைவிடங்களை அமைத்ததோடு, பல சிலைகளையும் நிறுவியுள்ளது. அறிவியல், மனிதவியல் மற்றும் மானவர்கள் நலனில் உயர் பங்களிப்பாற்றிய தமிழகத்தைச் சேர்ந்த சாதனையாளர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதை வழங்க இந்த அரசு முன்வந்துள்ளது பாராட்டத்தக்கது. அவரது பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் இளைஞர் எழுச்சி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது சாலப் பொருத்தமானது. இராமேஸ்வரத்தில் அவரது நினைவிடத்தை அமைப்பதற்காக 1.36 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

12. இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலைக்குக் காரணமானவர்களைப் பொறுப்பாக்காமல் நல்லிணக்கம் குறித்த சர்வதேசத் தீர்மானங்களையும், உணர்வுகளையும் தொடர்ந்து அலட்சியப்படுத்திவரும் இலங்கை அரசின் போக்கினைக் கண்டு உலகெங்கிலும் உள்ள தமிழினம் வெகுண்டெழுந்துள்ளது. இதைத் தணிக்கும் விதமாக, அன்றைய இலங்கை அரசு புரிந்த போர்க் குற்றங்கள், ஜெனிவா ஒப்பந்த விதிமீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டுமென ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையத்தில் தீர்மானத்தை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி, இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி

[2016 ஜனவரி 21

இந்த அரசு எடுத்த தொடர் முயற்சி நினைவுகூரத்தக்கது. இலங்கைத் தமிழர்கள்மீது இத்தகைய கடுங்குற்றங்களைப் புரிந்தவர்கள் உரிய நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டு நீதியை நிலைநாட்டிட வேண்டுமென்று இன்றைய இலங்கை அரசை மத்திய அரசு தொடர்ந்து வற்புறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் இதுகுறித்து நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களை மத்திய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, தமிழர்களுக்கு அவர்களின் நிலங்களைத் திரும்ப அளித்து அவர்கள் சம வாழ்வுரிமையுடன் கண்ணியமாகவும், அமைதியாகவும் வாழ ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

13. பாக் நீரிணைப்புப் பகுதியின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களைத் தொடர்ந்து கைது செய்து, அவர்களின் படகுகளை சிறைப்பிடிக்கும் இலங்கைக் கடற்படையினரின் செயல்கள் கடும் கண்டனத்திற்குரியவையாகும். இந்த மீனவர்கள் விடுதலையான பின்னரும் சிறைப்பிடிக்கப்பட்ட படகுகளை விட மறுக்கும் இலங்கையின் போக்கு, பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு முடிவில்லாத் துயரத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவே, கச்சத் தீவை மீட்டு, நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீண்டும் நிலைநாட்டி இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டியது நமது கடமையாகும். இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு வெகு விரைவில் ஒரு இணக்கமான நிரந்தரத் தீர்வை எட்டிட மத்திய அரசும், இலங்கை அரசும் இணைந்து முயற்சி செய்யும் என நம்புகிறேன்.

14. ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிப்பதற்காக சூரை மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். பாக் நீரிணைப்புப் பகுதியில் மீன்பிடிப்பைக் குறைக்கவும், இதுவரை அதிகம் பயன்படுத்தப்படாத ஆழ்கடல் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்தும்வகையில் ஆழ்கடல் மீன்பிடித் திறனை விரிவுபடுத்தவும், இந்த அரசால் கோரப்பட்டுள்ள, 1,520 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஆழ்கடல் மீன்பிடிப்பு மற்றும் அதற்குத் தேவைப்படும் கட்டமைப்பிற்கான மொத்த நிதியுதவியை விரைந்து அளிக்குமாறு மத்திய அரசை நான் வலியுறுத்துகிறேன்.

2016 ஜனவரி 21]

15. நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், ஆயுதத் தளவாடங்கள், கூடுதல் பணியிடங்கள், காவல் நிலையங்களுக்கான சொந்தக் கட்டடங்கள், காவலர்களுக்கான வீட்டு வசதி போன்ற கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மாநிலக் காவல் துறைக்கு இந்த அரசு வழங்கியுள்ளது. மாநிலத்தில், சட்டம்-ஒழுங்கு முழுமையாக நிலைநாட்டப்பட்டுள்ளதால் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த அமைதிப் பூங்காவாகத் தமிழகம் மாறியுள்ளது. குற்றச் செயல்கள் செய்பவர்களை கடுமையாகக் கையாள காவல் துறைக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதால், காவல் துறையினரின் ஊக்கம், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. மாநிலக் காவல் துறையின் தொடர் கண்காணிப்பு, உறுதியான நடவடிக்கை, ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றின் மூலமாக சமூகவிரோத சக்திகள் ஒடுக்கப்பட்டு அனைத்து வகையிலான தீவிரவாதங்களும் தடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் மன உறுதி மற்றும் திடமான செயல்பாட்டினால் மட்டுமே இது சாத்தியமாயிற்று. நமது மாநிலக் காவல் துறை தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு, மக்களின் மனதில் நம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் உருவாக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

16. மாநிலங்களுக்கிடையேயான பல்வேறு நதிநீர்ப் பிரச்சினைகளில், மாநிலத்தின் சட்டபூர்வ உரிமைகளை நிலைநாட்டிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட அயரா முயற்சிகளும், அவற்றில் அவர் கண்ட வெற்றிகளும் நாம் அனைவரும் அறிந்தவையே. 2014 ஆம் ஆண்டு மே திங்களில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடி அளவிற்கு தமிழ்நாடு உயர்த்திக்கொள்ள உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு, இத்தகைய பாராட்டத்தக்க வெற்றிகளுள் ஒன்றாகும். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில், 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் நீர்மட்டத்தை 142 அடி அளவிற்கு மாநில அரசு உயர்த்தியதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த ஒருங்கிணைந்த தொடர்முயற்சிகளின் பலனாகப் பெற்ற மேற்கூறிய தீர்ப்பே முழுக் காரணமாகும். அணையின் முழுக் கொள்ளளவான 152 அடி உயரத்திற்கு நீர்மட்டத்தை மேலும் உயர்த்திடத் தேவையான நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடங்கியுள்ளது.

[2016 ஜனவரி 21

17. காவேரி நதிநீர் ஆணையத்தின் இறுதித் தீர்ப்பினை மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாணையாக 19-02-2013 நாளிட்ட அரசிதழில் மத்திய அரசு வெளியிடச் செய்து, மாநிலத்தின் சட்டப் பூர்வ உரிமைகளை நிலைநாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சிகள் மகத்தானவையாகும். காவேரி நதிநீர் ஆணையத்தின் இறுதித் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்தும்வகையில், காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் தாமதமின்றி அமைக்க வேண்டுமென இந்த அரசு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துகிறது. நதிநீர் இணைப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டத்தை, குறிப்பாக, மகாநதி—கோதாவரி—கிருஷ்ணா—பெண்ணார்—பாலாறு—காவேரி—வைகை மற்றும் குண்டாறு இணைப்புத் திட்டத்தை மத்திய அரசு விரைவில் செயல்படுத்த வேண்டுமென்ற தொடர் கோரிக்கையை இந்த அரசு மீண்டும் வலியுறுத்துகிறது. தேசிய நீர் மேம்பாட்டு முகமையால் ஏற்கெனவே சாத்தியக் கூறு ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ள பம்பா—அச்சன்கோவில்—வைப்பாறு திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமெனவும் இந்த அரசு கேட்டுக்கொள்கிறது. நாட்டின் நீர்வளத்தை உகந்த முறையில் பயன்படுத்திட மாநிலங்களுக்கிடையே பாயும் அனைத்து நதிகளும் முன்னுரிமை அடிப்படையில் தேசியமயமாக்கப்பட வேண்டும்.

18. பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியை நடைமுறைப்படுத்துவது குறித்து தமிழக அரசு உறுதியான, தெளிவான நிலைப்பாடுகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. இந்த வரியை நடைமுறைப்படுத்த அரசியல் திருத்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுவதற்கு முன்பாக, இழப்பீடு ஈடுசெய்யும் காலம், இழப்பினைக் கணக்கிடும் முறை, நிகர வருவாய் இழப்பு ஏற்படாத வரி அளவு, குறைந்தபட்ச வரி கட்டு, வரிவிலக்கு அளிக்க வேண்டிய பொருட்கள், மாநிலங்களுக்கிடையேயான வரிவிதிப்பு முறை, இரட்டை நிருவாகக் கட்டுப்பாடு குறித்த தெளிவு ஆகிய முக்கிய இனங்களின்மீது ஒருமித்த கருத்தை எட்டிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், நிதி சுயாட்சி மற்றும் நிரந்தர வருவாய் இழப்பு ஆகியன குறித்த மாநிலங்களின் நியாயமான கவலைகளுக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

19. பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகளால் மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பகிர்வில் தமிழகத்தின் பங்கு

2016 ஜனவரி 21]

பெருமளவில் குறைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதகமான சூழல் மாநிலத்தின் நிதிநிலையை மோசமாகப் பாதித்துள்ளது. இத்துடன், தொடர்ந்துவரும் பொருளாதாரத் தேக்க நிலை, சர்வதேச கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள சரிவால் பெட்ரோலியப் பொருட்களிலிருந்து கிடைக்கும் வரி வருவாய் குறைந்து வருவது போன்ற பாதிப்புகளுடன், மத்திய அரசுத் திட்டங்களின் நிதிப் பங்களிப்பு முறையில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களும் மாநிலத்தின் நிதிச்சுமையை மேலும் கூடுதலாக்கியுள்ளன. எனினும், வளர்ச்சியிலும், பொருளாதார வளத்திலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உயர்த்திட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையை எட்டிட வேண்டும் என்ற நோக்கில், அனைத்து நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் மாநில அரசு தொடர்ந்து தொய்வின்றி செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது.

20. சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே சென்றடைவதை நோக்கமாகக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு அம்மா திட்டம், இ-சேவை மையங்கள்மூலம் சேவைகளை வழங்குவது போன்ற பல்வேறு புதுமையான திட்டங்களைக் கொண்டுவந்துள்ளது. நில உடைமைப் பதிவுகளைக் கணினிமயமாக்குவதில் இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகளால் சென்னையில் வசிக்கும் மக்கள் இ-சேவை மையங்கள் மூலமாக கணினிவழிப் பட்டாக்களை விரைவில் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். சேவைகள் மக்களைச் சிறப்பாகச் சென்றடையவும், திட்டங்களைத் திறம்படக் கண்காணிக்கவும், ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்று வரும் மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (State Residents Data Hub) ஒரு பாராட்டத்தக்க முயற்சியாகும். அகண்ட இணையதள வசதிகளை அளித்து கிராம ஊராட்சிகளை தகவல் தொடர்பு வசதிமூலம் இணைப்பதற்காக இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகள், மாநில நிருவாகத்திலும், பொதுச் சேவைகளை மக்களுக்கு அளிப்பதிலும் புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வருமென உறுதியாக நம்புகிறேன்.

21. பொது மக்களுக்கும் வருவாய்த் துறைக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்தி வருவாய் நிருவாகத்தைத் தரம் உயர்த்த பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, பொதுச் சேவைகளை மேம்படுத்தவும் அவை

[2016 ஜனவரி 21

எளிதில் கிடைக்கச் செய்யும்வகையிலும் இந்த அரசு புதிய வருவாய் வட்டங்களையும், வருவாய் கோட்டங்களையும் உருவாக்கியுள்ளது. பொதுச் சேவைகள் அளிப்பதை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட பல முன்னோடி முயற்சிகளில் விரைவு பட்டா மாறுதல் திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கன. புதுமையான விரைவு பட்டா மாறுதல் திட்டத்தின்கீழ் இதுவரை 59 இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டா மாறுதல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

22. பல்வேறு புதுமையான முயற்சிகள்மூலம் வேளாண் துறையின் வளர்ச்சிக்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இதனால், 2006-2007 முதல் 2010-2011 வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில் உணவு தானிய உற்பத்தியில், மாநிலத்தில் எட்டப்பட்ட முந்தைய உயர் அளவான 82.64 இலட்சம் மெட்ரிக் டன் அளவை விஞ்சி, கடந்த நான்கு ஆண்டுகளில் மூன்று முறை 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் கூடுதலாக உற்பத்தி செய்து நமது மாநிலம் சாதனை படைத்துள்ளது. உயர்ந்த அளவு உணவு தானிய உற்பத்தியையும், பயறு உற்பத்தியையும் எட்டியதற்காக மத்திய அரசின் க்ரிஷி கர்மான் விருதை நமது மாநிலம் இருமுறை பெற்றுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டிலும் அதிகபட்ச சிறுதானிய உற்பத்தியை எட்டியதற்காக, இந்த விருதிற்கு நமது மாநிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், பண்ணை உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயைப் பெருக்கவும், தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலான விரிவாக்கச் சேவைகள் அளித்ததற்காக, தேசிய மின் ஆளுமை தங்கப் பதக்கத்தையும் 20142015 ஆம் ஆண்டில் நமது மாநிலம் பெற்றுள்ளது. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட செம்மை நெல் சாகுபடி முறை, பயிர் பலவகையாக்கம், உயர் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் ஆகியவை மூலமாக நெல் உற்பத்தியில் 44 சதவீதமும், மக்காச் சோளம் உற்பத்தியில் 42 சதவீதமும், பயறு வகைகள் உற்பத்தியில் 45 சதவீதமும் சராசரி வேளாண் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது. இதனை உலக வங்கி பாராட்டியுள்ளதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

23. சிறப்பாகத் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடித் திட்டங்களான விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலமாக சிறு குறு விவசாயிகளின் வருவாயை உயர்த்தி,

2016 ஜனவரி 21]

அவர்களது வளத்தையும் இந்த அரசு பெருக்கியுள்ளது. மிகப் பெரும் அளவில் கால்நடை பராமரிப்புத் துறைக்கான கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளன. பால் வளத் துறைக்கு இந்த அரசு அளித்த முக்கியத்துவத்தின் மூலமாக மாநிலத்தின் பால் பதப்படுத்தும் கட்டமைப்பு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆவின் நிறுவனத்தின்கீழ் இயங்கும் பல்வேறு பால் பண்ணைகளின் கட்டமைப்பு 593 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. பெரம்பலூர், அரியலூர் போன்ற பின்தங்கிய மாவட்டங்களுக்குப் பயனளிக்கும் வகையில், பெரம்பலூரில் புதிய பால் பதப்படுத்தும் நிலையம் ஒன்றை அமைக்க இந்த அரசு எடுத்துள்ள முயற்சியை நான் மனமாரப் பாராட்டுகிறேன். மேலும், தீவன மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பின்தங்கிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் கோழி வளர்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இத்துறைக்கு மேலும் வலுசேர்த்துள்ளன.

24. அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய பொது விநியோகத் திட்டத்தின்மூலம், தமிழகத்தில் இரண்டு கோடி குடும்பங்களுக்கு விலையில்லா அரிசியும், மானிய விலையில் பருப்பு, சமையல் எண்ணெய், கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவையும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெயின் விலை பெருமளவு உயர்ந்துள்ள போதும், பொது மக்களின் நலன் கருதி இப்பொருட்களை மிகக் குறைந்த விலையில் இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. பொங்கல் பண்டிகையை உவகையோடு கொண்டாடும்வகையில் 1.91 கோடி அரிசி பெறும் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, கரும்பு மற்றும் 100 ரூபாய் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

25. அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் மேற்கூறியவாறு வழங்குவதுடன், இந்த அரசு எடுத்த குறிப்பிட்ட சந்தை குறுக்கீடு நடவடிக்கைகள், பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள் அடக்க விலையிலேயே மக்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்துள்ளன. பண்ணை பசுமைக் காய்கறிக் கடைகள், அம்மா மருந்தகங்கள், அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர்,

[2016 ஜனவரி 21

அம்மா உப்பு, அம்மா சிமெண்ட் போன்ற இந்த அரசு எடுத்த குறிப்பிடத்தக்க முயற்சிகள் ஏழை எளியோருக்கு பயனளித்துள்ளதோடு பல பாராட்டுக்களையும் பெற்றுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தையில் உருவான முன்னோடித் திட்டமான அம்மா உணவகத் திட்டம், மற்ற மாநிலங்களும் பின்பற்ற உகந்த திட்டமாக அனைவராலும் போற்றப்படுகிறது. இதுவரை திறக்கப்பட்டுள்ள 106 அம்மா மருந்தகங்கள் ஏழை எளியோருக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. நாடெங்கிலும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்துவரும் இவ்வேளையில், நமது மாநிலத்தில் உள்ள குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் குடும்பங்களை இவ்விலை உயர்விலிருந்து பாதுகாப்பதில் இம்முயற்சிகள் பெருமளவு உதவியுள்ளன.

26. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மாநிலத்தில் கடும் மின் பற்றாக்குறை நிலவி வந்தது. நீண்ட காலமாக நிலுவையில் இருந்த மின் உற்பத்தித் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி முடித்தும், நடுத்தரகால மற்றும் நீண்டகால மின் கொள்முதல் ஒப்பந்தங்களை இறுதி செய்தும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளால் மாநிலத்தின் மின் உற்பத்தி உயர்த்தப்பட்டு, தமிழ்நாடு தற்போது மின் மிகை மாநிலமாக உருவெடுத்துள்ளது. மாநில மின்வழித் தொகுப்பில் (State Grid) 7,485 மெகா வாட் உற்பத்தித் திறனை இந்த அரசு கூடுதலாகச் சேர்த்துள்ளது மனநிறைவளிக்கிறது. இந்த அரசின் முன்னோடிக் கொள்கையான சூரிய ஒளி மின் உற்பத்திக் கொள்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு மேலும் ஒரு சான்றாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2012 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய சூரிய ஒளி மின் உற்பத்திக் கொள்கையின் பயனாக அண்மையில் நடைபெற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில், 5,345 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டங்களுக்கான 35,356 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய முன்னோடி முயற்சிகளால், ஏற்கெனவே நமது நாட்டிலேயே அதிக அளவிலான காற்றாலை மின் உற்பத்தித் திறனைப் பெற்றுள்ள தமிழகம், சூரிய ஒளி மின் உற்பத்தியிலும் முதன்மை மாநிலமாக உருவெடுத்திட இயலும்.

2016 ஜனவரி 21]

27. நமது பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகளே உயிர்நாடியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்திறன்மிக்க தலைமையின்கீழ் சாலைக் கட்டமைப்பை மேம்படுத்தி வலுப்படுத்துவதற்கு எப்போதுமே உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. புறவழிச் சாலைகள், வெளிவட்டச் சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகள் போன்றவற்றை அமைத்து, போக்குவரத்து நெரிசலைக் குறைத்து சீரான வாகனப் போக்குவரத்துக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகளில் விரிவான சாலை அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 14,841 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை மேற்கொள்ள இந்த அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் 5,171 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,169 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II ஐ செயல்படுத்தி வருவது இந்த அரசின் மேலும் ஒரு சாதனையாகும். சாலைப் பராமரிப்பின் தரத்தை உயர்த்துவதற்கான மேலும் ஒரு முக்கிய முயற்சியாக, பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூர் கோட்டங்களில் செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

28. குக்கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டமும் (THAI), சுற்றுச்சூழலுக்கு உகந்த சூரிய ஒளி மின் வசதி கொண்ட மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டமும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 5,940 கோடி ரூபாய் செலவில் மூன்று இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமங்களில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், குடிநீர், சுகாதாரம் மற்றும் சாலை மேம்பாடு போன்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 120 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் புதுவாழ்வுத் திட்டத்தின் முதல்கட்ட திட்டப் பணிகளைத் தொடர்ந்து, மேலும் 95 வட்டாரங்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில், 900 கோடி ரூபாய்

[2016 ஜனவரி 21

மதிப்பீட்டில் புதுவாழ்வுத் திட்டத்தின் இரண்டாவது கட்ட திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி ஆணையம் உதவியுடன் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் சுனாமிக்குப் பிறகான நிலையான வாழ்வாதாரத் திட்டம், திருவாரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கும் 320 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் விரிவுபடுத்தப்பட உள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

29. நமது நாட்டிலேயே மிக வேகமாக நகர்மயமாகிவரும் மாநிலங்களுள் தமிழகமும் ஒன்று. வேகமான நகர்மயமாதலால் ஏற்படும் சவால்களை சமாளிக்கும்வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் இந்த அரசு, ஆண்டுதோறும் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலான சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கம் மற்றும் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலான ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சி இயக்கம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், நகர்ப்புறக் கட்டமைப்பை வலுப்படுத்த 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து உலக வங்கி உதவியுடன் 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்முத் திட்டத்தின்கீழ் 32 நகரங்களையும், திறன்மிகு நகரங்கள் (Smart Cities) திட்டத்தின்கீழ் 12 நகரங்களையும் சேர்க்க வேண்டுமென்ற மாநில அரசின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ள மத்திய அரசிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகர்ப்புறக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான இந்த அரசின் முயற்சிகளுக்கு இத்திட்டங்கள் வலு சேர்க்கும் எனவும் நம்புகிறேன்.

30. தமிழகத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைக் குறைத்திட, இந்த அரசு குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பல சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், நாளொன்றுக்கு 468 மில்லியன் லிட்டர் குடிநீர் உற்பத்தித் திறனைக் கூடுதலாக இந்த அரசு ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்க சாதனையாகும். பதினெட்டு நகராட்சிகளிலும், 23

2016 ஜனவரி 21]

பேரூராட்சிகளிலும் 579.77 கோடி ரூபாய் செலவில் பல்வேறு குடிநீர்த் திட்டங்களும், 680 குடிநீர் ஆதாரங்களுக்கு நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கும் வகையிலான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அரசு மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளால் மாநிலத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய ஊரகக் குடிநீர் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டு அளவு மத்திய அரசால் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் வழங்கல் திட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படும் என்பதால், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு ஏற்கெனவே இருந்த அளவிற்காவது உயர்த்த வேண்டும் என இந்த அரசு வலியுறுத்துகிறது.

31. அனைவருக்கும் வீடு என்ற குறிக்கோளை எட்டிட சென்னை மற்றும் பிற மாநகரங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, 11,344 வீடுகளையும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 45,473 வீடுகளையும் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிதியாண்டில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு 12,500 வீடுகளும், பேரூராட்சிகளில் 20,000 பசுமை வீடுகளும் கட்டிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பிற்குப் பின்னர் உடனடியாக 10,000 வீடுகளை ஒதுக்கீடு செய்து அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றின் கரைகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை நான் மனதார்ப் பாராட்டுகிறேன். அவருடைய இத்தகைய முயற்சிகள், வீட்டு வசதி தேவைப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாங்கக்கூடிய விலையில் வீடுகள் கிடைக்கச் செய்து, சென்னை மாநகரத்தை குடிசைப் பகுதிகள் அற்ற மாநகரமாக மாற்றிட வழி ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

32. கோயம்பேட்டில் இருந்து ஆலந்தூர் வரையிலான 10.15 கிலோ மீட்டர் நீளமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் பயணிகள் சேவையை 29-6-2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருப்பதும், விரைவில் எஞ்சியுள்ள வழித்தடங்களிலும் பயணிகள் சேவை தொடங்கப்பட உள்ளதும் மகிழ்ச்சியளிக்கிறது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை வண்ணாரப்

[2016 ஜனவரி 21

பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரை விரிவுபடுத்துவதற்கான ஒப்புதலை வழங்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணியாக 88 கிலோ மீட்டர் நீளமுள்ள மூன்று வழித்தடப் பணிகளை சுமார் 44,000 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் உதவியைப் பெறுவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இது சென்னையில் மெட்ரோ இரயில் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த நமது மாநிலத்திற்கு உதவும்.

33. நமது மாநிலத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு இந்த அரசு மேற்கொண்ட தொடர் முயற்சிகள் பெரும் வெற்றி கண்டுள்ளன. சென்னையில், 2015 செப்டம்பர் 9 மற்றும் 10 ஆம் நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் முதல் முறையாக நடத்தப்பட்ட இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் எதிர்பார்க்கப்பட்டதைவிட இருமடங்கு கூடுதலாக, அதாவது 2.42 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் குவிந்திருப்பது இந்த அரசின் கொள்கைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். 1991 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான 20 ஆண்டுக் காலத்தில் கையெழுத்திடப்பட்ட அனைத்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாகக் கிடைத்த மொத்த முதலீடுகளைக்காட்டிலும், இந்த மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் முதலீட்டு அளவு அதிகமாகும் என்பதை இத்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநாட்டின்போது மட்டும் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் காட்டிய இத்தகைய பேராரவமே நமது மாநிலத்தில் தொழில் முதலீட்டிற்கு உகந்த சூழல் நிலவி வருகிறது என்பதற்குச் சான்றாகும்.

34. முனைப்பான கொள்கைகளின் மூலமாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையை வளம்பெறச் செய்ய இந்த அரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. நமது நாட்டிலேயே உயர் அளவாக 1,13,039 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 77 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 12 இலட்சம் பதிவு

2016 ஜனவரி 21]

பெற்ற இத்தகைய தொழிற்சாலைகள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழிற்சாலை மேம்பாட்டுத் திட்டம், விற்பனைக்கான உதவிகள், கட்டண மானியங்கள், முதலீட்டு மானியம், மின் உற்பத்தி மானியம் போன்ற இந்த அரசின் பல்வேறு முயற்சிகள் இத்துறையின்மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றியுள்ளன.

35. வளர்ந்த நாடுகளுக்கு இணையான மக்கள் நல்வாழ்வுத் தரத்தை எட்ட வேண்டும் என்பது தொலைநோக்குப் பார்வை 2023-ல் வகுக்கப்பட்டுள்ள இலக்குகளுள் ஒன்றாகும். 2011 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் இதுவரை, முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 13.27 இலட்சம் நோயாளிகளும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் 31.19 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களும் பயனடைந்துள்ளனர். மருத்துவக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதோடு, அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டி, அம்மா மகப்பேறு சஞ்ஜீவி, பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறைகள் அமைத்தல், தாய்ப்பால் வங்கி போன்ற பல்வேறு திட்டங்கள், குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் நலனுக்கான மருத்துவச் சேவைகளின் தரத்தை உயர்த்த உதவியுள்ளன. நமது நாட்டிலுள்ள பெரிய மாநிலங்களில், சிசு இறப்பு விகிதம் குறைவாக உள்ள மாநிலங்களில் இரண்டாவது இடத்திலும், மகப்பேறு இறப்பு விகிதம் குறைவாக உள்ள மாநிலங்களில் மூன்றாவது இடத்திலும் தமிழ்நாடு உள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

36. பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மிக உயர்ந்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்தே பள்ளிக் கல்விக்கு இந்த அரசு அளித்துவரும் முக்கியத்துவத்தை உணர முடியும். கடந்த ஐந்து ஆண்டுகளில் 12,475 கோடி ரூபாய் செலவில் விலையில்லா மடிக் கணினிகள், இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், நான்கு சீருடைத் தொகுப்புகள், காலணிகள், புத்தகப் பைகள், பேருந்துப் பயண அட்டைகள், மிதிவண்டிகள், போக்குவரத்து வசதிகளை வழங்கி வருவதிலிருந்து, தரமான கல்வியை வழங்கிட வேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

[2016 ஜனவரி 21

காட்டிவரும் முனைப்பு தெளிவாகிறது. தொடக்கநிலை மற்றும் இடைநிலைக் கல்வியில் மாணவர் ஆசிரியர் விகிதம், முறையே 29.18-லிருந்து 25.11 ஆகவும், 35.20-லிருந்து 21.94 ஆகவும் குறைந்துள்ளது. கல்வி வசதி எளிதில் கிடைப்பதையும், கல்வியின் தரத்தை உயர்த்துவதிலும், அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதிக் குறைவை ஈடு செய்து அப்பணிகளை மேற்கொள்வதிலும் இந்த அரசு காட்டிவரும் முன் முயற்சிகளால், இடைநிலைக் கல்வியில் நிகர மாணவர் சேர்க்கை 94.71 சதவீதமாக உயர்ந்து நாட்டிலேயே முதன்மை நிலையை நமது மாநிலம் எட்டியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின்மூலம், கல்விச் சேவைகளை அளிப்பதில் நமது நாட்டிற்கே முன்னோடியாகத் தமிழகம் திகழ்வதாக மத்திய அரசு பாராட்டியுள்ளது.

37. உயர் கல்வியின் தரத்தை உயர்த்திடவும், அனைத்து மாணவர்களும் தங்குதடையின்றி உயர் கல்வி பயில சமவாய்ப்பு அளிக்கும்வகையிலும், உயர் கல்விக்கான செலவைக் குறைக்கவும், அவை எளிதில் கிடைக்கச் செய்யவும் இந்த அரசு அயராது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதற்காக, கடந்த மே 2011 முதல், கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் வாழும் மாணவர்கள் பயன்பெறும் வகையில், 39 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 11 பலவகைதொழில்நுட்பக் கல்லூரிகளையும், 4 பொறியியல் கல்லூரிகளையும் இந்த அரசு தொடங்கியுள்ளது. ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டக் கல்லூரியும், பெருங்குடியில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகமும் அமைக்கப்பட்டு, சட்டக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணம் திரும்ப வழங்கும் திட்டத்தின்கீழ் கல்வியில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 2,84,609 மாணவர்கள் தடையின்றி உயர் கல்வி கற்க வாய்ப்புப் பெற்று பயனடைந்துள்ளனர். இத்தகைய முயற்சிகளின் பயனாக, தேசிய அளவில் 23.6 சதவீதமாக இருந்த மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (GER) தமிழகத்தில் 44.8 சதவீதத்தை எட்டியுள்ளது. சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களின் நலன் கருதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நிருவாகத்தை, அரசே எடுத்து நடத்திட எடுக்கப்பட்ட முடிவு மிகவும் பாராட்டத்தக்கது. இதுவரை, இந்தப் பல்கலைக்கழகத்திற்கு 476.64 கோடி ரூபாய் நிதியுதவியாக இந்த அரசு அளித்துள்ளது.

2016 ஜனவரி 21]

38. பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் போன்ற நலிவடைந்த பிரிவினரின் நிலையினை மேம்படுத்திட இந்த அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக இந்த அரசு உயர்த்தியுள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமும், குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை வெகுவாக மேம்படுத்தியுள்ளன. திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தாலிக்குத் தங்கம், தொட்டில் குழந்தைத் திட்டம், திருநங்கைகளுக்கான சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம், முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு விடுதி வளாகம் போன்ற திட்டங்கள் நலிந்த பிரிவினருக்கான சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்துள்ளன.

39. ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலனைப் பேணுவதில் இந்த அரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வருவாயை உயர்த்துவதற்காகச் செயல்படுத்தப்படும் இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கான சுழற்சி நிதி மற்றும் நிதியுதவி போன்ற பல்வேறு திட்டங்கள் இவர்களை பொருளாதாரத்தில் வளம்பெறச் செய்துள்ளன. உயர் கல்விக்கான கல்வி உதவித் தொகை திட்டத்தை தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கும் விரிவுபடுத்தியது இந்த அரசின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். நிதிச்சுமையின்றி இப்பிரிவினர் உயர் கல்வி பெற இத்திட்டம் வழிவகுத்துள்ளது.

40. இந்த அரசின் பல்வேறு கொள்கைகள், திட்டங்கள்பற்றி நான் இங்கு எடுத்துரைத்துள்ளேன். அனைத்துத் துறைகளிலும் ஒப்பற்ற சாதனைகளைப் படைத்துள்ள நமது மாநிலம், எதிர்காலத்திலும் இதேபோன்ற முன்னேற்றப் பாதையில் பீடுநடை போடும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மதிநுட்பம் வாய்ந்த வழிகாட்டுதலின்படி இந்த அரசு மேற்கொண்ட புதுமையான முயற்சிகளின் விளைவாக, நாட்டிலேயே முதன்மை நிலையை நமது மாநிலம் அடையும் என்று நான் நம்புகிறேன்.

[2016 ஜனவரி 21

41. முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க, உயர் நெறிமுறைகளை வகுத்து, அதன்படி இந்த மாமன்றம் தொடர்ந்து செயல்பட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் என நான் நம்புகிறேன். மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS